மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள் - 56

சுடர் 32 | கதிர் 99 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 21 ஞாயிற்றுக்கிழமை 05.03.2017

மகாராஜா பொதிகள் சேவை
எந்த ஒரு வெளிநாட்டுக்கும் பழவகைகள் கடலுணவுப் பொருட்கள், மற்றும் மரக்கறிவகைகளை எந்தவித மேலதிக கட்டணமின்றி அனுப்ப இன்றே நாடுங்கள்
GTV Express
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
024 - 4930200 / 076 - 6908961

## சிங்கள இனவாதத்துக்கு அடிபணிந்து

# தமிழ் மக்களை ஏமாற்றிவிடாதீர்

### யாழ்ப்பாணத்தில் வைத்து மைத்திரியிடம் நேற்று நேரில் கோரினார் மாவை எம்.பி.

யாழ்ப்பாணம், மார்ச் 5

தென்னிலங்கை இனவாதச் சக்திகள், தீர்வுத் திட்டம் வராமல் இருக்க முயற்சிக்கின்றார்கள். அவர்களைத் தைரியத்துடன் எதிர்த்து நில்லுங்கள். நாங்கள் அதற்கு ஒத்துழைக்கின்றோம். அவர்களுடைய நெருக்கடிகளுக்குப் பணிந்து உங்களை நம்பியிருக்கின்ற தமிழ்ச் சமூகத்தை - உங்களைத் தெரிவு செய்த சமுதாயத்தை ஏமாற்றிவிடாதீர்கள். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் நேரில் கோரினார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா.

"உங்கள் மீதான நம்பிக்கையீனம் அதிகரித்துச் செல்கின்றது. உங்களைத் தெரிவு செய்த மக்களுக்கு உங்கள் மீதான நம்பிக்கை குறைந்து வருகின்றது. உங்களைக் கனத்த இதயத்துடன் - மனத்துடனேயே வரவேற்க வேண்டியுள்ளது" என்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்பாக மாவை.சேனாதிராசா குறிப்பிட்டார்.

ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உங்களை எங்கள் மக்கள் நம்பிக்கையோடு தெரிவு செய்தார்கள். எங்களுடைய மக்கள் எதிர்பார்த்த விடயங்கள் நடைபெறவில்லை. மக்கள் >> 52

## படை சுவீகரித்த 19 ஏக்கரில் 7 ஏக்கரே நேற்று விடுவிப்பு

### புதுக்குடியிருப்புப் போராட்டமும் நிறைவு

முல்லைத்தீவு, மார்ச் 5

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக இராணுவம் சுவீகரித்த 19 ஏக்கர் காணியில் 7.75 ஏக்கர் காணி நேற்று விடுவிக்கப்பட்டது. >> 52

## வடக்கு அபிவிருத்திக்கு புதிய திட்டம் வேண்டும்

### அதற்காக ஒவ்வொரு மாதமும் தான் யாழ். வருவேன் என்கிறார் மைத்திரி

யாழ்ப்பாணம், மார்ச். 5

"வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுச்செயற்படுத்தப்படவேண்டும். அதற்காக ஒவ்வொரு மாதமும் நான் இங்கு வருவேன். மூன்று மாதங்களுக்கு இது தொடரும்."

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறி >> 52

## இலங்கைக்கு மேலும் இரு வருட அவகாசம்

### நேற்றுமுன் தினம் வெளியானது புதிய ஐ.நா: தீர்மானத்தின் வரைவு

ஜெனிவா, மார்ச் 5

பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்புடன் கலப்பு நீதிமன்றம் அமைக்கப்படவேண்டும் என்ற பரிந்துரை உள்ளிட்ட ஐ.நா.வின் முன்னைய தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசுக்கு மேலும் >> 06

## ஹூசைனின் அறிக்கையில் இடம்பிடித்தது மாவீரர் நாள்

ஜெனிவா, மார்ச் 5

கடந்த ஆண்டு வடக்கில் நினைவுகூரப்பட்ட மாவீரர் நாள் தொடர்பிலும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹூசைன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹூசைனின் இலங்கை தொடர்பான அறிக்கை, ஐ.நா. மனித உரிமைகள் >> 06

## மக்கள் போராட்டங்களை கணக்கெடுக்காத மைத்திரி

யாழ்ப்பாணம், மார்ச் 5

'அரச தலைவரிடம் தெரிவியுங்கள்' அலுவலகத்தைத் திறந்து வைத்த அரச தலைவர் மைத்திரிபால, அவர் திறந்து வைத்த அலுவலகத்தின் முன்பாகப் போராட்டம் நடத்திய வேலையற்ற பட்டதாரிகளையும், காணாமற்போ >> 06

### முச்சந்தி முரளி



சொல்லச் சொல்ல அவை ஏமாற்றிக் கொண்டு தானே இருக்கினம் பாருங்கோ...

## மிக உறுதியான தீர்மானம் இலங்கை மீது வேண்டும்

### உறுப்பு நாடுகளிடம் கோருகின்றது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

ஜெனிவா, மார்ச் 5

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையைக் கவனத்தில் எடுத்து, இலங்கை தொடர்பாக இன்னும் உறுதியானதும், காத்திரமானதுமான தீர்மானத்தை உறுப்பு நாடுகள் சபையின் இந்த அமர்வில் முன்வைக்க வேண்டும் என்று பன்னாட்டு மனித உரி >> 52

## உயிரிழப்பு எண்ணிக்கை உயர்கிறது

## 12 வயதுச் சிறுவன் நேற்று யாழில் டெங்கினால் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ்ப்பாணத்தில் சிறுவன் ஒருவனும் டெங்குக் காய்ச்சலினால் நேற்று உயிரிழந்தான் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. 4 நாள்களே காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது சிறுவன் உயிரிழந்தான்.

கண்டி வீதி, அரியாலையைச் சேர்ந்த தவனேந்திரன் கிரிசாந் (வயது - 12) என்ற சிறு >> 52

## காணாமற்போனோரைக் கண்டறியக் கோரி

# பொலிஸாரின் தடையைத் தாண்டி இறுதிவரை போராடினர் உறவுகள்



யாழ்ப்பாணம், மார்ச் 5

அரச தலைவரின் யாழ்ப்பாணத்துக்கான வருகையின்போது கவனவீர்ப்பில் ஈடுபட்ட காணாமற்போனோரின் உறவுகளை அகற்றுவதற்குப் பொலிஸார் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. அவர்கள் இறுதிவரை போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

தமது பிரச்சினையை அரச தலைவரின் கவனத்துக்குக் கொண்டு சென்று பதிலைப் பெறும் நோக்கில் காணாமற் >> 06

## முப்படையினரை விசாரணை செய்ய நான் தயாரில்லை

### பலாலிப் படை முகாமில் கூறினார் மைத்திரிபால

யாழ்ப்பாணம், மார்ச் 5

முப்படையினர் மீது குற்றப் பத்திரிகைகளைக் கொண்டு வந்து விசாரணை செய்வதற்கு நான் தயாராக இல்லை. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுத் தெரிவித்தார்.

பலாலி வான் படை முகாமில் அவதானிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதன் பின்னர் முப்படையினரையும் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் சந்தித்து உரை >> 52

## கணவன், மகளின் இறுதி ஆசையை நேற்று புதுக்குடியிருப்பில் நிறைவேற்றினார் தாய்



முல்லைத்தீவு, மார் 5

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் ஒரு மாத காலமாக அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுத் தனது கணவனின் இறுதி ஆசையையும் மகளின் இறுதி ஆசையையும் நேற்று நிறைவேற்றி வைத்தார் 83 வயது மூதாட்டியான சி.செல்லம்மா. இதனால் இரண்டு ஆத்மாக்கள் நேற்றைய் தினம் சாந்தியடைந்தன.

இது குறித்து அந்தத் தாய் தெரிவித்ததாவது: >> 52



## உலகை ஏமாற்றவே இங்கு அரச தலைவருக்கு முறையிடும் அலுவலகம்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆளுநர் அலுவலகம் முன்பாக விசனம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

குறைகளை அரச தலைவரிடம் தெரிவிப்பதற்கான அலுவலகத்தைத் திறப்பதற்கு வந்த அரச தலைவரிடம்கூட எம் குறைபாடுகளைக் கூற முடியவில்லை. >> 06




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த குழந்தையை வீட்டில் குழி தோண்டிப் புதைத்த தாய்

### கிளிநொச்சிப் பகுதியில் சம்பவம்



கிளிநொச்சி,மார்ச் 5

பிரசவித்து 7 நாள்களேயான ஆண் குழந்தையின் சடலம் குழிதோண்டிப் புதைக்கப்பட்ட நிலையில் நேற்று மாலை மீட்கப்பட்டுக் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது என அக்கராயன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி, ஆனைவிழுந்தான் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள 25 வயதுடைய பெண் ஒருவர் கடந்த மாதம் ஆண் குழந்தை ஒன்றை வீட்டில் பிரசவித்துள்ளார். இவ்வாறு பிரசவிக்கப்பட்ட குழந்தையை வீட்டின் பின்னால் உள்ள மலசல கூடத்துக்கு அருகில் குழிதோண்டிப் புதைத்துள்ளார்.

குறித்த பெண் கடந்த சில நாள்களாக ஏற்பட்ட கடும் இரத்தப் போக்கினால் நேற்று கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இதன்போதே அவர் குழந்தையைப் புதைத்த விடயம் தெரியவந்தது.

கிளிநொச்சி வைத்தியசாலை நிர்வாகத்தினரால் அக்கராயன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், மண்ணுள் புதைக்கப்பட்ட நிலையில் சாவடைந்த குழந்தையை மீட்டு கிளிநொச்சி வைத்தியாலையில் ஒப்படைத்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய பெண் கொழும்பில் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்து வருகின்றார். அவருக்கு திருமணமாகிவிட்டது. குறைப்பிரசவம் இடம்பெற்றமையாலேயே குழந்தையை வீட்டில் குழி தோண்டிப் புதைத்ததாகதாயாரானம.ஜீவராணி (வயது 25) ஆரம்ப கட்ட விசாரணைகளின்போது தெரிவித்தார்.

கிளிநொச்சி நீதிவான் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டு விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுள்ளன என அக்கராயன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

(த-21-35)

# காணாமற்போனோரை கண்டறிய வலியுறுத்தி தொடரும் போராட்டம்

## தீர்வு கோரி இதுவரை 4000 கடிதங்கள் அரச தலைவருக்கு அனுப்பி வைப்பு



வவுனியா, மார்ச் 5

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டம் கிளிநொச்சியிலும், வவுனியாவிலும் நேற்றும் தொடர்ந்தது.

கிளிநொச்சியில் கிளிநாச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக 13ஆவது நாளாக நேற்று மக்கள் கண்ணைக் கறுப்புத் துணியால் கட்டியபடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியாவில் கடந்த 9ஆவது நாள்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் காணாமற்போனோரின் உறவுகளின் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்பின் பிரதிநிதிகளின் ஆதரவின்றித் தொடர்வதாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்றும்வரை தமது பொராட்டம் தோடரும் என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

போராட்டத்துக்குத் தீர்வு கோரி இதுவரை 4 ஆயிரம் கடிதங்கள் அரச தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாகத் தீர்க்கமான முடிவைத் தெரிவிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி அரச தலைவருக்குக் கடிதம் அனுப்புவதற்கான நடவடிக்கையைக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-4)

# ஊரையடிச்சு உலையில போட நிக்கிறாங்கள். அதுக்கு கொஞ்சப் பேர் செதில் பிடிக்கினம்...



மத்தியானம் செற்றியில இருந்து இந்தியன் சனலுகளின்ர செய்தியளைப் பிரட்டிப்பிரட்டிப் பார்த்து சலிப்பேற அதை நிப்பாட்டிப் போட்டு நிம்மதியா சாப்பிட்டன். ரெலிபோன் சிணுங்கிச்சுது. ஓடிப்போய் எடுத்தா வன்னியில கிடக்கிற என்ர காணியப் பற்றின அழைப்பு. காணிக் கந்தோரிலயிருந்து எடுக்கிறம். உங்கட காணிப்பிணக்கு தொடர்பான விசாரணையொன்று இருக்கு நாளைக்கு வாங்கோ என்று ஒரு பொம்பிளக் குரல்.

'இதோட எங்கட காணிக்கு பேமிற் கிடைக்குமோ' என்று நான் ஆர்வமேலீட்டில கேட்க. அவ சொன்னா "நீங்கள் விசாரணைக்கு வாங்கோவன் முதல்ல. உங்களிட்ட கிடக்கிற காணிக்கான ஆவணம் எல்லாத்திண்டையும்; ஒரிஜினலைக் கொண்டு வாங்கோ எண்டாள்". எங்களிட்டக் கிடக்கிற ஒரிஜினல் எல்லாத்தையும் அடியொட்ட வறுகிற அரச வேலை செய்யிறவையலெல்லோ அவையள்! ஒரிஜினலா ஒன்றையும் இருக்க விடாயினம்தானே!

நான் சொன்னன் "எங்களிட்ட கிடந்த ஒரிஜினல் எல்லாத்தையும் கொழும்பிலயிருந்து வந்து காணிக் கச்சேரியை வைச்சவையள் பிடிங்கி எடுத்துப்போட்டினம். பிறகென்னத்தைக் கேட்கிறியள்?". "ஆ.... சரி... சரி... கிடக்கிறதக் கொண்டு வாங்கோ" என்று போட்டு பெட்டை போனை வைச்சிது.

சரியென்று போட்டு அடுத்த நாள் அவசர அவசரமா வெளிக்கிட்டுப் பத்து மணிக்குக் அவையளின்ர அலுவலகத்தில நிக்கிறன். "காணிப்பிணக்குப் பார்க்கிறாக்கள் வரேல்ல, கொஞ்சம் பொறுங்கோ" என்று இருத்திச்சினம். சரியென்று இருந்தா நேரமோ போகுது. ஒன்றும் நடந்தபாடாயில்லை. சாடையா வயிற விறாண்ட கன்ரீன் பக்கம் போவமென்று போனா அங்கதான் எல்லா அலுவலர்மாரும் நிக்கினம். அது அவையின்ர ரீரைம் போல! பெடி பெட்டை கிழடு என்று எல்லாரும் நின்றிச்சினம்.

நானும் சால்வையை சரிபடுத்திக் கொண்டு புகுந்து நெளிஞ்சு உள்ளுக்க போய் எனக்கு ஒரு ரீ தாங்கோ என்று கத்தினன். என்ர கத்தலை எங்க கேட்டாங்கள். பெடித்தரவழியள் வந்து இளசுகளா இருக்கிற பொம்புளப் புள்ளையளுக்கும் சேர்த்து ஓடர் பண்ணுறாங்கள். அதுவும் பெருத்த குரலில.

"அக்கா பூப்போட்ட பேணியில மாப்போட்ட தேத்தண்ணி தாங்கோ. சாயம் கொஞ்சம் தூக்கலா இருக்கவேணும் [illegible] பெடிப்பிள்ளையின்ர ஓடர் [illegible] நானும் சேர்ந்துகொண்டன் "பிள்ளை எனக்கும் அந்தப் பூப்போட்ட பேணியில மாப்போட்ட தேத்தண்ணி ஒன்று தா. கனநேரமா இங்க நின்று கத்திறன்" என்றன். அதுக்குப் பிறகுதான் தேத்தண்ணி வந்திச்சுது. சீனியக் குறைக்கச் சொல்ல மறந்து போனன். கன்ரீன்காரக்கா தேயிலைச் சாயத்தோட சீனியையும் தூக்கலா போட்டிட்டா. இனி என்ன செய்யிறது. சலரோகக் குளிசையில ஒன்ற கூடப் போடுவம் என்று நினைச்சுக் கொண்டு தேத்தண்ணியைக் குடிச்சு முடிச்சன்.

அதுக்குப் பிறகும் பிணக்குக்காரன் வராமல் இருக்க, நான் சொன்னன் "தம்பி தூர இருந்து வந்தனான். எங்களிண்ட விசாரணையை முடிச்சுப் போட்டு விடுங்கோ." சரியென்று போட்டு கூப்பிட்டு வைச்சு முதல்ல இருந்து கேட்டாங்கள். "இதைத்தானே ஐஞ்சு வருசமா கேட்கிறியள். எப்ப விசயத்தை முடிக்கப் போறியள்" என்று நான் கொதிச்சுப்போனன். "இன்னும் ஒரு கிழமைக்குள்ள முடிச்சுப் போடுவம். கொஞ்சம் காலம் தேவைப்படுகுது" என்றான் இருந்த பெடி. "என்ன தம்பி வெளிநாட்டமைச்சர் ஐ.நாவில கேட்கிற கால அவகாசம் மாதிரி உங்களிண்ட கால அவகாசமும்; ஐஞ்சு வருசமா நீண்டு கொண்டு போகுது. ஒரு முடிவை எடுத்துப்போட்டுச் சொல்லுங்கோவன். நாங்கள் எங்கட சோலியளப் பார்ப்பம்" என்று கொஞ்சம் கடுமையா முகத்தை வைச்சுக்கொண்டு கேட்க. அவன் சொன்னான் "இந்தத் தடவை கட்டாயம் தீர்த்துப் போடுவம்." அவ்வளவுதான். பிறகென்ன அவர் பைலை மூடி வச்சிட்டுப் போட்டார்.

சரி இதுக்கு மேல என்ன செய்யிறதென்று கிளிநொச்சி சந்திக்கு வந்து கடையில ஒரு பேப்பரை வாங்கிப் பார்த்தா சம்பந்தன் ஐயா கதைச்சதில கேப்பாபிலவு காணியை விடிவிக்கிறதுக்கு மைத்திரியார் ஒத்துக் கொண்டிருக்கிறார் என்று கிடந்திச்சுது. அதுகள் வெய்யிலியும் குளிர் மழையிலயும் கிடந்து கஷ்ரப்பட்டதற்கும் சம்பந்தன் ஐயா அதை பொருத்தமாகப் பதமா கதைச்சதுக்கும் கிடைச்ச பயன் பாருங்கோ. ஏதோ தமிழன் ஒருத்தன் எதிர்கட்சியாக இருக்கிறதால இப்படியாவது கொஞ்ச விசயமாவது நடக்குது என்று மனதுக்க நினைச்சுக் கொண்டன்.

அப்ப காலடியில ஒரு கொழும்பு பஸ் வந்து நின்றிது. அதில ஏறிக் குந்திட்டன். கொண்டெக்ரர் பெடியன் காசைக் கேட்க காசைக் குடுத்திட்டு ரிக்கற்றை வாங்கிறதுக்கு முன்னம் ரெலிபோன் அடிச்சுது. எடுத்தா என்ர பழைய சினேகிதம். அவன் எடுத்தா வைக்க மாட்டான். இனி பஸ்ஸில போகேக்க என்னத்தக் கதைக்கிறது என்று போட்டு கட் பண்ணிப் போட்டு விட்டன். அவனோ விடுகிறமாதிரியில்லை பிறகும் பிறகும் அடிச்சான். ஏதும் அவசரமாக்குமென்று போட்டு எடுத்தன். "அப்புச்சி உனக்கொரு விசயம் [illegible] படி சொல்லுறான். நாங்கள் கேப்பாப்பிலவு சனத்தின்ர போராட்டத்துக்கு ஆதரவா பேரவையின்ர கூட்டத்தைப் போட்டபடியாத்தானாம். சம்பந்தர் ஓடிப்போய் கேப்பாப்பிலவு காணியள விடிவிச்சவராம் என்று."

"ஆமோ...!" என்று நான் கேட்டுக் கொண்டிருந்தன். பஸ்ஸுக்க நான் கத்திக் கதைக்க சனம் எல்லாம் காதை என்னட்டையல்லே நீட்டிப்போட்டு இருக்குதுங்கள். அதுதான் நான் ஊம்... கொட்டிக்கொண்டிருந்தன். ஒரு கட்டத்தில தாங்கேலாம "சனம் தன்பாட்டில உயிரைக் கொடுத்து போராடிப் பெற்ற வெற்றியை பொன்னம்பலத்தின்ர பேரன் கொண்டு போக நிக்கிறானோ? ஒரு மாசமா உவங்கள் எங்க நின்றவங்களாம்? சம்பந்தனால காணி கிடைச்சதெண்டா அதுக்கு சந்தோஷப்படாமல் இவங்களுக்கேன் புகையுது. தங்கட வாய்சவடால் வீரம் சனத்துக்கு விளங்கிடும் என்ற பயத்தில தன்னால தான் கேப்பாபிலவு விடிவிச்சது என்றுறாங்கள் போல" என்று நான் பொறுமையிழந்து கத்தப் பக்கத்தில இருந்த, நின்றதுகள் எல்லாம் என்ன ஒரு மாதிரிப் பார்த்ததுகள்.

அதைப் பாத்திட்டு சரி நான் வைக்கிறன் பிறகு கதைப்பம் என்று போட்டு போனைக் கட் பண்ணிப்போட்டன். டவுனுக்க வந்து பஸ்ஸால இறங்கி நடந்து மற்ற பஸ்ஸைப் பிடிப்பம் என்று அவசரமா போய்க் கொண்டிருக்கிறன். பேப்பர்காரப் பெடியன் கண்டிட்டு எங்க "அப்புச்சி போயிட்டு வாறீங்கள்" என்றான். "கிளிநொச்சியில ஒரு அலுவல் போயிட்டு வாரன். ஏதும் புதினம் இருக்கே" எண்டன். "பெரிசா ஒன்றும் இல்லை. உவை பேரவைக்காரர் அமைப்புக்களைக் கூப்பிட்டு கூட்டம் வைச்சு கேப்பாப்பிலவு நேரடி வர்ணனையொன்று குடுத்தவையாம். முன்னாள் எம்.பிமார் அதில அரசாங்கம் விடமாட்டாங்கள். சம்பந்தர் தங்கட கூட்டத்தைக் குழப்பத்தான் இப்படியொரு விளையாட்டு விடுகிறார். என்று சொல்லிச்சினமாம். ஏ9 வீதியை மறிப்பம், சாகும்வரை பட்டினி கிடப்பம், வாகனத்தில வெளிக்கிட்டு கேப்பாப்பிலவுக்கு வரிசை கட்டிப் போவம் என்றெல்லாம் தாங்கள் ஏற்கனவே செற்றப் பண்ணினவையளை வைச்சு சொல்லுவிச்சினமாம். பிறகு முன்னாள் எம்.பிமார் தங்கட ஐடியாவா வடக்கு கிழக்கில் கடையடைப்பு நடத்துவம் என்று சொல்லி முடிச்சுப் போட்டினமாம். முடிஞ்சதும் முடியாததுமாக மு.பா.உறுப்பினரிடம் நின்ற ஒரு ரி.விக்காரர் கமராவை நீட்ட நீட்டி முழக்கிப்போட்டு போட்டாராம். உந்த டொக்டர்மார், கம்பஸ்காரர் எல்லாரும் தலையாட்டிக்கொண்டிருந்தவையாம்" என்றான்.

யாரோ கஷ்ரப்பட தங்களாலதான் அது நடந்தது என்று கூசாமல் சொல்லுறாங்கள். இந்திய அரசியலைவிட மோசமா நிக்கிறாங்கள். அங்கையென்றாலும் இளைஞர் போராடித்தான் ஜல்லிக்கட்டு நடந்தது என்று நாகரிகமா அரசியல்வாதிகள் சொல்லுறாங்கள். இங்கை என்னவென்றா ஊரையடிச்சு உலையில போட நிக்கிறாங்கள். அதுக்கு கொஞ்சப் பேர் செதில் பிடிக்கினம்.

அம்பலத்தாடி
அப்புச்சி

aappuchchi@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவம் விடுவித்த வீடுகள் பெரும் சேதம்

## மனிதாபிமானமற்ற செயல் என புதுக்குடியிருப்பு மக்கள் விசனம்



முல்லைத்தீவு, மார்ச் 5
புதுக்குடியிருப்பில் விடுவிக்கப்பட்ட வீடுகளில் உடனடியாகக் குடியமர முடியாதவாறு அவை உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன.

இதனால் ஆத்திரம் அடைந்த மக்கள், இராணுவம் செய்த வேலை சரியா? இவர்களிடம் மனிதாபிமானத்தை நாம் எதிர்பார்க்க முடியுமா? எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலத்துக்கு முன்னால் உள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி கடந்த ஒரு மாத காலமாக தகரக் கொட்டகை அமைத்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தையும், தொடர் அறவழி போராட்டத்தையும் நடத்திய மக்கள் நேற்று அவர்களது காணிகளுக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

இதனையடுத்தே அவர்கள் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளனர்.

இராணுவம் விடுவித்த காணிகளில் உள்ள வீடுகளுக்குள் கண்ணாடிப் போத்தல்கள் உடைக்கப்பட்டுள்ளன. வீட்டினுள் செல்வதற்காக வாசலில் பாதணிகளைக் கழற்றியவர்களின் கால்களை கண்ணாடித் துண்டுகள் பதம் பார்த்தன. அத்துடன் சமையல் அறையில் உள்ள அடுப்புகள் இடிக்கப்பட்டிருந்தன. கதவு நிலைகள் உடைத்துக் கழற்றப்பட்டிருந்தன.

வீடுகள் உடனடியாகக் குடியமர முடியாத அளவுக்கு சேதப்படுத்தப் பட்டிருந் தன.

பலத்த எதிர்பார்ப்போடு சென்ற மக்கள் இவ்வாறான செயற்பாடுகளைக் கண்டு ஆத்திரம் அடைந்த நிலையில் இராணுவம் செய்த வேலை நியாயமானதா? இவர்களிடம் நாம் மனிதாபிமானத்தை எதிர்பார்க்க முடியுமா எனக் கேள்வி எழுப்பினர். (த-7)

# தரைமட்டமான வீடுகளின் நிலைகண்டு மக்கள் ஒப்பாரி



முல்லைத்தீவு, மார்ச் 5
கஷ்டத்தின் மத்தியில் பாடுபட்டுக் கட்டிய வீடுகள் தரைமட்டமாக்கப் பட்டுக் கிடந்தமை கண்டு ஒப்பாரி வைத்துக் கதறி அழுதனர் புதுக்குடியிருப்பு மக்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்னால் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளில் ஒரு தொகுதியை நேற்று இராணுவம் விடுவித்தது. பலத்த எதிர்பார்ப்போடு காணிகளுக்குள் ஓடிச் சென்ற மக்களுக்கு அங்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

பாடுபட்டுக் கட்டிய வீடுகள் தரைமட்டமாகிக் கிடந்தன.

அடையாளத்துக்கு நின்ற மரங்களைக் கூட காணவில்லை. வீட்டில் சமைத்துச் சாப்பிடுவதற்கு வருகை தந்த எங்களுக்கு இந்த நிலையா என ஒப்பாரி வைத்து அழுதார்கள் மக்கள்.

நேற்று விடுவிக்கப்பட்ட 20 குடும்பங்களின் வீடுகளில் 15 வீடுகள் இருந்த இடம் தெரியாமல் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. (த-7)

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன்
தேவஸ்தானம் மஹா சத சண்டி யாகம் - 2017
4ஆவது நாள் உற்சவம்



தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே
**நான்காம் நாள் யாகத்தின் உபயகாரர்கள்.**

## படைவிட்டோடிகள் ஆயிரத்து 500 பேர் இதுவரை கைது

கொழும்பு, மார்ச் 5
இந்த மாதம் முதலாம் திகதி வரை முப்படையிலிருந்து தப்பிச் சென்ற ஆயிரத்து 500 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அரச தகவல் திணைக்களம் கூறியுள்ளது.

அது மேலும் தெரிவித்துள்ளதாவது:

கைதுசெய்யப்பட்டவர்களில் ஆயிரத்து 149 இராணுவத்தினர், 3 இராணுவ அதிகாரிகள், 327 கடற்படையினர், 21 விமானப் படையினர் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.


கடந்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரை வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காலத்தைப் பயன்படுத்திச் சட்டரீதியாக விலகிச் செல்லாத முப்படையினருக்கு எதிராக தொடர்ந்தும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அனுமதியின்றி நீண்டகால விடுமுறையிலிருந்து கடமைக்கு சமுகமளிக்காத முப்படையினர் சட்ட ரீதியாக விலகுவதற்காகக் கடந்த ஆண்டு இரு முறை பொதுமன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டுக் கால அவகாசம் வழங்கப்பட்டது.

வழங்கப்பட்ட பொதுமன்னிப்புக் காலத்தைப் பயன்படுத்தி 34 அதிகாரிகள் மற்றும் 8ஆயிரத்து 843 படையினர் சட்டரீதியாக விலகிச் சென்றுள்ளனர்என்றுள்ளது. (த-10)

# ஆயுதக் கிடங்குகளை கண்டு மக்கள் அச்சம்

முல்லைத்தீவு, மார்ச் 5
புதுக்குடியிருப்பின் மத்திய பகுதியில் ஆயுதக் கிடங்குகளைக் கண்டு பொதுமக்கள் அச்சமடைந்தனர். இவ்வாறான இராணுவ முகாம்களை பொதுமக்கள் வாழும் பகுதிகளில் இருக்கவிடுவது பயங்கரமானது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.



புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்னால் பொதுமக்களின் 19 ஏக்கர் காணியைச் சுவீகரித்த இராணுவம் அதில் 682ஆவது படையணிக்கு பெரிய முகாம் ஒன்று அமைந்திருந்தது.

இந்த முகாமை அகற்றவேண்டும் என வலியுறுத்திக் கடந்த ஒரு மாத காலமாக மேற்கொண்ட அறவழிப் போராட்டத்தின் பயனாக நேற்று ஒரு தொகுதி காணிகள் விடுவிக்கப்பட்டன.

விடுவிக்கப்பட்ட காணிகளைப் பார்வையிட ஆவலுடன் சென்ற மக்கள் அங்கு மண் அணைகள் போட்டுப் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஆயுதக்கிடங்கு ஒன்று இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். ஏற்கனவே ஆயுதக் கிடங்கு இருப்பதாகச் சொன்ன போது நாங்கள் நம்பவில்லை. வந்து பார்த்தபோதுதான் இது ஆயுதக் கிடங்கு என்பது தெரிகின்றது. பொதுமக்கள் வாழும் இடங்களில் இராணுவத்தை இருக்கவிடுவது பயங்கரமானது என அந்த மக்கள் தெரிவித்தனர். (த7)

# இந்திய மீனவர்கள் கைது

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி தொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நேற்று நள்ளிரவு இந்திய மீனவர்கள் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக் கடற்பரப்பான நெடுந்தீவுக் கடலில் அத்தமீறி தொழிலில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் இரண்டு படகுகளில் வருகை தந்த 9 இந்திய மீனவர்களே இவ்வாறு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடைய படகும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் இன்று யாழ்ப்பாண கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (21-101)

எல்லா மோட்டார் சைக்கிள் குத்தகையுடன்
பெறுமதிமிக்க சிங்கர் மின்விசிறி
இலவசம்




SINGER FINANCE
தொடர்புகளுக்கு:
சுஜந்தன் 077 7 391 449
தனு 077 9 357 124
இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உழவு உபகரணம் தேவை**
உழவு இயந்திரத்துக்கு 2 சட்டி கலப்பை
(Disc Plough) தேவை.
விலை விவரத்துடன் தொடர்புகொள்ள
076 556 0005

# சாரதியின் தூக்கத்தால் தடம்புரண்டது பிக்கப்

முல்லைத்தீவு, மார்ச் 5
முல்லைத்தீவு நகரை அண்மித்த பகுதியில் பயணித்த டாட்டா பிக்கப் வாகனத்தின் சாரதி தூங்கியதால், குறித்த வாகனம் வீதியை விட்டு விலகி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. எனினும் சாரதி மயிரிழையில் சிறுகாயங்களுடன் உயிர் தப்பியுள்ளார் என்று முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. எ 34, வீதியூடாக, முள்ளியவளையில் இருந்து முல்லைத்தீவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த குறித்த வாகனம் இவ்வாறு விபத்துக்குள்ளானது.

விபத்துத் தொடர்பில் தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்துக்கு விரைந்த முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸார், விபத்துக்குள்ளான வாகனத்தை மீட்டெடுத்து பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ஜ-101)

**பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகள் 7 - 15 வயதிற்கு இடைப்பட்டவர்களா?**
BCHS
**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
பெருமையுடன் அறிமுகப்படுத்தும்

**Young Learners English (YLE)**
- இது ஒரு சர்வதேசப் பரீட்சை மட்டும் அல்லாமல் அதற்குரிய சான்றிதழ் University of Cambridge ஆல் வழங்கப்படுகிறது.
- Writing , Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.

**Spoken Sinhala (3 Months course)**
- Spoken Sinhala சிங்களத்தில் சரளமாக கதைக்கவும் எழுதவும் விரும்புபவர்களுக்காகவே அறிமுகப்படுத்தப்படுகிறது.
- தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்.

இன்றே உங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்



சனி மற்றும் ஞாயிறு தினங்களில் அறிமுகப்படுத்தப்படுகிறது.
**11.03.2017**
**ஆரம்பம்**

Jaffna Branch : No.15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna.
Tel : 021 222 4550, 077 464 9297, 076 3166 066

**HEAT PRESS MACHINES** 077 42 42 522




THE MAGIC TOUCH
218c, Hill Street,
Dehiwala.

**மணமக்கள் தேவை**
கனடாவில் வசிக்கும் யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 30, 32 வயதுகளை உடைய செவ்வாய் குற்றம் உள்ள மணமகன்களுக்கு தகுந்த அழகான மணமகள்களை எதிர்பார்க்கிறோம். கனடாவில் வசிக்கும் 34 வயதுடைய செவ்வாய் குற்றம் இல்லாத மணமகனுக்கு யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகளைத் தேடுகிறோம். லண்டனில் வசிக்கும் 33 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறோம். யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனை யாழில் தேடுகிறோம்.
T.P & Viber: 00164750 43336/ 001416 6661855

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af
**பிரெஞ்சு வகுப்புக்கள்**
யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்
பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம்
AF உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
(இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது)



பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்.
(யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை)



International Diploma
A1 பரீட்சைக்கட்டணம்
AF இல் படிப்போருக்கு 4000/- ஏனையோருக்கு 10300/-
யாழில் எங்கு படித்தாலும் இப்பரீட்சையை எமது AF இல் மட்டுமே எழுத முடியும்.
ஆரம்பம் சில தினங்களில், உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ் நிலையம் → புகையிரதக் கடவை → AF (வெள்ளை மாடிக் கட்டடம்)



## தியாகி அறக்கொடை நிறுவன ஸ்தாபகர்
## திரு .வாமதேவா தியாகேந்திரன்
## அவர்களின் நிதிப்பங்களிப்புடன் மாதாந்த உதவி பெறும் ஒரு தொகுதி பயனாளிகளுடனான சந்திப்பு

தியாகி அறக்கொடை நிறுவனத்தால் நலிவுற்ற குடும்பங்களிற்கு மாதாந்த உதவித்திட்ட நிகழ்வு 02.03.2017 வியாழக்கிழமை பிற்பகல் 4.00மணியளவில் அறக்கொடை வளாகத்தில் 5 லட்சம் ரூபா பெறுமதியான கொடுப்பனவு நடைபெற்றது. நிறுவன ஸ்தாபகர் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி பயனாளிகளில் 72 பெண் தலைமைத்துவ குடும்பங்களிற்கு தலா 2000.00 ரூபாவும், 24 பேருக்கு தலா 500.00 ரூபாவும், பொறுப்புடன் கூடிய75 முதியவர்களுக்கு தலா 1500.00ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களும், 7 பேருக்கு தலா 500.00ரூபாவும், ஒருவயதிற்குட்பட்ட குழந்தைகளுடைய 55 குடும்பங்களிற்கு தலா 1000.00ரூபா பெறுமதியான சத்துணவுப்பொருள்களும், வறுமைக் கோட்டிற்குட்பட்ட 64 மாணவர்களுக்கு தலா 500.00ரூபாவும், 136 மாணவர்களுக்கு 500.00 ரூபா பெறுமதியான கூப்பனும், புற்றுநோயாளர்கள் 16 பேருக்கு 1000.00 ரூபா பெறுமதியான கூப்பனும், பாடசாலை செல்லும் 15 மாணவர்களுக்கு தலா 4000.00ரூபா பெறுமதியான மூக்குக்கண்ணாடிகளும் அன்றைய தினம் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

நல்லூர் கோயில் வீதியில் (கந்தன் கருணைக்கு அருகில்) இரு கடைகள் வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 080 3949 (மாலை 6- 9 மணி)

## வாடகைக்கு

Colombo.06, Ramakrishna Road, இல் Restaurant 320 sqft தளபாடங்களுடன் வாடகைக்குண்டு. தளபாடங்கள் விற்பனைக்கு விலை பேசித்தீர்மானிக்கலாம். (C/28279)(22,18,17)

RE/MAX GAJAN 077 934 7222 (CALL 9.00am-9.00pm)

## விற்பனைக்கு

மானிப்பாய் ஆலடிச்சந்திக்கு அருகில் 2-1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0774611205

## விற்பனைக்கு

மொறட்டுவை சொய்சாபுர தொடர்மாடியில் சகல வசதிகளுமுடைய B type வீடொன்று அவசர பணத்தேவைக்காக விற்பனைக்கு. ஒரே உரிமையாளர். தெளிவான உறுதி. தொடர்புகளுக்கு:

0714- 813190 & 0773 -355055

(கனடா - 00164 - 7518 7575

## கடையுடன் வீடு வாடகைக்கு

திக்கம், அல்வாய் மேற்கு, நெல்லியடி வீதி, சித்திவிநாயகர் பாடசாலையடி/ கடையுடன் வீடு வாடகைக்கு (தனியாகவோ/இரண்டும் ஒன்றாகவோ) திக்கம் நெல்லியடி பிரதான வீதியில் எவ்வித தொழிலுக்கும் ஏற்றது. முற்பணம், வாடகை. பார்வை நேர விவரங்களுக்கு

சேகர்/ கயன்/ மது:
077 327 7491

## விற்பனைக்கு

கொழும்பு 06, பாமன்கடை வீதியில் புதிய தொடர்மாடி மனைகள் விற்பனைக்குண்டு. (Complete 2018/ June) பதிவுக்கட்டணம் 600000/= 32 வீடுகளில் 26 வீடுகள் விற்பனைக்குண்டு. (Standard Apartments 2BHD) 975 ச.அடி/3BHD 1150-1350 ச.அடி Duplex Apartments 4BHD 1375-2100 ச.அடி/ 5BHD 2150 ச.அடி (C/28277)(22,18,17)

RE/MAX கஜன் 077 934 7222 (CALL 9.00Am-9.00Pm)

## மணமகள் தேவை

லண்டனில் P.R உள்ள கௌரவ மணமகனுக்கு மணமகள் தேவை. நட்சத்திரம் - விசாகம் - முதலாம் பாதம் வயது - 32

தொடர்பு: 071 607 0810

## ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

சிறந்தரக கிறிறாஷ் 2கிழமை, 3கிழமை ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 693 3022

## உணவகம் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை

சிற்றுண்டி தயாரிப்பவர் தேவை. (ஆண்/பெண்)

077 480 3413

## விற்பனைக்கு

Wilton Cake tray, தகர Cake tray, Electrics oven, Wedding Structure Cake things விற்பனைக்கு உண்டு.

011 250 5325

## விற்பனைக்குண்டு

LAND ROVER

மிகவும் நல்ல நிலையில் உள்ள LAND ROVER JEER விற்பனைக்குண்டு. லீசிங் வசதியுண்டு.

தொடர்பு: 077 910 7242

## IELTS

General / Academic
Spoken Eng & Grammar

Home Visits- :- By: Mr.B.Ruban
(Dip.in.Eng, BBA & ielts trd at British Council)
22, Alady Kulapiddy road, Annaicoddai.
More Details: 077 978 5749

## வீடு விற்பனைக்கு

இராஜபாத வீதியில் U.N.H.R ஸ்ரோஸுக்கு அண்மையில் 4¼ பரப்பு வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு.

077 729 9031, 077 123 7063

## உடன் விற்பனைக்கு

வைத்தியசாலைக்குத் தேவையான ECG Mechin CT200-2 Patient Examination Bed-4, Medicine Trolley-2, Blood Pressure Machine-2 அத்துடன் வைத்தியசாலையை உடனடியாக ஆரம்பிப்பதற்கான அனைத்து உபகரணங்களுடன் Computer Printers, பழைய-4,000 ஓடுகள், உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 607 8888
077 213 1276 Mr.Siva

## ஆங்கில வகுப்பு

வட்டுக்கோட்டையில் அரசாங்க, இன்ரநஷனல் பாடசாலை மாணவர்களுக்கு வகுப்புக்கள் நடத்தப்படும். O/L, A/L ஆங்கில இலக்கியமும் கற்பிக்கப்படும்.

077 819 1314

## வீடு வாடகைக்கு

பரமேஸ்வரா கல்லூரி வீதியில் (வளாக ஒழுங்கை) 4 அறைகளுடன் வீடு வாடகைக்குண்டு

077 895 0388

## வீடு வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம், 4ஆம் குறுக்குத் தெருவில் 3 Rooms கூடிய வீடு Garage & Additional parcking வசதிகளும் உண்டு. நிறுவனங்களுக்கு மட்டும்.

076 807 2717

## சமையல் ஆள்கள் தேவை

மானிப்பாயிலுள்ள ஹோட்டல் ஒன்றிற்கு நன்றாக சமையல் வேலை தெரிந்த சமையல் ஆள் (Cooker), உதவியாளர் (Helper), (ஆண், பெண்) தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

076 981 9241

## வேலையாள் தேவை

சட்டத்தரணியின் அலுவலகத்தில் கணினியில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள ஒருவர் தேவை. மாதச்சம்பளம் நேரில் தீர்மானிக்கலாம். கீழ்க்காணும் முகவரியில் நேரில் சமுகமளிக்கவும்.

**55, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு.**

077 667 5080

## சிறுநீரகம் தேவை

$B^+$ அல்லது $O^+$ குருதி வகையைக் கொண்ட சிறுநீரகம் 34 வயதுடைய ஒருவருக்கு அவசரமாகத் தேவைப்படுகின்றது. உதவ விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

077 150 5242/ 077 603 1497

## SUPER LUXURY BUS FOR HIRE



Call
076 822 7522
076 822 7515
076 822 7523

29 Seats / Fully Adjustable Seats / Fully Air Conditionel
TV+DVD System / Free Wi-fi

581, K.K.S ROAD, JAFFNA.

## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 934 7687 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

# British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிட்டம்புவ 033 302 19 19 | காலி 033 302 11 11 | மாத்தறை 033 302 12 12 | அநுராதபுரம் 033 302 13 13 | நுகேகொட 033 302 14 14 | கம்பஹா 033 302 15 15 |
| யாழ்ப்பாணம் 033 33 40 142 | நீர்கொழும்பு 033 302 16 16 | கண்டி 033 302 17 17 | குருநாகல் 033 302 18 18 | கிரிபத்கொட 077 325 77 67 | இரத்தினபுரி 0333 555 315 |

ROYALCERT · DAkkS Deutsche Akkreditierungsstelle D-ZM-18590-01-00 · IAF International Accreditation Forum

ISO 9001:2008 CERTIFIED

இவ் இரண்டு மாத காலப் பயிற்சியின் பின்னர் 180 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ETS TOEFL Junior. மற்றும் ETS TOEIC USA தரத்திலான சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்

TOEIC · UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations · ICDL · bcs · abe Accredited College · SQA

### இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

14, March, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### வார இறுதி வகுப்புகள் — 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

19, March, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### IELTS

சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

### KIDS' Class — Grade 1-10

சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

**British Way English Academy**

**Contact (Jaffna Branch) : 021 300 55 55**

Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk

No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரைப்பட கலைஞர்கள் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், மார்ச்.5

யாழ்.மாவட்டத் திரைப்படக் கலைஞர்களுக்கான ஒன்றுகூடல் இன்று மாலை 4.00 மணியளவில் யாழ். பழைய பூங்காவில் நடைபெறவுள்ளது. எனவே அனைத்துத் திரைப்படக் கலைஞர்களையும் சமுகமளிக்குமாறு எஸ்.ஆர் திரைப்படத் தயாரிப்பு பணிப்பாளர் சுதர்சன் ரட்ணம் தெரிவித்துள்ளார். (த)

## பொதுக் கூட்டம்

பளை, இத்தாவில் வேம்பொடுகேணி சீ.சீ.த.க பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றுக்கான விசேட பொதுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை பி.ப.3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அபிவிருத்தி மற்றும் செயற்றிட்டங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்குமாறு அதிபர் க.சண்முகதாஸ் அறிவித்துள்ளார். (ற-10)

### மக்கள்...

னோரின் உறவுகளையும் சந்தித்து அவர்களின் குறை நிறைகளைக் கேட்கவில்லை.

வேலையற்ற பட்டதாரிகள் நடத்திய போராட்டம் தொடர்பிலும், ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில், "நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினை பற்றிப் பேசினார். எனக்கு நேற்று முன்தினம் செய்தி கிடைத்தது. அவர்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுகின்றார்களாம். அதேபோன்று கொழும்பில் இருக்கக் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் சொன்னார் கிழக்குப் பட்டதாரிகளும் போராட்டம் நடத்துகின்றார்களாம். பொலநறுவை வீட்டுக்குச் சென்றால், வீட்டைச் சுற்றிவளைத்துப் பட்டதாரிகள் போராட்டம் நடத்துகின்றனர். பல்கலைக்கழகப் பட்டதாரிகள் பட்டம் பெற்று வெளியேறி 3 ஆண்டுகளின் பின்புதான் எல்லா அரசுகளின் கீழும் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

அதற்கு இடையிலேயே அரசில் வெற்றிடம் வந்தால் அதற்கு விண்ணப்பித்து அதற்கும் போகலாம். ஒரு லட்சத்துக்கு மேலான வெற்றிடங்கள் தனியார் துறையில் இருக்கின்றன. பட்டதாரிகளுக்குப் பொருத்தமான வேலைகளும் அதற்குள் உள்ளன. ஆனால் எல்லோரும் அரச வேலையைக் கேட்கின்றனர். இங்கே இருக்கக் கூடிய வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம் நடத்தாமல் நான் இங்கே வருகின்றபோது பேச்சு நடத்தியிருக்கலாம். அது நன்றாக இருந்திருக்கும். அவர்கள் மீது அன்பு, கருணை ஏற்பட்டிருக்கும். போராட்டம் நடத்தினார்கள் என்று அவர்களிடத்தில் எந்தக் கோபதாபமும் இல்லை. இப்படியான எதிர்ப்புக்கள் இல்லாமல் என்னுடன் வந்து பேச்சு நடத்துவதை நான் வெகுவாக விரும்புகின்றேன். என்னைச் சந்திப்பது மிகக் கடினம் என்று சொல்லலாம். என்னைச் சந்திப்பதற்கு எந்தக் கஷ்டமும் இல்லை. கொழும்பிலுள்ள எனது வீட்டில் காலையில் எல்லா நாளும் வந்து சந்திக்கின்றார்கள். வீட்டுக் கதவு திறந்து இருக்கும். நான் இந்தப் பட்டதாரிகள் எல்லோருக்கும் வேலை வழங்காது போயிருந்தாலும், ஒரு சில பட்டதாரிகளாவது என்னை வந்து சந்தித்தால், இன்று 4 அல்லது 6 பேருக்கு வேலை வழங்கக் கூடியதாக இருந்திருக்கும். வேறு நிறுவனங்கள் இல்லாவிட்டாலும் எனது நிறுவனத்தில் வழங்கியிருக்கலாம். அன்பான இளைஞர்கள், யுவதிகளிடம் கேட்கின்றேன் பேச்சு நடத்தி உங்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கலாம் என்றார்.

அரச வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினால், மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகத் தொடர்ந்து 6 ஆவது நாளாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஆளுநர் அலுவலகத்திற்கு வரும்போது அவரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் கூரே நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார். இருப்பினும் நேற்றைய தினம் சந்திப்பு நடைபெறவில்லை. இதேபோன்று காணாமற் போனோரின் உறவினர்கள் நடத்திய போராட்டத்தையும் அரச தலைவர் மைத்திரிபால கண்டுகொள்ளவில்லை. (த-5-101)

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

★ தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?
★ இள நரையா? ★ முடி கொட்டுகிறதா?
★ தலையிடியா? ★ பேன்,பொடுகு தொல்லையா?

பொன்னாங்காணி, வல்லாரை, இலாமிச்சை வேர், மருதாணி, கருசலாங்கண்ணி, கருவேப்பிலை சேர்த்துக் காய்ச்சிய ஆயுள்வேத எண்ணை 100% இயற்கை மூலிகைகளால் ஆன இவ்வெண்ணையைப் பாவித்து 2 வாரங்களில் பலனை உணர்வீர்கள்.

பதிவு இல: 16168
077 263 9037
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் தனபாலசிங்கம்



மலர்வு 27.02.1950 | உதிர்வு 02.03.2017

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் தனபாலசிங்கம் 02.03.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சுந்தரலிங்கம், கமலாதேவி, தர்மச்சந்திரன், கௌசலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பவளராணியின் அன்புக் கணவரும் தர்மினி, பாமினி, மாலினி, சுஜாத்தா, கபிலன், தயாழினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அல்லாரை வெள்ளாம் போக்கட்டி கோப்புலவு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்: குடும்பத்தினர்
077 136 5153

### உலகை...

இந்த அரச தலைவரா எமது குறைகளைத் தீர்த்து வைப்பார்? இது உலகை ஏமாற்றும் நோக்கில் திறந்து வைக்கப்படும் அலுவலகமே. இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்றுத் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

'குறைகளை அரச தலைவரிடம் கூறுங்கள்' என்ற அலுவலகம் யாழ்ப்பாண மாவட்டச் செயற்கத்துக்கு முன்பாகவுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அவ்வாறு வரும் அரச தலைவரிடம் எமது பிரச்சினைகளைக் கூறித் தீர்வைப் பெறுவதற்காகவே இங்கு வந்தோம். ஆனால் எமக்கு "நீ ஒரு எருமை மாடு, சனியன், மூதேவி" என்று பொலிஸ் அத்தியட்சகரின் திட்டல் பேச்சுக்களே பரிசாகக் கிடைத்தன.

யாழ்ப்பாணம் வருகை தரும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, யாழ்ப்பாண மக்களின் இடர்களைப் போக்கும் வகையில் செயல்பட்டு எமக்கு ஒரு ஆறுதலான பதிலை வழங்குவார் என்று எதிர்பார்த்தே நாம் அமைதியான வழியில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோம். எமது வாக்கைப் பெற்ற அரச தலைவர் எமக்கு மதிப்பளிப்பார் என்றே நம்பினோம். அவ்வாறு எதுவுமே நடைபெறாமல், ஆளுநர் அலுவலகத்துக்கு உள்ளே செல்லும்போது எவ்வாறு திருட்டுத்தனமாகச் சென்றாரோ அதேபோன்றே வெளியேறும் போதும் செய்தார். அவ்வாறு இடம்பெறும் எனக் கருதியே பழைய பூங்கா வீதியின் முன்னால் கவனவீர்ப்பில் ஈடுபட நகர்ந்தோம். ஆனால் பொலிஸசார் முறைகேடாக நடந்தமையால் வேறு வழியின்றி நடு வீதியில் அமர்ந்தோம்.

யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரான ஸ்ரனிஸ்லஸ் அங்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் பிரதிநிதியான சிவாஜிலிங்கத்தையும் எம்மையும் நோக்கி 'எருமை மாடுகள், எழும்பி அங்காலை போங்கோ', 'சனியன்களே சொல்லுவது கேட்கவில்லையா' என்றெல்லாம் எம்மை கேவலமாகத் திட்டினார்.

எமது உறவுகளைக் குடும்பம் குடும்பமாகக் கையளித்துவிட்டு, தந்த பிள்ளைகள் எங்கே எனக் கேட்டால் சனியன், எருமைமாடு என்று பட்டம் சூட்டும் இந்த மானங்கெட்ட அரசை நம்பி ஐ.நாவும் கால அவகாசம் வழங்குவதை எண்ணியே நாம் கவலை அடைகின்றோம்என்றனர்.

"இன்றைய ஆளுநர் அலுவலக நிகழ்வுக்கு அரச தலைவர் வருகை தந்த நேரம் நாம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோம். நான் உட்பட 4 பேரை அரச தலைவர் சந்திப்பதற்குச் சந்தர்ப்பம் அளிப்பதாகக் கூறி உள்ளே அழைத்துச் சென்றனர். ஆனால் எம்மை இடையிலேயே ஏமாற்றித் திசை திருப்பிவிட்டு அரச தலைவர் பின்வழியால் தப்பிச் சென்றார். எனவே இந்த அரசில் எமக்கு நம்பிக்கை இல்லை. இங்கு இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு பன்னாட்டுத் தீர்ப்பாயத்தின் முன்னால் விசாரணை இடம்பெறவேண்டும்" என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (த-4101)

### ஹுசைனின்...

சபையில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில், மாவீரர் நாள் என்ற தமிழ் உச்சரிப்பு அதே வடிவில் ஆங்கிலத்தில் இடம்பெற்றுள்ளதுடன், அதற்கான விளக்கம், குறிப்புப் பகுதியில், 'கிரேட் ஹீரோ டே' என்றும் கொடுக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு நவம்பரில் ஏழு ஆண்டுகளில் முதல் முறையாக, மோதல்களில் கொல்லப்பட்ட தமிழர்களின் குடும்பங்கள் மாவீரர் நாளை அனுஷ்டித்தனர். இது ஓர் அதிக உணர்ச்சிபூர்வமான விவகாரம். எனினும், இழந்த தமது உறவுகளை நினைவு கூருவதற்கான நடுநிலையான நாளாக அது இருக்கவில்லை.

மோதல்களில் கொல்லப்பட்ட அனைவரையும் நினைவு கூருகின்ற ஒரு தேசிய நாளை நிறுவனமயப்படுத்துவதன் மூலம், பாதிக்கப்பட்ட அனைவரையும் நினைவு கூர முடியும் என்று ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (த-5)

### இலங்கைக்கு...

வருட கால அவகாசம் வழங்கப்படவேண்டும் எனக் கோரும் புதிய தீர்மானத்தின் வரைவு ஐ.நாவில் நேற்று முன்தினம் பின்னிரவு வெளியாகியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 2015 ஆம் ஆண்டு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இன்னமும் நடைமுறைப்படுத்தாத நிலையில், இலங்கை அரசுக்கு மேலதிக கால அவகாசம் வழங்கப்படக்கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு சாரார் வலியுறுத்தி வந்த நிலையிலுமே, 2 வருட கால அவகாசம் வழங்கிய தீர்மான வரைவு முன்மொழியப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு இதன் முதல் வரைவு நேற்று முன்தினம் விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்தின் மீதான முதலாவது முறைசாராக் கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

2015 ஆம் ஆண்டு தீர்மானத்தின் நடைமுறைப்படுத்தல் தொடர்பான விரிவான அறிக்கையை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறும், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 40 ஆவது கூட்டத் தொடரிலேயே சமர்ப்பிப்பார். 2015 ஐ.நா. தீர்மானத்தில், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான அனைத்துப் பரிந்துரைகளையும் முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்த வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மையைக் கண்டறியும் மற்றும் இழப்பீடுகள் வழங்கும் பொறிமுறைகளை அமைக்கவேண்டும் என்றும், போரின் போது இழைக்கப்பட்ட மோசமான மீறல்கள் குறித்து விசாரிக்க பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்புடன் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படவேண்டும் என்றும், நாட்டின் மனித உரிமைகள் நிலையை முன்னேற்றுவதற்குப் பரந்துபட்ட அளவில் சட்ட மற்றும் பாதுகாப்புத்துறை மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மான வரைவின் முற்கூட்டிய பிரதி ஒன்றரைப் பக்கங்களில் மாத்திரம் அமைந்துள்ளது. அமெரிக்கா, பிரிட்டன் தலைமையில் முன்வைக்கப்படும் இந்தத் தீர்மானத் துக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கவுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இந்த அமர்வில், சமர்ப்பிக்கப்படும் தீர்மானங்களின் வரைவுகளை இணை அனுசரணை நாடுகள் சமர்ப்பிப்பதற்கான இறுதிக் காலக்கெடு மார்ச் 16 ஆம் திகதி முடிகிறது. மார்ச் 23 ஆம் திகதி இந்தத் தீர்மானம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த-5)

### பொலிஸாரின்...

போனோரின் உறவுகள் ஒன்றுகூடிப் போராட்டம் நடத்தினர். அதனைத் தடுப்பதற்காகப் பொலிஸார் பல வழிமுறைகளைக் கையாண்டனர். ஆயினும் அனைத்தும் தோல்வியில் முடிந்தமையால் போராட்டம் இறுதிவரை தொடர்ந்தது.கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்களை ஆளுநர் செயலகத்தின் வலது பக்கவாசலில் நிறுத்திவிட்டு இடதுபக்க வாசலினால் அரச தலைவரை உள்ளே அழைத்துச் செல்லப் பொலிஸார் முதலில் திட்டமிட்டனர். இதனை அறிந்துகொண்ட போராட்டக்காரர்கள் தமது கவனவீர்ப்பை ஆளுநர் செயலகத்தின் இடதுபக்கத்தில் உள்ள வை.எம்.சி.ஏ அருகே மாற்றினர்.

இதனால் நிலை தடுமாறிய பொலிஸார், நீதிவானிடம் ஓடிச் சென்று தடை உத்தரவைப் பெற்று வந்தனர். அவ்வாறு பெற்ற இடைக்காலத் தடையுத்தரவுக்குப் போதிய தரவை பொலிஸார் நீதிவானுக்கு வழங்காமையால் அதில் குறைபாடு உள்ளதை அறிந்து திருப்பிக் கொண்டு சென்றனர். இதனால் பொலிஸாரின் இரண்டாவது முயற்சியும் தோல்வி கண்டது.இதனையடுத்து காணாமற்போனோரின் உறவுகள் ஆளுநர் அலுவலகம் சென்று அரச தலைவரைச் சந்திக்கக் கோரியபோதுமுதலில் அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் பின்னர் அனுமதிக்கப்பட்டது.

இதன்படி அரச தலைவரைச் சந்திப்பதற்காக ஆளுநர் செயலகத்துக்குள் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் சந்திக்கவிடாமல் இடையில் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

அரச தலைவர் வெளியேறிய பின்னரே அவர்கள் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இதனால் ஆத்திரம் கொண்ட காணாமற்போனோரின் உறவுகள் ஏ-9 வீதியின் நடுவே அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறு ஏ-9 வீதியின் நடுவே அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அப்புறப்படுத்தப் பொலிஸார் முயன்றனர். அதுவும் கைகூடாது போகவே தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தே உறவுகள் அங்கிருந்து நகர்ந்து சென்றனர். (த-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டும் மழையிலும் தொடர்கின்றது கேப்பாபிலவில் மக்கள் போராட்டம்

முல்லைத்தீவு, மார்ச் 5

இராணுவம் கையகப்படுத்தியுள்ள பூர்வீக நிலங்களை விடுவிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேப்பாபிலவு மக்கள் முன்னெடுத்து வரும் அறவழிப் போராட்டம் நேற்று அடைமழையின் மத்தியிலும் தொடர்ந்தது.

கேப்பாபிலவில் அமைந்துள்ள முல்லைத்தீவு இராணுவ தலைமைக்காரியாலயத்துக்கு முன்பாக 4ஆவது நாளாக தகரக் கொட்டகை அமைத்து தொடர் போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

கேப்பாபிலவில் நேற்று மாலைவேளை அடைமழை பெய்த போதும் அதனைப் பொருட்படுத்தாது தமது தொடர் அறவழிப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

"எங்களுடைய பூர்வீகக் காணிகளை விடுவார்கள், விடுவார்கள் எனப் பொறுமையுடன் இருந்தோம். எங்களை மெனிக்பாம் முகாமில் இருந்து 2012ஆம் ஆண்டு கொண்டு வந்து வெட்டவெளியில் விளையாட்டுப் பிள்ளைகள் கட்டிவிளையாடும் வீடு மாதிரி ஒன்றைக் கட்டி குடியமர்த்தினர். கொட்டும் மழையில் அந்த வீடுகளில் இருந்தால் ஒழுகுவதற்கு பாத்திரங்கள் வைத்தே களைத்து விடுவோம். வீட்டில் இருப்பதைக் காட்டிலும் இங்கிருந்து தொடர்



அறவழியில் எமது எதிர்ப்பைத் தெரிவித்து எங்கள் சொந்தக் காணியில் கால் பதிப்போம்." என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் கூறினர். (ற-7)

## கேப்பாபிலவு முகாம் முன்பாக புதிதாய் முளைத்த அறிவித்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 5

தமது சொந்த நிலங்களை கையகப் படுத்தியுள்ள இராணுவத்தினர் அதனை விடுவிக்கவேண்டும் என்று வற்புறுத்தி கேப்பாப்பிலவு பூர்வீக கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில்,அந்த இடத்தில் முகாமுக்கு முன்பாகப் புதிய அறிவித்தல் பலகை நடப்பட்டுள்ளது.

"ஒரு இராணுவ பாசறை அனுமதி இன்றி உட்பிரவேசித்தல் முற்றாக தடை' என்று மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட அறிவித்தல் பலகையே நடப்பட்டுள்ளது.



இராணுவ படைத்தலைமையக வாயில் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட கேப்பாப்பிலவு மக்கள் இதனால் ஆத்திரமுற்றனர். "ஏன் இந்த பெயர் பலகை எமது நிலத்தில் வைக்க வேண்டும் இது இராணுவ பாசறை அல்ல இது எங்கள் சொந்த நிலம்" என ஆத்திரம் தீர அவர்கள் திட்டித் தீர்த்தனர். (ற-4)

## அடிப்படை வசதிகள் வழங்கக் கோரி பன்னங்கண்டி மக்கள் போராட்டம்

அடிப்படை வசதிகளை வழங்குமாறு கோரி கிளிநொச்சி பன்னங்கண்டிபிரதேசமக்கள் நேற்றுக் காலை முதல் தொடர்ச்சியான கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

காலை 9 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை போராட்டம் நடைபெற்றது. இன்றும் காலை 9 மணிக்கு போராட்டம் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு முதல் குடியிருக்கும் காணிகளுக்கான ஆவணங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. அதனால் எமக்கான வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அரச உதவிகள் கிடைக்கவில்லை. எமக்கான உறுதிப்பத்திரங்களை வழங்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். (ற-35)



## மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 5

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வணிகஜோதி மலர் வெளியீடு நாளை திங்கட் கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்துறை மற்றும்வணிகக்கல்விமூத்தவிரிவுரையாளரான கலாநிதி ஜேம்ஸ் றொபின்சனும் திருமதி துஸ்யந்தி றொபின்சனும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி கந்தயுவனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-10)

## கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் நியமனத்தில் சர்ச்சை

*நியமனத்தை இடைநிறுத்தவேண்டும் என வட மாகாண கல்விக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்*

யாழ்ப்பாணம், மார்ச் 5

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் நியமனத்தை இடை நிறுத்த வேண்டும் என வடக்கு மாகாண கல்விக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் நியமனம் தொடர்பில் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த வாரம் நடைபெற்ற கல்விப் பொதுக் குழுக் கூட்டத்தில் சில உறுப்பினர்களால் இந்த விடயம் பேசப்பட்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் நியமனத்துக்காக 5 பேர் விண்ணப்பித்துள்ளனர். அதில் அதிபர் தரம் 1 தகைமையுடைய 2 அதிபர்களும், அதிபர் தரம் 2 தகைமையுடைய 2 அதிபர்களும் உள்ளடங்குகின்றனர். விண்ணப்பித்த ஐந்து அதிபர்களில் ஐந்தாம் இடத்தில் இருந்தவரே கல்லூரிக்கு அதிபராக நிய மிக்கப்பட்டுள்ளார் என்று மாகாண சபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். இந்த நியமனத்தை நிறுத்தவேண்டும் எனத் தீர்மானமும் நிறைவேற்றியுள்ளனர்.

"நான் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு கடந்த மாதம் 23 ஆம் திகதி கடமையை பொறுப்பேற்றுக் கொண்டேன். நான் கல்வியமைச்சில் நடைபெற்ற நேர்முகத்தேர்வில் பங்குபற்றி அதில் தெரிவாகியதால் எனக்கு நியமனக் கடிதம் வழங்கப்பட்டது. இன்றுவரை நான் கடமையிலே இருக்கின்றேன்." என்று தற்போது நியமனம் பெற்றுள்ள அதிபர் தெரிவித்தார்.

"அதிபர் மாற்றம் தொடர்பாக எனக்கு ஒன்றுமே தெரியாது. நீங்கள் என்ன அறிந்து கொள்வதென்றாலும் கல்வியமைச்சுடன் தொடர்பு கொள்ளுங்கள். என்னை ஒன்றும் கேட்காதீர்கள். நீங்கள் என்ன கேட்பது என்றாலும் வடக்கு மாகாண முதலமைச்சரையே கேளுங்கள். வடக்கில் இடம்பெறும் அதிபர் நியமனம் தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது." என்று வடக்கு மாகாண கல்வியமைச்சர் குருகுலராஜா தெரிவித்தார். (ற-8)

## சாந்தபுரம் கத்திக்குத்துச் சம்பவம் இதுவரையில் எவரும் கைதில்லை

*விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு பொலிஸார் கோரிக்கை*

கிளிநொச்சி, மார்ச் 5

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை பெண்ணொருவர் மீது நடத்தப்பட்ட கத்திக்குத்துச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. விசாரணைகள் பொலிஸாரால் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் றொசான் ராஜபக்ச தெரிவித்தார்.

இன்று சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு சென்ற அவர் அங்கு கூடியிருந்த மக்களைச் சந்தித்தார்.

"சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் அடிக்கடி எம்முடன் தொடர்பு கொள்கின்றார். அவர் இந்தப் பகுதியில் அதிக காலம் பணிபுரிந்தவர். அவர் இப்பிரச்சினை தொடர்பில் நடுநிலை விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார். பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு விசாரணைக்கும் ஒத்துழைப்பு வழங்குங்கள். சட்டத்தை யாரும் கையிலெடுக்க முடியாது. எமது விசாரணை நடு நிலையாக காணப்படும். யாரும் பயப்பட வேண்டியதில்லை. பாதிக்கப்பட்டவருக்கு நீதி பெற்றுக்



கொடுப்போம். உண்மையான குற்றவாளி யார் என்பதை கண்டறிந்து நீதியின் முன் நிறுத்துவோம்." என்று அவர் அங்கு தெரிவித்தார்.

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இரணைமடு [illegible] தொழில் [illegible] மீது இனந்

தெரியாத நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடத்தினார். அவரது கழுத்திலிருந்த தங்கச்சங்கிலியை அபகரிக்க முற்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இரணைமடு இராணுவ தலைமையகத்துக்குப் பின்புறமாக உள்ள காட்டுக்குள் மறைந்திருந்த ஒருவரே தாக்குதல் நடத்தினார் என்று கூறப்படுகின்றது. பெண் அந்த நபருடன் போராடியதால் கூரிய ஆயுதத்தால் கழுத்தில் குத்திவிட்டுத் தப்பியோடினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பெண்ணுக்கு முன்னால் சுமார் ஐம்பது மீற்றர்தூர இடைவெளியில் சென்று கொண்டிருந்த அவரது மகன், தாயின் அலறல் சத்தம்கேட்டு திரும்பிப் பார்த்துள்ளார். தான் ஏற்கனவே பற்றைக்குள் அவதானித்த நபர் தனது தாயைத் தாக்கிவிட்டு இராணுவமுகாம் பக்கம் வேகமாக ஓடியதைக் கண்டேன் என்று அவர் கூறியுள்ளார். அவர் ஊதா நிற மேலாடை அணிந்திருந்தார் என்றும், சந்தேகநபரை அடையாளம் காட்டுவேன் என்றும் பெண்ணின் மகன் தெரிவித்துள்ளார்.

காயமடைந்த பெண் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார். (ற-4-ய-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குத் தொற்றுக்குள்ளாவோர் தென்மராட்சியில் அதிகரிப்பு

தென்மராட்சி, மார்ச் 5

தென்மராட்சியில் டெங்குத் தொற்றுக் குள்ளாவோரின் எண்ணிக்கை அதிக ரித்துள்ளது. தினமும் 10க்கும் மேற்பட்ட வர்கள் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச் சைக்காகச் சேர்க்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையில் ஒரேயொரு ஆய் வுகூட தொழில்நுட்பவியலாளர் கடமை யாற்றுகின்றார். தினமும் வெளிநோயா ளர் பிரிவில் சிகிச்சை பெறவரும் 500க்கு மேற்பட்ட நோயாளர்களின தும் விடுதிகளில் தங்கியுள்ள 100க்கு மேற்பட்ட நோயாளர்களினதும் குருதி மாதிரிகள் பரிசோதனைக்குட்படுத்தப் படுகின்றன.

தனியார் ஆய்வுகூடங்களில் டெங்கு உட்பட ஏனைய பரிசோதனைகள் மேற்கொள்ளக்கூடாது என சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி வைத்தியசாலையில் கட மையாற்றும் ஒரேயொரு ஆய்வுகூட அலுவலரின் வேலைப்பளு காரணமாக தனியார் ஆய்வுகூடங்களில் பரிசோத னைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை நோயாளர்களுக்கு ஏற்பட் டுள்ளது.

சாவகச்சேரி வைத்தியசாலையின் அனைத்து விடுதிகளும் டெங்குத் தொற் றுக்குள்ளானோரால் நிறைந்து காணப் படுகின்றன. கட்டில்களில் இடமில்லா மல் பெருமளவானோர் நிலத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சிலர் வேறு விடுதி களுக்கு மாற்றப்படுகின்றனர். டெங்குத் தொற்றுக்கு இலக்காகியுள்ள னர் என்று சந்தேகிக்கப்படும் குழந்தை கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப் பப்படுகின்றனர். யாழ்.போதனா வைத் தியசாலையில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளில் டெங்குத் தொற்றின் தாக்கம் குறைவாகக் காணப்படும் குழந் தைகள் அங்கிருந்து வீடுகளுக்கு அனுப் பப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட் டது. (ற-9)

# ஈழத் தமிழர்களின் உணவு தவிர்ப்பு இந்தோனேசியாவில் இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 5



இந்தோனேசியாவில் புகலிடம் வழங்க வேண்டும் என்று கோரி ஈழத் தமிழர்கள் மேற்கொண்ட உணவு தவிர்ப்புப் போராட்டம் தற் காலிகமாக கைவிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ஈழ அகதிகளின் கோரிக்கை தொடர் பில் ஆராய்ந்து விரைவில் தீர்வுப் பெற்றுத் தரப்படும் என்று பன் னாட்டு அகதிகள் நிறுவன அதிகாரி கள் வழங்கிய உத்தரவாதத்தைத் தொடர்ந்து உணவு தவிர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டது.

யாழ்ப்பாணம், திருகோண மலை, மட்டக்களப்பு மற்றும் வன்னி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 350 ஈழத்த மிழர்கள் குடும்பங்களாகவும், தனி நபர்களாகவும் இந்தோனேசியா வின் மொடான் பகுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் புகலிடக் கோரிக்கை மறுக்கப்பட்ட நிலையில் நாட்டுக்கு திருப்பியனுப்பப்படும் சூழ்நிலை உருவானது. அவர்கள் தம்மை வேறு நாடுகளில் குடியேற்ற வேண் டும் என்று கோரி கடந்த ஐந்து நாள் களாக உணவு தவிர்ப்புப் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் உடல் நிலை மோசமடைந்த நிலையில் ஐவர் மொடான் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பன்னாட்டு அகதிகள் நிறுவன அதி காரிகள் உணவு தவிர்ப்புப் போராட் டத்தில் ஈடுபட்ட மக்களை நேற்று முன்தினம் நேரில் சென்று கலந்து ரையாடினர். விரைவில் தீர்வு பெற் றுத் தரப்படும் என்று தெரிவித்து, உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தேநீர் வழங்கப்பட்டு அவர்களின் போராட் டம் தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

(ற-10)

# வனவளத் திணைக்களம் வசம் உள்ள காணிகளை விடுவிக்குக

## மன்னார் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

மன்னார் மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் பிடியின் கீழ் உள்ள மக்களுக்குச் சொந்தமான நிலங்களை ஒரு மாத காலத்துக்குள் பிரதேச செயலா ளர்கள், மாவட்டச் செயலரிடம் ஒப்ப டைக்க வேண்டும்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மன் னார் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மா னிக்கப்பட்டது.

"மன்னார் மாவட்டத்தில் கடந்த காலத் தில் மக்களின் பயன்பாட்டில் இருந்து போர் காரணமாக கைவிடப்பட்ட பல காணிகள் தற்போது வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் பிடியில் உள்ளன. மக்களுக்குச் சொந்தமான நிலங்களை மட்டுமன்றி பல வீதிகள், குளக்கட்டு களும் இந்தத் திணைக்களங்களின் பிடி யில் உள்ளன. மக்கள் தமது வாழ்வா தாரத்துக்காகப் பல நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். பல அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்க முடியா துள்ளது.

இது தொடர்பாக கடந்த ஒருங்கிணைப் புக் கூட்டத்திலும் சுட்டிக்காட்டப்பட்டது. அவை தொடர்பான நடவடிக்கைகளை பிரதேச செயலாளர்கள் மேற்கொள்ள வில்லை. ஒரு மாத காலத்திற்குள் இவை தொடர்பான அறிக்கைகளை பிரதேச செயலாளர்கள் கண்டிப்பாக மாவட்டச் செயலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

ஒப்படைக்கப்படும் விபரங்களை மாவட்ட ரீதியில் தொகுத்து குறித்த திணைக்களங்களின் கவனத்துக்குக் கொண்டுசென்று அவற்றை விடுவிப்பது தொடர்பில் மாவட்டச் செயலர் கலந்து ரையாடுவார்" என்று அதில் தீர்மானிக் கப்பட்டது. (ற-10)

# மனிதத் தவறுகளைத் தள்ளுபடி செய்ய இறைவன் தரும் அருளின் காலம்

தவக்காலம் உடலை வருத்திக் கொள்வதற்கு அல்ல, உள்ளத்தைத் திருத்திக்கொள்ளவே! இறைவனின் அளவற்ற அன்பை, இரக்கத்தை, மனிதத் தவறுகளை அதிரடியாகத் தள்ளுபடி செய்யும் இறைவாஞ்சையைத் தியானிக்க இறைவன் தரும் ஓர் அருளின் காலம். இயேசு கிறிஸ்துவின் உன்னதமான உயிர்ப்புப் பெரு விழா மறைபொருளைக் கொண்டாடத் தயாரிப் பதற்கான காலம் தவக்காலம்.

செபம், தவம், தானம் மூலம் நம்மையே தயா ரிக்க அழைக்கும் தவக்காலம் பற்றிய திருச் சபை வரலாற்றுப் பாரம்பரிய மரபு மற்றும் விவிலிய ஆதாரங்களைக் காண்பது சிறப்பான தாகும்.

'லெந்து' என்னும் தவக்காலத்தைக் குறிக்கும் வார்த்தையின் அர்த்தம் 'வசந்த காலம்' ஆகும். இந்த வார்த்தையிலிருந்துதான் 'மார்ச்' என்ற சொல்லும் வருகிறது. பயங்கர குளிருக்குப் பின் எல்லா இடங்களிலும் புதிய தளிர்களும், பூக்க ளும் துளிர்விடும் காலம். ஒரு பசுமையான இனிமையான காலம். இது மக்கள் விரும்பும் காலமும் கூட 'தவக்காலம்' என்னும் தமிழ்ச் சொல்லானது 'தவம்' என்ற கருத்தை மட்டுமே குறிப்பிட்டாலும் 'லெந்து' என்பது 'அருள் வாழ் வுக்கு ஒரு வசந்தகாலம்' என்னும் ஓர் ஆழ மான உண்மையை வழங்குகிறது.

தவக்காலம் உடலை வருத்த அல்ல'
உள்ளத்தைத் திருத்தவே.
பாவி சாகவேண்டும் என்பதல்ல,
மனம் மாறவேண்டும் என்பதே
கடவுளின் விருப்பம்.

திருச்சபை தொடக்கக்காலத்தில் கிறிஸ்துமஸ் விழாவைக் கொண்டாடவில்லை (இயேசுவின் பிறப்பு). அது உயிர்ப்பு விழாவையே பெரும் விழாவாகக் கொண்டாடியது. அதனால் ஆண் டவரின் பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பு மறைபொருள்கள் அதிகமாக நினைவு கூரப்பட் டன. உயிர்ப்பு விழாவிற்கான தயாரிப்புக் கால மாகவே இந்தத் தவக்காலம் படிப்படியாக வர லாற்றில் வளர்ந்து வந்துள்ளது. கி.பி.203 இல்




புனித ஐரேனியுஸ் திருத்தந்தை முதலாம் விக் டருக்கு எழுதிய கடிதத்தில் இயேசுவின் உயிர்ப் புப் பெருவிழா எப்பொழுது கொண்டாட வேண் டும் என்பது பற்றியும், அதற்கான தயாரிப்புக ளில் முக்கியமானது நோன்பு என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

தவக்காலத்தில் நோன்பு இருக்கும் பழக்கம் ஆதித்திருச்சபை மரபிலிருந்தே பின்பற்றப்பட்டு வரும் ஒரு வழக்கம். கி.பி.313 இல் கிறிஸ்தவ மதம் அரச மதமாக உருமாற்றம் பெற்ற பின்பு, தவக்காலம் ஒரு வரைமுறைக்கு வந்தது. 325 இல் நடைபெற்ற நிசேயா பொதுச்சங்கம் நாற் பது நாள்கள் தவக்காலம் கொண்டாடுவதை உறுதி செய்தது. புனித அத்தனாசியுஸ் (கி. பி.373) மற்றும் புனித எருசலேம் நகர் சிரில் (கி.பி.386) ஆகியோர் ஆண்டவரின் உயிர்ப் புப் பெருவிழாவிற்கு முன் நாற்பது நாள்கள் தயாரிப்பாக தீவிர நோன்பு பற்றியும், அந்நாள் களில் திருமுழுக்கின் போதனைகள் வழங்கப் படவேண்டியது பற்றியும் வலியுறுத்தியுள்ள னர். கி.பி. 461 இல் திருத்தந்தை புனித லியோ நாற்பது நாட்கள் தவத்தை நாம் அனைவரும் கண்டிப்பாகக் கொண்டாட வேண்டிய ஓர் அப் போஸ்தலிக்க நியமனமாக ஏற்படுத்தினார்.

நாற்பது நாள்கள் நோன்பு பற்றிய வரலாற்று மரபுகளை விவிலியமும் ஆதரிப்பதாக உள் ளது. 'நாற்பது' (40) என்பது விவிலியத்தின் ஆன்மிகப் பொருள் மிகுந்த எண். நோவா காலத்துப் பெருவெள்ளம் நாற்பது பகலும், நாற் பது இரவும் நீடித்தது. (தொ.நூ:7:1:17) சீனாய் மலையில் பத்துக்கட்டளைகளைப் பெறும் முன் மோசே நாற்பது பகல், நாற்பது இரவு உண்ணா மல், குடிக்காமல் கடவுளுடன் இருந்தார். (விப 34: 28) ஒரேப் மலையில் கடவுளுடன் நாற்பது பகல், இரவுகள் எலியா நடந்துள்ளார் (1 அர 19:8) ஏன், இயேசுவே தமது பொது வாழ்வுப் பணியைத் தொடங்கும்முன் பாலைவனத்தில் நாற்பது இரவும், நாற்பது பகலும் நோன்பிருந்து செபித்துள்ளார். (மத் 4:2) இந்த விவிலிய மற் றும் திருச்சபை. (மரபு பின்னணி நமது நாற்பது நாள்கள் தவக்கால) நோன்பு முயற்சியைப் பொருளுள்ளதாக்குகின்றது.

தவக்கால நோன்பில் எதை உண்ணலாம், எதை உண்ணக்கூடாது என்ற நோன்பிற்கு வேண்டிய வரலாறு படிப்படியாக வளர்ந்துள் ளது. கி.பி.604 இல் திருத்தந்தை புனித கிரகோ ரியார் நாம் தவக்காலத்தில் எல்லா வகையான இறைச்சிகளையும், பால், பால்கட்டி, முட்டை போன்றவைகளையும் விலக்கி ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு மட்டும் உண்ணவேண் டும். அதுவும் மாலை மூன்று மணிக்கு இயேசு சிலுவையில் உயிர்விட்ட நேரத்தை நினைவு கூர்ந்து உண்ண வேண்டும். கடினமாக உழைப்பவர்கள் ஒருவேளை உணவைத் தவிர்த்தால் போதும் என்று அறிவுறுத்தி யுள்ளார்.

மீன் இயேசுவைக் குறிக்கும் அடையாளம் என்பதால் அதை இறைச்சியுடன் இணைக்க வில்லை என்பதை அறிகின்றோம். எனவே, மீன் உணவை உண்ணலாம் என்று பரிந்து ரைக்கப்பட்டுள்ளது.

திருநீற்றுப் புதன் அன்று தொடங்கும் தவக்கா லம், ஞாயிற்றுக்கிழமைகளைத் தவிர்த்து நாற் பது நாள்கள் மட்டுமே கடைப்பிடிக்கப்படுகின் றது. தவக்காலத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை கள் மார்ச் 19 புனித சூசையப்பர் மற்றும் மார்ச் 25 மங்கள வார்த்தை திருநாள்கள் நோன்பு கடைப்பிடிக்க வேண்டிய நாள்கள் இல்லை. ஏனெனில், இந்த நாள்கள் தவக்கால நாற்பது நாட்களில் அடங்குவதில்லை.

தவக்காலம் செபம், தவம், தானம் என்னும் ஆன்மிக அணிகலன்களால் அணிசெய்யப்பட வேண்டியவை. இவைகளில் பரிசேயத்தனம் கலந்துவிடாமல் இருக்க இயேசு கூறியுள்ள வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க திருச்சபை அழைக்கிறது.

செபம் செய்யும்போது பிறர் அதைக் கண்டு 'பக் திமான்' என்று கூறும்படி செபிக்காமல், மறை வாய் உள்ள கடவுளை நோக்கி கதவைச் சாத் திக்கொண்டு செபிக்கவும் (மத் 6:58), தவம் (நோன்பு) நோன்பிருக்கையில் தலைக்கு எண்ணெய் தடவி முகவாட்டமின்றி புன்னகை யுடன் இருக்கவும். (மத் 6:1618) தானம், பிறரன் புச் செயல்கள் செய்கிறபோது வலக்கை செய் வதை இடக்கை அறியாவண்ணம் செய்யவும் (மத் 6:14) இயேசு வலியுறுத்துவதைக் காண லாம்.

தவக்காலம் தாறுமாறாக நமது கிறிஸ்தவ வாழ்வு தரமானதாக மாற இறைநம்பிக்கை யில் ஆழப்பட வேண்டும் (உரோ 10:15) ஊனி யல்புகளின் செயல்களை வெறுத்து ஒதுக்கவும் (கலா 5:1921) தூய ஆவி விளைவிக்கும் கனி களை வாழ்வில் கொண்டிருக்கவும் (கலா 5:22 24) அழைக்கும் காலம் தவக்காலம்.

தவக்காலத்தில் நமது பாவங்களுக்குப் பரிகாரம் தேடி, அருள்வாழ்வில் சிறந்து, வாழ்வைப் புதுப் பிக்க சிலுவைப்பாதை தினந்தோறும் திருப்பலி, நற்கருணை முன் அமர்ந்து தியானம், தனிமை யில் இறைவனுடன் உரையாடல், ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கெடுத்தல், இறை வார்த்தையைத் தாகத்துடன் வாசித்து இறைவ னின் குரலைக் கேட்கப் பழகுதல், மனித மாண்பை மதித்தல், மனித நேயத்தில் வளர் தல், நீதிக்காக உழைத்தல், ஏழைகளுடன் பகிர்தல், பகைவருடன் ஒப்புரவாதல் போன்ற வைகளை இயேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப் புடன் இணைத்துத் தியானித்து மனந்திரும்பு வோம். இறை நம்பிக்கையைப் புதுப்பித்துக் கொள்வோம். உடல், உள, ஆன்ம நலத்துடன் வாழ வழிவகுக்கும் காலமே தவக்காலம்.

**அருட்பணி எஸ். எயின்சிலி றொஷான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்றுநோய்
### விழிப்புணர்வு 4

புற்றுநோய் தவிர்ப்போம்!
மகிழ்வாக வாழ்வோம்!!
வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடுவோம்.
+ சேதனப் பசளையைப் பாவித்து, தூய்மையான,
+ நஞ்சற்றவிளைச்சலைப் பெறுவோம்.
+ தகவல் - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்துக்கு தீர்வு தேவை



# கிளிநொச்சியில் நேற்று கவனவீர்ப்புப் பேரணி

கிளிநொச்சி, மார்ச் 5

கிளிநொச்சிமாவட்டத்தில்வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களை விடுவிக்கவும், அவர்கள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தவும் வற்புறுத்தி அவர்களின் உறவினர்கள் நடத்தும் போராட்டத்துக்கு ஆதரவாக கிளிநொச்சி நகர்பொதுஅமைப்புகள்நேற்றுகவனவீர்ப்புப் பேரணி நடத்தின.

கிளிநொச்சி நகர் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம் என்பன இணைந்து பேரணியை ஏற்பாடு செய்தன.

கிளிநொச்சி,சித்திவிநாயகர்ஆலயமுன்றிலில் இருந்து ஆரம்பித்த பேரணி மாவட்டச்செயலகத்தை அடைந்தது.

காணாமல்ஆக்கப்பட்டவர்களின்விடுதலை, அரசியல் கைதிகளின் விடுதலை என்பவற்றைப் பேரணியில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

கோரிக்கைகள் அடங்கிய ஜனாதிபதிக்கான மனு மாவட்ட மேலதிக செயலாளர் சந்தியசீலனிடம் கைளிக்கப்பட்டது. வடக்கு மாகாண முதலமைச்சருக்கானமனுவும், எதிர்க்கட்சித் தலைவருக்கான மனுவும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளையிடம் கையளிக்கப்பட்டது.

மாவட்டச் செயலகத்தில் இருந்து புறப்பட்ட பேரணி, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், தொடர்போராட்டம் நடைபெறும்கிளிநொச்சிகந்தசுவாமிகோயில்முன்றலைஏ-9வீதிவழியாகஅடைந்தது. பேரணியில் கலந்து கொண்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் கோரிக்கைகளுக்குஆதரவாகபோராட்டத்தில் கலந்து கொண்டனர்.

(ந-35)

# பூசணி செய்கையில் கணிசமான வருமானம்

அச்சுவேலி, மார்ச் 5

"யாழ். மாவட்ட விவசாயிகள் பூசணிச் செய்கையில், கடந்த காலபோக பயிர்ச் செய்கையில் 93 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் பூசணிச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. பூசணிக்காயின் விற்பனை விலை தளம்பல் இல்லாமல் இருப்பதால், பூசணிச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கணிசமான அளவு வருமானத்தைப் பெறக்கூடிய நிலையில் உள்ளனர்".

இவ்வாறு யாழ். மாவட்ட விவசாயத்திணைக்கள பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்ட விவசாயிகள் உப உணவுபயிர்ச்செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். மாரி மழையால் வெள்ளம், பயிர்ச் செய்கை நிலங்களில் தேங்கிநிற்காததால் உப உணவுப்பயிர்கள் பாதிப்புக்கு உள்ளாகவில்லை.

கடந்த காலங்களில் துணைப் பயிராக தோட்ட நிலங்களின் கரைஓரங்களில் மேற்கொள்ளப்பட்டுவந்தபூசணிபயிர்ச் செய்கை தோட்ட நிலங்களில் பிரதான பயிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 93 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் பூசணிச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது"-என்றார். (ந-11)

# உ. கிழங்குச் செய்கையில் எதிர்பார்த்தளவு விளைச்சல்

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். மாவட்டத்தில் உருளைக்கிழங்கு அறுவடை செய்யும் பணிகள் தற்போது 80 வீதத்தைத் தாண்டியுள்ளன.

உருளைக்கிழங்குச் செய்கை மூலம் அநேகமான விவசாயிகள் எதிர்பார்த்த விளைச்சலைப் பெற்றுள்ளனர். போதிய பராமரிப்பையும், அதற்கான தொழில்நுட்பத்தையும் மேற்கொள்ளாத விவசாயிகள் சிலர் எதிர்பார்த்த விளைச்சலைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பது வடமாகாணப் பிரதி விவசாயப்பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.

"உருளைக்கிழங்கு செய்கையானது மிகவும் அதிக பராமரிப்புடன் அதற்கான கூடுதல் தொழில்நுட்பத்துடன் கையாள வேண்டிய பயிர்ச் செய்கையாகும். அதற்கேற்றவாறு செய்கையை மேற்கொள்வதன் மூலம் அதிக பயனைப் பெற்றுக் கொள்ள முடியும். மாவட்டத்தின் மண்வளத்துக்கு ஏற்றவாறு இந்தச் செய்கையை மேற்கொள்வதே சிறந்தது.

தற்போதைய காலநிலைக்கு ஏற்றவகையில் கடந்தபோகசெய்கைமூலம்அதிகமானவிவசாயிகள் நன்மை பெற்றுள்ளனர்.

அறுவடை இன்னும் சில நாள்களில் நிறைவு பெற்றுவிடும்" என்று -அவர் தெரிவித்தார்.

(ந-17)

# கால்நடைத் திருட்டு யாழ். மாவட்டத்தில் வெகுவாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 5

கால்நடைத் திருட்டு யாழ். மாவட்டத்தில் அதிக மாக நடைபெறுகின்றது என்று யாழ். மாவட்டகால்நடை உற்பத்தித்திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் வக்சலா அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

"2016ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் 34 ஆயிரத்து 272 கலப்பின மாடுகளும், 28 ஆயிரத்து 525 உள்ளூர் மாடுகளும், 34 ஆயிரத்து 272 கலப்பின ஆடுகளும், 22 ஆயிரத்து 707 உள்ளூர் ஆடுகளும் இருந்தன.

தற்போது இந்த எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. அதற்குப் பிரதான காரணமாக இங்குள்ள கால்நடைகள் திருடப்பட்டு வெளி மாவட்டங்களில் விற்பனை செய்யப்படுவதே. கடத்தப்படும் கால்நடைகள் இறைச்சிக்காகவும் கொல்லப்படுகின்றன.

உரியஅதிகாரிகளின்அனுமதிபெற்றுகடந்த வருடம்5லட்சத்து55ஆயிரத்து235கிலோ மாட்டு இறைச்சியும், 4 லட்சத்து 76 ஆயிரத்து283கிலோஆட்டு இறைச்சியும்பெறப்பட்டுள்ளது.

ஆடு,மாடுகள்திருட்டுச்சம்பந்தமானமுறைப்பாடுகள்கிடைக்கும்போது, அதுதொடர்பான நடவடிக்கைகள் உடன் எடுக்கப்படாமை திருட்டுஅதிகரிப்பதற்குப்பிரதானகாரணமாகவுள்ளது. திருடப்பட்ட ஆடு, மாடுகள் அநேகமானவை பிராந்திய கால்நடை வைத்திய நிலையங்களில்முறைப்படிபதிவுசெய்யப்படாதுள்ளமையும், நடைமுறைச்சிக்கல்களை உருவாக்குகின்றது. ஆடு ,மாடுகள் திருடப்பட்டு விற்பனை செய்வதை தடுப்பதற்கு மக்கள் அவற்றை உரிய முறையில் பதிவு செய்தல் அவசியம்-என்றார். (ந-4)



# ப.நோ.கூ. சங்கத்தை மீளவும் இயக்குங்கள்

## தட்டுவன்கொட்டி கிராம மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 5

கிளிநொச்சி, தட்டுவன்கொட்டி கிராமத்தில் போருக்கு முன்னர் இயங்கிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மீள்குடியமர்வின் பின்னர்இயங்கவில்லை. பொருள்களைவாங்க அதிக தூரம் அலைய வேண்டியுள்ளது.

இவ்வாறு கிராம மக்கள் கவலை தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

"விடுதலைப் புலிகள் இருந்தபோது சங்கம் இங்கியது. மீள்குடியேற்றம் செய்து, 6 வருடங்கள் கடந்துள்ளன. இதுவரை சங்கம் இயங்கவில்லை. பொருள்களை வாங்குவதற்கு அதிக தூரம் செல்ல வேண்டியுள்ளது. அதிக விலைகொடுத்து வாங்க வேண்டியுள்ளது"-என்றார்.

"ஆரம்ப காலத்தில் இயங்கிய இந்தச் சங்கம் போரின்பின்னர், நிவாரணம்வழங்குவதற்காகமட்டும்இயங்கியது. பொருள்விற்பனை நடைபெறவில்லை. இங்குள்ள மக்கள் பொருள்கள் வாங்க அயல் கிராமமான உமையாள்புரம் செல்ல வேண்டியுள்ளது" -என்று தட்டுவன்கொட்டி கிராம சேவகர் தெரிவித்தார்.

"கரைச்சி, வடக்குக் கிளைகள் எல்லாம் நட்டத்தில் இயங்குகின்றன. பணியாளர்களுக்குச் சம்பளம் வழங்கக்கூட நிதி இல்லாத நிலைமைகாணப்படுகின்றது. சங்கக்கிளைகளைக் குறைக்கும் திட்டத்தின் கீழ் அவை குறைக்கப்பட்டிருக்கலாம். கிராம மக்கள் ஒன்றுண்மயாகசங்கங்கள்ஊடாகப்பொருள்களைக் கொள்வனவு செய்வார்களானால் கிளையைத் திறந்து நடத்தத் தயாராக இருக்கின்றோம்"- என்று கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுஆணையாளர்தெரிவித்தார். (ந-6)

# சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் சேவையை விரிவாக்க வேண்டும்

## மோட்டார் வாகன யாழ். மாவட்ட திணைக்களம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 5

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் சேவைகளை விரிவாக்கும் தேவைகள் அதிகமாக உள்ளது என யாழ். மாவட்ட மோட்டார் வாகன திணைக்களம் தெரிவித்தது.

2015ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து, 2016ஆம் ஆண்டு இறுதிவரை 8 ஆயிரத்து 502 சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று -யாழ். மாவட்ட மோட்டார்வாகனதிணைக்களத்தின் பிரதி ஆணையாளர் வை. பரந்தாபன் தெரிவித்தார்.

10 ஆயிரத்து 126 பேர் சாரதி அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பித்தனர். அவற்றில் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான செயல்முறைப் பரீட்சை, எழுத்து மூலமான பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்த 8 ஆயிரத்து 502பேருக்கானசாரதிஅனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் அதிகரித்துள்ள வாகனப் பரம்பலின் காரணமாகஎதிர்வரும்காலத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் தேவை அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வாகனங்களுக்கான பெயர் மாற்றத்துடன் கூடிய 496 வாகன இலக்கத் தகடுகள்வழங்கப்பட்டுள்ளன" -என்றார்.

(ந-4)

# தீர்வு வழங்கப்படாவிடில் செவ்வாயன்று போராட்டம்

## ரயில்வே நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச்5

தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காது விடில், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் 48 மணித்தியால அடையாளப் பணிப்புறக்கணிப்பு நடத்தப்படும் என்று ரயில்வே நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதியும், 27 ஆம் திகதியும் அதிகாரிகளுடன் மேற்கொண்ட பேச்சில் எம்மால் சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அந்தக் கோரிக்கைகளுக்கு வழங்கப்படும் எனக் கூறப்பட்ட தீர்வுகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனாலேயே இந்த அடையாள பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளோம்.

கடந்த 21 ஆம் திகதி சங்கத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பணிப்புறக்கணிப்பை முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது எனவும் அந்தச் சங்கம் மேலும் தெரிவித்தது.

(ஜ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியில் உறங்கியவர் மீது வாகனம் ஏறி சாவு

மதுபோதையில் வீதியில் உறங்கிக் கொண்டிருந்த நபர் மீது, வாகனமொன்று மோதியதில், அந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்தச் சம்பவம் மொனராகலை தனமல்விலையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
50 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.
போதையில் இருந்த குறித்த நபர், தனது வீட்டுக்கு முன்னால் உள்ள வீதியில் படுத்து உறங்கியுள்ளார்.
விடிந்து பார்த்தபோது, அவர் வாகனத்தில் சிக்கி இறந்த நிலையில் காணப்பட்டார்.
சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். குறிப்பிட்ட வாகனம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. (ஐ-ய.41)

## மரண அறிவித்தல்

## செல்லத்துரை திலகநாதன்



யாழ். உடுவிலைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை திலகநாதன் 02.03.2017 வியாழக்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை யோகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான, சின்னத்தம்பி பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் பரமேஸ்வரி(ராணி) அவர்களின்அன்புக்கணவரும்ஹனுஷா, உஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணநாதன்(சுவீடன்), சத்தியவதி (நியூசிலாந்து), ரகுநாதன்(கனடா) காலஞ்சென்றவர்களான பத்மநாதன், ஜெகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரவிதரன், அன்பழகன் ஆகியோரின் மாமனாரும் வித்தகன், நீலேஷ், விகிர்தன், கைலேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.03.2017 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு St Marylebone Crematorium, East End Road, East Finchley N2 ORZ, UK இல் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குமாரசாமி வீதி,
திருநெல்வேலி.

தகவல்
குடும்பத்தினர்.

கனுஷா +447741406670
உஷா +447956533505

"Crown of the Strength"
ELCARDO
Since 1985

We are one of the leading organizations for manufacturing of Roller doors, Roofing sheets and steel Building Materials and looking for young energetic males to appoint as;

BUSINESS DEVELOPMENT EXECUTIVES

- Possess 1 - 2 years relevent experience.
- Having good command in Tamil / English and Sinhala languages. (Spoken Sinhala advantage)
- Good inter personal and excellent customer service skills.
- Age between 20 - 30 years.
- Having validity driving license.

Vacancies are available at Jaffna, Vavuniya and Mannar.

If the above position interest you send your resume via e-mail to jaffna@elcardo.com (within 10 days) indicating the position applied for as the subject.

Walkin Interview on 06th, 07th and 08th.
Time : 9.30 am - 12.00 pm

No.1 Professional Service Provider for the Construction & Architecural Industry




Our Products: Roller Door, Roller Shutter, Swing & Sliding gates, Roofing Sheets, Gutters & Accessories, C-Purlin, NeuStone Pantrytop, Stainless Steel Hand rail & Pantry Cupboards
Vehicle Accessories for All 4WD Vehicles
Head Office: No.48, Narahenpita Rd, Nawala, Sri Lanka.
Jaffna Branch:- No.170, Palaly Road, Jaffna.
Tel: 021 567 0570 Fax:- 021 221 7172
Hotline

# துமிந்தவின் மூளையில் பெரும் பாதிப்பு சிறப்பு மருத்துவர்கள் குழுவால் உறுதி

கொழும்பு, மார்ச் 5
துமிந்த சில்வாவின் மண்டை ஓடு மற்றும் மூளையில் பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சிறப்பு மருத்துவர்கள் குழுவால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
துமிந்த சில்வாவின் உடல்நிலை தொடர்பில் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.
நீதிமன்றப் பரிந்துரைக்கு அமைய சிறப்பு மருத்துவர் குழுவால் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.
கொழும்பு தேசிய மருத்துவமனையின் ஒன்பது சிறப்பு மருத்துவர்கள் அடங்கிய குழுவால் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. சுகாதார சேவை பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் ஜாசிங்கவின் கையொப்பத்துடன் கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.
அதில் மேலும் குறிப்பிடப்பட்டதாவது:
மருத்துவர்கள் குழுவினரால் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா கடந்த 23 ஆம் திகதி சீ டீ ஸ்கேன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். துமிந்த சில்வா தொடர்ந்தும் மருத்துவ சிகிச்சை பெறவேண்டிய நிலையில் உள்ளார். அவரின் மண்டை ஓடு மற்றும் மூளையில் பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவரது மண்டை ஓட்டின் உடைந்த செதில்கள் மூளையின் முன்பகுதியில் தங்கியுள்ளது. மூளையின் சில பகுதிகளில் வீக்கம் ஏற்பட்டுள்ளது. இது அவரது உடலின் நோய் நிலமையை அதிகரிக்கும். இதேவேளை துமிந்த சில்வா சாதாரணமாக நடமாடுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், சிங்கப்பூர் மருத்துவமனையால், பரிந்துரைக்கப்பட்ட சுவாச உபகரணங்கள் பயன்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. என்றுள்ளது.
இதேவேளை, நோய்க்கான சிகிச்சையைப் பெறுவது எந்தவொரு மனிதரினதும் அடிப்படை உரிமை என்ற வகையில், யாரும் அதற்கு சவால் விடுக்க முடியாது என்று இலங்கை மனித உரிமை ஆணையகத்தின் முன்னாள் ஆணையாளர் சட்டதரணி மஹாநாம ஹேவா தெரிவித்தார்.
கடந்த 2011 ஆம் ஆண்டு பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட போது, துமிந்த சில்வாவின் தலையில் துப்பாக்கி தோட்டா துளைத்திருந்தது. இதன்போது அவருக்கு மண்டையோட்டுப்பகுதியில் சிங்கப்பூர் வைத்தியசாலையொன்றில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. (ஐ-10)

# ஓட்டோவைச் செலுத்திச் சென்ற மாணவன் சாவு

பதுளை குடாஓயா பிரதேசத்தில் 14 வயது மாணவன் ஒருவன் செலுத்திச் சென்ற முச்சக்கர வண்டி விபத்துக்குள்ளானது. அந்த மாணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான். மாணவனுடன் முச்சக்கர வண்டியில் பயணித்த, பெற்றோர் சிறு காயங்களுடன் உயிர் தப்பினர்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
குடாஓய மகா வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி கற்கும் தினேஸ்ருவன் என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.
இந்த மாணவன் முச்சக்கர வண்டியில் தனது பெற்றோரை ஆலய உற்சவம் ஒன்றுக்கு ஏற்றிச் சென்ற போதே, குறித்த விபத்து இடம்பெற்றது. முச்சக்கர வண்டியின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமையினாலேயே, விபத்து இடம்பெற்றது என்று விசாரணையை மேற்கொண்ட பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-ய-41)

# கச்சதீவு அந்தோனியார் ஆலய பெருநாள் ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், மார்ச் 5
கச்சதீவு அந்தோனியர் ஆலயத்தின் பெருந்திருவிழாவுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளது என்று யாழ்ப்பான மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்
கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் உற்சவத்துக்கான முன்னேற்பாடுகள் தொடர்பான கூட்டம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் நேற்று இடம்பெற்றது.
அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் பெருந்திருவிழா எதிர்வரும் 12 ஆம்திகதி இடம்பெறவுள்ளது. அதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த ஆலயத்தின் பெருந்திருவிழாவுக்கு இந்தமுறை 10 ஆயிரத்திலிருந்து 12 ஆயிரம் பேர் வரையிலானோர் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.
கடல் வழிப் போக்குவரத்துக்கு நெடுந்தாரகை படகுச் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது. அத்துடன் வடதாரகை, தனியார் படகுகள், ஆகியனவும் சேவையில் ஈடுபடுத்தப்படும்.
கச்சதீவில் கிறிஸ்தவம் மற்றும் சுற்றுலாதுறை அமைச்சின் ஊடாக 2.5 மில்லியின் ரூபா செலவில் நிரந்தரமாக மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் பக்தர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதால் தற்காலிக மலசல கூடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. படகில் பயணிக்கும் அனைத்துப் பக்தர்களும் தற்பாதுகாப்பு அங்கிகளை அணிந்தே படகில் பயணிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
பயணிகளுக்கான பேருந்துக் கட்டணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகட்டுவானுக்குச் செல்வதற்கு பயணி ஒருவரிடமிருந்து ஒரு வழித்தடத்துக்கு 70 ரூபா மட்டுமே அறவிட வேண்டும். பேருந்து நடத்துநர்கள் சேவைகளில் ஈடுபடும் போது பயணிகளுக்கு மிகுதி பணத்தைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய வகையில் இருக்க வேண்டும். கடல்வழிப் போக்குவரத்துக்கு நெடுந்தீவிலிருந்து கச்சதீவுக்கு ஒரு வழிப்பாதைக்கு 150 ரூபாவும், குறிகட்டு வானிலிருந்து கச்சதீவுக்கு ஒருவழிப் பயணத்துக்கு 275 ரூபாவும் அறவிடவேண்டும். என்றார். (ஐ - 8)

முதன் முறையாக IELTS பரீட்சை நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் கல்வி நிறுவனம்
BRITISH COLLEGE
OF EDUCATION
கல்வி கற்க மற்றும் தொழில்
Now prepare for your
IELTS
Do the exam at British College
SPOUSE விசாவில் செல்லவுள்ளவர்களுக்கு
IELTS Life Skills A1 B1
23, Kachcharinallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Mannar. Tel : 023-4924124
Hotline : 0777-596148

# மதுரகமக் காட்டில் தலை துண்டிக்கப்பட்ட சடலம் மீட்பு

கொழும்பு, மார்ச் 5
புத்தளம் - குருநாகல் வீதியிலுள்ள மதுரகமக காட்டில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்று முன்தினம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், அங்கு சென்று பார்த்த போது புத்தளம் - குருணாகல் வீதியில் லக் தனவ்வ மின் உற்பத்தி நிலையத்துக்கு பின்புறமுள்ள மதுரகமக் காட்டுப் பகுதியில் இந்தச் சடலம் மீட்கப்பட்டது.
குறித்த சடலம் புத்தளம் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ - 10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ். கலாலயா பயிற்சியகத்தின் 32 ஆவது ஆண்டு விழாவும் சான்றிதழ் வழங்கல் நிகழ்வும்.........







யாழ்ப்பாணம் விக்ரோறியா வீதியில் அமைந்துள்ள மேற்படி பயிற்சி நிலையத்தின் நிகழ்வில் நிலைய இயக்குநர் திரு.மா. சுதர்சன் அவர்கள் கேக் வெட்டுவதனையும் ஓய்வுபெற்ற மனைப் பொருளியல் பயிற்றுநர் திருமதி நகுலா கணேசலிங்கம் அவர்கள் உரையாற்றுவதையும் லண்டன் ஜேடி என்ரபிறைசஸ் அழகு சாதனப் பொருள்கள் கேக் உள்ளீடுகள் விநியோக நிறுவன இயக்குநர் திரு.ஜீ.எம் ராஜ்குமார் அவர்கள் சான்றிதழ் வழங்குவதனையும் கேக் ஐசிங். உணவு. தயாரித்தல்.Facial கூந்தல் அலங்காரம் உடை தயாரித்தல் பயிற்சிகளைப் பயின்று சான்றிதழைப் பெற்றுக் கொண்ட 2016 C பிரிவு மாணவிகளையும் அவர் தம் ஆசிரியைகள்ளையும் படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Yarl Beauty & Language's Skills College

YBLSC



மகளிருக்கான பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

அழகுக்கலை

கேக் ஐசிங்

தையல்

சனி, ஞாயிறு பிரிவுகள் 11.03.2017 அன்று 10.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவுகள் 13.03.2017 அன்று 10.00 மணிக்கு

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட NVQ பாடத்திட்டம் பின்பற்றப்படுவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலெக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை)

## இதயத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்

### இதயநாடிகளில் நோய் அன்ஜைனா – மார்பு அடைப்பு

கொழுப்பு படிவதால் நாளங்கள் சுருங்கி சீரான இரத்த ஓட்டத்தைக் குறைக்கிறது. மேலும் இவை மார்புவலி மற்றும் இதயபாதிப்பு ஏற்படுத்தக் கூடியது.

**நெஞ்சடைப்புக்கான காரணிகள்**
புகைத்தல். உயர்இரத்தஅழுத்தம்.
அதிக கொழுப்புச்சத்து. நீரிழிவு

நெஞ்சுவலி, மார்படைப்பையும் பூரணமாகக் குணப்படுத்தும் எமது ஆயுர் வேதமருத்துவம் உன்னதமானது. நிரூபணமானது



FAIR PHARMA (PVT) LTD
செலிங்கோ ஹவுஸ், 10ஆம் மாடி, கிழக்கு.
இல.69 ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

Hotline: 077 755 5600 / 077770 8310/ 077 770 8330
Office: 011 438 8200 / 4 388 100/ 4 388 101 /4 388 102

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA,
ஆயுர்வேத மருத்துவசபை, BIO & ISO 9001:2008
அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிறுவனம்.

**எங்களால் குணப்படுத்தப்படுகிறது**
- இருதயநோய்
- நோய் எதிர்ப்பு சக்தி
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பாதிப்புக்கள்
- மூட்டு வாதம்
- மூட்டுவலி / முதுகு வலி
- புரோஸ்டேற் பிரச்சினைகள்
- ஒற்றைத் தலைவலி
- புழையழற்சி
- மனஅழுத்தம்
- இருமல் / சளி
- படுக்கைப்புண்கள்
- நாட்பட்ட காயங்கள்
- நீரிழிவு நோய்கள்
- வைரஸ் தொற்றுக்கள்
- பாலியல் குறைபாடு
- மண்குஷ்டம்

## AHUJA®

### ஒலிபெருக்கிச் சாதனங்கள்



உத்தரவாதத்துடன்
குறைந்த விலை
பலவித ரகங்கள்
தரத்தில் உயர்ந்தது
நீடித்த உழைப்பது



- அம்பிளிபயர்கள்
- மைக்ரோபோன்கள்
- கொன்பரன்ஸ் சிஸ்டம்கள்
- றிப்லெக்ஸ் ஹோன்கள்
- மெகாபோன்கள்
- ஆடியோ மிக்ஸ்சர்
- பூஸ்டர் அம்பிளிபயர்கள்
- கொலம் ஸ்பிக்கர்ஸ்
- ஐ-பவர் ஸ்பிக்கர் சிஸ்டம்ஸ்
- பாதுகாப்பு சைரன்ஸ்






அனைத்து மத வழிபாட்டு ஸ்தலங்களுக்கு, பாடசாலைகளுக்கு விசேட விலைகழிவு வழங்கப்படும்

60வது ஆண்டுகளுக்கு மேலான நம்பிக்கையின் சின்னம்

தரம் இல்லாத போலியான AHUJA பொருள்கள் விற்பனையில் இருப்பதால் தரம் உள்ள AHUJA பொருள்களை எங்கள் முகவரிடம் கேட்டு வாங்கவும்

### றொபர்ட் ஏஜன்சீஸ் (பிறை) லிமிட்டட்

இல: 88, றெக்லமேசன் வீதி, கொழும்பு - 11. தொ.பே.:242 1009(Hunting) பெக்ஸ்:244 9590.
ஈ-மெயில்: sales@robertagencies.com கிளை : 108, கெய்சர் வீதி, கொழும்பு - 11.

www.robertagencies.com

### விற்பனைக்கு

75 நாள்கள் நிரம்பிய Dashound இன நாய்க்குட்டிகள். தடுப்பூசிகள் ஏற்றப்பட்டது.

**077 493 9785**

### வாடகைத்தாய் தேவை

30 வயதிற்குக் குறைவான பெண் ஒருவர் Ivf மூலம் செய்வதற்கு வாடகைத்தாயாகத் தேவை. சன்மானம் வழங்கப்படும். இரகசியம் பேணப்படும்.

**077 637 3804**

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு
## Water Proofing

உங்கள் இல்லங்கள், நிறுவனங்கள் போன்றவற்றிலுள்ள சிமெந்தினாலான கட்டடங்கள், நீர்த்தாங்கி கள் மற்றும் மாடிக் கட்டடங்களில் உள்ள குளியல் அறைகள் என்பவற்றில் ஏற்படும் நீர்க்கசிவைத் தடுத்து நிறுத்துவதுடன் உங்களின் வீட்டுச் சுவர்களில் ஏற்படும் நீர்க்கசிவுகளின் பாதிப்புக்களை உத்தரவாதத்துடன் சீர்செய்து தருவதோடு கோயில், வில்லுமண்டபம் கோபுரங்களுக்கிடையிலான நீர்க்கசிவுகளையும் நிறுத்தித் தருகின்றோம்.

**சகல விதமான கட்டுமான வேலைகளுக்கும் உரிய இரசாயனப் பொருள்கள் அனைத்தையும் இங்கு பெற்றுக்கொள்ள முடியும்.**

### North And East Engineering

55, Stanly Road, Jaffna, Sri Lanka.
பீப்பிள் லீசிங்குக்கு முன்பாக

FINCO 021 222 2363, 077 524 4177, 077 232 3000

FINCO ஸ்தாபனத்தின் ஏக விநியோகஸ்தர்களாகிய எங்களிடம் விசேட கழிவு வழங்கப்படும்.

## VACANCIES

### MARKETING EXECUTIVE (Male & Female)

We are a Company dealing with Children educational programme and there is an exciting & excellent opportunity for Self - motivated, committed indivduals to take up the responsibility as

**Requirements**
- GCE (A/L) Qualified
- Below 35 years old (School leavers may apply for trainee position)

**Contact Us**
MANAGERS
S.Arun - 077 363 9755 (Urumpirai)
T.Jegan - 077 262 7877 (PointPetro)
A.Judsan - 077 224 7584 (Chavakachcheri)
G.Anthany - 077 356 6835 (Jaffna)

**Benifits**
- An attractive salary
- Travelling allowances
- Commissions payments
- Telephone facilities
- Motorbike allowances
- incentive & Overseas trips for target achievers
- Career development (Management position)

Marketing Executive 25 000/= +++
After 3Months Management Executive 42 500/= +++



**Pioneer House (PVT) Ltd.**
No.100, 2nd Floor, Manipay Road, Jaffna.
E-mail: jaffnapioneerthouse@gmail.com

## திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின்
### அறுபதாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு
## நடத்தப்படும் போட்டிகளுக்கான விண்ணப்பம் கோரல்

- யாழ். மாவட்ட மட்டத்திலான **கபடி சுற்றுப் போட்டி:** ஆண்கள் / பெண்கள்
- யாழ். மாவட்ட மட்டத்திலான **கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி :** ஆண்கள்
- யாழ். மாவட்ட மட்டத்திலான **வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி:** பெண்கள்

**விண்ணப்ப முடிவு திகதி: 20.03.2017**

போட்டிகளில் முதல் நான்கு இடங்களைப்பெறும் விளையாட்டுக் கழகங்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும் பணப்பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்படும்.

போட்டிகளில் பங்குபெற விரும்பும் விளையாட்டுக்கழகத்தினர் 07.03.2017 **செவ்வாய்க்கிழமை உதயனில்** பிரசுரிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தை நிரப்பி கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**தலைவர்**
**திக்கம் மத்திய சனசமூக நிலையம்,**
**திக்கம், அல்வாய்.**

**வைரவிழா விளையாட்டு நிகழ்வுகளில்**

உதைபந்தாட்டம், மென்பந்து துடுப்பாட்டம், வீதியோட்டம், சைக்கிள் ஓட்டம், உள்ளடங்கலான ஏனையபோட்டி விவரங்கள் விரைவில் உதயனில் வெளியிடப்படும்.

**மேலதிக தகவலுக்கு:**
021 312 7533 076 869 5536
077 632 9783 077 838 8834
thickam.diomond@gmail.com.

அனுசரணை: உதயன் – மக்கள் மனம் நிறைந்த நாளிதழ்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

K.K.S. வீதி, சுன்னாகத்தில் வீட்டுடன் 9½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. வீடு, திருமணமண்டபம், விடுதி அமைக்க உகந்த இடம்.

077 513 2261

## வீடு வாடகைக்குத் தேவை

அரசதொழில் புரியும் சிறிய குடும்பத்துக்கு யாழ்மாநகரசபை எல்லைக்குள் வீடு வாடகைக்குத்தேவை.

தொடர்பு: 077 585 3377

## வீடு வாடகைக்குண்டு

யாழ்நகரில் ஆஸ்பத்திரி வீதியில் (Layiden/முத்தமிழ் வீதி) உள்ள சகல வசதியுடனும் கூடிய அடுக்குமாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், விடுதி தேவைகளுக்கும் வழங்கப்படும்.

077 045 1107

## CANADA , USA study & work visa

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online from filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

**Swiss, France**
செல்ல வழிகாட்டல்

**Royal Visa Consultants & Education Service**

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com

Haarini : 0777 493 436
Sharmi : 0777 525 797
Office : 0113 020 892

## விற்பனைக்குண்டு

3 Cube (ஒரு டிப்பர்)

| | | |
|---|---|---|
| அத்திபாரக்கல் | 6"X 9" | 23,000/= |
| கருங்கல் | 4"X 4" | 29,000/= |
| கருங்கல் | 1½" | 30,000/= |
| கருங்கல் | 2" | 30,000/= |
| கருங்கல் | 1" | 32,000/= |
| கருங்கல் | ¾" | 35,500/= |
| கருங்கல் Chips | (½") | 28,000/= |
| கருங்கல் Dust | | 23,000/= |

தொடர்பு: 077 239 2626
076 886 8941

## இலங்கையில் முதல்தடவையாக

பெண்களுக்கு பொருத்தமான பாடநெறிகளைக் கொண்ட அழகுக்கலைப் பயிற்சிக் கல்லூரி

**ஒளிஅழகன் ஸ்ருடியோ**
**British College Of Beauty Studies**
இணைந்து நடத்தும் பயிற்சி வகுப்புக்கள்



**புதிய அழகுக்கலை,**
**சிங்கள பயிற்சி வகுப்புக்கள்**
**ஆரம்பமாகவுள்ளன.**

வெகுவிரைவில் சிங்களம் பேச, எழுத வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. இன்றே பதிவை மேற்கொள்ளுங்கள். எங்கள் கல்லூரியில் அனைத்து பாடநெறிகளும் பெண் ஆசிரியர்களே பயிற்சியளிப்பார்கள்.
பெண்களே இது உங்களுக்கான கல்லூரி.

- வெளிநாடு செல்பவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட குறுகிய கால பயிற்சி வகுப்பையும் பெற்றுக்கொள்ள முடியும்.
- பெறுமதி வாய்ந்த சான்றிதழே வழங்கப்படும்.
- உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சொந்த தொழில் பெற்றுக்கொள்ள முடியும்.
- இணைய விரும்புவோர் நேரில் வருகைதரவும்.

பலாலி றோட்,
திருநெல்வேலிச்சந்தி,
யாழ்ப்பாணம்.

உதயன் பணிமனை அருகில்,
கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

## பூக்கன்றுகள் விற்பனை

நல்லின குரோட்டன்கள் மற்றும் 60 விதமான பூக்கன்றுகள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். பூச்சாடிகள், மீன் தொட்டிகள், பறவைக் கூடுகளையும் மலிவான விலையில் பெறலாம்.

**பூக்கன்று ஒவ்வொன்றும் 80/=**
**யாழ். அக்கூரியம்**
**917, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.**

075 991 0060, 077 707 0711

## SHANMUGAM STORES
## சண்முகம் ஸ்ரோர்ஸ்
## நகை அடகு சேவை

வவுனியாவில்
75 வருட அனுபவம் வாய்ந்த எமது நிறுவனம் வாடிக்கையாளரின் நலன்கருதி எமது சேவையினை தொடர்ந்து புதுக்குடியிருப்பிலும் தற்போது யாழ் மண்ணிலும் புதிய கிளையினை ஆரம்பித்துள்ளோம்.

- மிகக்குறைந்த வட்டி வீதங்களில் (1%, 2%, 2.9% நிபந்தனைக்குட்பட்டது)
- உங்கள் தங்க நகைகளுக்கு 100% பாதுகாப்பும் உத்தரவாதமும்
- அதிகூடிய மீட்புக் காலம் (குறைந்தது 18 மாதங்கள் முன்னறிவித்தலுடன்)
- திங்கட்கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரை காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரைக்கும் எமது சேவையினைப் பெற்றுக் கொள்ளலாம்.

எமது சேவையினைப் பெற நாடவேண்டிய இடம்,
**இலக்கம்-189, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(ராஜா தியேட்டர் அருகில்)
076 822 6455, 076 822 6460

## வேலை வாய்ப்பு

இலங்கையில் 25 ஆண்டகளுக்கு மேலாக கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறையில் முன்னணி வகிக்கும் SALA Enterprises இல் இணைய ஓர் அரிய வாய்ப்பு.

### விற்பனை நிர்வாகிகள்

(வடக்கு மாகாணம்)

- 35 வயதிற்கு உட்பட்டோர்.
- துடிப்புடன் வேலை செய்யக்கூடிய இளைஞர்கள்.
- க.பொ.த(சா.த) அல்லது அதற்கு மேலதிக கல்வி தகுதி.
- சிறந்த மக்கள் தொடர்பு மற்றும் தகவல் தொடர்பாடல் திறமை.
- மும்மொழி திறமை மேலதிக திறமையாக கருதப்படும்.
- குழுவாக செயற்படும் திறமை

**SALA Enterprises 077 2270025**
203, Castle Street, Colombo 08. Email - hr@salaent.com
PROLINK DCLUX Hunekey EDIFIER ARCHOS

## 7'x10" அளவுடைய கிடுகுகள் விநியோகிப்பதற்கான கேள்வி அறிவித்தல்

ஆனையிறவு உப்பளத்திற்கு 2017 ஆம் ஆண்டிற்கான கிடுகுகளுக்கான கேள்வி விலை கோரப்படுகின்றது. மாதாந்தம் 6000 கிடுகு மட்டைகள் வீதம் 50 000 கிடுகு மட்டைகள் வழங்குவதற்கான மூடப்பட்ட கூறுவிலை வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றது. விண்ணப்பதாரிகள்மீளளிக்கப்படும்தொகையாகரூபா10.000/= ஆனையிறவு உப்பள காசாளரிடம் செலுத்தி பற்றுச் சீட்டின் பிரதியோடு விண்ணப்பத்தினைப் பெற்று விண்ணப்ப உறையின் இடது பக்க மேல் மூலையில் கிடுகு வழங்குவதற்கான கூறுவிலை 2017 எனக் குறிப்பிட்டு **முகாமையாளர் ஆனையிறவு உப்பளம், மாந்தை சோல்ற் லிமிற்றெற். ஆனையிறவு** என்ற முகவரிக்கு **12.03.2017** ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பத்தினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**மாந்தை சோல்ற் லிமிற்றெற்**

## வெற்றிடங்கள்

**எம் நிறுவனத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்கள் உள்ளன. நீங்கள் துடிப்பான, குழுவாக செயற்படக்கூடிய ஒருவராயின் இன்றே விண்ணப்பியுங்கள்**

### விற்பனை பிரதிநிதிகள்
### Sales Representatives

- கிளிநொச்சி /முல்லைத்தீவு

மாதாந்தம் 60,000.00 நிகும் மேல் ஆதாயம் ஈட்டக்கூடிய இவ்வெற்றிடத்திற்யாக தொலைபேசி வெகுமதி,
மோட்டார் சைக்கிள் மற்றும் காப்பீடும் வழங்கப்படும்.

- நீங்கள் கா.பொ.த (சா/த) சித்திபெற்ற அல்லது கா.பொ.த (உ/த) தோற்றிய ஒருவராயின்,
- மோட்டார் சைக்கிள் ஓட்டக்கூடிய அனுமதிப்பத்திரம் உடையவராயின்
- குறைந்தது விற்பனை துறையில் (ஹாட்வெயார், இலத்திரனியல், விநியோகஸ்தர்களுடன் செயற்பட்ட முன் அனுபவம் விரும்பத்தக்கது
- 5 வருட முன் அனுபவம்.

### முன்அனுபவமற்ற விற்பனை பிரதிநிதிகள்
### Trainee Sales Representatives

25 வயதிற்கு குறைந்த மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் கொண்ட க.பொ.த (சா/த) அல்லது (உ/த) தோற்றிய ஒருவராயின், எவ்வித தொழில் முன் அனுபவம் இல்லாத ஒருவராக இருந்தாலும் எம்முடைய அணியில் இணையும் வாய்ப்பு உண்டு.

மு.ப 8.30 முதல் பி.ப 5.30 வரை தொடர்பு கொள்ளவும்
077 339 3561

இல்லையெனில், விண்ணப்பிக்கும் வெற்றிடத்தை குறிப்பிட்டு விண்ணப்பத்தை கீழ் குறிப்பிடுள்ள முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

KML CABLES
TRUSTED QUALITY Since 1979

சிரேஷ்ட முகாமையாளர்- மனித வளம்,
வய கமல் கேபல்ஸ் (தனி) நிறுவனம்
இல. 56, கதவல மாவத்தை, இரத்மலானை.
E-mail- careers@kmlcables.com

## MAJESTIC CINEPLEX

A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

## JCB 3CX Project 12/21



JCB 3CX Project 12 மெனுவல் 1998/2000/2001/2002
ரூ. 4,800,000.00 இலிருந்து

JCB 3CX Project 21 மெனுவல் 2002/2004/2005/2006/2007
ரூ. 5,400,000.00 இலிருந்து

பயண ஒழுங்கு செய்து தரப்படும்

Patlo Agencies (Pvt) Ltd
484, Galle Road, Pamburana, Matara.
Tel : 077 30 40 134 / 070 30 30 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## முதலாம் வருட நினைவலைகள்



பிறப்பு 02 . 03 . 1945

இறப்பு 15 . 02 . 2016


**அமரர் வைரமுத்து நடராசா**

( ஓய்வு பெற்ற கிளை முகாமையாளர் - ப.நோ.கூ.சங்கம் கட்டைவேலி, நெல்லியடி )

*ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

கிழவிதோட்டம். குடும்பத்தினர்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மறைவு 06 . 03 . 2011

**அமரர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம்**

(ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரி பிரதேச செயலகம் - உடுவில்)

அப்பா, அன்பாலும் பண்பாலும் எம்மை அரவணைத்து வளர்த்தீர்கள்
சீரான வாழ்வை எமக்களிக்க அயராது உழைத்தீர்கள்
வாழவேண்டிய வருடங்கள் பல இருந்தும்
ஆறாத்துயரில் எம்மைத் தவிக்கவிட்டுச் சென்றுவிட்டீர்கள்
நாம் வாழும் வரை எம்மோடு இருக்கிறீர்கள்.

பாசமிகுவுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



**திருமதி கிருஸ்ணகுமாரி ஏகாம்பரநாதன்**

கோப்பாய் வடக்கு, நாவற்கட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணகுமாரி ஏகாம்பரநாதன் நேற்று (04.03.2017) சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு - தங்கம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்புமருமகளும், ஏகாம்பரநாதனின் அன்பு மனைவியும், பதுமநிதி, சுதர்சினி, சுதர்சன், முரளீதரன் (ஜேர்மனி), பிரதீபா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், உதயகுமார், சதானந்தன், ஜெயப்பிரியா, சுகந்தினி (ஜேர்மனி), ஆனந்தராஜா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், சந்திராதேவி, பரிமளாதேவி, கந்தகுமார் (டென்மார்க்), இராஜேஸ்வரி, கலாநிதி ஆகியோரின் சகோதரியும் , காலஞ்சென்ற இராசதுரை மற்றும் பாலசுப்பிரமணியம் (வவுனியா), வத்சலா (டென்மார்க்), நடேசலிங்கம், விமலேந்திரன் ஆகியோரின் மைத்துனியும், கௌசிகா, ஹரணி, கீர்த்தனி, டிஷாங்கினி, ஶ்ரீ வர்சினி, கிஷாங்கனி, புவிசன், காருண்யா (ஜேர்மனி), சனோஜன் (ஜேர்மனி), சஜீதன் (ஜேர்மனி), சஜானா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிராமனோடை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.**

**தகவல்**
**கணவர் - ச.ஏகாம்பரநாதன்**
**மகன் - ஏ.சுதர்சன்**

(AJA/CS/1632)(11,17,18)

## மரண அறிவித்தல்

### சூசைப்பிள்ளை கிளமென்ற் பெர்னான்டோபிள்ளை



தோற்றம் 25.04.1959 மறைவு 27.02.2017

யாழ். ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Stuttgart ஐ வதிவிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை கிளமென்ற் பெர்னான்டோபிள்ளை 27.02.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராயப்பு சூசைப்பிள்ளை-லூர்த்துநாயகி தம்பதிகளின் பாசமிகு மகனும், திருச்செல்வம் - காலஞ்சென்ற எலிசபெத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், குமுதினியின் அன்புக் கணவரும், கிறிஸ்ரி, கிருசாந், கிரித்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், சேகரன் (ஜேர்மனி), பாஸ்கரன் (ஜேர்மனி), மரியகொறற்றி, அருட்சகோதரி மரிஸ்ரெலா, மரிய அஞ்சலா (யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), யோண் கெனடி (கட்டார்), வின்சன் கெனடி(இத்தாலி) ஆகியோரின் அன்புச்சகோதரரும், ஜெயரட்ணம், ராசசிங்கம், அமலசிங்கம், அருட் சகோதரர் குயின்சன், தேவந்தி, வதனி, அமுதினி, நந்தினி, யாழினி, டெனிசியா, ஜெயந்தி, சுபா, சுதா ஆகியோரின் அன்பு மைத்துனரும், வின்சன், பிறின்சன், நிக்சன், டிலக்சன், டெவ்னியா, செரோன், டிரோன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், வின்சலோ, மேசி, பெல்சி, வலன்ரைன் ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (06.03.2017) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஜேர்மனி Stuttgart என்னும் இடத்தில் செய்யப்படும்.

***குறிப்பு:** நாளை (06.03.2017) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலயத்தில் நல்லடக்க திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.*

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.**

**தகவல் குடும்பத்தினர்.**

(AJA/CS/1591)(11,18)

077 805 4235

# மரண அறிவித்தல்

## திருமதி ஞானாம்பிகை செல்வரட்ணம்

**மலர்வு: 06.11.1926** **உதிர்வு: 02.03.2017**

மானிப்பாய் சங்கரபிள்ளை வீதியை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய திருமதி ஞானாம்பிகை செல்வரட்ணம் லண்டனில் காலமானார். அன்னார் மானிப்பாய் லோட்டன் வீதியை சேர்ந்த காலம் சென்றவர்களான திரு..திருமதி துரைரட்ணம் அவர்களின் மகளும், யாழ்ப்பாணம் ஐயனார் வீதியை சேர்ந்த காலம் சென்றவர்களான திரு.,திருமதி. முத்துதம்பி அவர்களின் மருமகளும் காலம் சென்ற Police அதிபர் செல்வரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், அனுலா U.K, சஜிதரன் U.S.A, விஜிதரன் U.K, புவிதரன் U.K, அமரா U.K, கௌரி U.S.A., காலம் சென்ற மித்திரன் அவர்களின் அருமை தாயாரும், தர்மகுலசிங்கம் U.K, சுபா U.S.A, சௌந்தி U.K., ஷிலா U.K, யோகரட்ணம், Dr.சிவநேசன், ரதி அவர்களின் அன்பு மாமியாரும், செல்வராணி சோமசுந்தரம், காலம் சென்ற ஶ்ரீ பத்மநாதன், காலம் சென்ற ரூபி நாகேந்திரா, அருளானந்தன், காலம் சென்ற மகேந்திரன், காலம் சென்ற பத்மாவதி, சந்திரபால், வசந்தா குமரேசன், விமலா சீவரத்தினம், பவானி ஸ்கந்தகுமார் அவர்களின் பாசமிகு சகோதரியும், Dr.அனீற்றா, Dr.பார்த்தீபன், றொஜர், Dr.கார்த்திகா, குகன், கரிஷ்மா, தீனா, திவ்யா, அனுஷா, மாக், அஸ்வினி, றூடி, அகிலா, மையூரன், தர்ஷினி, காயத்திரி, Dr.ஈழன், ரித்தி, சீலன், யதுஷா, கோகுலன், மேகலா, ஆகியோரின் ஆசை பாட்டியும், லக்ஷ்மி, லக்ஷ்மன், லூயிஸ், அரன், ஈவா அவர்களின் அருமை பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரிகை 05.03.2017 ஞாயிறு காலை (லண்டன் நேரம்) 9.30 மணிக்கு

**LONDON, ST.MARYLEBONE CREMATORIUM**
**EASTEND ROAD, FINCHLEY, LONDON N2 OSE இல்**
நடைபெறும்.

குடும்பத்தினர்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் 31 . 07 . 1928

விண்ணில் 05 . 02 . 2017

**அமரர் தம்பையா திருநீலகண்டன்**

**(முன்னைநாள் பிரபல கொழும்பு வர்த்தகர்)**

05.02.2017 ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்த சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் சரவணை கிழக்கை வாழ்விடமாகவும் பரமேஸ்வராவீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய எமது குடும்பத்தலைவர் தம்பையா திருநீலகண்டன் அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி, மின்னஞ்சல் முகநூலூடாக அனுதாபச்செய்திகளைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மலர்வளையங்கள் சாத்தியவர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டு எம்மோடு துயரங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இறுதியாத்திரை சிறப்பாக மேற்கொள்ள உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பரமேஸ்வரா வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.** **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை புனித பூமியாக மாற்றவும்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் குணசீலன் கோரிக்கை

மன்னார், மார்ச்.5

மன்னார் மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் அனைத்தும் புனித ஸ்தலங்களாக மாற்ற மாவட்ட அபிவிருத்திக் குழு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் முன்வைத்தார்.

மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் இணைத்தலைவர்களான அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் நாடாமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரின் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மன்னார் மாவட்டச் செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன் போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் குறித்த கோரிக்கையை முன்வைத்தார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது வடக்கில் உள்ள பல்வேறு மாவீரர் துயிலும் இல்லங்களை வடமாகாண சபையூடாகவும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களினூடாகவும் புனிதஸ்தளங்களாக மாற்றுமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை புனிதஸ்தலங்களாக மாற்ற இந்த அபிவிருத்திக் குழுவிடம் கோரிக்கையை முன் வைக்கின்றேன். ஆயிரக்கணக்கான மக்களின் உணர்வுபூர்வமான மண்ணாக குறித்த மாவீரர் துயிலும் இல்லங்கள் காணப்படுகின்றன.

எனவே உணர்வு பூர்வமாக குறித்த மாவீரர் துயிலுமில்லங்களை புனித ஸ்தலங்களாக மாற்ற மாவட்ட அபிவிருத்திக்குழு அங்கீகாரம் வழங்க வேண்டும். இதன் போது மக்கள் சுதந்திரமாக சென்று அஞ்சலி செலுத்த முடியும். என்றார்.

குறித்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மாவட்ட அபிவிருத்திக் குழு, உரிய அதிகாரிகளுக்கு குறித்த மாவீரர் துயிலும் இல்லங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணித்தது.

மன்னார் மாவட்டச் செயலர் எம். வை.எஸ்.தேசப்பிரியவின் நெறிப்படுத்தலில் இடம் பெற்ற குறித்த அபிவிருத்திக் குழுக்ஷ கூட்டத்தில், நாடளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதி அவைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், நாடளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன், அரச தலைவரின் வன்னி மாவட்ட இணைப்பாளர் பிரபாகணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ-56)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவை பயன்படுத்தி ஐ.நா.தீர்மானத்தை நீக்குக

## அரசிடம் கோருகிறது ஹெல உறுமய

கொழும்பு,மார்ச்.5

அமெரிக்காவின் புதிய அரச தலைவர் டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகத்தைப் பயன்படுத்தி, இலங்கைக்கு எதிரான ஜெனீவாத் தீர்மானத்தை நீக்குவதற்கு அல்லது இலங்கைக்குத் தேவையான வகையில் அதனைத் திருத்தம் செய்வதற்கு அயலுறவுத்துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதைவிடுத்து அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் கால அவகாசம் கோருவதை ஏற்க முடியாது. அது நாட்டுக்கு ஆபத்தானதாகும். இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.



இது தொடர்பில் அந்தக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் நிஸாந்த சிறி வர்ணசிங்க தெரிவித்ததாவது:

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 34 ஆவது கூட்டத் தொடர் இப்போது தொடங்கியுள்ளது. ஆனால் இது தொடர்பில் மக்களிடம் சரியான 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவின் அனுசரணையில் இலங்கை தொடர்பில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

ஆரம்பத்தில் அந்தத் தீர்மானத்தை எதிர்த்தாலும் கூட, பின்பு அது தொடர்பில் சில திருத்தங்களைக் கொண்டு வந்து, இலங்கை அதற்கு இணை அனுசரணை வழங்கியது. அதன் காரணமாக சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு இருந்த அழுத்தம் அச்சுறுத்தல் தனியத் தொடங்கியது. ஆனால்,இவை முழுமையாக நீங்கவில்லை.

மகிந்த ஆட்சியில் அமெரிக்கா இலங்கை தொடர்பில் கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. இலங்கை தண்டிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அப்போதைய ஒபாமா நிர்வாகம் இருந்தது. அதனால், ஒருவகையான அச்சத்துக்குள் நாடு தள்ளப்பட்டது.

ஆனால்,ஆட்சி மாற்றத்தின் பின்னர் தலைமை அமைச்சர் ரணிலும், அரச தலைவர் மைத்திரியும் சேர்ந்து இந்த அச்சத்தைக் குறைத்தனர். ஆனால், குற்றச்சாட்டு அப்படியே தான் உள்ளது. சூடு தான் குறைந்திருக்கின்றது. இப்போது ஒபாமா நிர்வாகம் மாறி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் ஆட்சியைக் கைப்பற்றி இருப்பதால், இது இலங்கைக்குச் சாதகமான நிலைமையாகும். ஆனால், இந்த சாதகத்தமையை நாம் பயன்படுத்துகிறோமா என்பது சந்தேகம் தான்.

மேற்படி ஐ.நா. தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கலப்பு நீதிமன்றம் மற்றும் பன்னாட்டு நீதிபதிகள் தொடர்பில் அரச தலைவர் உடன்படவில்லை என்று தெரிவித்துள்ளார். ஆனால்,இது தொடர்பில் அயலுறவுத்துறை அமைச்சு செயற்படும் விதம் சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. பழைய ஒபாமா நிர்வாகத்தைத் திருப்திப்படுத்துவதற்காகச் செயற்படுவது போல் எமக்குத் தெரிகின்றது.

டொனால்ட்ட்ரம்பின் நிர்வாகத்தைப் பயன்படுத்தி மேற்படி ஜெனீவாத் தீர்மானத்தை நீக்குவதற்கு அல்லது திருத்துவதற்கு எம்மால் முடியும். ஆனால்,அயலுறவுத்துறை அமைச்சர் அதைச் செய்யத் தவறிவிட்டார். அதை விட்டு இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கால அவகாசம் கேட்கின்றார்.

இது நாட்டுக்கு ஆபத்தான போக்காகும். தமக்குத் தேவையான விதத்தில் தீர்மானத்தை திருத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு மங்கள [illegible] வீர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடாகும் - என்றார். (ஐ-3)

# வங்கிகளில் மூத்தோரின் நிரந்தர வைப்புகளுக்கு சிறப்பு வட்டி

அச்சுவேலி, மார்ச்.5

மூத்த பிரசைகளுக்கான 15 வீத வட்டியுடன் கூடிய 15 லட்சம் ரூபாவை வங்கிகளில் நிரந்தர வைப்பு (எவ்.டி) கணக்கில் வைப்புச் செய்யும் நடைமுறை இந்த மாதம் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்த சிறப்பு வட்டி வீதத்துடன் கூடிய நிரந்தர வைப்புக் கணக்கில் முன்னர் 10 லட்சம் ரூபாவை வைப்புச் செய்தவர்கள், மேலும் ஐந்து லட்சம் ரூபாவை வைப்புச் செய்து 15 வீத வட்டியைப் பெற்றுக் கொள்ளலாம். புதிதாகக் கணக்கை ஆரம்பிப்பவர்கள் 15 லட்சம் ரூபாவை வைப்புச்செய்யலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மூத்த பிரசைகளுக்கான வாழ்வாதார உதவியாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் பெயரில் அரச வங்கி மற்றும் அங்கீரிக்கப்பட்ட தனியார் வங்கிகளில், நிரந்தர வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்படும் 10 லட்சம் ரூபாவுக்கு 15 வீத வட்டி வழங்கப்பட்டு வந்தது. இந்தத் தொகை மார்ச் முதலாம் திகதியில் இருந்து 15 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கணக்கை ஆரம்பிப்பவர்கள் மாதாந்தம் வட்டியைப் பெற்றுக் கொள்வதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

10 லட்சம் ரூபாவாக இருந்து வந்த 15 வீத வட்டியுடன் கூடிய நிரந்தர வைப்புத் தொகை 15 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்படும் என்று 2016 ஆண்டுக்கானவரவு-செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த அறிவிப்போடு கூடிய சலுகை 14 மாதங்களின் பின்னர் தற்போது நடைமுறைக்கு வந்துள்ளது. (ஐ-11)




# சைட்டத்துக்கு எதிரான போராட்டத்தை கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஜே.வி.பி.

## வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச்.5

சைட்டத்துக்கு எதிரான போராட்டத்தைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வரும் உள்நோக்கில், மக்கள் விடுதலை முன்னணி செயற்பட்டு வருகின்றது என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார குற்றம்சாட்டியுள்ளார்.



அவர் தெரிவித்ததாவது,

கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைந்து முன்னெடுத்த, சைட்டத்துக்கு எதிரான நடவடிக்கையில் கலந்து கொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் சிறு குழுவொன்று கூச்சலிட்டது. மக்கள் விடுதலை முன்னணி பற்றி நாம் அறிந்த வரலாற்றில், அந்தக் கட்சி தாரைவார்த்தலைத் தவிர வேறு எதனையும் செய்யவில்லை.

சைட்டத்துக்கு எதிராக நாம் குரல் கொடுக்கும் போது, மக்கள் விடுதலை முன்னணி அதற்கு தடையாக உள்ளனர். சைட்டத்துக்கு எதிரான எதிர்ப்பு அவர்களுக்குரியது என்று மக்கள் விடுதலை முன்னணி கருதுகின்றது. கடந்த காலத்தில் மக்கள் விடுதலை முன்னணி என்ன செய்தது என்பதை நாம் அறிவோம்.என்றார். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போத்தல் துண்டுகளை உட்கொண்ட மீனவர் மருத்துவமனையில் சேர்ப்பு

திருமலை,மார்ச்.5
சட்ட விரோதமான முறையில் முல்லைதீவுக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் எட்டு பேரில், ஒருவர் திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர் இந்தியா காமராஜர் நகரைச் சேர்ந்த சந்தோஸ் (29 வயது) எனவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது:

முல்லைதீவுக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்டபோது , கடற்படையினர் அவர்களைக் கைது செய்ய முற்பட்டனர். அதன் போது குறித்த படகில் இருந்த போத்தல் துண்டுகளை மீனவர் ஒருவர் உட்கொண்டார். அதனால் அவரை மருத்துவமனையில் சேர்ப்பித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்திய மீனவர்கள் 7 பேரும் துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களைத் திருகோணமலை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த துறைமுகப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-45)










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ஐ.நா. யதார்த்தம்

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையில் 2015ஆம் ஆண்டுநிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் 2 வருட கால அவகாசம் வழங்குவதற்கான முயற்சி ஆரம்பமாகிவிட்டது. அது தொடர்பான தீர்மான வரைவு உருவாக்கப்பட்டு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு அது வழங்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று இந்தத் தீர்மான வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு கொழும்பு அரசு இணை அனுசரணை வழங்க உள்ளதாகவும் ஜெனிவாத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இது உண்மையானால், தமிழ் மக்களைக் கொழும்பு அரசும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையும் சேர்ந்து ஏமாற்றுகின்ற நடவடிக்கையாக இது இருக்கப்போகிறது.

இலங்கையில் நடந்த இறுதிப்போரின் போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் மனிதாபிமானத்துக்குப் புறம்பான செயல்கள் தொடர்பில் பொதுநலவாய நாடுகளின் நீதிபதிகளையும் உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்று 2015 தீர்மானம் வலியுறுத்துகின்றது.

ஆனால், அதனைத் தாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். அதேபோன்று கலப்பு நீதிமன்றம் ஒன்றை உருவாக்குவதற்கான அரசியல் நிலைமை இலங்கையில் இல்லை என்று கூறித் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் அந்தத் திட்டத்தை நிராகரித்திருக்கிறார்.

நாட்டை ஆட்சி செய்யும் இரு தலைவர்களுமே வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தை நிராகரித்த பின்னர், அது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையை நிறைவேற்றவேண்டும் என்று கோரும் ஒரு தீர்மானத்தை மீண்டும் கொண்டு வருவதில் எந்த அர்த்தமும் இல்லை.

ஏற்கனவே வழங்கப்பட்ட இரண்டு வருட கால அவகாசத்தில் இலங்கை மிக மந்தமாகவே செயற்பட்டிருக்கிறது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறார். தீர்மானம் தொடர்பில் இலங்கை எந்தெந்த இடங்களில் செயற்பாடில்லாமல் இருக்கிறது என்பதையும் தெளிவாக்கியிருக்கிறார். இவற்றையெல்லாம் ஆய்ந்து அறிந்து தெரிந்துகொண்ட பின்னரும், இலங்கையை 2015 ஐ.நா. தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி கோருவது முட்டாள்தனமானது.

2015 தீர்மானத்தைக் கொழும்பு முழுமையாக நிறைவேற்றப்போவதில்லை என்பதை அதன் தலைவர்கள் தெளிவாகத் தெரிவித்துவிட்ட பின்னரும் அதனை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதில் பயனேதும் இல்லை. அது தமிழ் மக்களை ஏமாற்றும் வேலையாக அன்றி வேறெதாகவும் இருக்காது.

இலங்கை அரசுக்குக் கால அவகாசம் கொடுக்கப்படுவதை நாம் எதிர்த்தாலும், எமக்குச் சார்பாக இந்த உலகத்தை வளைக்கும் ஈர்ப்பு விசையையோ, அழுத்தத்தைக் கொடுக்கக் கூடிய வல்லமையையோ நாம் கொண்டிருக்கவில்லை என்பதே யதார்த்தம். பிராந்திய மற்றும் மேற்கு நாடுகளின் நலன்களின் அடிப்படையில் கொழும்புக்குக் காலக்கெடு வழங்கப்படுவதைத் தமிழர்களால் தடுத்து நிறுத்த முடியாது என்பது புரிந்துகொள்ளக் கூடியதே.

அதேசமயத்தில்வரப்போகிறதீர்மானத்தின்ஊடாகத்தமிழர்களுக்கும் அதன் மூலம் இலங்கை நாட்டுக்கும் பெறக்கூடிய அதிகூடிய நன்மைகள் பற்றியே இப்போது சிந்திக்க வேண்டியிருக்கிறது.

பன்னாட்டு மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் வலியுறுத்தியிருப்பதைப் போன்று, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் கூறப்பட்டிருப்பதைக் கவனத்தில் எடுத்து இன்னும் உறுதியானதும் காத்திரமானதுமான தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்குத் தமிழர் தரப்பு முயற்சிக்கவேண்டும். தீர்மானத்தை நிறைவேற்றுவதில் இருந்து கொழும்பு விலகிச் செல்லும் நிலை ஏற்பட்டால், அடுத்த கட்ட நகர்வைத் தமிழர் தரப்பு மேற்கொள்வதற்குத் தேவையான பொறிமுறைகளையும் அதற்குள் உள்ளடக்க முயற்சிக்க வேண்டும்.

கொழும்புடன் சேர்ந்து ஐ.நாவும் அரங்கேற்றக்கூடிய ஒரு நாடகத்துக்குள் தமிழர்களும் ஒரு வகிபாகத்தைக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. அப்படியான ஒரு வகிபாகத்தைக் கொண்டிருப்பதாக இருந்தால், அதற்கான பயன் என்ன என்பதைத் தமிழர்கள் தெளிவாக்கிக் கொள்ளவேண்டும் என்பதைத்தான் தமிழ்த் தலைமைகள் உணரவேண்டும்.

# உரியோருக்கு உதவி கிட்டாத சமுர்த்தி நிவாரண முறைகேடு

என். நிவின்

ஏழை மக்களின் வாழ்வை ஏற்றம் பெறவைக்கும் நோக்கில் சமுர்த்தி (சுபீட்சம்) திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்மூலம் நாட்டில் கணிசமான அளவு வறுமைஒழிக்கப்பட்டது.ஆனால், வசதிகள் கிட்டிய நிலையிலும் அநேகமானோர் சமுர்த்தி நிவாரணம்பெற்றுவருகின்றனர்.

**சமுர்த்தித் திட்டத்தின் ஆரம்பமும் பின்னணியும்**

வறுமையற்ற இலங்கைத்தேசமொன்றினைக் கட்டியெழுப்புதல் எனும் நோக்குடன், அபிவிருத்தியொன்றின் ஊடாக நிரந்தர தேசிய அபிவிருத்தி ஒன்றுக்காகப் பங்களிப்புச் செய்தல் என்பதை நோக்காகக் கொண்டு 1996ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி சமுர்த்தி அதிகாரசபை நிறுவப்பட்டது.

சமூகத்திலே பின்தங்கிய மக்கள் மத்தியில் முழுமையான அபிவிருத்தி ஒன்றை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்ட சமுர்த்திச்செயற்றிட்டம், இன்று நிரந்தர அபிவிருத்தியின் முன்னோடிச் செயற்றிட்டமாகப் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பொருளாதார மற்றும் சமூகத்தரங்களை உயர்த்த இந்தத் திட்டம் ஒத்துழைப்பு நல்குகிறது.

வறியவர்கள் வருமானத்தை ஈட்டக்கூடியவாறான செயற்றிட்டங்களை நாடளாவிய ரீதியில் செயற்படுத்துவதன் மூலம் வறுமை ஒழிப்புக்கான சார்க் பிரகடனத்தைப் பின்பற்றி நாடு முழுவதும் இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. 1996 ஆம் ஆண்டில் 28.8 வீதமாக இருந்த இந்நாட்டின் வறுமை நிலை, 2009 ஆம் ஆண்டு 15 வீதமாகக் குறைந்தது. அதேநேரம், சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தது.

**வெளிநாடுகளிலும் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் இது**

இலங்கை சமுர்த்தி அதிகார சபை சமுர்த்தி நன்மை பெறுவோர் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரின் வாழ்வாதார அபிவிருத்திக்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. முக்கியமாக விலங்கு வேளாண்மை மற்றும் கடற்றொழில் நிகழ்ச்சித்திட்டங்களை, சமுர்த்தி உதவி பெறுவோரையும், குறைந்த வருமானம் பெறுவோரையும் இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தியுள்ளது.

இதன்மூலம் வேலை இல்லாப் பிரச்சினையைக் குறைத்தல், பொருளாதார ரீதியில் வலுவடையச் செய்தல் மற்றும் குடும்பத்தின் போசணை மட்டத்தை அதிகரித்தல் என்பவை நிறைவேற்றப்படுகின்றன. அத்துடன், கைத்தொழில் செயற்றிட்டங்களும் இவற்றில் முக்கிய இடம் வகிக்கின்றன. "கிராமத்துக்கு சிறு கைத்தொழில்" என்ற தொனிப்பொருளில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

வறுமை ஒழிப்புத் திட்டமாகிய இந்தச் சமுர்த்தித் திட்டம், இன்று சர்வதேச அளவில் ஒரு மகத்தான திட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகளும் கூட இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

**வெளிநாட்டு உதவி உள்ளோருக்கும் சமுர்த்தி**

நாட்டிலிருந்து வறுமையை இல்லாதொழித்து, பொருளாதாரத்தைமேம்படுத்தும்பொருட்டு ஏழை மக்களை இனங்கண்டு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. இது வரவேற்கத்தக்கது. ஆனால், வசதி உள்ளோர் பலருக்கும், உறவுகள், வெளிநாட்டிலுள்ள குடும்பங்களுக்கும் இந்த நிவாரணம் வழங்கப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. இதற்குப் பின்னால்சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் செல்வாக்கு இருப்பதும் தெரியவந்துள்ளது. இந்த விடயத்தில் உண்மையைக் கண்டறிந்து ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பத்து வருடங்களுக்கு முன்னர் சமுர்த்தி நிவாரணம் பெற்ற ஒருவரின் குடும்பத்தில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும். பிள்ளைகள் வளர்ந்து வேலைக்குச் செல்பவர்களாக இருப்பார்கள். அந்தக் குடும்பத்தின் வருமான மட்டம் அதிகரித்திருக்கும். இரண்டு வருடத்துக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் சமுர்த்தி மீளாய்வுத் திட்டத்தில் இத்தகையோருக்கான உதவி நீக்கப்படுவதில்லை. இது நாடளாவிய ரீதியில் நிலவும் பொதுப் பிரச்சினை. இதனைக் களைய வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமை.

**வலி. மேற்கில் வலி மிகுந்த மக்கள்**

வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் வசிப்போரில் அதிக அ[...]வானோர் அதிகளவில் சமுர்த்தி நிவாரணம் பெறுகின்றனர். இவர்களில் பலர் வசதிபடைத்தவர்கள். அடிநிலை மக்கள் வலி சுமந்த வாழ்வையே மேற்கொள்கின்றனர். இதில், போரால் பாதிக்கப்பட்ட மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் விதிவிலக்கல்ல. இவர்கள் எல்லோரும் தமது துயரை எவரிடம் எடுத்துரைப்பது எனத் தெரியாது தடுமாறுபவர்கள்.

"நான் வன்னியிலிருந்து எனது பிள்ளைகளுடன் வந்து, வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வாழ்ந்து வருகிறேன். கடந்த 10 வருடங்களாக எனது கணவர் என்னைப் பிரிந்து வாழ்கிறார். எனக்கு 3 பெண் பிள்ளைகள். மூவரும் படிக்கின்றனர். எமக்கு அரசினால் வழங்கப்படும் மாதாந்த உதவிப்பணத்தைத் தவிர வேறு எந்த உதவியும் கிடைக்கவில்லை. சமுர்த்தி நிவாரணமும் இல்லை. நான் கூலி வேலைக்குச் செல்கிறேன். பிள்ளைகளைப் படிப்பிப்பதற்குப் பெரும் சிரமப்படுகின்றேன். வசதியானவர்களுக்கெல்லாம் சமுர்தி நிவர்ரணம் வழங்குகின்றனர். ஆனால், எங்களைப் போன்ற வறிய குடும்பங்களைக் கண்டுகொள்கிறார்களே இல்லை. நாங்கள் ஏழையாகவே இருந்து, ஏழையாகவே சாகப் பிறந்தவர்களா?" என பெண் தலைமைத்துவம் தாங்கும் குடும்பமொன்றின் தலைவியான பெண்மணி மனம் குமுறுகிறார்.

"நான் வலி. மேற்கில் வசிக்கிறேன். சமுர்த்தி நிவாரணம் அறிமுகப்படுத்தப்பட்ட பொழுது எனது குடும்பத்துக்கு "வெள்ளை காட்" தந்து, உலக வங்கியினால் வழங்கப்பட்ட உலர் உணவு நிவாரணம் தந்தனர். எங்களைச் சமுர்த்தித் திட்டத்தில் இணைத்துக்கொள்ளவில்லை. பின்னர் அந்த நிவாரணமும் நிறுத்தப்பட்டுவிட்டது. இது எந்த அளவுக்கு நியாயம்? என ஆத்திரப்படுகிறார் ஒரு குடும்பத் தலைவர்.

இவர்களைப் போன்று ஆயிரம் ஆயிரம் ஏழைகள், வலி சுமந்த வாழ்வை வாழ்ந்து வருகின்றனர். இனிமேலாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவர்களுக்கான சமுர்த்தி நிவாரண உதவிகளை வழங்கி உதவுவார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிளவுபடுத்தும் கடும் முயற்சியில் கஜேந்திரகுமார்

■ சேரலாதன்

தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பிலிருந்து வெளியேறி விடுமாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக்கட்சி தவிர்ந்த கட்சிகளுக்கு விடுத்த வேண்டுகோள் தமிழர்களிடையே பலத்த வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. அவரது நோக்கமும் மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது கூட்டமைப்புக்கு எதிராக மிக மோசமான விமர்சனங்க ளைத் தெரிந்திருந்தவர்கள் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் தான். ஆனால் மக்களால் அவர்கள் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கப்பட்டு விட்டனர். சொற்ப வாக்குகளே இவர்களுக்குக் கிடைத்தன. இவர்கள் கூட்ட மைப்பில் அங்கம் வகித்தபோது மூன்று நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக்கொண்டனர் என்பதை மறப்பதற்கில்லை.



**தமிழ் மக்களது அபிமானம் பெற்றது தமிழரசுக் கட்சியே**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளில் இலங்கைத்தமிழரசுக்கட்சி மிகப் பெரியதும், தமிழ்மக்களது பேராதரவைப் பெற்றதுமாகும். இந்தக் கட்சியுடன் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் என்பவை இணைந்துதான் கூட்டமை ப்பாக இயங்கி வருகின்றன. தமிழரசுக்கட்சியின் தலைவராகவும், கூட்டமைப்பின் செயலாளர் நாயகமாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பொறுப்புக்களை வகிக்கின்றார். இதேபோன்று ரெலோவுக்குச் செல்வம் அடைக்கலநாதனும், புளொட்டுக்குச் சித்தார்த்தனும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கு சுரேஷ் பிரரேமச்சந்திரனும் தலைவர்களாக உள்ளனர். இந்த மூன்று கட்சிகளும் போராளிக் குழுக்களாகவிருந்து பின்னர் அரசியல் கட்சிகளாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கூட்டமைப்பின் தலைவரான ஆர்.சம்பந்தனும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் பேரவை ஆகியவற்றில் அங்கம் வகித்துக் கொண்டு மக்கள் முன்பாக இரட்டை வேடம் போடுவதை விடுத்துக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிவிடுமாறு புளொட், ஈ.பி.ஆர்.எல். எவ். ஆகிய இரண்டு கட்சிகளுக்கும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கைவிடுத்தார். தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் இவர்தான் என்பது குறிப்பி டத்தக்கது. மோசடி அரசியலில் ஈடுபடுகின்ற கூட்டமைப்பின் தலைமையை இனியும் பாதுகாப்பதற்கு நினைக்காது, அதிலிருந்து விலகிவிடுமாறும் அவர் மேற்படி கட்சிகளுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார். தமிழ் மக்கள் பேரவையில் கஜேந்திரகுமாரின் கட்சியோடு புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் என்பவையும் அங்கம் வகிக்கின்றன.

**தமிழ்மக்கள் பேரவையை அரசியல் கட்சியாக்க முயலும் கஜேந்திரகுமார்**

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவராக இருப்பதால் கஜேந்திரகுமாரின் கருத்துக்கள் அவருக்கும் பொருத்தமானவை. கஜேந்திரகுமாரின் கருத்துக்கள் தமிழ் மக்கள் பேரவையை ஓர் அரசியல் கட்சியாக மாற்றுகின்ற எண்ணப்பாட்டைக் கொண்டுள்ளதாகக் கருத வேண்டியுள்ளது. அவர் தமது எதிர்கால அரசியலைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமானால், பெரியதொரு அரசியல் அமைப்புடன் இணைய வேண்டிய தேவையுமுள்ளது.

ஆனால், தமிழ் மக்கள் பேரவையை அரசியல் கட்சியாக மாற்றமுடியாதென முதலமைச்சர் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். பேரவை ஆரம்பிக்கப்பட்ட வேளையிலும் அவர் இந்தக் கருத்தையே தெரிவித்திருந்தார்.

புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் என்பவையும் கஜேந்திரகுமாரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. கூட்டமைப்புடன் வழக்கமாக முரண்பட்டு நிற்கும் ஈ.பி. ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் 'பொறுத்திருந்து பார்ப்போம்' என்றுமட்டுமே கூறியிருக்கிறார். புளொட் தலைவர் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லையென்பது தெளிவாகத் தெரிகின்றது.

ஆகவே கூட்டமைப்பை எப்பாடுபட்டாவது உடைத்துவிட வேண்டும் என்ற கஜேந்திரகுமாரின் எண்ணம் இப்போதைக்கு நிறைவேறப்போவதில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

காலத்துக்குக் காலம் பிளவுகள் ஏற்படுவதும், அதனால் தோல்விகளை எதிர்கொள்வதும் தமிழர்களின் தலைவிதியாகவே ஆகிவிட்டது. பொதுநலன் பின்தள்ளப்பட்டு சுயநலம் தலைதூக்கும்போது தான், பிளவுகளுக்கான அடிக்கல் நடப்படுகின்றது. கூட்ட மைப்பில் அங்கம் வகிப்பவர்களுக்கு அதன் தலைமையில் அதிருப்தி ஏற்பட்டால், குறைகள் தொடர்பாக கலந்துபேசி ஒரு தீர்வைக் காணமுடியும். அதைவிடுத்து வெளியில் இருந்து கொண்டு விமர்சிப்பதும், அறிக்கை விடுவதும் கூட்டமைப்புத் தத்துவத்துக்கே விரோதமானது. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற சிலர், மதில் மேல் பூனையாக இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இவர்களின் செயற்பாடுகள் தொடர்பாகத் தெரிந்திருந்தும் கூட்டமைப்புத் தலைமை பொறுமை காத்து வருகின்றது. மீண்டுமொரு பிளவு ஏற்படக் கூடாது என்பதால்தான் பொறுமை காக்கப்படுகின்றது. இதையொரு பலவீனமாக எவருமே நினைக்கக் கூடாது.

**கூட்டமைப்புக்குத் தலைமைதாங்க பொருத்தமானவர் சம்பந்தனே!**

இதுவரை கூட்டமைப்பின் தலைவருக்கு மாற்றாக எவருமே இனம் காணப்படவில்லை. மூப்பின் காரணமாக அவர் தளர்ந்து போயுள்ள நிலையில் காணப்படுகின்றார். இந்த நிலையிலும் அவர் தன்னாலியன்ற அளவு அரசியல் ரீதியில் செயற்பட்டு வருவதைக் காணமுடிகின்றது. கூட்டமைப்பு பிளவுபடக்கூடாது என்பதில் அவர் குறியாகவே உள்ளார். வெளிநாடுகளிலிருந்து வருகின்ற பிரதிநிதிகளும் அவரைச் சந்திக்கத் தவறுவதில்லை. தமிழ் மக்களின் ஓர் ஏகபிரதிநிதியாக அவர் கணிக்கப்படுகின்றார். அவசரப்பட்டு அரசுடன் முட்டி மோதுவதால் பகை வளருமேயொழிய, பயனொன்றும் கிடைக்கப் போவதில்லை என்பதைத் தமது நீண்ட அனுபவத்தின் வாயிலாகப் புரிந்து கொண்ட அரசியல்வாதி அவர். தமிழ்மக்களைஏமாற்றிஅரசியல் நடத்து வதன் மூலமாக அவர் என்ன இலா பத்தைப் பெற்று விடப்போகிறார்? ஆகவே அவரைக் கேவலமாக விமர்சிப்பதும் அவர் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை வீசிக் கொண்டிருப்பதும் தார்மீக அடிப்படையில் பண்பான செயல்களல்ல என்பதைச் சம்பந்தப்பட்டோர் புரிந்துகொள்ள வேண்டும்.

கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செல்வதற்கு அதில் இணைந்திருப்பவர்களுக்குத் தடையேதும் இருப்பதாகத் தெரியவில்லை. கஜேந்திரகுமார் போன்றவர்கள் தமது அரசியல் அபிலாசைகளை எட்டுவதற்காக கூட்டமைப்பைப் பிளவுபடுத்துவதற்கு முயன்றால் அதைத் தமிழர்கள் ஒருபோதுமே ஏற்கமாட்டார்கள்.



## வாசகர் திருமுகம்

### சாதனைகளுக்குக் காரணமாய் அமைவது ஊக்குவிப்பே

எமது நாட்டிலுள்ள சகல துறைசார் கலைஞர்களும் பெருமளவில் பணம் செலவிட்டே பல்வேறு கலைகளைக் கற்றுத் தேறுகின்றனர். இதற்காக அவர்கள் நீண்ட காலத்தைச் செலவிட வேண்டி நேர்கிறது. இத்தகைய சிரமங்கள், அர்ப்பணிப்புக்களுடன் தாம் கற்ற கலையை வளர்த்துக் கொண்டிருக்கும் கலைஞர்களை ஊக்குவிக்க எம்மவர்களில் பலரும் முன் வருவதில்லை. நாட்டின் சகல துறைக் கலைஞர்களையும் ஊக்குவிக்க வேண்டுமென்றும், அதற்காக ஓய்வூதியம், வறுமையில் வாடுவோருக்கு வாழ்வாதார உதவிகள், நோயுற்ற காலத்தில் வைத்தியச் செலவு ஆகியவற்றை வழங்க வேண்டுமெனவும், எமது ஆட்சியாளர்களும் இடையிடையே நினைப்பூட்டி பேச்சளவில் மட்டும் அதனை ஊக்குவிக்க முயல்வதாகக் காட்டிக் கொள்கிறார்களே தவிர, நடைமுறையில் அதற்கான எத்தகைய செயற்பாடும் இடம்பெறுவதில்லை.

இத்தகைய நிலையில், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களது நூறாவது பிறந்த தினத்தையொட்டி யாழ். மாவட்டதிலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு அதி உயர் கலைமாமணி என்ற பட்டத்துடன் பல்வேறு பரிசில்களும் வழங்கிக் கௌரவித்த யாழ். மாவட்ட பொது அமைப்புக்களான சர்வோதய மற்றும் தேசோதய அமைப்புக்களது நிர்வாகிகளது முன்மாதிரிச் செயற்பாடு பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

அவர்களது இத்தகைய ஊக்குவிப்பு முயற்சி அவர்களுக்குக் கௌரவத்தைத் தேடித்தரும் என்பதுடன் கலைஞர்கள் சாதனைகள் படைக்கவும் வழிவகுக்கும்.

*சி. காசிப்பிள்ளை*
*கொடிகாமம்*

### திருடர்கள் கவனம்

யாழ். குடாநாட்டின் சில பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் இடம்பெற்ற நூதனத் திருட்டுக் குறித்த பத்திரிகைச் செய்தி வியப்பளிக்குமொன்று. திருட்டுக்கள் பல வகைப்பட்டவையாயினும், ஏமாற்றிப் பணம் பறிக்கும் இத்தகைய செயற்பாடு குறித்து பகிரங்கப்படுத்தி, பொது மக்களை எச்சரிக்கையூட்டும் அச்சு ஊடகங்களது பணி இன்றைய காலத்தின் தேவை யொன்றாகக் கொள்ளத்தக்கது; பாராட்டுக்கு உரியது.

*க. சர்வேஸ்வரன்*
*சாவகச்சேரி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நீரிழிவு நோயைத் தடுப்பது எப்படி?

மருத்துவர் எஸ்.சிவன்சுதன்

நீரிழிவு நோய் உலகையே அச்சுறுத்தும் வகையில் ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்து நிற்பது யாவரும் அறிந்ததே. உலகளாவிய அளவில் ஏறத்தாழ 400 மில்லியன் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் 15 ஆண்டுகள் செல்ல இந்தத் தொகை 600 மில்லியன்களைத் தாண்டும் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

இந்தநிலையில் நீரிழிவு நோயை வராமல் தடுக்கலாமா, இது நடைமுறைச் சாத்தியமா, அல்லது வெறும் கனவு தானா? இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் போன்ற வினாக்கள் எம்முள்ளே எழுந்து கொண்டிருக்கின்றன.

அன்று கண்ட கனவுகள் சில இன்று நிஜமாவது போலவே எமது முயற்சிகள் சரியான திசையில் தொடருமாக இருந்தால் இன்று காணும் கனவுகள் பல நாளை நிஜமாவது நிச்சயம். நீரிழிவு நோய்த்தடுப்புத் தொடர்பான கனவுகளும் அது போன்றதே.

அன்று சுக போக வாழ்வு வாழ்ந்த வசதியடைந்த குடும்பங்களிடையே மட்டும் அதிகம் பரவியிருந்த இந்த நோய்கள் இன்று அனைவரையும் அசுரவேகத்தில் தாக்க ஆரம்பித்திருப்பதன் காரணம் என்ன?

குடும்பங்களின் பொருளாதாரத்திலும் வாழ்வாதாரத்திலும் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தடுத்து நிறுத்துவது எப்படி? நீரிழிவு நோய் வரும் வரை காத்திருந்து அந்த நோயின் கட்டுப்பாட்டிலும் கவனிப்பிலும் கூடிய கவனம் செலுத்தப் போகிறோமா? அல்லது இந்த நோய் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்துவதில் அதிகூடிய அக்கறை எடுக்கப் போகின்றோமா? சிந்திக்க வேண்டிய தேவை இருக்கிறது.

இந்த நோய் வேகமாக அதிகரித்து வருவதற்கான அடிப்படைக் காரணங்களாக பின்வருவன அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன.

01. ஆரோக்கிய மற்ற உணவுப் பழக்கங்களுக்கு நாம் அடிமையாயிருத்தல்
02. உடல் களைக்க வேலை செய்யாமலிருப்பதுடன் ஒழுங்கான உடற்பயிற்சி செய்வதில் ஆர்வமற்றவர்களாக இருத்தல்
03. உடல் நிறை சரியான அளவில் பேணப்படாமை, எமது உடல் நிறையை எவ்வளவாகப் பேண வேண்டும் என்பது கூடத் தெரியாமல் இருத்தல், சிறிதளவு உண்டும் உடல் நிறைதானாகக் கூடியிருக்கிறது என்று கூறித் திருப்தி அடைந்து கொள்ளும் நிலையில் இருத்தல்.
04. இரசாயனப் பதார்த்தங்களும் சீனியும் சேர்க்கப்பட்டு போத்தல்களில் அடைத்து விற்பனையாகும் பானங்களை அதிகம் அருந்துதல், தாகம் எடுக்கும் பொழுது சோடா குடித்தல், தேநீருக்கு சீனி சேர்த்தல்.
05. மக்களிடையே ஆரோக்கியம் பேணுவது சம்பந்தமான அறிவும் விழிப்புணர்வும் போதாமலிருத்தல், நோய்வாய்ப்பட்டவர்களுக்குத் தான் உணவுக் கட்டுப்பாடும் உடற்பயிற்சியும் எமக்கல்ல என்ற தப்பான அபிப்பிராயம் சிறு வயதில் எதனையும் உண்ண முடியும் என்ற தவறான சிந்தனை.
06. நீரிழிவு நோயை ஏற்படுத்த வல்ல சில சுகாதாரப் பிரச்சினைகளை ஆரம்ப நிலையில் கண்டறிந்து ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதில் ஆர்வம் அற்றவர்களாக இருத்தல்.

இந்த அடிப்படைப் பிரச்சினைகள் சரியான முறையில் அணுகப்படுமாயின் நீரிழிவு நோய் ஏற்படுவதைத் தடுக்கும் முயற்சி முன்னேற்றம் காணும்.

நீரிழிவு நோய்த் தடுப்பு என்னும் பெரிய முயற்சியை மருத்துவத்துறை சார்ந்தவர்களினால் மட்டும் முன்னெடுத்துச் செல்ல முடியாது. இதற்கு அனைத்து தரப்பினரதும் தொடர்ச்சியான முயற்சியும் பங்களிப்பும் தேவைப்படுகிறது. பாடசாலை மாணவர்களுடன் ஆசிரியர்களும் இதில் பெரும் பங்காற்ற வேண்டிய தேவை இருக்கிறது. ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் உணவு முறை சம்பந்தமாக பாடசாலை மட்டத்திலும் சமூக மட்டத்திலும் கருத்தரங்குகளையும் விழிப்புணர்வுகளையும் ஏற்பாடு செய்தல்.

பாடசாலைகளிலும் அலுவலக சிற்றுண்டிச்சாலைகளிலும் ஆரோக்கியமற்ற உணவுப் பாவனை மற்றும் சீனி அதிகம் சேர்க்கப்பட்ட மென்பானங்களின் பாவனையை நிறுத்த நடவடிக்கை எடுத்தல்.

தேநீருக்கு சீனி பாவிப்பதை நிறுத்தி தேவை ஏற்படின் இனிப்பூட்டிகளைப் பாவிக்கும் நடைமுறைகளை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

உடற்பயிற்சி செய்வதை அனைத்துத் தரப்பினர்களுக்குமான கட்டாய நடவடிக்கையாக அறிமுகம் செய்ய வேண்டும். வயது வேறுபாடின்றி அனைத்துத் தரப்பினரையும் உடற்பயிற்சி செய்ய ஊக்கப்படுத்த வேண்டும்.

பெற்றோர்கள் ஒவ்வொருவரும் தமது பிள்ளைகள் தினந்தோறும் ஓடிவிளையாடுகிறார்களா? அல்லது உடற்பயிற்சி செய்கிறார்களா? என்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

ஊடகத்துறையானது நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கும் சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கும் கூடிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சுகாதாரத்துறை சார்ந்தவர்களும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கு இன்னும் கூடிய முக்கியத்துவம் கொடுப்பதுடன் மற்றவர்களுக்கும் முன்னுதாரணமாக வாழ முயற்சிக்க வேண்டும்.

முப்பது வயது கடந்த அனைவரும் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை தமது குருதிக் குளுக்கோசின் அளவை சோதித்துப் பார்த்துக் கொள்வது நல்லது.

காலை தேநீருக்கு முன் குருதிக் குளுக்கோசின் அளவு 11 mg இலும் அதிகமாக இருந்தால் வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்வது அவசியம். குருதிக் குளுக்கோசின் தளம்பல் நிலை ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டால் நீரிழிவு ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

குறைந்த நிறையுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு எதிர்காலத்தில் நீரிழிவு நோய் ஏற்படும் சாத்தியக்கூறுகள் அதிகமாகும். எனவே கர்ப்ப காலத்தில் தாய்மார் தமது உணவு முறையில் கவனம் செலுத்த வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் அவர்களது பிள்ளைகளுக்கு நீரிழிவு நோய் ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

பரிசுப் பொருள்களைத் தெரிவு செய்யும் போது இனிப்பு வகைகளைத் தெரிவு செய்வதை முற்றாக தவிர்க்க வேண்டும்.

வீட்டுக்கு வருபவர்களுக்கு சோடா மற்றும் இரசாயன மென்பானங்கள் கொடுப்பதை நிறுத்த வேண்டும். இலகுவில் செய்யக்கூடிய சுவையான மலிவான ஆரோக்கியமான புதிய உணவு வகைகளும் பானங்களும் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.

இந்த முயற்சியில் சமையல் கலை வல்லுநர்கள் ஈடுபடுவது அவசியம் இதன் மூலம் ஆரோக்கியமற்ற உணவுப் பாவனைகளைப் பெருமளவு குறைக்க முடியும்.

தற்போது பலர் நீரிழிவு அல்லது மாரடைப்பு நோய்களுக்கு முற்பட்ட நிலைகளிலேயே இனங்காணப்படுகின்றனர். இந்தநிலையை "மெற்றாபோளிக் சிண்ட்றோம்" என்று கூறுவார்கள். இவர்கள் தொடர்ச்சியான தேக ஆரோக்கிய நடவடிக்கைகளில் ஈடுபடாது விட்டால் எதிர்காலத்தில் இவர்களுக்கும் இந்த நோய்கள் ஏற்பட முடியும்.

இந்த நிலையில் உள்ள சிலருக்கு நோய்த்தடுப்புக்காக சில மாத்திரைகளும் கொடுக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அத்துடன் அதிகரித்த நிறை உள்ளவர்கள் "அக்கந்தோசிஸ்ணை கிறிக் கன்ஸ்" எனப்படும் கறுப்பு நிறத்தோல் மடிப்பு உள்ளவர்கள் வேறு சில நோய் நிலைகள் உள்ளவர்கள் போன்றோருக்கு நீரிழிவு நோய் ஏற்படும் சாத்தியக்கூறுகள் அதிகமாகும்.

இவர்கள் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது. நாம் அனைவரும் ஆரம்பத்திலிருந்தே உடல் ஆரோக்கிய நடவடிக்கைகளைக் கடைப்பிடித்து நோய்த்தடுப்பு நடவடிக்கைகளிலும் ஊக்கத்துடனும் ஈடுபட்டு வருவோமாயிருந்தால் நீரிழிவு நோயை மட்டுமல்ல இன்னும் பல தொற்றா நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தை பெருமளவு குறைத்துக் கொள்ள முடியும்.

மாரடைப்பு, பக்கவாதம், சிறுநீரக பாதிப்பு, பார்வை இழப்பு போன்ற நோய்கள் வருவதற்குக் காரணமான நீரிழிவு நோய் உள்ளதா என்பதை அருகே உள்ள அரச வைத்தியசாலைகளில் இலவசமாக பரிசோதித்து அறிந்து கொள்ளுங்கள்.

யாழ். போதனா வைத்திய சாலை

---

மருத்துவர் எம்.அரவிந்தன்

கேள்வி : எனது வயது 20 ஆகும். எனது முகப் பகுதியில் சில வருடங்களாக ஆண்களைப் போன்று உரோம வளர்ச்சி காணப்படுகின்றது. எனது உடல் நிறையும் சிறிது சிறிதாக அதிகரித்து வருகின்றது. 2 3 மாதங்களுக்கு ஒரு முறையே மாதசுகவீனமும் ஏற்படுகின்றது. இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதற்கு ஏதாவது ஹோர்மோன் குறைபாடுகள் காரணமாக இருக்குமா என விளக்கிக் கூறமுடியுமா.

பதில்: உங்களைப் போன்ற பல பெண்களுக்கு இவ்வாறான பிரச்சினை இருக்கின்றது. உங்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளைப் பார்க்கும் போது உங்களின் சூலகங்களில் சிறு சிறு நீர்க்கட்டிகள் ஏற்படுகின்றன. நோய் (polycysticovariansyndrome) இருப்பதற்கான சாத்தியக் கூறு இருக்கிறது.

இவ்வாறான நோய் உள்ளவர்களுக்கு அவர்களின் உடல் நிறை அதிகரிப்பதோடு மாதவிடாய்ச் சக்கரத்திலும் மாற்றம் ஏற்படுகிறது. இவர்களுக்குப் பருக்கள் (acne) ஏற்படுவது அதிகரிப்பதோடு உரோம வளர்ச்சியும் குறிப்பாக முகத்தில் அதிகமாக ஏற்படுகின்றது.

இந்நோயுள்ளவர்களில் பெண்களுக்கான ஹோர்மோன்களில் மாற்றம் ஏற்பட்டு (Testosterme) எனப்படுகின்ற ஆண்களுக்குரிய ஹோர்மோனானது அதிகளவில் சுரக்கப்படுவதனாலேயே இவ்வாறான நிலை ஏற்படுகின்றது.

ஆரோக்கியமற்ற உணவுப்பழக்க வழக்கங்களும் அப்பியாசமற்ற தேக உழைப்பற்ற வாழ்க்கை முறையும் (sedentary life style) இவ்வாறான நோய் ஏற்படுவதற்கு ஒரு காரணமாகும்.

நீங்கள் குறிப்பிட்டதைப் போன்று அதிகளவு உரோம வளர்ச்சி ஏற்படுவதற்கு வேறு சில காரணங்களும் இருக்கின்றன. சூலகங்களில் அல்லது அதிரினல் சுரப்பியில் ஏற்படுகின்ற கட்டிகளும் காரணமாக இருக்கலாம். இதேபோல வேறு சில நோய்களும் இதற்குக் காரணமாக அமைந்து விடுகின்றது.

எனவே நீங்கள் வைத்திய ஆலோசனைப்படி தேவையான குருதி மற்றும் ஸ்கான் பரிசோதனைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

குருதி, ஹோர்மோன் மற்றும் ஸ்கான் பரிசோதனைகளின்படி உங்கள் நோயைக் கண்டறிந்து கொள்ள முடியும்.

உடற் பருமனைக் குறைத்துக் கொள்வதே மிகவும் பிரதானமான சிகிச்சை முறையாகும். உங்களால் முடிந்தவரை ஆரோக்கியமான உணவுகளையே உட்கொள்ள வேண்டும். சீனி சேர்க்கப்பட்ட உணவுகளையும் பானங்களையும் தவிர்க்க வேண்டும். அதிகளவு மாச் சத்துள்ள கொழுப்புள்ள உணவுகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். நாளொன்றுக்கு ஆகக் குறைந்தது 30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வது மிகவும் அவசியமாகும்.

உங்கள் முகத்தில் அதிகளவு முடி வளர்வதற்கும் இவ்வாறான ஹோர்மோன் மாற்றங்களே காரணமாகும். உடல் நிறையைக் குறைக்கும்போது இவ்வாறான உரோம வளர்ச்சியும் சிறிது சிறிதாகக் குறைவடையும். இவ்வாறான உரோம வளர்ச்சியைக் குறைப்பதற்கும் பலவிதமான மருந்துகள் உள்ளன. இவற்றை வைத்தியரின் ஆலோசனைப்படி பெற்றுக் கொள்ள முடியும்.

உங்கள் உடல் நிறையைக் குறைத்துக் கொள்வதன் மூலம் உங்களின் மாதவிடாய்ச் சக்கரத்தையும் ஒழுங்காக்கிக் கொள்ள முடியும். உங்களின் உடல் நிறையைக் குறைத்து சூலகங்களிலிருந்து முட்டை வெளிவருவதை தூண்டுவதற்கு மெற்போமின் என்ற மருந்தை வைத்தியர்கள் பரிந்துரை செய்வது வழக்கமாகும்.

இதே போல மாதவிடாய்ச் சக்கரத்தை ஒழுங்காக்குவதற்கும் ஹோர்மோன் குளிசைகளை வைத்திய ஆலோசனைப்படி பயன்படுத்த வேண்டியிருக்கும்.

இவ்வாறு உடற்பருமன் தொடர்ந்து அதிகரித்துச் செல்லும்போது நீரிழிவு உயர்குருதி அமுக்கம் அதிகளவு கொலஸ்திரோல் உடலில் சேருதல் போன்ற பிரச்சினைகளும் ஏற்பட வாய்ப்புள்ளது.

சூலகத்தில் நீர்க்கட்டிகள் உள்ள நோயுள்ளவர்களுக்கு திருமணத்தின் பின்னர் கர்ப்பம் தரிப்பதிலும் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே நீங்கள் வைத்திய ஆலோசனைப்படி தேவையான பரிசோதனைகளை மேற்கொண்டு சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வது மிகமிக அவசியமாகும்.

நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி (ஹோர்மோன்),
விசேட வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன்
05.03.2017



**■ கா.கணேசதாசன்**

சமூகம் ஒரு தலைவியை இணங்கண்டுள்ளது. அவள் தன்னைச் சுற்றிப் படர்ந்துவிட்ட நெருக்குதல்களால் உருவாக்கப்பட்டவள். அடக்குமுறைக்கெதிராகக் கிளர்ந்தெழுவதற்கு ஆண், பெண் என்ற பேதம் எதற்கு...? பிலக்குடியிருப்பு மக்களின் காணிகளை விடுவிப்பதற்கு அறவழிப் போராட்டத்தில் களமிறங்கி வெற்றிகண்ட கௌசி இதற்கு விடைதருகின்றாள். சாதாரண குடும்பப் பெண்ணாக இதுவரையிருந்த அவளை ஒரு சமூகத்தின் தலைவியாகக் கிளர்ந்தெழச் செய்திருக்கின்றது இந்தப் போராட்டம். அந்த மக்களும் அவளைக் கொண்டாடுகின்றனர். இப்போது அவள் மக்களின் தலைவி...!

# பெண் வரிந்த போர்

## பிலக்குடியிருப்புப் போராட்டக்காரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண் வரிந்த போர்

## பிலக்குடியிருப்புப் போராட்டக்காரி

> இன்று அவர்களுக்குக் கிடைத்திருக்கும் வெற்றி, அந்தப் போராட்டத்துக்கு அத்திபாரமிட்ட, அந்தப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்த, அதை முன் னின்று நடத்தியிருந்த அந்தப் பெண் ஒருத்தியின் சிறந்த ஆளுமைக்குக் கிடைத்திருக்கும் வெற்றி என்றே என்னால் உணர முடிகின்றது.

அந்தப் போராட்டக்களத்துக்கு அடிக்கடி சென்று வருவது எனது வழக்கம். இரவு, பகலாக அவர்கள் போராடினாலும் துவண்டு விடாமல் தொடர்ந்த அந்தப் போராட்டத்துக்கு ஒரு வழியாக வெற்றிகிடைக்கும் அறிகுறிகள் இன்று தென்படுகின்றன. ஆம் ஒருமாத காலமாகஇந்தமக்கள்முன்னெடுத்திருந்த அறவழிப் போராட்டம் வெற்றியுடன் முடிவுக்கு வரப்போகின்றது. இதை அறிந்ததும் இன்று எனது மோட்டார் சைக்கிளுக்குப் புதிய உத்வேகத்தை அளித்து அந்தப்போராட்டக்களத்தை நோக்கி விரைகின்றேன். நான் எவ்வளவு வேகமாக இங்கு வந்து சேர்ந்தாலும், நான் வருவதற்கு முன்னரே இங்கு வான் படையினருக்கும் அரச அதிகாரிகளுக்குமிடையில் கலந்துரையாடல்கள் சில நடந்து முடிந்துவிட்டன. இப்போது மக்களின் காணிகளை வான்படை விடுவிக்கப் போகின்றது...! வான்படையினர் தாம் அமைத்திருந்த வாயில்கதவுகளைத் திறந்து காணிக்காரர்களை தமது காணிகளுக்குச் செல்ல அனுமதித்துவிட்டார்கள்...! பெருமூச்சு விட்ட வாறும் குதூகலித்தவாறும்ஆனந்தக்கண்ணீருடனும்தமது காணிகளையும் வீடுகளையும் தென்னைகளையும் தாம் விட்டுச் சென்ற தடயங்களையும் தாம் தவழ்ந்து திரிந்த மண்ணையும் காண்பதற்கு நீண்ட காலங்களின்பின், தமதுநீண்டபோராட்டத்தின்பின்மிகுந்தஆவலுடன் காணிகளுக்குள் ஓடுகின்றனர் அந்த மக்கள்...!

**போராட்டக்காரி கௌசி**

தமது காணிக்குள் இனி வாழப்போகும் மகிழ்ச்சிக்கு மத்தியில் இந்தக் காணிமீட்புப் போராட்டத்தை முன்னின்று நடத்திய அந்தப் பெண்ணையும் தமது தோள்களில் ஏந்தியவர்களாய்த் தமது வெற்றியைக் கொண்டாடியபடி அந்த மக்கள் தமது காணிகளை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றார்கள்...!

ஆம் இன்று அவர்களுக்குக் கிடைத்திருக்கும் வெற்றி, அந்தப் போராட்டத்துக்குஅத்திபாரமிட்ட, அந்தப்போராட்டத்தைஆரம்பித்துவைத்த, அதைமுன்னின்றுநடத்தியிருந்தஅந்தப்பெண் ஒருத்தியின் சிறந்த ஆளுமைக்குக் கிடைத்திருக்கும் வெற்றி என்றே என்னால் உணர முடிகின்றது.

"இவங்கள்எங்களைத்தொடர்ந்துஏமாத்துறாங்கள். இப்பிடியே நாங்கள் வந்துபோய்க் கொண்டிருந்தால் எதுவும் நடக்காது. என்ர காணிக்க என்னை விடும் வரைக்கும் நான் இதிலயே இருக்கப்போறன். விரும்பமானஆட்கள்என்னோடஇருங்கோ" கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதி பிற்பகல் 2மணியளவில் மனத்திடம் நிறைந்த அந்தப் பெண் கௌசி எடுத்த முடிவே இன்று பிலக்குடியிருப்பு மக்களுக்குத் தமது காணிகளைமீட்டுக்கொடுத்திருக்கின்றது. அந்தப்பெண்ணின் ஆளுமையே பிலக்குடி யிருப்பு மக்களின் காணி மீட்புப் போராட்டம் வெற்றியீட்டுவதற்கு முதன்மையானதும்கூட.

**அவளது ஆளுமையின் பின்னணி**

இந்தக் காணிவிடுவிப்பு தொடர் அறவழிப் போராட்டம்வெற்றிபெறக்கௌசியே காரணம். அவளின் திடமான முடிவே இதற்கு அடிப்படையானது. தமீழீழவிடுதலைப்புலிகளின் கொள்கைமுன்னெடுப்புப்பிரிவுபொதுமக்களிடம் அரசியல்விழிப்புணர்வுகளைஏற்படுத்துவதற்காகக் கலைஞர்களை ஒன்று திரட்டி தெருவழி நாடகங்களைப் பல இடங்களில் நிகழ்த்துவார்கள். அந்த நாடகக்குழுவின் ஒரு சிறந்த நடிகையே இந்தப் பெண். விடுதலைப்புலிகளின் தலைமையால் கௌரவிக்கப்படுமளவுக்கு அதில் திறமை கொண்டவள். அவளை வரிந்துகொண்ட அந்த அடித்தளமே இவ்வாறு ஒருபெண்ணை திடமான மனுசியாக்கியிருக்கின்றது.

கடந்த ஒன்பது வருடங்களாகப் பிலக்குடியிருப்பு மக்களுடையகாணிகளைவான்படைசுவீகரித்து வைத்திருந்தது. அவற்றை விடுவிக்கக் கோரி வான்படையினர் தொடங்கி அரச தலைவர், பொறுப்பானஅரசஅதிகாரிகள்வரைக்கும்தொடர் மனுக்களை இந்த மக்கள் கொடுத்திருந்தார்கள். அதன் பிரதிபலிப்பாக அவற்றை விடுவிப்பதாகக் கூறி மக்கள் அங்கு பல தடைவைகள் அழைக்கப்பட்டும் காணி விடுவிக்கப்படாமல் ஏமாற்றப்பட்டனர். அவ்வாறேஒருதடவைகாணிவிடுவிப்பதாக அழைக்கப்பட, கடந்த ஜனவரி 31ஆம் திகதியும் அவர்கள்அங்குசென்றனர். அன்றும்காணிகளை விடுவிக்க வருவதாகக் கூறியிருந்த வனவளத்தினைக்கள அதிகாரிகளோ, பிரதேசசெயலக உத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகத்தர்ளோ, கிராம சேவையாளர்களோ வரவில்லை. ஏமாற்றம்தான் மிஞ்சியது. அப்போது கௌசி எடுத்த முடிவே இந்த அறவழிப் போராட்டம்.

"நான் தொடர்ந்தும் ஏமாற்றப்படுவதை உணர்ந்தேன் எம்மை இங்கு வரும்படி தெரிவித்த உத்தியோகத்தர்கள் யாராவது வந்து எங்கள் காணிகளை விடுவிப்பதாக எழுத்து மூலம் உறுதியளித்தால் தான் இங்கிருந்து செல்வேன் எனக்கூறி அண்டைக்குப் போரட்டத்தில் அமர்ந்தேன். அப்போது மக்களில் சிலர் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலரைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு இது பற்றிக்கேட்க, உங்களது காணிகளை அளவீடு செய்து உங்களிடம் தருவது பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்கிறார். அந்தச்சமயத்தில் கிராம சேவையாளர் நேரில் வந்து உங்களை இன்று வரும்படி என் ஊடாகத்தான் அறிவித்தார்கள், இன்றைய தினம் நீங்கள் சென்று பிறிதொரு நாள் வாருங்கள் எனச்சொன்னார். இவங்கள் எங்களைத் தொடர்ந்து ஏமாத்துறாங்கள். இப்பிடியே நாங்கள் வந்துபோய்க்கொண்டிருந்தால் எதுவும் நடக்காது, என்ர காணிக்க என்னை விடும் வரைக்கும் நான் இதிலயே இருக்கப்போறன். விரும்பமான ஆட்கள் என்னோட இருங்கோ எண்டு நான் சென்னதும் கிராம சேவையாளர் வந்தவழி திரும்பிச் சென்று விட்டார்" என்று தான் ஆரம்பித்து வைத்து இன்று வெற்றி பெற்ற போராட்டத்தின் ஆரம்பத்தை ஆனந்தக் கண்ணீருடன் பகிர்ந்து கொள்கின்றாள் அந்தப் பெண்.



'என்ர காணிக்க என்னை விடும் வரைக்கும் நான் இதிலயே இருக்கப் போறன். விருப்பமான ஆட்கள் என்னோட இருங்கோ' எண்டு நான் சொன்னதும் கிராம சேவையாளர் வந்த வழி திரும்பிச்சென்று விட்டார்'

### ஒற்றுமையாக அவளுடன் களமிறங்கினர் மக்கள்

"என்ர காணியைவிடும்வரைக்கும் இங்கே தான் இருக்கப் போறன் என்றேன். மாலை நேரம் ஆகிவிட்டது. அப்போதுதான் இதுவரைப் பதுங்கியிருந்த வனவள அதிகாரிகள் இங்கு வந்தனர். அவர்களுடனான நீண்ட வாக்குவாதத்துக்குப் பிறகு காணியை விடுவிப்பதாக எழுத்து மூலம் உறுதி தாருங்கள் எனக் கேட்டபோது தரமுடியாது எனக் கையைவிரித்தனர். பின்னர் அவர்களும் சொன்றுவிட்டார்கள். பிறகு வந்த கேப்பாபிலவு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர், தங்கச்சி இப்ப என்ன செய்யப்போறியள்...? எனக் கேட்டார். எங்கட காணியை விடும் வரைக்கும் நாங்கள் இதிலயே இருக்கப் போகின்றோம் எண்டு ஏனைய மக்களும் என்னுடன் ஒற்றுமையாக ஒன்றுகூடினர். பிறகு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரால் எங்களுக்குக் தகரக் கொட்டகை அமைத்துத் தரப்பட்டதும் போராட்டம் தொடர்ந்தது" என்று வெற்றிபெற்றுவிட்ட இன்றைய போராட்டம் கருக்கொண்டு உருக்கொண்ட வரலாற்றைவிளக்குகிறார்.

### சவால்களுக்கு மத்தியிலும் அறவழி

"எங்களுடைய காணிகளை எல்லாம் விடுவித்துவிட்டார்கள். நினைக்கும்போது ஆச்சரியமாக உள்ளது. நாங்கள் மேற்கொண்ட ஒருமாத கால அறவழிப்போராட்டத்தில் நாங்கள் எதிர்கொண்ட சவால்கள் ஏராளமானவை. பெண்களைத்தலைமைத்துவங்களாகக் கொண்ட குடும்பங்களே அதிகமாக இங்கு இருக்கின்றன. அத்துடன் அன்றாடம் தொழிலுக்குச்சென்றால்தான் வீட்டில் உணவு என்ற நிலையிலேயே ஏனைய ஆண் தலைமைத்துவக்குடும்பங்களும் காணப்படுகின்றன. அரச புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்கள், இராணுவத்தினர் ஒளிப்படம் எடுப்பதும் அவர்கள் ஏற்படுத்திய அசௌகரியங்கள் போன்றனவும் எமக்கு அச்சுறுத்தலாகவே அமைந்திருந்தன. ஆனாலும் எங்கள் கண்களுக்கு முன்னால் இவை எல்லாவற்றையும்விட எங்களுடைய காணிகளே பெரிதாகத் தெரிந்தன.

போராட்டம் தொடங்கிய நாளில் இருந்து பல்வேறு அமைப்புக்கள் சார்ந்தவர்கள், அரசியல் பிரமுகர்கள், அதிகாரிகள் என அங்கு படையெடுத்த அனைவருக்கும் ஒருபெண்ணாக நின்று தனது போராட்டத்தின் உறுதியை வெளிப்படுத்திய கௌசி, தான் எதிர்கொண்ட சவால்களைத் துச்சமாக நினைத்திருந்தாள் என்றும் தெரிகின்றது.

அவள் அன்று இராணுவ முகாமுக்கு முன்னால் காணிகள் விடும்வரைக்கும் போராடுவோம் என எடுத்த முடிவே இது என்றும் தோன்றுகின்றது.

"கூலித் தொழிலையே நம்பி வாழும் நாங்கள் இந்த அறவழிப்போராட்டதை ஆரம்பித்த போதும் சரி அதற்கு பின்னரும் எமக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த நாட்டின் சகல மக்களுக்கும் என்றென்றும் நன்றிக்கடன் உடையவர்களாக இருப்போம்" என்று நன்றி சொல்லவும் அந்தப் பெண் மறந்து விடவில்லை. ஒரு பெண்ணால் வெற்றிகண்ட இந்த ஒருமாதகால அறவழிப்போர் ஏனைய பெண்களுக்கும் பெண்ணியம் பற்றிப் பேசிப் பெண்களைப் பெண்மை என்ற அளவுகோலுக்குள்ளயே அடக்கிக் கொள்ளும் பெண்ணியலாளர்களுக்கும் சிறந்த ஒரு எடுத்துக்காட்டே.








# அமெரிக்கா: போராட்டக் கொண்டாட்டம்

டொனால்ட் ட்ரம்ப்புக்கு எதிரான ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் அமெரிக்காவில் களைகட்டிவிட்டன. அமெரிக்காவில் குடியேறுவதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதை எதிர்த்து, விமான நிலையங்களிலும் பிற இடங்களிலும் எதிர்ப்பாளர்கள் குவிந்தனர். கடைகளை மூடியும் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். வேலைநிறுத்தங்களும் நடந்தன. பெண் எதிர்ப்பாளர்களால் மார்ச் 8இல் இன்னொரு பொது வேலை நிறுத்தத்துக்கும் திட்டமிடப்பட்டிருக்கின்றது. அமெரிக்காவில் இப்போது போராட்டங்கள் இல்லாத நாள் இல்லை என்று சொல்லும் நிலை உருவாகியிருக்கின்றது. ஒரு புறமாக முஸ்லிம்களுக்கு ஆதரவாகப் பலர் ஊர்வலமும் சென்றனர். அதற்குப் பிறகு 'இவர் என்னுடைய அதிபர் அல்ல' என்று அறிவிக்கப்பட்ட கிளர்ச்சி நாள் ஒன்று பல்வேறு நகரங்களில் ஒரே சமயத்தில் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனாலும் எல்லாப் போராட்டங்களிலுமே பொதுவாக ஒரு கொண்டாட்ட மனநிலை வெளிப்பட்டது.

### மகிழ்ச்சியோ...மகிழ்ச்சி

வழக்கமான போராட்டங்களில் தென்படும் பதற்றம், கோபம் போன்ற உணர்வுகள் அங்கே இல்லை. மாறாக, மகிழ்ச்சியும் கொண்டாட்டமுமே மக்கள் மத்தியில் வெளிப்படுகின்றன. மக்கள் வீடுகளிலிருந்து வளர்ப்பு நாய்களையும் தங்களுடைய சிறு வயதுக் குழந்தைகளையும் உடன் வைத்துப் போராடுகின்றனர். அங்கே அவர்கள் ஏந்துகின்ற பதாகைகளும் வாசகங்களும் அறிவார்த்தமாகவும் நகைச்சுவையாகவும் நாசூக்காகவும் கண்ணியமாகவும் இருக்கின்றன. ஊர்வலம் செல்கையில் போராட்டக்காரர்களை ஊக்குவிக்கும் வகையில் பாண்ட் வாத்தியங்கள் இசைக்கப்பட்டன. எல்லோருமே சிரித்துக் கொண்டும் கேலி செய்து கொண்டும் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

ஒருவர் பத்தடி உயரத்துக்குத் தைக்கப்பட்ட இரண்டு வர்ணங்கொண்ட ஆடையை அணிந்து அனைவரையும் சிரிக்க வைத்தார். அவர் வைத்திருந்த பொம்மையின் முகம் ட்ரம்பைப் போலவே இருந்தது. அது அடிக்கடி அவரைப் போலவே கிறீச்சிட்டுக் கத்தி அனைவரையும் சிரிப்பில் ஆழ்த்தியது. 'இன்று எங்களுக்குப் பிறந்த நாள், ஆனால் அதைவிட இது முக்கியம் என்று வந்திருக்கின்றோம்' என்று இருவர், அனைவரும் அறியும் வகையில் ஆடையில் எழுதியிருந்தனர்.

### இது தொடருமா?

ட்ரம்ப் எதிர்ப்பாளர்களின் வேகம், எண்ணிக்கை ஆகியவற்றைப் பார்க்கும்போது சமீபத்திய சில நிகழ்வுகள் இது குறையாது என்றே உணர்த்துகின்றன. பிரபலங்கள் பலர் ஆதரவு தெரிவிக்கின்றனர். காவல் துறையினரின் வன்செயல்களுக்குப் பிறகு, கிளர்ச்சிக்காரர்களுக்கான ஆதரவு மேலும் பெருகுகின்றது. எப்போது நிலமை என்னவாகும் என்பது கேள்விக்குறியே. இவை எந்த ஓர் அரசியல் கட்சியும் நேர் நின்றுநடத்தும் போராட்டங்கள் இல்லை. எதிர்ப்பாளர்கள் மாத்திரம்தான் களத்தில் நிற்கின்றனர். அவர்கள் நீண்ட நாள் நண்பர்களைப் போல ஒருவருக்கொருவர் அன்பும் காட்டுகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேம்புகிறேன்.....!

கண்டனன் புலவே....
சேனைப்புலவு கண்டு...
பல வென்று நிமிர்வு
கொண்டது நினைவே......
இன்றுமாய் நிலமாண்டவன்
பரம்பரை வந்த
குஞ்சுகள் பாடும் கனவே....
நிலம் மீண்டிட தாய் மடி தவண்டு
தேம்பி தாய் முலை பாலாய்
சுரந்திடும் மண் புரண்டு பாலகனாய்...
உரிமை பருகிடும் பாலகராய்ப்
பேசிடும் சங்கதிகள் பலவே.....
நீங்கள் பூசி மகிழ்ந்திட வேண்டும்
வெந்தணல் தணிந்த
நித்திய சுதந்திரச் சந்தனச்
சுவாசம் விரைவே.......!

எழுந்திரடா.....
மண் புரண்டு குதூகலித்திரடா....
தமிழ் தாயவளின் தூய
கலைத் தாகம் உரைத்திடடா....
எதிர்காலச் சக்கரத்தின் துணிவான....
தனித்துவச் செறிவான
சக்கர வியூகமடா....
நீயோ விடியலின் நற்கருமம்
புனைந்திடும்
வலிய வீரத் திருமகனடா.....
நானோ உன் தடம் பற்றி நடந்திட
பணிந்திடும் அன்பின்
தனிமரமாய்
உன் கரம் பற்றும் சேயடா......
உணர்வுகொண்டு
தாலாட்டுகிறேன்...
உனைச் சீராட்டுகிறேன்....
என் தோளோடு
சாய்ந்து தூங்கடா....
மழலையாய் எனைத் தேற்றடா.....
மன உறுதியை
என்னுள்ளும்
கொஞ்சமாய் ஊற்றடா.......!
போற்றுகிறேன்...
என்பாட்டில் வார்த்தை
கொண்டு தேம்புகிறேன்........!!

தமிழ் நம்பி





## சிரிங்க...


**மனைவி:** இந்த வாரம் முழுவதும் படம் பார்த்தோம்.. அடுத்த வாரம் முழுவதும் ஸொப்பிங் (shopping) போவோமுங்க..

**கணவன்:** சரி. அதுக்கு அடுத்த வாரம் முழுவதும் கோவிலுக்கு போவோம்..

**மனைவி:** எதுக்குங்க..

**கணவன்:** பிச்சை எடுக்கத் தான்..

# அது பழசுகள் சமாச்சாரம்...!



ஜெ. றியா

**2001** களுடன், அதற்கு முன்னர் இரண்டு தசாப்த காலங்களாகத்தடைப்பட்டிருந்த யாழ்ப்பாணத்துக்கான தரைவழிப்பாதைதிறக்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பாகங்களுடன் மட்டுமன்றி உலகநாடுகளிடமிருந்தும் தனித்துநின்றயாழ்ப்பாணத்துக்குள் தற்போது பிரவேசிக்க ஆரம்பிக்கின்றன இயந்திர, தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் அந்நியக் கலாசாரங்கள் சிலவும். இந்த நிலையில்பெருமளவில்யாழ்ப்பாணமக்களின் வெளியுலகத் தொடர்புகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டியதேவைதொலைத்தொடர்பு சாதனங்களுக்குக்கிடைக்கின்றது. அது இங்கிருந்து புலம்பெயர்ந்துள்ள சக உறவுகளுடனான தொடர்புகளைத் தக்கவைத்துக்கொள்ளவும் பணப்பரிவர்த்தனைகளை நிகழ்த்தி மக்களின் பொருளாதாரத்தைக்கொண்டுசெல்லவும்முயல்கின்றது. சமபொழுதில், ஏனைய சில அத்தியாவசியத்தேவைகளுக்கும் அது உபயோகப்படுவதால், மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கைப் பெறுகின்றது. அத்துடன் சற்றே வசதி படைத்தவர்கள் மத்தியில் பக்கவாட்டாகப் பொழுதுபோக்கையும் பூர்த்தி செய்ய ஆரம்பிக்கின்றது.

வயர் இணைப்புத் தொழில்நுட்பத்துடனான தொலைபேசிகள்வீடுகளுக்குள்நிலைகொள்கின்றன. அப்போது மக்கள் மத்தியில் இதற்கு அதிகரித்த கேள்வி இருப்பதை உணர்ந்த தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்கள் சிலவும் இங்கு படையெடுக்க ஆரம்பிக்கின்றன. அத்துடன் பெறுமதி மிக்க அரியவகைக் கைபேசிகள் சிலவும் இங்கு சந்தைக்கு வருகின்றன. குறித்த கைபேசிகளின் விலையில் சரி அரைவாசியைக் கொண்டனவாய் கைபேசிகளில் தொலைத்தொடர்பு வலையமைப்பைப் பேணும் 'சிம்' அட்டைகளும் பிரபல்யமாகின்றன. இப்போது யாழ்ப்பாண மக்களில், அதிகமானவர்களின் கைகளில் கைபேசிகள்...!

அவை கிட்டத்தட்ட 150 கிராம்கள் வரையிலான நிறைகொண்டவை. விரல்களால்அழுத்தும்விசைப் பலகையும் கொண்டவை. பத்திரமாக வைப்பதற்குப் பிரத்தியேகப் பாதுகாப்புப்பைகளும்(கவர்) அன்று அவற்றுக்கிருந்த மவுசுக்கு இணையாகச் சந்தைக்கு வந்தன. அநேகமாக 'நொக்கியா' என்றால் தான் அது கைபேசி என்று அன்று அனைவருடைய பொதுப் புத்திக்கும் புரிவதாயிருந்தது. அதில் 'தெர்ட்டித் திறி ரென்'(3310)என்ற ஒரு வகையே எம்மவர் பாவனைக்கு அதிக நாள்கள் நின்று பிடித்த பெருமைக்குமுரியது. 2000ஆம் ஆண்டளவில் அந்த நிறுவனமும் அதைச் சந்தைக்குத் தயார் செய்திருந்ததால் இங்கு அப்போதிருந்த அதற்கான கேள்வி அதற்கு நல்லவிற்பனைத்தளமாக அமைந்துகொண்டது. அதை வாங்கிப் பயன்படுத்துபவர்களின் பாவனை முறைகள், அதைப் பாதுகாக்கும் வழிகள், பயன்படுத்தும் பக்குவம் போன்றன அன்று அவற்றுக்கிருந்த மவுசைச் சுட்டி நின்றன. அவை சொல்லிலும் மாளாதவை கூட.

'ட்ரிங்...ட்ரிங்...ட்ரிங்......'

'ஹலோ சொல்லடி...?'

'எடியேய் கறி அடுப்பிலை. இன்னும் தேங்காய் திருவேல்லை. திருவலையைக் கொண்டுவாடி...'

இதுவரைக்கொடிகட்டிப்பறந்த இந்தக்கைபேசிகளுக்கிருந்த மவுசு பிற்காலங்களில் மேற்கூறியது போலச்சாதாரணமானவர்களின் அயல் வீட்டுத் தொடர்புகளுக்கும், எடுபிடி வேலைப்பொருளாகவும் மாறத் தொடங்கியது.

அதற்குப் பின்னர் எழுச்சி கண்ட, கைபேசிகளில் புதிய புதிய தொழில்நுட்பங்களின் புகுத்தல்களும் அதிகரித்த நிறுவனங்களின் தயாரிப்புக்களும் சந்தைப்படுத்தல்களும்விற்பனைகளும்மேற்கூறியவகைக்கைபேசிகளை மக்களுக்குச்சாதாரணமானதாக்கி அவற்றை ஓரங்கட்டிவிட்டன. இப்போது இளையோர்கள் முதியோர்கள் என அனைவரின் கைளிலும் தொடுகை உணர் திரை கொண்ட அதிதிறன்கைபேசிகள். இந்தநிலையில்தான் மீண்டும் களமிறங்குகின்றது அன்று அரியதானதாகப் பிரபல்யமடைந்திருந்த அந்தக் கைபேசி வகை. அதுவும் கிட்டத்தட்ட 17வருடங்களுக்குப் பின்னர். இப்போது, ஒருவேளை, எம்மவர்கள் கைகளில் ஒருவித நாகரிகமாக அது தவழ்ந்தாலன்றி, நிச்சயமாக அது பழசுகளுக்கேயுரியதுஎன்ற பெருமையைப் பெறத் தவறப்போவதில்லை.

அநேகமாக 'நொக்கியா' என்றால் தான் அது கைபேசி என்று அன்று அனைவருடைய பொதுப் புத்திக்கும் புரிவதாயிருந்தது. அதில் 'தெர்ட்டித் திறி ரென்'(3310)என்ற ஒரு வகையே எம்மவர் பாவனைக்கு அதிக நாள்கள் நின்று பிடித்த பெருமைக் குமுரியது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுகதை

# ஸ்ருடன்ஸ் விசா

ஜோ.ஜெஸ்ரின்

சாவித்திரியின் சிரிப்பைக் கடைக் கண்களால் பார்த்துக் கொண்டதும் ரவிநாத்துக்குள் மகிழ்ச்சி. அவள் மீண்டும் ஒருமுறை பார்க்க மாட்டாளாஎன்றிருந்ததுஅவனுக்கு. அந்த ஆலயத்தின் அன்னதான மண்டபத்தில் பலர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அங்கு தான் தன்னோடு கூடப்படித்த சாவித்திரியைக் கண்டான். ஆனால் கதைக்க முடியாமல் போய்விட்டது. சிரிப்புடன் அன்றைய நாள் நிறைவுற்றது.

மறுநாளும் அதே ஆலயம். தனது புதிய செருப்புக் களவு போய்விட்டது என்று புலம்பிக் கொண்டிருந்தான் ரவி. அன்னதானம் சாப்பிட்டால் புண்ணியம் என்பர். அத்தோடு செருப்புத் தொலைந்தால் தரித்திரம் தொலைந்ததாக சொல்வர். வெயிலில் கொதிக்கும் மணலில் வெறுங்காலுடன் நடக்க முடியாமல் நடந்தான். மரத்தடியில் ஒரு கச்சான் கடை. 'வாங்கோ தம்பி நல்ல கச்சான்' என்று ஆச்சி ஒருத்தி வரவேற்றாள்.

'ஆச்சி வெயில் சுடுகுது…'

'காலில செருப்புப் போடாமல் வெறுங்காலுடன் இந்த வெயிலையும் பொருட்படுத்தாது நீர் வாறதப் பாத்தாச்சந்தோசமாஇருக்கு. இப்பசனங்கள்கோயில் வெளி வீதியிலகூட செருப்புக்களோட திரியுதுகள்'

செருப்புத் தொலைந்த கதையை ஆச்சியிடம் எடுத்துவிடத் தயாராக இருக்க, இருபது ரூபாவை நீட்டிக்கொண்டு சாவித்திரி கச்சானுக்கு வந்தாள்.

'என்ன ரவி பதினைஞ்சு வயசில கண்டதுக்கு இப்பதான்காணுறன். பத்துவருசமாஎங்கபோனீர்?'

ரவிக்குத் தனது பள்ளிப் பருவம் நினைவுக்கு வந்தது. அத்தோடு 'ஸ்ருடன்ஸ் விசாவில' லண்டன் போய் படிக்காமல் உழைச்சுப் பொழுதைப் போக்கித் தின்று குடித்து லண்டன் சுகபோகங்களை அனுபவித்து குடியுரிமை கிடைக்காமல் மீண்டும் யாழ்ப்பாணம் வந்ததும் ஞாபகத்துக்கு…

'நான் சாவித்திரி… லண்டனில இருந்து வந்திருக்கிறன்'

சாவித்திரி மகிழ்ந்தாள். ரவியின் கைபேசி இலக்கத்தை வாங்கிக் கொண்டு விடை பெற்றாள்.

லண்டனில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த ரவியால் மீண்டும் லண்டனுக்குப் போகமுடியவில்லை. லண்டனுக்குத் தன்னோடு வந்த நண்பர்கள் யாவருக்கும் 'காட்' கிடைக்க ரவி மட்டும் விதிவிலக்கானான்.

இங்கு வந்து வீட்டில் மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வி கற்பித்து ஏதோ சம்பாதித்துக் கொண்டிருந்த ரவிக்கு அவனின் அத்தான் முட்டுக்கட்டை போட்டார். கச்சேரியில் வேலை செய்யும் அக்காவுக்கும் ஆசிரியராகக் கடமையாற்றும் அத்தானுக்கும் உயர் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கும் ரவியின் சுயதொழில் இடையூறாக இருந்ததால்தான் அந்தத் தடை. வேறு ரியூட்டறிகள் சென்றும் ரவிக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. அரச வேலை பார்க்கும் கனவிலும் பலன் கிடைக்கவில்லை. தனியார் நிறுவனங்களுக்கும் நேர்முகத் தேர்வுகளுக்குச் சென்றதில் காசுதான் கரைந்தது. வேலை தேடித் தேடிச் சலிப்படைந்து விட்டான்.

வெளிநாட்டால வந்தவுடன் ரவிக்குக் கிடைத்த மரியாதைகள் சில மாதங்களில் புஸ்வாணமாகி விட்டன. காசு இல்லை என்றால் யார் மதிப்பார்கள். கலியாணம் முடிக்கவும் ரவிக்கு பலன் சரியில்லையாம். ஜோசியர் சொல்லிவிட்டார்.

வேலையில்லாத் திண்டாட்டத்தில் கோயில்களில் அன்னதானம் கிடைப்பதுரவிக்குஆறுதலாகஇருந்தது. சில பெரும் தலைகள் மக்களிடம் கொள்ளையடிச்ச காசில புண்ணியம் தேட அன்னதானம் கொடுக்கினம். அதைப்போய்ச் சாப்பிடுவதா என்ற இறுமாப்பில் ரவி ஆரம்பத்தில் அன்னதானங்களை நிராகரித்தாலும் பின்னர் வயிற்றுப் பசி போக்க அதில் தன்னை இணைத்துக் கொண்டான்.

இப்போது மண்டபங்களில் நடைபெறும் விழாக்களுக்கு அழகாக வெளிக்கிட்டுப் போய் சாப்பிட்டு வருவதிலும் ரவி கில்லாடியாகி விட்டான்.

வாசிகசாலைக்குப் போவது அங்கே பத்திரிகைகளில் மரண அறிவித்தல்கள், அந்தியேட்டிச்செலவுகள்போன்றவீட்டுக்கிருத்திய அழைப்புக்களைப் பார்த்தும் சாப்பிடுவதில் காலத்தைக் கழித்ததால் வேலை கிடைக்காமலே போய்விட்டது.

லண்டனில் பல்லைக் கடித்துக் கொண்டுசிலநாள்கள்உழைத்திருந்தால் ரவி லட்சாதிபதி ஆகியிருப்பான். தன்னிடமிருந்த மோட்டார் வாகனத்தை விற்ற பணத்தை வேலை தருவதாக்கூறிய ஒருவரிடம் கொடுத்து ஏமாந்தது மேலும் விரக்தியடையச் செய்தது. சாவதற்கு முடிவு எடுத்தான். தூக்க மாத்திரைகள் பலவற்றைச் சேகரித்தவனின் மறுகையில் இப்போது செம்பு நிறையத் தண்ணீர்.

ரவிநாத்தின் கைபேசி ஒலித்தது. அதற்குப் பதிலளிக்காததால் பலமுறை திரும்பத் திரும்ப ஒலிக்கத் தொடங்கியது. புதிய இலக்கம். யாராயிருக்கும்?

சாகத் துணிந்தவனுக்கு கடைசிநேரத்தில் சாவித்திரி போன் பண்ணி யிருந்தாள்.

'நான் நல்லூர்க் கோயிலடியில நிற்கிறன். வரமுடியுமா?' 'சாகப் போகின்றேன். எப்படி வர முடியும்…'தனக்குள்நினைத்துக்கொண்டான் ரவி.

'அவசரமாக நான் உங்களைச் சந்திக்க வேண்டும். போனில் எல்லாம் கதைக்க முடியாது. நல்லூர் மணலிலிருந்து கதைப்போம். நான் தனியாகத்தான் வந்திருக்கின்றேன்'

தூக்க மாத்திரைகளை வைத்துவிட்டுதண்ணீரை மடக்கு மடக்கென்று குடித்து விட்டுப் புறப்பட்டான்.

'நான் உம்மிடம் ஒரு விடயம் சொல்ல வேணும்' காதலைச் சொல்வதுபோல நெளிந்தாள். அதைப் பார்த்ததும் ரவிக்குள் பல கனவுகள். சாவித்திரி தொடர்ந்தாள். 'நான் நாளைக்கு லண்டனுக்கு 'ஸ்ருடன்ஸ் விசா'வில படிக்கப் போறன். சகல ஏற்பாடுகளும் பூர்த்தி. இதுவரை நான் 'சாவித்திரி' எனும் புத்தகக் கடையை நடத்தி வந்தேன். அதை இனி உங்கட பொறுப்பிலதந்துவிட்டுப் போகப்போறன். நீங்கள்தான் நடத்தவேணும். உங்களுக்குச் சம்மதமா?'


ஒருவேளை சாவித்திரி காதலிப்பதாகச் சொல்லியிருந்தால் கூட ரவி இவ்வளவு சந்தோசப்பட்டிருக்க மாட்டான். அப்படி ஒரு சந்தோசம். ஒரு வேலை கிடைத்தது. நல்லூரானின் அருள் என்றே அகமகிழ்ந்தான்.

யாழ். நகரின் பிரபலமான புத்தகக் கடை அது. ரவிக்கு நம்பமுடியவில்லை. இது உண்மை தானா…? மறுநாள் ரவி அந்தப் புத்தகக் கடையின் துணை முதலாளியாக நின்றான்.

> 'நான் நல்லூர்க்: கோயிலடியில நிற்கிறன். வரமுடியுமா?' 'சாகப் போகின்றேன். எப்படி வர்முடியும்…' தனக்குள் நினைத்துக் கொண்டான் ரவி. 'அவசரமாக நான் உங்களைச் சந்திக்க வேண்டும். போனில் எல்லாம் கதைக்க முடியாது. நல்லூர் மணலிலிருந்து கதைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா



# எமன்

## அரசியல் சகுனிகள்

விஜய்அன்ரனியின் வழக்கமான பாத்திர இயல்பு. அமைதியரன தோற்றமும், சந்தர்ப்பம் ஏற்படும் போது வெகுண்டெழும் வீரமும் கொண்ட பாத்திரங்களில் நடித்துவருவதைத் தொடர்ந்துஅதேபாணியில்அவர்நடித்திருக்கும் அரசியல்படம்தான்'எமன்'. 'சைத்தான்'படத்தின் சறுக்கலை அடுத்து இந்தப் படத்தை விஜய் அன்ரனி வெகுவாக நம்பியிருந்திருப்பார் போலும். 'நான்' படத்தின் மூலம் அவரது திரையுலகப் பிரவேசத்தைத் தொடங்கிவைத்த இயக்குநர் ஜீவா சங்கரே இதையும் இயக்கியிருக்கின்றார். இத்தகைய இரண்டுகாரணங்களாலும்எழும்எழும் எதிர்பார்ப்புகளுக்குஎன்னபதில்வைத்திருக்கின்றது படம்? இதுவரையிருந்த சறுக்கல்களைச் சற்றே நிமிர்த்தியிருந்தாலும், சொல்லிக் கொள்ளும்படி அவ்வளவு அதி திறனை எமன் பெற்றுவிடவில்லை.

1980களில் இந்தியா திருநெல்வேலியிலுள்ள கிராமம் ஒன்றில் ஆரம்பிக்கின்றது கதை. சாதிக் கலப்புத்திருமணம்தொடர்பானவிரோதம், உட்கட்சிஅரசியல்மோதல்ஆகியவற்றால்கொல்லப்படுகின்றார் தமிழரசனின் (விஜய்அன்ரனி) தந்தைஅறிவுடைநம்பி(அவரும்விஜய்அன்ரனி தான்). மனஅழுத்தம் தாங்காமல் தாயும் தற்கொலை செய்துகொள்ள, பிறந்த சில நாள்களிலேயேஅநாதையாகிறான்தமிழரசன். சங்கிலி முருகனால்வளர்க்கப்படும்தமிழரசன்சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அரசியலுக்குள் நுழைகின்றான். தனக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களைத் திறமையாகப் பயன்படுத்தி, அரசியலில் கபட வேடதாரிகளின் சூழ்ச்சிகளை அவர்கள் பாணியிலேயே முறியடித்து வெல்கின்றான்.

கறுப்புக்கும் வெள்ளைக்கும் இடையே பல சாயைகள். நாயகனின் கதாபாத்திரம் இந்த இரண்டினதும்இடைவெளிக்குள்இருக்கின்றது. தவறு செய்ய வேண்டும் எனும் எண்ணம் எதுவும் இல்லாதவன். ஆனால், தேவைப்பட்டால் எந்தத் தவறையும் செய்துவிடுவான். நல்லவர்களிடம்அன்பும்அனுசரணையும்கொண்டிருப்பவன். எதிரிகளின் ஆயுதங்களையே பயன்படுத்தி அவர்களை வெல்பவன். இத்தகைய மனிதனைமையப்பாத்திரமாக்கியிருப்பதுபடத்தின் வலுவான அம்சங்களில் ஒன்று.

நாயகன்எதிர்கொள்ளும்எதிரிகளும்ஒன்றுக்கு மேற்பட்டமுகங்கள்கொண்டவர்கள். நட்பு, விசுவாசம் ஆகியவற்றை விடவும் வெற்றியையே முக்கியமாக நினைக்கும் அரசியல்வாதிக்ள். இத்தகையமனிதர்களிடையேநடக்கும்மோதலின் களம்தான் 'எமன்'. இந்த மோதல்களைச் சுவையானதிருப்பங்கள்நிறைந்ததிரைக்கதையாக்கித் தந்திருப்பதில் இயக்குநர் வெற்றிபெறுகிறார். ஆனால், நாயகனின் பாத்திரத்தை வலுவாக நிலை நிறுத்துவதில் அவரே தவறியும் இருக்கிறார்.

நாயகன் எதிர்கொள்வதெல்லாம் ஆபத்தான இரட்டைவேடதாரிகளை. எந்தவித முன் ஆயத்தமோ, வியூகமோ இல்லாமல் 'என்னதான் நடக்கும்நடக்கட்டுமே' என்று போகிற போக்கில் அவர்களை எதிர்கொள்கின்றான். எதிரி மிரட்டினால், அதைவிடக் கடுமையாக மிரட்டி வாயடைக்க வைக்கின்றான். நாயகன் இவ்வாறு அசாத்தியமான மனஉறுதியும், எதையும் எதிர்கொள்ளும் திறனும் பெற்றதன் பின்னணி ஒரு காட்சியில்கூடச்சித்திரிக்கப்படவில்லை. காட்சிக்குக் காட்சி, அதிரடியும் அதிநாயகத்தன்மையும் சலிக்கவைக்கின்றன. நாயகனின் அடுத்தடுத்த வெற்றிகள் திகட்டுகின்றன. எனவே, அதிநாயக சாகசங்களைக்கொட்டாவியுடன்பார்க்கவேண்டியிருக்கின்றது.

தர்க்க எல்லைகளைத் தாண்டிய படங்களில் இருக்கும் விறு விறுப்பும்-வேகமும் இல்லாதது படத்தின் பெரிய பலவீனம். காட்சிகளின் நீளம், வசனங்களின் நீளம் ஆகியவை இதற்குக் காரணம். எனினும் 'அரசியல்ல எதிரி எதிரில நிற்க மாட்டான், விசுவாசமாக்க கூடவே நிப்பான்' போன்ற சில வசனங்கள் மனதில் நிற்கின்றன. படத்தின்வேகத்தைக்குறைப்பதில்பாடல்காட்சிகளும் பங்கு வகிக்கின்றன. நாயகி மியா ஜார்ஜின் பாத்திரமும் அது திரைக்கதைக்குப் பயன்படும் விதமும் பரவாயில்லை.

விஜய்அன்ரனியின் வழமையான அடக்கி வாசிக்கும் பாத்திரம். ஆனால், உடல்மொழியிலும்முகபாவனைகளிலும்சிறிதுமுன்னேற்றம் தெரிகின்றது.

ஆனால், குத்துப் பாடலில்கூட வெளுத்து வாங்காமல் அமுக்கமாகவே ஆடுவது ஏன் என்று தெரியவில்லை. முக்கியமானபாத்திரத்தில்நடித்திருக்கும் தியாகராஜன் அடக்கமான நடிப்பைத் தந்திருக்கின்றார். சார்லியும் தனது நடிப்பை நிறைவாகச் செய்திருக்கிறார்.

'மாற்றத்தைஉங்களிடமிருந்துதொடங்குங்கள்' எனும்காந்தியின்வார்த்தைகளைப்பேசும்நாயகன், அவரது அகிம்சைக் கொள்கைகளைக் கண்டு கொள்ளவே இல்லை. சற்றே அழுத்தமான காட்சிகளும் கடைசி பத்து நிமிடங்களில் ஏற்படும்நம்பகமானதிருப்பங்களும்இல்லாவிட்டால்எமன்எமக்கும்பாசக்கயிறுவீசியிருப்பான்.



சிரிப்பு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள ஆற்றுப் படை

வண்ண முற உலகில்
வாழ்கின்ற வாழ்க்கையெம்
எண்ணப் படியமையும்
என்றில்லை – என்றாலும்
சொந்தமெனக் கண்டுசெவ்
வையாய்ப்பேணிடில் நாளும்
சந்தோஷம் தந்திடும் நெஞ்சு.

நெஞ்சினைப் பேணுதல்
நீண்டதொரு நற்தொழிலாம்
பஞ்சிகொண்டு பேணுதல்
நீக்கிடில்
நஞ்சாகி மிக்கநோய்
செய்துமேனியை
முடக்கிப் போட்டிடத் துக்கத்தில்

வாழ்வோம் துவண்டு
நெஞ்சினை மிக்கவெளி
யாக்கிவாழ் தல்நன்று
கொஞ்சம் கவலையுள்ளே
தேங்கிடில் அஞ்சி
யதனைநட்பாய் உள்ளோர்
தம் மோடுபகிர் தல்செய்
யதனைவிட இல்லை மருந்து

உள்ளமது சோரின்
உடலும்சோ ரும்உடல்
மெள்ளத் துவள
உள்ள மும்சோரும் பிள்ளாய்
உடலுமுள்ள மும்மொருங்கே

பேணிடும் யார்க்கும்
திடப்படுமே வாழ்கை சிறந்து

தேக்கிவைத்த துன்பங்கள்
ஆழ்மனத் தூன்றியே
போக்கிடம் இன்றிக்
கனவாகி – ஆக்கையில்
பல்வேறு நோயாகித்
தோன்றிடும் ஆதலால்
அல்லவை
நீக்கியே ஆடு.

நா.நவராஜ்



# குரல்

## நமக்கென்றோர் நலியாக் கலையுடையோம்

வேலணையூர் தாஸ்

அண்மையில் கலை நிகழ்ச்சியொன்றைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதில் பெரும்பாலானவை நடன நிகழ்ச்சிகள். அதிகளவான நடனங்கள் தென்னிந்தியசினிமாப்பாடல்களுக்கே தயார்ப்படுத்தப்பட்டிருந்தவை. அதிலே ஒருநடனம். சிறுவனும் சிறுமியும். சிறுவனுக்கு மீசை வரைந்து இளைஞனாக்கியிருந்தார்கள். சிறுமிக்குச் சேலைகட்டி மனுசியாக்கியிருந்தார்கள். (இவர்கள் ஐந்தாம் அல்லது ஆறாம் தரத்தில் கற்றுக்கொண்டிருக்கலாம்) நடிகர் விஜயகாந்தின் சொக்கத்தங்கம் படப்பாடல் ஒலிபெருக்கியில் பலமாக...
சிறுவன் பாடுகின்றான்.

'என் பேராசை நூறாசை கேக்கையில்
அடி தேன் மல்லி நீ என்ன நினைச்சடி...?'

பதிலுக்குச் சிறுமி பாடுகின்றாள்.

'ஆறேமு கட்டிலுக்கும் அஞ்சாறு தொட்டிலுக்கும்
சொல்ல நினைச்சேன்... நான் சொல்ல நினைச்சேன்...'

பாருங்கள்எப்படிமாறியிருக்கின்றது எங்கள்கலைபாரம்பரியம்...? இதனை அந்தச்சிறுவர்களின் பெற்றோரும்கைதட்டிரசித்தார்கள். தற்போது சனசமூகநிலையங்கள் தனியார் கல்வி நிறுவனங்கள்ஏன் பாடசாலைகளில்கூட இந்தவகைநடனக்கலைதான் சிறார்களை வைத்து நிகழ்த்தப்படுகின்றது. இது இந்திய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப்பார்ப்பதன் தாக்கமாகவும் இருக்கலாம். அங்கு சினிமாப்பாடல்களுக்கு நடனம் ஆடுவதிலே ஆச்சரியப்படத்தக்க முறையில் சிறுவர்கள் தங்கள் திறமைகளைக் காட்டுகிறார்கள்தான் ஆனால் நமது நாட்டில் இது அவர்களுடையமுழுத்திறைமைகளையும் வெளிப்படுத்தப் போதுமானதாக இருக்கின்றதா? எண்ணிப்பார்த்தால் போலச்செய்தல் என்ற அளிக்கையே இது என்று எமக்குப் புலனாகின்றது.

நடனம் என்பது ஒரு கூட்டுக்கலை வடிவம். இதிலே பாடல் படித்தல், இசைஒலித்தல், அந்தஇரண்டையும் செவிமடுத்து ஆடுதல் என்பன அடங்கும். இதில் நாம் என்ன செய்கின்றோம்? யாரோ ஒருவர் ஏதோ ஒரு தேவைக்குப் படித்த பாடல்களுக்கும் அதற்கு அவர்கள் அமைத்த இசைக்கும் ஆடுகின்றோம். ஆக, நாம் இதிலும் பிறரையே நம்பியிருக்கின்றோம். நாம் தயாரித்த எமது பாடலொன்றுக்குரியதாக இந்த நடனம் அமைக்கப்பட்டால், இங்கு ஒரு பாடல் ஆசிரியன் உருவாகின்றான். அதுமட்டுமன்றி அதற்கு இசை அமைக்கின்ற கலைஞனும் உருவாகின்றான். அந்தப் பாடலுக்கு நடனம் கொள்ளும்போது மண்ணின் வாசனையையும் எம்மால் நுகர முடியுமல்லவா...? அத்துடன் ஒரு நடன நிகழ்வு பல கலைஞர்களையும் உருவாக்கி விடுகின்றதல்லவா.

இதற்கெதிரான விமர்சனங்களைக் கவனித்தால்சுயமாகப் பாடலைத் தயாரிக்கக்கூடிய வசதிகள் எம்மிடம் இல்லை என்பதே முதன்மையாயுள்ளது. எம்மிடம் ஏலவே நாட்டார்பாடல்கள், நாடகப்பாடல்கள் பல இருக்கின்றன. மண் வாசனைபாடும் இசை அல்பங்கள் சிலவும் இப்போது கிடைக்கின்றன. எம்மிடம் இருக்கின்ற எளிமையான இசைவாத்தியங்களைப் (உடுக்கு, மத்தளம், மிருதங்கம், கடம்; ஆர்மோனியம்) பயன்படுத்தி சிறார்களின்

நிகழ்ச்சிகளுக்கு வேண்டிய நல்ல பாடல்களை உருவாக்க முடியும்இதைவிடுத்துதென்னிந்தியசினிமாப்பாடல்களைப் பயன்படுத்தும்போது அவை எமது கலாசார அடையாளங்களை வேறுகொண்டிருப்பதில்லை. ஈழத்தில், தமிழ்ப்பெண், தான் இணைசேரும் உறவுமுறை என்பதுமச்சான். மாறாகத் தென்னிந்தியாவில் அது மாமாவாகிவிடுகின்றது. அவர்களின் பாடல்களில் 'மாமா...' என அவர்கள் அனுங்கிச் சினுங்குவார்கள். இது அந்த உறவுமுறையை இங்கும் புகுத்திவிடக்கூடும். ஏனெனில்நாம்அந்தப்பாடலைப்பிரயோகிப்பது சிறார்கள் மீது...!

இதைவிட அபத்தம் ஒன்றும் நிகழ்கின்றது. இப்படியான நிகழ்ச்சிகளில் அந்தச் சின்னக் குழந்தைகள் ஆடவிடப்படுவது

'ராத்திரி நேரத்துப் பூஜையில்...'
'நிலாக்காயுது நேரம் நல்ல நேரம்...'
'என்ன நினைச்ச நீ என்ன நினைச்ச...'

போன்ற அவர்களின் வயதுக்குப்பொருத்தமில்லாத மிகையுணர்ச்சிப் பாடல்களுக்கு. நடனம் என்பது வெறும் உடல் அசைவு மாத்திரம் அல்ல அது பாடல், இசை, உடல்மொழி என்பவற்றினூடாக சமூகத்துக்குநல்ல செய்தியைச் சொல்வது. அது எமது சமுகத்தை நெறிப்படுத்தக்கூடிய நல்ல செய்திகளைச் சொல்லவேண்டும். பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளின் கலை அளிக்கைகள் என்ன கருத்தை சொல்கின்றன என்பதில் கவனமாயிருத்தல் வேண்டும். 'நாமும் நமக்கென்றோர் நலியாக் கலையுடையோம்' என்ற மகாகவி உருத்திரமூர்த்தியின் வார்த்தைகளை மனங்கொண்டு எமக்கான கலை வடிவத்தை நாங்களே உருவாக்கவேண்டும்.

4

தென்னிந்திய சினிமாப் பாடல்களைப் பயன்படுத்தும்போது அவை எமது கலாசார அடையாளங்களை வேறு கொண்டிருப்பதில்லை. ஈழத்தில், தமிழ்ப்பெண், தான் இணைசேரும் உறவுமுறை என்பது மச்சான். மாறாகத் தென்னிந்தியாவில் அது மாமாவாகி விடுகின்றது.



# என் மகளாக வருவாயா?

வீர நடை போட்டு
உலவிய என் தங்கமே
காலன் உனை கவர்ந்து
சென்றதெங்கே சொல்லாயோ
"ஹறிணி" என அழைத்தால்
காலுக்குள் நிற்பாயே உனை
நாய்தானே என்று சொல்ல
யார்க்கேனும் மனம் வருமோ?

நன்றியாய் காவல் காத்து
நல்ல உதவி புரிந்தாயே
ஐந்து வருடங்கள் பழகிவிட்டு
போனதெங்கே சொல்லாயோ?
மூன்று நாள் உன் பாடு
பெரும் வேதனையாய் போயிற்று
மூச்செடுக்க முடியாது
முட்டி முட்டி நின்றாயே
எந்த விசம் உனைக் கொல்ல
துணிந்தது சொல்லாயோ

உன் பூந்தளிர் முகம் காண
துடிக்குது என் நெஞ்சம்
உன் செல்ல வால் அசைவை
தேடுது என் கண்கள்
உனைப் புதைத்த இடத்தை
நாடுது என் கால்கள்
உன் சின்ன சிணுங்கலுக்காய்
அலையுது என் செவிகள்
நன்றிக்கு உனைப்போல
யாருமில்லை பூமி தனில்
உனக்கு ஒரு பிறப்பிருந்தால்
ஒருமுறை என் கருவில்
மகளாக வருவாயா...?

பா.பாலாஜினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 05 நகைச்சுவைத் தொடர் ஓவசி...

மிருசுவில் தமிழ்தாசன்

நண்பர்களுடன்சேர்ந்துபோட்ட திட்டங்களெல்லாமே எந்தவித மான குளறுபடிகளுமின்றிச் சட்டப்படிநிறைவேறின. இன்ற ளவில் மூன்று வீடுகளில் படம் ஓடியும் விட்டார்கள். ஓவசிதான். ரீ. விக்குச்சொந்தக்காரன். எனினும்ஓவ சிக்கு இந்தத் தொழிலுக்கு நண்பர்க ளின் கூட்டு முயற்சி அத்தியாவசிய மாகவேபட்டது. நகுலன் கிட்டத் தட்ட ஒரு விற்பனைப் பிரதிநிதி போல வீடு வீடாகத் திரிந்த லைந்து விடலைகள் யாரை யாவது பிடித்துக் கிடித்து எப் படியோ வாரத்தில் இரண் டொரு'ஓடர்'எடுத்துவிடுவான். அதற்கிருந்தஒருவிதசெலவை யும்ஓவசிக்குத்தவிர்க்கமுடியா மலிருந்தது. நகுலனின் உத வியில்லாவிட்டால்ஓடர்களை எடுப்பது யார்! அவனுடைய புண்ணியத்தில் தான் ஓவசி யின் ரீ.வித்தொழில் ஏதோ ஓடிக் கொண்டிருக்கின்றனது. மற்றைய நண்பர்களும் படம் ஓடப்போகும் வேளைகளில் அவனுடன் ஒட்டிக் கொள்வார்கள். ஓவசிக்குஉதவியாகப் போவதல்லஅதன்நோக்கம். போகும் வீடுகளில்அதிகமாகக்கன்னிப்பெண் களின் பிரசன்னமில்லாமலிருப்ப தில்லை. அதன்காரணமாகவேஅவர் கள் ஓவசியுடன் படையெடுக்கின் றனர்.

அன்றொருநாள்படம்ஓடப்போனவீட் டில் இளம் பெண்கள் மூவர் வந்து ஓவ சியுடனும்ஏனையநண்பர்களுடனும் சிரித்துப் பேசியதை நினைக்க நினைக்க நகுலனுக்கு மனமோ இன் பமான கற்பனைகளில் சிறகடித்துப் பறந்தது.

'அண்ணா!என்னகொப்பிபோடப்போ றீங்கள்...? ஏதாவது விஜய்யின்ரை புதுக்கொப்பியாப் போடுங்கோ'

'வேண்டாமடிகல்பனா!அஜித்தின்ரை படம்தான் நல்லாயிருக்கும். அதைப் போடுங்கோ அண்ணா'

அந்த இரண்டு கன்னிப் பெண்களும் வந்து இவர்களைக்கெஞ்சிநின்றதை யும் அவர்களுடன் மகிழ்ச்சியாகச் சிரித்துப் பழகியதையும் நகுலனால் மறக்கமுடியவில்லை. ஏன்ஓவசிக்கும் கூட இந்தத் தொழில் ஒரு கலகலப்பா னதாகவேயிருந்தது.

'உண்மையிலை மச்சான்! இது ஒரு சந்தோசமான தொழிலடா. எல்லாப் புகழும் இந்த ரி.விக்குத் தானடா!"

ஓவசியும் அடிக்கடி இவ்வாறுவாய்ப் புலம்புவான்.

இப்போதெல்லாம் ஓவசி அழகாகச் சிகையலங்காரம் பண்ணி, மடிப்புக் கலையாதஆடைகளணிந்துமிகநாக ரிகமாகவே காட்சியளிப்பான். படம் பார்க்கவரும்அந்தக்கன்னிப்பெண்க ளிடத்தில்ஒருகதாநாயகனாகிக்கொள் வதற்காக அவன் தனது நடையுடை பாவனைகள் அனைத்தையும் கணி சமான அளவுக்கு மாற்றிவிட்டான். அவனுடைய நண்பர்களும் அப்படித் தான்மாறியிருந்தார் கள். அன்றொரு நாள் கொண்டக்டர் வெற்றி வேலுவீட்டில் ஓடர் எடுத் தாயிற்று. படம் ஓடவேண் டும். மாலைஆறரைக்கேரீ.வி செற்றெல்லாம்அங்கேகொண்டுவரப் பட்டுவிட்டது.

'தம்பியவை எங்கடை ஆக்கள் இன் னும் கொஞ்சப் பேர் வரக்கிடக்குது. அவையும் வந்தவுடனை படத்தைப் போடுங்கோ! சரிதானே!'

கொண்டக்டர் வெற்றிவேலு வந்து கர்ச்சித்துச்சென்றார்.

ஓவசியும்நண்பர்களும்வெளித்தெரு வில் போய் மணலிலே சாவகாசமாக அமர்ந்து கொண்டார்கள்.

'டேய் நாதன்! கொண்டு வந்த போத்தி லைத் திறவனடா. சொட்டுச் சொட் டாய்க் குடிப்பம்'

சொல்லியபடி கொண்டுவந்திருந்த மதுபானத்தைஆளுக்காள்பரிமாறிய தில் நால்வரும் மிகுந்த குஷியாகக் காணப்பட்டார்கள்.

'மச்சான் ஓவசி! கொஞ்சநேரம் 'கடு தாசி' போடுவமடா. விரியடா நகுலன் துவாயை.

'எங்கைகேளுங்கோடாகேள்வியை'

'ஆர்கேக்கிறது! கேளுங்கோவன்'

'நாதன் கேளன்'

'அறுபது'

'எழுபது'

'எண்பது'

'மேலை'

கடதாசிக்கூட்டம்விளையாட்டுநடந்து கொண்டிருந்தது.

'மச்சான் ஓவசி! கொப்பியெல்லாம் டெக்குக்கைபோட்டுஆயத்தப்படுத் திப் போட்டே வந்தனி! பேந்து அவங்கள் வந்து படத்தைப் போடெண்டு சொல்லேக்க நிண்டுமிலாந்தக்கூடாது'

'உதுதெரிஞ்சு தான் நான்நேரத்துக்கேஎல் லாம் ஆயத்தப்பண் ணிப்போட்டு வந்த னான். ஆக்கள்வந்த வுடனை இதிலை தெருப்படலையுக்கை நிண்டே "றிமோட்டால அமத்த வேண்டியது தான்'

சொல்லிவிட்டுஓவசிஆட்டத்திலேகண் ணாயிருந்தான். நண்பர்களுக்குத் தெரியாமல் ஏற்கனவே ஒரு காலும், ரின்னும்' அடித்ததில் வரும்போதே ஒருகணக்கானமப்பு. இப்போதுஅடித் ததும் சேர்ந்து நல்ல மொய்ப்பு ஓவ சிக்கு.

'அது சரி மச்சான்! அந்த 'மற்றப்' படக் கொப்பி கொண்டுவந்தனிதானே! இஞ்சார் ஓவசி! அந்தப்படத்துக்குக் கனக்கக் காசு வாங்கலாம். எல்லாம் சின்னப் பொடிப்பிள்ளையள். பெரிய அந்தரப்படுகினம்'

'ஓமடா!இதுமுடியஎங்கையேன்ஒதுக் குப்புறமாய்ஆருக்கும்தெரியாதஇடத் திலை வச்சுப் போடுவம்'


'ஓ...!அதுபிரச்சினையில்லைஅதுக்கு ஒருபாழடைஞ்சபழையவீடுஒழுங்கு பண்ணியாச்சுது. டேய்...தீபன்!உந்த ரோர்ச்லைற்றைக் கொஞ்சம் வடி வாய்ப் பிடியட! இஞ்சை இதென்ன கலாவரையோ?ஸ்கோப்பனோ?ஒரு கோதாரியும் தெரியுதில்லை. பிடியடா லைற்றை வடிவாய்...'

நகுலன் கடிநாயாகக் கத்தினான்.

கொண்டக்டர் வெற்றி வேலுவின் வீட் டுப்படலை திறப்பதும் சாத்துவதுமாயி ருந்தது. அக்கம் பக்கத்து வீட்டார், உற்றார், உறவுகளென்றுஏராளமான வர்கள் வெற்றிவேலு வீட்டில் படம் பார்ப்பதற்கு நிறைந்து கொண்டிருந்த னர்.

(தொடரும்)

'உண்மையிலை மச்சான்!
இது ஒரு சந்தோசமான



## மரங்களை நாட்டிடுவோம்

வளம்பெருக்கும் மரங்களை
விருப்பியிங்கு நாட்டிடுவோம்!
நலம் பெருக்கும் மரங்களை
விரைந்திங்கு நாட்டிடுவோம்!

பரந்து கிடக்கும்
தரிசுகளிலும் நெடிய
வீதி ஓரங்களிலும் பல
மரங்களை நாட்டிடுவோம்!

இலுப்பை, வேம்பு,
ஆமணக்கெனப்
பயன்மிகு மரங்களை
நாட்டிடுவோம்
முதிரை, தேக்கு,
சமண்டலை யென
பலம்மிகு மரங்களை
நாட்டிடுவோம்

உயிரினங்கள் மகிழ்ந்திருக்க
மரங்களை நாட்டிடுவோம்!
பயிரினங்கள் செழித்திடவே
மரங்களை நாட்டிடுவோம்!

மரங்களை நாட்டுதல்
மிக மிக அவசரம்
நாட்டிடும் மரங்களைக்
காத்திடல் அதைவிட அவசியம்!

மரங்களை நாட்டுமெந்தக்
கரங்களையும் துதித்திடுவோம்!
மரங்களை வெட்டுமெந்தக்
கரங்களையும் எதிர்த்திடுவோம்!

## சிரிப்பு...



தயாரிப்பாளர்: அடிக்கடி வாந்தி எடுக்கிற நோயாளியை பத்தி ஒரு படம் எடுக்கப்போறேன்.

உதவியாளர் : என்ன பேரு....

தயாரிப்பாளர்: கக்க... கக்க.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாய்மரக்காரர்கள்...

ஜெ. காயா

கடலோடு போராடி வயிறு நிரப்பும் அந்தப் பாமரனின் அல்லல் பாடுகளும் அவன் எதிர் கொள்ளும் இயற்கையும் சாதாரணமானவையல்ல. பரந்து விரிந்த நீலக்கடலின் நடுவே ஊசலாடும் அவனுடைய உயிர் அந்தப்படகின் தத்தளிப்பிலயே தங்கியிருக்கும். வாரி இறைந்த உவர் நீர் அந்தச் சிறுபடகை நிறைத்திருக்க அதற்கீடாய் மீன்வளத்தை இன்னும் நிறைத்துக் கடலிலிருந்து மீண்டுவருவான் அந்தப்பாமரன். போராடிக் கரைசேருவான் என்ற திடத்தில் கரையில் அவனின் துணை பிள்ளையுடன் காத்திருப்பாள்.




நிலங்களை மக்களது வாழ்வியலுக்கேற்ப இனம்கண்ட தமிழ் இலக்கணக்காரர் கடலும் கடல்சார்ந்த நிலத்தையும் நெய்தல் என்றிருப்பர். அதைச்சூழ்ந்த பாமர மக்கள் குழுமத்தின் வாழ்க்கைப் பொழுது கடலின் மடியிலும் அதைச்சூழ்ந்த மணற்தரைகளின் மீதிலுமே களம் கொண்டிருக்கும். அவர் தம் வயிற்றுப் பசிபோக்கக் கடலுடன் போராடும் நிர்ப்பந்தம் கட்டாயமாக்கப்பட்டிருப்பது நியதி. மீன் பிடித்தலைப்பிரதானமாகவும் முத்துக்குளித்தலை அதற்கடுத்தும் உப்பு விளைவித்தல், மீன்களை உலர்த்துதல்(கருவாடு) என்றும் அவர்தம் உழைப்புப் பரந்துபட்டிருக்கும். தோணி, தெப்பம், வள்ளம் போன்ற சிறுதரத்திலான படகே ஆழ்கடல் வரை சென்றுவர அன்று அவர்களுக்கிருந்த ஒரே சாதனம். அந்தப் பெரிய கடலின் நடுவே காற்றடிக்கும் திசைகளுக்கும் அலைகள் அடிக்கும் வேகத்துக்கும் இசைந்து அந்தச் சிறுபடகில் பயணித்துத் தொழில் செய்து கரை திரும்ப வேண்டும்.

அதன் பின்னேதான் அவனது குடிசையில் உலைஏறும், பசி ஆறும். காற்றும் மழையும் உக்கிரம்கொண்டு கடல் அவனைத் தன்னுள் புதைத்துக் கொள்ளும் நாள்வரை அந்த மீனவனின் உயிர் ஆழ்கடலில் அந்தப் படகுடன் தத்தளித்தவாறு போராடிக்கொண்டேயிருக்கும்.

மீனவனின் வாழ்க்கை ஒரு போராட்டக்களமாயினும் இயற்கை பற்றிய பல புரிதல்களையும் சுவாரஸ்யமான அனுபவங்களையும் நன்கறிந்து முதிர்ச்சி கொள்ளும் திறனும் அவனுக்கு உண்டு. தனது தொழிற்களத்தில்(கடல்) வீசும் காற்றைத் திசைகளுக்கேற்றவாறு பிரித்தறிந்து பிற்காலங்களில் அதுபற்றிய புரிதல்களோடு கடலை அனுகுவதென்பது அவனுடைய தொழில்திறமைகளுள் ஒன்றாயிற்று.

இதன்படி வாடைக்காற்று(வடக்குத்திசையிலிருந்து தெற்குத்திசை நோக்கிவீசுவது), சோளகக் காற்று(தெற்கிலிருந்த வடக்கு நோக்கிவீசுவது), கச்சான்காற்று(மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியது), கொண்டல் காற்று(கிழக்கிலிருந்து மேற்காக வீசுவது) என்றவாறு பருவ காலங்களுக்கேற்பத் திசை மாறிக் கொள்ளும் காற்றுக்களைக் கற்றவர்களாய்த் தொழில்செய்யக் கற்றுக் கொண்டனர்.

பொதுவாகவே தரைக்காற்று, கடற்காற்று என்ற வகைக்குள் தொழில்பொழுதுகள் அமைந்திருக்கக் கடலின் எந்தப் பகுதியில் வலையிடுவது, தொழில்கொள்வது என்பதை மேற்கூறிய பருவகாலக் காற்றுக்களைவைத்து வகைப்படுத்தினர். காற்றுக்களைக் கற்றுக்கொண்டு கனக்கச்சிதமாக நீரில் மிதந்து, வழிந்து பாய்விரித்துப் படகோட்டி, திசை மாறாமல் கரைய நாடும் பாமர மனிதர்களான அந்தப் பாய்மரக்காரர்கள், நிலவெளியிலும் கடும் இருட்டிலும் கடலலையில் பாய்விரித்துப் படகொட்டும் வீரத்தமிழர்களே.

மீனவனின் வாழ்க்கை ஒரு போராட்டக்களமாயினும் இயற்கை பற்றிய பல புரிதல்களையும் சுவாரஸ்யமான அனுபவங்களையும் நன்கறிந்து முதிர்ச்சி கொள்ளும் திறனும் அவனுக்கு உண்டு.

# சுண்டு பத்து ரூபாய்...



அடர்ந்த காடு.
வானாந்தரத்தின் மையம்.
மயான அமைதியுடன்
உறங்குகின்றது வீதி.

அரைக் காற்சட்டை,
அரையில் ஞாண் கயிறு
பறட்டைத் தலை,
தலையில் சில சுமைகள்
இன்னும் வயது,
ஒரு எட்டைக் கடந்திராது...!

மஞ்சள் நிறத்தில் சளி
மூக்கால் வழிந்து வர
நாக்கால் தடவியதை
உள்ளிழுக்கும்
இன்னொன்றும்
கூடவே கூடை ஏந்தி.

மஞ்சள் பழங்களும்
சுண்டுப் பேணிகளுமாய்
யாருமற்ற வீதிதனில்
'பாலைப் பழம்...'
'சுண்டு பத்து ரூபாய்...'
கூவி ஏங்கி நிற்கக்
கடக்கின்றனர்
'கன ரகத்தினர்'

'நடுக் காட்டுக்குள்
எப்படி இவர்கள் !!!'
வேகமாய்க் கடக்கும்
அவர் ஞானத்தில்
இன்னும் பல...
சிறுசுகளின் வயிறு
மட்டும்
இன்னும் அங்கு
காய்கின்றது.

- நிலவன்

## சிரிப்பு

ஆசிரியர்: 'அவள் நடந்து சென்றாள்' இந்த வாக்கியத்தை ஆச்சரியக் குறியுடன் மாற்றுங்கள் பார்ப்போம்.

மாணவன்: டேய் மச்சான்! பிகர்டா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## டிப்ஸ்... டிப்ஸ்...

- இளநீர் அல்லது தேங்காய் உடைத்த நீர்சேர்த்துகோதுமைமாவைப்பிசைந்து சப்பாத்தி செய்தால்... மிகவும் மிருதுவாகவும் சுவையாகவும் இருக்கும்.
- தீக்காயம் கொப்புளிக்காமல் இருக்க ஓர் உபாயம். தீ பட்ட இடத்தை நீரால் கழுவிவிட்டு... வேகவைத்த வெங்காயத்தை மசித்து, சிறிது தேங்காய் எண்ணெயையும், சிறிது மஞ்சள் தூளையும் சேர்த்துக் குழைத்துப் பூசினால் தோல் கொப்புளிக்காமல் இருக்கும்.
- முட்டைக்கோஸை சாறு எடுத்து, முகத்தில் தடவி வந்தால் முகச்சுருக்கம் மறை



## முகப்பருவைக் கிள்ளுவது ஆபத்து...!

01. முகப்பருவிலுள்ள சீழ் உடன் பக்ரீரியாக்களும் சேர்ந்து இருப்பதால், அதைக் கையால் கிள்ளும்போது, இதுவரை மேற்பரப்பில் பாதிக்கப்பட்டிருந்த சருமத்துளைகள் ஆழமாகப் பாதிக்கப்படும். இதனால் கிள்ளிய அந்த முகப்பரு மிகவும் தீவிரமாகக் கூடும்.
02. முகப்பருவைக் கிள்ளும்போது, அதிலிருந்து பக்ரீரியாக்கள் கலந்த சீழ் வடிகட்டப்பட்டு வெளி வருவதால், அந்த முகப்பருவைச் சுற்றிய பகுதி பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது. இதன் காரணமாக ஆரோக்கியமான சருமத் துளைகளும் பாதிப்புக்குள்ளாகும் வாயப்புள்ளது.
03. அசுத்தமான கையால் முகப்பருவைத் தொடும்போது, அதிலுள்ள பக்ரீரியாக்களின் அளவு அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. இதனால் முகம் முழுவதும் முகப்பரு வரும் வாய்ப்பும் அதிகரிக்கின்றது.
04. முகப்பருவைக் கிள்ளும்போது, அதைச் சுற்றிய பகுதி கடுமையாகப் பாதிக்கப்படுவதால், முகப்பரு மறைந்தாலும் நீங்காத தழும்பு ஏற்படும்.

## அழகை அள்ளித்தரும் ஆரஞ்சுத் தோல்

தோடம் பழங்கள் உணவின் இன்றியமையாத அங்கம் மட்டுமல்ல, சருமப் பராமரிப்புக்கும் உகந்தன. இதில் உயிர்ச்சத்து 'சி' அதிகம் உள்ளது. அத்துடன், ஆன்டி ஆக்சிடென்டுகள் நிறைந்திருப்பதால்இவ்றறைமுகத்தின்பொலிவைக்கூட்டி,வெண்மையாக்கும்சருமப்பராமரிப்புபூச்சுகளில்மற்றும்மாஸ்க்களில்பயன்படுத்தலாம்.

தோடம் பழத் தோல் கிருமி எதிர்ப்பு மற்றும் நுண்ணுயிர்த் தொற்றுத் தன்மைகளைக் கொண்டுள்ளதால், உங்களுடைய எண்ணெய்ப் பசை மற்றும் பருக்கள் நிறைந்த சருமத்துக்கு நல்ல பயன் தரும். சருமத்தை வெண்மையாக்கும் பொருளாகவும் இது பயன்படும். இந்தத் தோடம்பழத் தோலைக் கொண்டு உங்கள் தினசரி சருமப் பராமரிப்பை எப்படிச் செய்வது என்பதை இதோஅறிந்துகொள்ளுங்கள்.

**1. தோடம்பழத் தோல் மற்றும் பாதாம் ஸ்க்ரப்**

தோடம்பழத் தோலும் பாதாமும் உங்கள் உடலின் நச்சுக்களை வெளியேற்றுவது மட்டுமன்றி உங்களுக்கு புத்துணர்வான மிளிரும் சருமத்தையும் தர உதவும்.

தோடம்பழத்தின் தோலை வெயிலில் காய வைத்துக் கொண்டு 10 முதல் 20 பாதம் பருப்புக்களை உடைத்துப் பொடியாக்கிக் கொள்ளுங்கள்.

இரண்டையும் ரவை போன்ற பக்குவத்தில் அரைத்துக் கொள்ளுங்கள். இதைத் தினமும் சிறிதளவு பாலுடன் சேர்த்துப் பூசி வந்தால் பொலிவான சருமத்தைப் பெற முடியும். தேவைப்பட்டால் இந்த கலவையுடன் சிறிதளவு தேன் சேர்த்து முகத்தில் மசாஜும் செய்யலாம்.

**2. தயிர் மற்றும் தோடம்பழத் தோல்**

தோடம்பழத் தோல் மற்றும் தயிர் கலவை ஓர் அற்புதமான சருமப் பராமரிப்புக்கு உதவும். இது சுருக்கங்களையும் கோடுகளையும் நீக்குவதோடு, உங்கள் சருமத்திலுள்ள இறந்த செல்களை நீக்கிச்சருமத்தை செய்கிறது.

தோடம்பழத் தோலைக் கொஞ்சம் எடுத்து காயவைத்து பொடி செய்து கொள்ளவும். பின்னர் அதை ஒரு கப் தயிரில் கலந்து உங்கள் முகத்தில் சுழற்சி முறையில் மசாஜ் செய்யவும். சிறிது நேரம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவி விடவும்.



## சரும வகைக்கேற்ப கற்றாழையைப் பயன்படுத்துவது எப்படி?

பொதுவான அழகுப் பராமரிப்புப் பொருள் தான் கற்றாழை ஜெல். இது அனைத்து வகையான சரும மற்றும் தலைமுடிப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வளிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. இதில் சருமச் செல்களின் ஆரோக்கியத்துக்குத் தேவையான பொருள்கள் உள்ளன.

**கற்றாழை எலுமிச்சை மாஸ்க்:** இந்த மாஸ்க் வறட்சியான சருமத்தினருக்கு ஏற்றது. சிறிது கற்றாழை ஜெல்லுடன் சில துளிகள் எலுமிச்சைச் சாற்றை சேர்த்து, முகத்தில் தடவி 20 நிமிடம் கழித்துக் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

**கற்றாழை ரோஸ் வோட்டர் மாஸ்க்:** இந்த மாஸ்க் அதிக வறட்சியைக் கொண்ட சருமத்தினருக்கு ஏற்றது. சிறிது கற்றாழை ஜெல்லுடன் சிறிது ரோஸ் வோட்டர் சேர்த்துக் கலந்து முகத்தில் தடவி நன்கு காய்ந்த பின் கழுவ வேண்டும்.

**கற்றாழை தேன் மாஸ்க்:**

இந்த மாஸ்க் எண்ணெய்ப் பசை சருமத்தினருக்கு ஏற்றது. அதற்கு கற்றாழை ஜெல்லுடன் சிறிது தேன் கலந்து முகத்தில் தடவி மசாஜ் செய்து, ஊறவைத்துக் கழுவ வேண்டும்.

**கற்றாழை மஞ்சள் பால் மாஸ்க்:**

இந்த மாஸ்க் முகப்பருவால் அதிகம் அவஸ்தைப்படுபவர் களுக்கு ஏற்றது.

அதற்கு கற்றாழை ஜெல், மஞ்சள் தூள் மற்றும் சிறிது பால் சேர்த்துக் கலந்து, முகத்தில் தடவி 20 நிமிடம் கழித்துக் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

**கற்றாழை வெள்ளரிக்காய் மாஸ்க்:** இந்த மாஸ்க் சாதாரண சருமத்தினருக்கு ஏற்றது. இவர்கள் கற்றாழை ஜெல்லுடன் சிறிது வெள்ளரிக்காய்ச் சாறு சேர்த்துக் கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்துக் கழுவ வேண்டும்.

**கற்றாழை ஓட்ஸ் மாஸ்க்:** கற்றாழை ஜெல்லுடன் எலுமிச்சைச் சாறு மற்றும் ஓட்ஸ் பொடி சேர்த்துக் கலந்து, முகத்தில் தடவி குளிர்ந்த நீரில் கழுவ, சருமத்திலுள்ள இறந்த செல்கள் வெளியேற்றப்பட்டுச் சருமம் பொலிவோடு இருக்கும்.

**கற்றாழை வேப்பிலை மாஸ்க்:** இந்த மாஸ்க் பொலிவிழந்து இருக்கும் சருமத்தினருக்கு ஏற்றது. சிறிது கற்றாழை ஜெல்லுடன் வேப்பிலைச் சாறு மற்றும் எலுமிச்சைச் சாறு சேர்த்துக் கலந்து முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்துக் கழுவ வேண்டும்.

இவ்வாறு செய்தால், சருமத்திலுள்ள அழுக்குகள் முழுமையாக நீக்கப்பட்டு, முகம் பொலிவோடு இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருத்து களம்



## "கைத்தொழில் ஒன்றை கற்றிடுவோம்"

## முயற்சி திருவினையாக்கும்

"கொழும்பில் இருந்தபொழுது, சரியானபணக்கஷ்டம்ஏற்பட்டது. எனது கணவனின்உழைப்பு மட்டும் குடும்ப சீவியத்துக்குப் போதாமல் இருந்தது. நானும் ஏதாவது செய்ய வேண்டும், குடும்பவறுமையைப்போக்கவேண்டும் என்று நினைத்து, அதற்குச் செயல் வடிவம் கொடுத்தபோது மலர்ந்ததுதான் ஊதுபத்தி" என்று கூறுகிறார் திருமதி ஜெகநாதன் றஞ்சிதமலர்.

யாழ்ப்பாணம்- காலையடி -பண்டத்தரிப்பைச் சேர்ந்தவர் திருமதி ஜெகநாதன் றஞ்சிதமலர். அவரது கைவண்ணத்தில் மலர்ந்த ஊதுபத்திப் பைக்கற்றுகளைத் தானே பயனர்களைத் தேடிச் சென்று விற்று வரும் இவர், ஒரு அயராத உழைப்பாளி. அவருடனானநேர்காணல் தொகுப்புவருமாறு

"எமக்கு 4 பிள்ளைகள். எனது கணவர் சைக்கிள் கடை வைத்துள்ளார். அதன் மூலம் கிடைக்கும் வருமானம் குடும்ப சீவனோபாயத்துக்குப் போதுமானதாக இருக்கவில்லை. சிறிது காலம் கொழும்பில் இருந்தோம். நாமிருந்த வீட்டுக்குப் பக்கத்தில் ஊதுபத்தி செய்தனர். அதனை நான் சென்று பார்த்தேன். அந்த வீட்டுக்காரரும் எனக்கு ஊதுபத்தி செய்வது தொடர்பில் விளக்க மளித்தனர். அங்கு இருக்கும்போது, எமக்குச் சரியான பணக் கஷ்டம் ஏற்பட்டது. நானும்ஏதாவதுசெய்யவேண்டும்,குடும்ப வறுமையைப்போக்கவேண்டும்என்றுநினைத்து, அதற்குச் செயல் வடிவம் கொடுத்தபோது, மலர்ந்ததுதான் ஊதுபத்தி. முயற்சி திருவினையாக்கும் என்ற வாக்குக்கு நான் உயிரூட்டியுள்ளேன்.

**தேவையான பொருள்கள்**

றப்பர் தூள், மரத்தூள், கரித்தூள், அத்தர், மூங்கில் குச்சி, பொதியிடும் பை, அழகான கடதாசிப் பெட்டி.

**செய்முறை**

றப்பர்தூள், மரத்தூள், கரித்தூள் மூன்றையும்சேர்த்துநன்றாகப் பிசைந்தெடுக்க வேண்டும். பின்னர் மூங்கில் குச்சியில் இந்தக் கலவையைப் பூசிக் காய வைக்க வேண்டும். பின் அத்தருள் தோய்த்தெடுத்துக் காய்ந்ததும், ஒரு பையில் சுற்றி பெட்டியில் வைக்க வேண்டும். பயனர்களைக் கவரக்கூடிய "லேபிள்" (கடதாசிப் பெட்டி) இருந்தால், அதிகளவு சந்தைப்படுத்தலாம். 3 வருடங்களாக இந்தத் தொழிலைச் செய்கின்றேன். உற்பத்திப் பொருள்கள்பணம்கொடுத்துவாங்கவேண்டும்என்பதால், பெரியளவில் இலாபம் இல்லை. பணம் இருந்தால், இத்தொழிலை மேலும் விருத்தி செய்ய முடியும்" என்றார்.

## ஒழுக்கப் பிரச்சினை

**எங்கும் பெண், எதிலும் பெண் என்று சொல்லும் அளவுக்குப் பெண்கள் பதிக்காத தடங்களும் இல்லை, இடங்களும் இல்லை. ஆனால், அரசியலில் ஈடுபடுவதற்கு அவர்கள் பின் நிற்கின்றனர். இதற்கு என்ன காரணம்?**

ஒரு பெண் சாதனைச் சிகரத்தை எட்டி நின்றாலும், தன்னையும் அறியாமல் பல தடைகளால் கட்டப்பட்டிருக்கின்றாள். சமூக விமர்சனம், திருமணம் குறித்த அச்சத்தில் உழல்கின்றாள். அரசியலுக்கு வந்தால், இவற்றையெல்லாம் எதிர்கொள்ள முடியாது என்று நினைத்து ஒதுங்கிவிடுகின்றாள். எதிலும் சமவுரிமை வேண்டும் என்று கேட்டுப் போராடும் பெண்கள், அரசியலில் மட்டும் ஏன் பங்கேற்கப் போராடுவது இல்லை. அதற்காக, அரசியலில் பெண்களே இல்லை என்று கூறிவிட முடியாது. அரசியல் பின்புலம் உள்ள பெண்கள், அரசியலுக்கு வருகின்றனர் - சாதிக்கின்றனர். ஆனால், சாதாரண பெண்கள் இதனைச் சாத்தியமற்றது என்று நினைக்கின்றனர்.

இரவு நேரங்களில் பயணிப்பது, பொதுவெளியில் இயங்குவது, கூட்டங்களில் பேசுவது, வெளியிடங்களுக்குச் செல்வது என்று அரசியலில் நிறைய வேலைகள் உண்டு. இவற்றையெல்லாம் ஓர் ஆண் செய்வதில் சிக்கல் இல்லை. பெண் செய்யும் போதுதான் சிக்கல். அவளது வளர்ச்சியை, சாதனையைக் கண்டு பொறுக்காத சமூகம், உடனே அவளது ஒழுக்கத்தில் கை வைக்கின்றது. ஒழுக்கக்கேடானவள், ஆடித் திரியுறாள் என்றெல்லாம் விமர்சிக்கின்றது.

இந்த விமர்சனத்தைக் கண்டு அஞ்சும் பெண்கள், அரசியலில் பங்கேற்கப் பின்னடிக்கின்றனர். இவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து அவர்கள் அரசியலில் சரி நிகராகப் பயணிக்க இன்னும் அதிக காலம் எடுக்கும்.

# பெண்ணியம்

## சில புரிதல்கள் 2

**சமுதாயத்தில் ஆண்களுக்கு இணையான கருத்துச் சுதந்திரம், பொருளாதாரச் சுதந்திரம் என்பன இன்றுவரை பெண்களுக்கு முழுமையாகக் கிட்டவில்லை.**

ஆதியிலிருந்தே மானிட இனத்தின் கதை பெண்ணுடன் தொடங்குகின்றது. அப்போது அனைத்து அதிகாரமும் அவள்வசம் இருந்தது. குடும்பத்தையும் பெரும் கூட்டங்களையும் அவள் வழிநடத்தினாள். சொத்துடைமைச் சமுதாயம் மலர்ந்து, ஆணாதிக்கச் சிந்தனை தலைதூக்கிய போது பெண் ஆணால் அடிமைப்படுத்தப்பட்டாள். அது இன்றுவரை தொடர்கதையாக உள்ளது.

எதிலும் ஆண், எங்கும் ஆண் என்று அவனே யாவிலும் முன்னிலை வகித்தான். பெண்ணைப் பின்னுக்குத் தள்ளினான். பெண் உரிமைக்காகக் குரல்கொடுத்தவர்களால், பெண் தனக்கான உரிமைகள் குறித்துச் சிந்தித்தாள். பெண் விடுதலை பற்றிய பேச்சுக்கள் முனைப்புப் பெற்றன. தொடர்ந்து, பெண்ணியம் என்ற சொல் பரவலாகப் பேசப்பட்டது.

சமுதாயத்தில் ஆண்களுக்கு இணையான கருத்துச் சுதந்திரம், பொருளாதாரச் சுதந்திரம் என்பன இன்றுவரை பெண்களுக்கு முழுமையாகக் கிட்டவில்லை.

ஒரு பெண்ணின் உன்னத கடமை, கணவனுக்கும் குழந்தைகளுக்கும் பணி செய்வதே என்று தொன்மைக்காலம் முதல் கருதப்பட்டு வருகிறது. ஆணாதிக்கம் எப்போதும் உடல் சார்ந்த கருவியாக அவளை வைத்துக்கொள்ளவே பிரியப்படுகின்றது.

ஆரம்பத்தில் பெண் எப்படி இருந்தாள், பின்னர் அவள் எப்படி அடிமையானாள், ஆணாதிக்கச் சிந்தனை தலைதூக்க எவர் காரணம், ஆணாதிக்கக் கட்டிலிருந்து எப்படி மீள்வது என்பன குறித்த புரிதலையும், தெளிதலையும் அவளுக்கு ஏற்படுத்துகின்றது பெண்ணியம். பெண்ணுக்கு மட்டுமல்ல, ஆணுக்கும் அதனைப் புரியவைக்கின்றது.



"நீயும் நானும்
கரங்கள் கோர்த்து
அவனி முழுதும்
அறிவை விதைத்து
சாதிக்கலாம்...
அதற்கு, எனது
மொழியை முதலில்
புரிந்து கொள்ளேன்...."

பெண்ணின் மொழியைப் புரிந்துகொள்ளுமாறு ஆணுக்கு அழைப்பு விடுக்கின்றது இந்தக் கவிதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாசிப்பு

"வாசிப்பு" என்பது வெறும் பாடப் புத்தகங்களின் வாசிப்பை மட்டும் கருதவில்லை. அறிவுக்கு, பொழுதுபோக்குக்கான வாசிப்பை யும் குறிக்கின்றது.

இந்த வாசிப்பு எமக்குப் பல வழிகளில் நன்மை செய்கிறது. பொறுமை, தன்னடக்கம், பணிவு முதலான நல்ல பண்புகளை வளர்க்கின்றது.


புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், சவால்களை எதிர்கொள்ளல் போன்ற செயற்பாடுகளுக்குப் புத்தாக்கச் சிந்தனைகள் மிக மிக அவசியம். அதற்கு வாசிப்புக் கைகொடுக்கின்றது.



ஒரு சமூகத்தின் நீண்ட நிலைப்புக்கு அச்சமூகத்தின் இளம் சந்ததி ஆற்றல் மிக்கதாக இருப்பது அத்தியாவசியமானது. தேவையறிந்து காலத்தே செய்யும் சில செயற்பாடுகள் வளமான எதிர்காலத்தை உருவாக்கும். இதற்கு நிறைய வாசிக்க வேண்டும். தேடல் இருக்க வேண்டும். இந்த விடயத்தில் பெற்றோர்கள் விழிப்பாக இருந்து பிள்ளைகளை வாசிப்புப் பழக்கத்துக்கு ஊக்குவிக்க வேண்டும்.

பா.அஜந்தா,
வட்டு. இந்துக் கல்லூரி

# மனித மூளை



பிரபஞ்சத்தில் உள்ள உயிரினங்களிலேயே மனித மூளைதான் மிகவும் புத்திக்கூர்மை கொண்டது. மனிதர்களின் வாழ்க்கையில் 2 வயதில்தான் மூளை செல்கள் அதிகபட்சமாக இருக்கின்றன. அதே நேரம், மனித மூளை முதிர்ச்சி அடைய 20 ஆண்டுகள் தேவைப்படுகின்றன.

கருவறையில் வளரும் குழந்தையின் மூளையில் ஒவ்வொரு விநாடியும் 8,000 புதிய மூளைச் செல் கள் வளர்கின்றன. பிறந்த சில மணி நேரத்திலேயே தாயின் முகத்தைக் கண்டுணர்ந்துகொள்ளும் திறன், பிறக்கும் குழந்தைகளுக்கு உண்டு.

நமது மூளை எல்லா நேரமும் வேலை செய்துகொண்டே இருக்கிறது. ஒரு மனித மூளைக்குள் ஒரு நாளில் சராசரியாக 70,000 எண்ணங்கள் ஓடுகின்றன. உண் மையில் தூங்கும் போதுதான் மூளை அதிகமாக வேலை செய்கிறதாம். கனவும் அதன் ஒரு பகுதிதான்.

மனித மூளையில் 60 சதவீதம் கொழுப்பு இருக்கிறது என்றாலும், அது கடுமையாக வேலை செய்கிறது. மூளை 25 வோட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. இதன் மூலம் ஒரு மின்குமிழையே ஒளிவர வைக்கமுடியும். மனித மூளை என்ற உறுப்புக்கு நேரடியாக வலியை அறியும் உணர்வு இல்லை. அதனால், ஒரு மனிதர் விழித்திருக்கும்போதே அவரது மூளையில் அறுவைச் சிகிச்சை செய்ய முடியும்.

மூளையால் 50,000 மாறுபட்ட மணங்களை நினைவு வைத்துக்கொள்ள முடியும்.

செ.டயகாந்தினி

# மனிதநேயம்

■ டி.அதிசயா

தேன்நிலா எட்டாம் தரத்தில் கல்வி பயிலும் மாணவி. அன்று வெள்ளிக்கிழமை பாடசாலை முடிந்து அவள் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தாள். வீதியில் ஒரே சனக்கூட்டம். ஆளாளுக்கு ஏதோ அவர்கள் முணுமுணுத்துக் கொண்டி ருந்தனர். அவளுக்கு எதுவும் விளங்கவில்லை. கூட்டத்தின் மத்தியில் சென்று பார்த்தாள். அங்கே குருதி வெள்ளத்தில் கிடந்தார் ஒரு முதியவர். அவருக்குப் பக்கத்தில் சிதைந்த நிலையில் துவிச்சக்கரவண்டி ஒன்றும் இருந்தது.

திகைத்துப்போன தேன்நிலா பக்கத்தில் நின்ற பெரியவரிடம், "என்ன நடந்தது?" என்று கேட்டாள். "யாரோ இரண்டு பெடியள் மோட்டார் சைக்கிள்ள வந்து இந்த ஐயாவை மோதித் தள்ளிவிட்டுப் போட்டினம். அரை மணித்தியாலத்துக்கும் மேலாக இவர் இப்படியே கிடக்கிறார்" என்றார்.

உடனே தேன்நிலா, "ஐயா! உங்கள் போனை ஒருக்காத் தாங்கோ ப்ளீஸ்" என்று கேட்டு வாங்கி நோயாளர் காவுவண்டிக்கு (அம்புலன்ஸ்) அழைப்பு எடுத்தாள். மறுநொடியில் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த நோயாளர் காவுவண்டி, அந்தப் பெரியவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றது.

இரவு முழுவதும் அந்தப் பெரியவர் நினைவே அவளுடைய மனதை ஆக்கிரமித்து நின்றது. அவர் உயிருக்கு ஒன்றும் நடந்திருக்கக்கூடாது என்று அந்தப் பிஞ்சு மனம் இறைவனை இறைஞ்சியது. பிரார்த்தனை யின் அயர்வில் தன்னை மறந்து அவள் தூங்கிவிட்டாள். சனிக்கிழமை ஆதலால், அவளைத் தாயாரும் துயில் எழுப்பவில்லை.

காலம் தன் கடமையைச் செய்ய மீண்டும் ஒரு விடியலை உற்பவித்தது. பத்திரிகையில் மூழ்கிவிட்டார் தந்தை. வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்தார் தாயார். அவளுடைய தம்பிக்கும் தங்கைக்கும் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தார் பாட்டி. அச்சமயத்தில், பரிசுப் பொதியுடன் ஒரு நடுத்தர மாதுவும் இளைஞனும் அவர்கள் வீட்டுக்கு வந்தனர். "தேன்நிலாவைப் பார்க்கணும் "என்று அந்த மாது கூறினார். அத்துடன், தனது தந்தை வீதி விபத்துக்குள்ளாகி உயிருக்கு ஆபத்தான நிலையில் போராடிக் கொண் டிருந்தவேளை, நோயாளர் காவு வண்டிக்கு போன்செய்து அவரை வைத்திய சாலைக்கு அனுப்பிக் காப்பாற்றியமை பற்றி யும் கூறினார். அனைவரும் தேன் நிலாவின் செயலைப் பாராட்டிக் கொண் டிருக்கை யில், அவளும் அந்த இடத்துக்கு வந்தாள். அவளைக் கட்டித் தழுவி நன்றி சொன்னார் அந்த மாது. தாம் எடுத்து வந்த அன்பளிப்புப் பொருளையும் கொடுத்தார்.




"மனிதநேயமுள்ள ஒருவர் என்ன செய்வாரோ, அதனைத்தான் நானும் செய்தேன். எதற்காக இந்த அன்பளிப்பெல்லாம்?" என்று கூறி அதனை வாங்க மறுத்தாள் தேன் நிலா. அவளுடைய உயர்ந்த உள்ளத்தைப் பாராட்டி விடைபெற்றனர் வந்தவர்கள். அவளைப் பெற்றதற்காகப் பெருமகிழ்ச்சியுற்றனர் பெற்றோர்.

**நீதி: ஆபத்தில் ஒருவர் இருக்கும் போது, விரைந்து உதவி செய்வதுதான் மனிதநேயம்.**

# பறக்கும் யானை

அப்போதுதான் அந்த அழுகைக்குரல் கேட்டது. ஜூஜூ சுற்றிச் சுற்றிப் பார்த்தது. ஒரு தூதுவளைச் செடி முள்ளில் ஒரு சின்னஞ்சிறு பறவைக் குஞ்சு சிக்கியிருந்தது. அந்தப் பறவைக் குஞ்சினால் அசையக்கூட முடியவில்லை. ஜூஜூவுக்கு அதைப் பார்த்ததும் பாவமாக இருந்தது. மெல்லத் தன்னுடைய தும்பிக்கையினால் பக்குவமாக அந்தப் பறவைக் குஞ்சை முள்ளிலிருந்து விடுவித்தது.

அப்படியே மெல்லத் தூக்கி தூதுவளைச் செடிக்கு மேலே இருந்த மஞ்சணத்தி மரக் கிளையிலுள்ள கூட்டில் வைத்தது. இப் போது பறவைக் குஞ்சு அழுகையை நிறுத்தியது. அது மறுபடியும் கூட்டிலிருந்து தலையை வெளியே நீட்டியது. ஜூஜூ அதைப் பார்த்து, வெளியே வரக் கூடாது என்று தலையாட்டியது. பறவைக் குஞ்சு ஜூஜூவுக்கு, நன்றி.. நன்றி.. என்று கீச்சிட்டது.

அப்போது வானில் இருந்து தங்க நிறத்தில் ஒரு பெரும் பறவை அந்த மஞ்சணத்தி மரக்கிளையில் வந்து அமர்ந்தது. ஜூஜூ பிறந்தபோது பார்த்த அதே பறவை. அந்தப் பறவையின் அழகில் அப் படியே அசந்து போனது ஜூஜூ. பறவைக் குஞ்சு அந்தப் பொன்வண்ணப் பறவையிடம் நடந்ததைச் சொன்னது. அந்தப் பறவை ஜூஜூவை நன்றியோடு பார்த்தது. பின்னர் அதன் சிறகிலிருந்து ஒரு தங்க இறகைத் தன் அலகு களால் எடுத்து ஜூஜூ விடம் கொடுத் தது. அந்தத் தங்க இறகை ஜூஜூ தன் னு டைய தும்பிக்கையினால் வாங்கியதுதான் தாமதம். ஜூஜூவுக்கு சிறகுகள் முளைத்து விட்டன.

இதோ, ஜூஜூ தன்னுடைய தங்க நிறச் சிறகுகளை விரித்துப்பறந்துகொண்டிருக்கிறது. பறந்து பறந்து காட்டிலுள்ள எல்லோருக்கும் உதவிகள் செய்துகொண்டிருக்கிறது.

(முற்றும்)





## சிந்தனைக்கு–

மேன்மையான எண்ணங்களால் தான், ஒருவருக்குச் சிறப்பான வாழ்க்கை அமைகிறது. –யாரோ



பா.அகிலேஷன்,
தரம் - 2,
யாழ். புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்,



சிவகுகன் பிருத்வி,
கொக்குவில்

# கோபம்



01. கோபம், ஆன்மாவின் தீப ஒளியை அழித்துவிடும்.
02. கோபம். மூடர்களின் மூளையிலேபிறக்கிறது.
03. கோபம், ஒரு தற்காலிக புத்தி பேதலிப்பு.
04. கோபம், தேன்கூட்டிலே எறிந்த கல் போன்று பாதிப்பைத் தரும்.
05. கோபம், ஒரு மனிதனை ஏழையாக்கும்.



# கிழமைப் பாடல்


ஞாயிற்றுக்கிழமை
நகையைக் காணோம்
திங்கட்கிழமை
திருடன் கிடைத்தான்
செவ்வாய்க்கிழமை
சிறைக்குப் போனான்
புதன்கிழமை
புத்தி வந்தது
வியாழக்கிழமை
விடுதலை ஆனான்
வெள்ளிக்கிழமை
வெளியே வந்தான்
சனிக்கிழமை
சாப்பிட்டுப் படுத்தான்
அதன்பின் அவன் கதை
யாருக்குத் தெரியும்?

ம.மெரீனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா

# 18 அடி சாதியத்தின் வீரியம்




மனிதர்களுக்குப் பிடித்துள்ள மதம்தான் சாதி என்கின்றபிரிவினைவாதம். அதுயாழ்ப்பாணத்தவர்களிடம் மாத்திரம் நிலவும் ஒன்றல்ல. மனிதன்பரந்துவாழும்அனைத்துப் பகுதிகளிலும் அவன் உருவாக்கியுள்ள ஏதாவதொரு ஏற்றத் தாழ்வும், பாகுபாடும் இதன் வகையிலேயே நோக்கத்தக்கது. ஆனால் இதிலும் தமிழன் சளைத்தவனல்ல என்பது எமது சமூகத்திலிருந்து நாம் படித்துக்கொண்டவை. இவ்வாறே இந்தியாவில் முற்போக்குவாதிகள் நிறைந்த மாநிலமாகப் பார்க்கப்படும் கேரளாவில் வேரூன்றியிருக்கும் சாதியத்தையும் நாம்காணலாம். அதனை நுணுக்கமாகப்பதிவுசெய்திருக்கும் படமே 18அடி. ஆனால் எமது நாட்டில் முளைக்கத் தொடங்கும் குறும்படகாரர்கள் இவ்வாறானசமூகஅநீதிகளைப்படம்போடுவதற்குமுன்னிற்பதில்லை. 18அடி என்றபெயர் மூலம் சுட்டப்படுவது, நெடுங்காலமாகக் கேரளாவில் ஊடுருவியிருந்த சாதிய ஒடுக்குமுறையின் அளவுதான்.

கேரளாவின் திருச்சூர் மாவட்டத்தில் உள்ள வடமா கிராமத்தில் தீண்டாமைக் கொடுமை வெளிப்படையாக நிலவியிருந்த அந்தக் காலத்தில் ஒடுக்கப்பட்ட தலித்மக்கள் அந்தப்பகுதியைச்சேர்ந்த ஆதிக்கச்சாதியினருக்கு 18அடி தூரம் இடைவெளி விட்டுத்தான் நடக்கவேண்டுமாம். இன்றுஅங்கு இத்தகையசாதிய அடக்குமுறைகள்வெளிப்படையாகநடைமுறையில் இல்லைஎனினும்அதைஅடியாகக்கொண்டமிகநுட்பமானசெயல்முறைகள்இப்போதும்நடந்தேறுகின்றது என்பதைத்தான் இந்த 18அடி கூறிச்செல்கின்றது.

## உறையவைக்கும் உரையாடல்

'கரிந்தளக்கூட்டம்' என்ற இசைக்குழு ஒன்றில் இணைந்துள்ளவர்களின் வாழ்க்கை அனுபவங்களின்வாயிலாகஅங்குதற்போதும்நிலவும்சாதியத்தை 18அடிகாட்சிப்படுத்துகின்றது. ரமேஷ்எனும்பஸ்நடத்துநர் தன்னுடைய இள்வயது நண்பர்களை இணைத்து அந்த இசைக் குழுவை உருவாக்குகின்றார். இது அவர்களின் முழுநாள்வேலையல்ல. இந்த இசைக்குழுவில்உள்ளவர்கள்ஒவ்வொருவரும்தமது வாழ்வாதாரத்துக்காக வெவ்வேறு வேலைகளைச் செய்பவர்கள். ஆனால் தலித் என்பதால் சிறு பராயத்திலிருந்தே சாதிய அடக்குமுறைக்கு ஆளானவர்கள்.

ரமேஸின் தந்தைக்கும் ரமேசுக்கும் இடையில் நடக்கும் உரையாடல் பார்வையாளர்களை ஈர்க்கின்றது. ரமேஸின் தாய் நிறை மாதக் கர்ப்பிணியாக இருந்த நாள்களை நினைவுகூருகிறார் தந்தை. மதியச் சாப்பாட்டுக்கான கூலி வாங்க ஆதிக்க சாதியினர் ஒருவரின் அயல்வீட்டுவாசலில்சிதறிக்கிடந்தசாணகத்தை அள்ளிய சம்பவத்தை மகனிடம் விவரிக்கின்றார். அதைச்சொல்லும்போது அவருடைய குரல்தளர்கின்றது. வரண்டுசுருங்கியகண்களிலிருந்துநீர்வழிகின்றது. அந்தச் சம்பவம் நிகழ்ந்தபோது தன் தாயின் கருவறையில் இருந்த ரமேஷ் இப்போது கண் கலங்குகின்றார். ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த குழந்தைகள் ஏனையகுழந்தைகளுக்கிடையேசாதியஅடையாளத்தைச் சுட்டிக்காட்டுவதோடு, சாதியின் பெயர் கொண்டே வயது முதிர்ந்தவர்களையும் விளிக்கின்றார்கள்.

## உதிர்ந்த காதல்...!

மற்றுமொரு காட்சியில் அந்த இசைக் குழுவைச் சேர்ந்த ஒருவர் தன்னுடைய இளமைக் காலக் காதலை நினைவுகூருகிறார். "ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த எனது வகுப்பிலுள்ள சக மாணவர்கள், நான் எந்தச்சாதியைச்சேர்ந்தவன்எனஎன்னைக்காதலித்துவந்தபெண்ணிடம்சொன்னார்கள். அடுத்தநாளிலிருந்து எனது காதலி என்னைத்திரும்பிக்கூடப்பார்க்கவில்லை. அதுவரை அவளுக்கு என்னுடைய சாதி தெரியாது என்பது அப்போதுதான் எனக்குப்புரிந்தது" எனச்சிரிக்கின்றார்.

அவர் சிரித்தபடி அதை விவரித்தாலும் அந்தக் காட்சி சாதியத்தின் வேர் ஒன்றைக் காட்டிச் செல்கின்றது. இதேபோல ரமேஷின் தாய், இசைக் கலைஞனின் மனைவி ஒருத்தி எனப் படத்தில் இடம்பெறும் பெண்களும் சாதியத்தின் மிக நுட்பமான வெறியாட்டத்தை மென்மையாகவெளிப்படுத்துகின்றார்கள். உட்சாதிப் பிரிவுகளுக்கு இடையிலும் கால்பதித்திருக்கும் சாதிய வெறியை அவை சித்திரிக்கின்றன.

இவற்றைஓரளவாயினும்தத்ரூபமாகப்படைத்திருந்த பெருமை இதன் இயக்குநரும் ஒளிப்பதிவாளரும் எழுத்தாளருமான ரெஞ்சித்துக்கேயுரியது. சாதியம் மனிதர்களைஎத்தனை ஆழமாகஆட்கொண்டுள்ளது என்பதை அழகியலோடு வலுவாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.



# இழந்ததும்... பெற்றதும்...



பள்ளிக் காலத்தில்
பகலிரவாய்க் கற்ற
பயன் நான் இன்று
பல்கலையில்.

இழந்தவையோ...
அதிகாலை கேட்கும் ஆலய மணி.
அன்பு கலந்திட்ட அம்மாவின் தே[illegible]
கண்டிப்பும் கலகலப்பும் கலந்திட்ட
அப்பாவின் அறிவுரைகள்.
துன்பம் கண்டு நான்
துவண்டிடும் வேளை
தூக்கி நிறுத்திடும்
அண்ணனின் கரங்கள்.
அக்காவுடன் பகிர்ந்து கொள்ளும்
அன்றாட நடப்புக்கள்.
தங்கையுடன் தினம் போடும்
தடபுடல் சண்டைகள்.
அயல் வீட்டுத் திருமணம்.
ஆலயத் திருவிழா.

இத்தனையும் இழந்து இன்று
நான் பெற்றவையோ...

அதிகாலை அலறும் அலாரம்.
விரையும் விரிவுரைகள். வெறும்
ஏட்டளவேயான எழுத்தறிவு.
பாதி வெந்து மீதிவேகாத அரிசியுடன்
ஊறிப்போன கடலையும்
உழுத்துப்போன பருப்பும்
புழுக்கள் பல கலந்து
பழுதின்றிக் காய்ச்சிய
கத்தரிக்காய்க் கடைசலுடன்
காத்திருக்கும் கடை உணவு.
பாச வலை போடும் புதிய நட்புக்கள்.
பொய்யான முகங்கள்.
போலிச் சிரிப்புகள்.
கூடவே இருந்து பாதகம் புரியும்
கூட்டத்தின் துரோகத்தனங்கள்.
நீள்கின்றது....
நான் பெற்றிட்டவை பட்டியல்.
ஒன்றை இழந்து
இன்னொன்றைப் பெறு என்பார்
இத்தனையும் இழந்து விட்டேன் இன்று
பெற்றது தான் என்ன...?
விடைதேடி விரைகிறேன்.

ஜெயப்பிரசாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலத்தில் பெண்ணியக் கவிதைகள்



அனார்

சமுதாய அக்கறையும் கரிசனையும் கொண்டு தன்னுடைய பெண்ணிய வெளிப்பாட்டு மொழியோடு கவிதை எழுதியவர் பஹீமா ஜஹான். அவருடைய 'பேறுகள் உனக்கு மட்டுமல்ல' கவிதையின் சிறு பகுதி.

போரிலும் பகையிலும்
முதற் பொருளாய்
அவளையே சூறையாடினாய்
அவளுக்கே துயரிழைத்தாய்
உன்னால் அநாதையாக்கப்பட்ட
குழந்தைகளை எல்லாம்
அவளிடமே ஒப்படைத்தாய்
தலைவனாகவும்
தேவனாகவும் நீ
தலை நிமிர்ந்து நடந்தாய்

பஹீமாவின் 'வயற்காட்டுக்காவற்காரி' என்ற கவிதையில் பெண்ணுடல், மனம், அவளுடைய அனுபவங்கள், நசுக்கப்படும் உள்ளுணர்வு, அவளுடைய புறவெளி என்பவற்றைப் பதிகின்றார்.

அவளது தலைமீது
குருவிகள் தங்கிச் செல்லலாம்
அவளது தோள்மீதமர்ந்து கிளிகள் சத்தமிடலாம்
எனினும்
பட்சிகளைப் பயங்காட்டவே
ஓங்கிய தடியொன்று அவளது
கரங்களில் தரப்பட்டிருக்கலாம்
யாருடைய விளை நிலமோ அது
விதிமுறைகள் வேறில்லை
அவள் காவல் புரிந்தாகவேண்டும்...'
'...இவர்களின் விதிமுறைகள்
அவளை அசையவிட மாட்டாது
அவளைத் தாங்கி நின்ற பூமியே
அவளைப் பரிதாபமாய்ப் பார்த்திருந்த வானமே
அவளது மௌனமும் ஒரு நாள் வெடிக்குமா
குமுறுகின்ற எரிமலையாக
அதிரவைக்கும் இடிமுழக்கமாக'
என்கிறார்.



கவிதை அந்தரங்கமானது. நுட்பமானது, ஆழமானது. ஆனால் எவ்வளவு தூரம் மறைத்துப்பேச முடியும்? எவ்வளவு தூரம் தான் சத்தத்தை அடக்க முடியும்?

ஒவ்வொரு சமூகப்பெண்களும் எதிர்கொள்ளக்கூடிய சமூக, சமய நெருக்கடிகள், பிரச்சினைகள் பொதுவானதாகவும் பிரத்தியேகமானதாகவும் இருப்பது போன்று முஸ்லிம் பெண் ஒருவர் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகள் சற்றுக் கூடுதலாகக் காணப்படுகின்றன. இலக்கியத்துறையைப் பொறுத்தவரை திருமணத்தின் பிறகு தம்முடைய எழுத்துச் செயற்பாட்டைத் தீவிரமான தளத்தில் முன்னெடுப்பது அவளுக்குச் சாகவும் பிழைப்பதற்குமான போராட்டம் என்றுதான் கூற முடியும்.

அவள் எழுதுகின்ற கவிதையின் ஒவ்வொரு சொல்லையும் மதத்தோடு சேர்த்து அல்லது சந்தேகத்துக்குள்ளாக்கிக் கேள்வி எழுப்புகின்ற ஆண் எழுத்தாளர்களையும் விமர்சகர்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. மிக நுட்பமான வலைப்பின்னல்களைப் பின்னி வைத்திருக்கின்ற சமுதாயத்தில் தன்னுடைய கவிதைகளை முன்வைப்பதற்கு மனவுறுதி இரண்டுமடங்காகத் தேவைப்படுகின்றது. மூன்று தெரிவுகள் அவள் முன்னுள்ளன.

குடும்பத்தின் ஆதரவைப்பெற்றவாறு அவள் எழுத வேண்டும் அல்லது கணவனின் ஆதரவைப் பெற்றுக்கொண்டவளாக இல்லையென்றால் இவைகளை முற்றுமுழுதாக ஒதுக்கிவிட்டுத் தனித்து நின்று செயற்பட வேண்டும். இம்மூன்றையும் ஒருங்கிணைத்தபடி தனது இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபடுவது இன்று எத்தனை பெண்களைச்சாத்தியமாயிருக்கிறது? நான் கவிதை எழுதுகின்ற பெண் என்பது வெளிப்படாமல் இருக்கத்தான் எனது சூழல் ஆசைப்படுகின்றது, நிர்ப்பந்திக்கின்றது.

முஸ்லிம்பெண் எனும் அடையாளத்தைப் பேணிக்கொண்டு கவிதை எழுதும் பெண்கள் தங்களுடைய சமுதாயத்தின் முன்பு எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகள், மனநெருக்கடிகள் ஆழ்ந்த வலியைத் தரக்கூடியவை. கவிதை எழுதுகிற ஒரு முஸ்லிம் பெண் என்ற அடையாளத்திற்காக மாத்திரம் நேர்கொள்கின்ற இத்தகைய அசௌகரியங்களையும் தாக்குதல்களையும் பொறுத்தவர்களாகவே தொடர்ந்தும் கவிதைத்துறையில் ஈடுபட வேண்டியிருக்கின்றது. நானும் பிற பெண்களும் சிக்கலான பல தருணங்களை, எதிர்ப்புக்களை அதிகம் எதிர்கொண்டே வருகின்றோம்.

ஆண்களுடைய ஆதிக்கமானது பெண் எழுத்துக்களின் குரல்வளையை நசுக்குவதற்கான முன்னெடுப்புக்களை இடைவிடாது மேற்கொள்கின்றது. உலகம், சமூகம், ஆதிக்கப்பண்பாடு, குடும்ப அமைப்பு, இவற்றில் எவை பெண்ணைப் புரிந்து வைத்திருக்கின்றன. அதுவும் நேர்மையானவகையில்? அவளுடைய இறுக்கமான மூடுண்ட வாழ்வினது சிறிய ஒளித்துவாரங்களுக்கூடாகத் தெரியும் அந்தச் சுதந்திரத்தை உணர்வதற்காகப் பெண் பலியாகும் இடங்கள்தான் எத்தனை?

> ஒவ்வொரு சமூகப்பெண்களும் எதிர்கொள்ளக்கூடிய சமூக, சமய நெருக்கடிகள், பிரச்சினைகள் பொதுவானதாகவும் பிரத்தியேகமானதாகவும் இருப்பது போன்று முஸ்லிம் பெண் ஒருவர் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகள் சற்றுக் கூடுதலாகக் காணப்படுகின்றன. இலக்கியத்துறையைப் பொறுத்தவரை திருமணத்தின் பிறகு தம்முடைய எழுத்துச் செயற்பாட்டைத் தீவிரமான தளத்தில் முன்னெடுப்பது அவளுக்குச் செத்துப் பிழைப்பதற்கான போராட்டம் என்றுதான் கூற முடியும்.

## மாறுவோமா?



மானிடா
பொய்வேஷங்களை
துறந்துவிட்டு
உண்மையாய்
வாழலாம் வாடா

அன்னை தந்த பாலிலே
ஆலகாலம் ஏதடா உன்
சின்ன இதயத்திலே
சிறுமைகளும் ஏனடா

எம்மைச் சுமக்கும்
பூமியின்று
நினைவிழந்து
போகிறதே அவள்
பச்சை வண்ண ஆடைகள்
களவாடப்பட்டு போகிறதே

மரங்களை அழித்தோம்
நன்னீரின் மானத்தை
பறித்தோம்
மண்ணையும் விட்டோமா
மானபங்கப்படுத்தினோம்

இனப்பசியும் கொண்டோம்
யுத்தத்தில் இறங்கி
புத்தியையும் இழந்தோம்
அணுகுண்டு
பாவனைகளால்
அவலமாகிப் போனாமடா

பெண்வெறி கொண்டு
பிசாசுகளாய் போனோமடா
அவர்கள் உணர்வுகளை
மதித்து
உணவாக்கி கொண்டோமடா

வணிக உலகத்தில்
வன்முறைகளை
கையாண்டோம்
அரசியல் களத்திலே
வானரங்களாய்
வாழ்கிறோமடா

இத்தனை கொடுமைகள்
இனியும் வேண்டாமே

பா.பாலாஜினி
பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தென்கிழக்குத் திசையிலிருந்து...!

அனார்கலி

**வந்தார் ஹஸனலி...!**
முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டுக்கு முன்புநடந்த கட்டாய உயர்பீடக்கூட்டத்திலிருந்து முரண்பட்டுக் கொண்டு வெளியேறிய முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி. ஹஸனலி உம்றா மார்க்கக் கடமையை நிறைவேற்றச் சென்று நாடு திரும்பியுள்ளார்.

முதலில் தமது சொந்த ஊரான நிந்தவூருக்குக் கடந்த புதன்கிழமை வருகை தந்த ஹஸனலிஅன்றையதினம்இரவுநிந்தவூர் ஜும்மாப் பள்ளிவாசலில் இஷா தொழுகையில் ஈடுபட்டதன் பின்னர் பள்ளிவாசலின் முன் மண்டபத்தில் திரண்டிருந்த கட்சி ஆதரவாளர்கள், இளைஞர்கள், பொதுமக்களைச் சந்தித்து நலம்விசாரித்துக் கொண்டார்.

ஹஸனலியின் வருகையை அறிந்து அங்கு திரண்டிருந்த அவர்கள், 'நீங்கள் தற்போதைய நிலைமைகளை இங்கு பேச வேண்டும்' என வற்புறுத்தினர். 'பள்ளிவாசலுக்குள் அரசியல் பேசவிரும்பவில்லை. சிலதினங்களில் பொதுக் கூட்டமொன்றை ஏற்பாடுசெய்துள்ளேன். அதில்முழுநிலைமையையும் வெளிப்படுத்துவேன் என ஹஸனலி கூறியும் திரண்டிருந்தோர் விடாது வற்புறுத்தினர். ஆகையால் அங்கு அரை மணி நேரத்துக்கு மேல் ஹசனாலி பேசினார்.

இதன்போதுமுஸ்லிம்காங்கிரஸின்உயர்பீட உறுப்பினர்களான அட்டாளைச்சேனை பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர்அன்சில், நிந்தவூர்பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

'முஸ்லிம் காங்கிரஸ் இன்று அதன் கொள்கைகள், கோட்பாடுகளில் இருந்து விலகி சுயநலவாதிகளின்கைகளில்சிக்கியுள்ளது. தனிமனிதனின்சர்வாதிகாரப்பிடியிலுமுள்ளது. நமது கட்சியைத் தூய்மைப்படுத்தும் போராட்டமொன்றை, மக்களை அணி திரட்டி முன்னெடுக்கவுள்ளேன்' என்றவராய் முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம் ஹஸனலி அங்கு சூளுரைத்தார்.

**கேள்விக்கணை**
'முஸ்லிம்காங்கிரஸின் இடைநிறுத்தப்பட்டுள்ள தவிசாளர் பஷீர் சேகுதாவூத் முன்னெடுக்கும் முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பில் இணைந்து செயற்படும் நோக்கமுண்டா?' என முஸ்லிம் காங்கிரஸுடன் முரண்பட்டுள்ளஹஸனலியிடம்கேள்விக்கணை ஒன்று தொடுக்கப்பட்டது.

'இதுவரை அப்படியொரு திட்டமோ நோக்கமோ என்னிடமில்லை. நான் இன்றும் முஸ்லிம்காங்கிரஸில்தான்இருக்கிறேன். என்னை எவரும் வெளியேற்றமுடியாது. கட்சியின் உள்ளே இருந்தவாறே அந்தக் கட்சியைத் தூய்மைப்படுத்திவந்த எனது போராட்டம்தொடரும்' எனப்பட்டெனப்பதிலளித்தார் ஹஸனலி.

'எனினும் முஸ்லிம்களின் உரிமைகள், நலன்களை நோக்காகக் கொண்ட உயர்ந்த கொள்கை வழியே முஸ்லிம் கூட்டமைப்பு வருமானால் மட்டும் அதில் இணைவது பற்றிப் பரிசீலிப்பேன்' எனவும்அவர்கூறத்தவறவில்லை.

**கரையோரம்...! கரையோரம்...!**
'முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டின்போது அம்பாறையில் கரையோர மாவட்டக் கோரிக்கையை உட்படுத்தாமல் விட்டது தென்கிழக்கு மக்களுக்குச் செய்த பெரும்துரோகமல்லவா?' எனமுஸ்லிம் காங்கிரஸின் புதிய செயலாளர் மன்சூர் ஏ.காதரிடம் ஒரு ஊடகவியலாளர் வினாவினார்.

'அது வேண்டுமென்றே விடப்படவில்லை. அன்றிருந்த தளம்பலில் தவறுதலாகவேவிடப்பட்டுவிட்டது. அந்தக் கோரிக்கையில்எந்த மாற்றமுமில்லை' என உறுதிபடக் கூறினார்செயலாளர்மன்சூர் ஏ.காதர்

**சூடு பிடிக்கின்றது...!**
தென்கிழக்கில் முஸ்லிம் அரசியல் களம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. பசீர் சேகுதாவூதீன் முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பு விடயம், தலைமையின் துரோகத்தனமென முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள்செயலாளர்நாயகம்களத்துக்குவந்து தூக்கியுள்ள போர்க்கொடி என்பன கிழக்கு அரசியல்களத்தைக்கலக்கத்தொடங்கியுள்ளன.

அது மட்டுமா எதிர்வரும் வாரங்களில் அம்பாறைமாவட்டத்துக்குவருகைதரவுள்ளார் அமைச்சர்ரிசாத்பதியுதீன். எல்லாம்சேர்ந்தால் பொறி பறக்குமோ? முகத்திரைகள் கிழியுமோ?

**அது அவருக்கேதானாம்...!**
முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் பதவியில் செய்திருக்கின்ற மாற்றம், தற்காலிகமானதுஎனத்தலைவர்ரவூப்ஹக்கீம்கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் புதிய குண்டொன்றைத் தூக்கிப் போட்டுள்ளார்.

இந்த ஞானோதயம் தொடர்பில் தென்கிழக்கு முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்களில் பலவாறாகவும் பேச்சுக்கள் அடிபடத் தொடங்கியுள்ளன.

இதுபற்றித் தென் கிழக்கிலுள்ள மூத்த பிரதிநிதி ஒருவரிடம் வினவியபோது, அந்தச் செயலாளர் பதவி விரைவில் பிரதிச் செயலாளர் மூத்த சட்டத்தரணி நிஸாம் காரியப்பருக்குவழங்கப்படுமென்றபரமஇரகசியத்தைக் கசிய விட்டார்.

'எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டினிலே' என்றதொரு பழைய பாடல் பக்கத்துக் கடை வானொலியில் கேட்கின்றது.

**கொடியேற்ற விழா**
கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற கல்முனைக்குடிநாகூர்ஆண்டகைதர்ஹாவின் வருடாந்தக் கொடியேற்ற விழா கடந்த 27ஆம்திகதிஆரம்பமாகியது. 12தினங்கள் வரை நடைபெறும் இந்த விழா இறுதியில் கொடி இறக்கத்துடன் பெரிய கந்தூரி (அன்னதானம்) வைபவமும் துஆப் பிரார்த்தனையும் இடம்பெறும். இன நல்லுறவுக்கு எடுத்துக்காட்டாக அந்தப்பிரதேசத்திலுள்ள தமிழ் மக்களும் இந்த விழாவில் திரள்வது வழக்கமாகும்.

**துண்டுப் பிரசுரம்**
'செயலாளரை வெளியேற்றிய ஹக்கீமின் அடாவடித்தனங்களைக் கண்டிப்போம். முஸ்லிம் காங்கிரஸின் தூய்மைக்காகப் பிரார்த்திப்போம்' எனும் தலைப்பில் தென்கிழக்கின் முஸ்லிம்பிரதேசமெங்கும்துண்டுப்பிரசுரமொன்று பெருமளவில்விநியோகிக்கப்பட்டுள்ளது.

புதியகாத்தான்குடிஎன்றுமுகவரியிடப்பட்டு முஸ்லிம் மக்கள் திரள் அரசியலுக்கான செயற்பாட்டுத்தளம் எனும் அமைப்பு இந்தத்துண்டுப்பிரசுரத்தைவெளியிட்டுள்ளது. முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் கட்சிக்கிருந்த அதிகார வரையறைகளை முற்றாக ஒழித்துச் செயலாளர் நாயகத்தையும் தவிசாளரையும் வெளியேற்றிவிட்டு முழு அதிகாரங்களையும் தனது சட்டைப்பைக்குள் கொண்டு வந்திருக்கிறாரென இந்தப் பிரசுரத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்சியின் மூத்த உறுப்பினர் ஹஸனலி கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டிருப்பதானது முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் மிகக் கடுமையான எதிர்ப்பு அலைகளைத் தோற்றுவித்திருப்பதாகவும் இந்தப் பிரசுரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இன்னும் இப்படி எத்தனை துண்டுப்பிரசுரங்கள் வரவிருக்கின்றதோ? யாமறியோம்!

> "தென்கிழக்கில் முஸ்லிம் அரசியல் களம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. பசீர் சேகுதாவூதீன் முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பு விடயம், தலைமையின் துரோகத் தனமென முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம் களத்துக்கு வந்து தூக்கியுள்ள போர்க் கொடி என்பன கிழக்கு அரசியல் களத்தைக் கலக்கத் தொடங்கியுள்ளன. அது மட்டுமா எதிர்வரும் வாரங்களில் அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளார் அமைச்சர் ரிசாத் பதியுதீன். எல்லாம் சேர்ந்தால் பொறி பறக்குமோ? முகத்திரைகள் கிழியுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கை காப்பது கடமை

ந. ஜோதா

எமது நாட்டைப் பொறுத்தவரையில் அரசுக்கெதிராக மக்கள் போராட்டங்களில் குதிப்பது மலினமானஒன்று. அண்மையில் தான்ஒருமாதகாலம்வரை நீண்டிருந்தகாணிமீட்புப்போராட்டம் ஒன்று முடிவுக்கு வந்திருக்கின்றது. இது இந்த நாட்டில் நிலவும் ஆட்சியைக் கேள்விக்குறியாக்கித் தொடர்ந்தும் ஆளும் அரசுகளின் பலவீனத்தைச் சுட்டி நிற்கின்றது. ஜனநாயகத்தைஅணுகிக்கூடப்பார்க்காத அரசுகளாகஎமதுநாட்டுஆட்சிப்போக்கு நீள்கின்றது என்பதும் அது உணர்த்தும் செய்தி. இந்தப் போக்குத் தற்போது எமது அயல் நாடான இந்தியாவிலும் தலைதூக்கியுள்ளது. தொடர்ந்து சில மாதங்களாக அங்கு தொடர்போராட்டங்கள் பலவும் அரங்கேற ஆரம்பித்துள்ளன. அவை மாநிலங்கள் மீதான மத்திய அரசின் திணிப்புக்கள் என்ற எண்ணப்பாடுகளையும் தோற்றுவிக்கின்றன.

### ஏறுதழுவுதலுடன் எழுச்சி

ஜல்லிக்கட்டுஎனப்படும்தமிழர்களின்பாரம்பரிய விளையாட்டான ஏறுதழுவுதலுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் விதித்திருந்த தடையை நீக்கக்கோரி, கடந்த மாதங்களில் மெரினா கடற்கரை ஓரத்தில் இளைஞர்கள் ஒன்றுதிரண்டு கோசமெழுப்பியிருந்தனர். அந்தப்போராட்டத்தின்பயனாகஅதற்கிருந்த தடை நீக்கப்பட்டது. அதன் பின்னர் மறுபடியும்தமிழ்நாட்டில்ஒருபோராட்டம்பிரபல்யப்பட்டு வருகின்றது. அதாவது தமிழ்நாட்டின் புதுக்கோட்டை மாவட்டத்தில் நெடுவாசல் எனும் கிராம மக்கள் ஒன்றுகூடி அரசு அங்கு முன்னெடுத்துள்ளநிலத்தின்கீழிருந்து இயற்கை எரிவாயு அதாவது எண்ணெய்ப் படிமம் (ஹைட்ரோ காபன்) எடுப்பதான திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துத்தொடர்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது ஜல்லிக்கட்டுப் போராட்டத்தைவிட மிக முக்கியமானதும் கட்டாயமானதும் என்றே எண்ணத்தோன்றுகின்றது. காரணம், இது இந்த உலகின் மிகப் பெரும் சக்தியான இயற்கை சம்பந்தப்பட்டது.

### நீருக்காகப் போராடும் மக்கள்

மேற்கூறிய இயற்கை எரிவாயு அதாவது எண்ணெய்ப் படிமம் (ஹைட்ரோ காபன்) நிலத்தின் கீழ் இருப்பதை ஆராய்ந்து அதை எடுப்பதற்கான வேலைப்பாடுகளை அரசு மேற்கொண்டு வரும் நிலையில், அது நிலத்தடி நீருக்கும் விவசாய நிலத்துக்கும் பாதிப்பைத் தரும் என்று கூறி அந்தப்பகுதி மக்கள் கிட்டத்தட்ட அரைமாதங்களைத்தாண்டியும் அதற்கெதிராகப்போராடிவருகின்றனர். அந்தப் பகுதியில் இருக்கும் மேற்படி எண்ணெய்ப்படிமம் நிலத்தில் கிட்டத்தட்ட 2000 மீற்றர்களுக்குக் கீழ் படிந்துள்ளது. அதற்கு மேல் ஒரு கடினமான களிமண் படை பரந்திருக்கும். அதன்மேலேசில மீற்றர்கள்தாண்டியேநிலத்தடிநீரோட்டம்காணப்படுகின்றது. இந்த நிலத்தடிநீரை நம்பி வாழும் விவசாயநிலங்களே அங்குள்ள மக்களின் வாழ்வாதாரம். அந்த நிலத்தடி நீரின் கீழுள்ள மேற்படி எண்ணெய்ப் படிமத்தை எடுப்பதாயின் நிலத்தை எண்ணெய்ப் படிமத்தை எட்டும் வரையில் துளையிட்டுக்கிணறு அமைத்தே அந்த எண்ணையை மேலேடுக்க வேண்டும். இதன்போது ஏற்படும் எண்ணெய்க் கசிவுகளும் இதன் பின்னரும் சேதங்களால்ஏற்படும்விபத்துக்களும்நிலத்தடி நீரைப் பாழாக்கி மாசுபடுத்தி விடலாம். அதைவிட மேற்படி எண்ணெய்ப் படிமம் காலப்போக்கில் மேல்வருவது குறைவடையும்நிலையில்அதிகளவுநிலத்தடிநீரை அதிக வேகத்தில் அந்தத் துளைக்குள் உட்செலுத்தியேஎஞ்சியிருக்கும்எண்ணெய்வெளியே எடுக்கப்படுகின்றது. பிற்பாடு இந்த எண்ணெய்க்கிணறுசெயலிழக்கும்சந்தர்ப்பங்களிலும் நிலத்தடி நீர் மாசுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமுள்ளன. இதனாலேயேமக்கள்அதைஎதிர்க்கின்றனர். ஆனால், அரச தரப்பினரும் அங்குள்ள நகர வாசிகளான கல்விப்புலத்தினர்சிலரும்மக்களின் போராட்டம் நியாயமற்றது என்றே வாதிட்டு வருகின்றனர்.



### இயற்கையைக் காப்பதில் அவர்களுக்கு முன்னோடி.

நெடுவாசல் மக்கள் இன்று முன்னெடுத்துள்ள இயற்கையைப் பாழாக்கும் அரசின் மேற்படி திட்டத்துக்கு எதிரான போராட்டத்தைப் போன்று இதற்குமுன்னரேஇயற்கையைக்காக்கப்பல போராட்டங்களை எமது மக்கள் முன்னெடுத்து விட்டனர். அந்த வகையில் நெடுவாசல் மக்களுக்கு எம்மவர்கள் முன்னோடியே. இந்திய, இலங்கை அரசுகளின் கூட்டு முயற்சியாக முன்னெடுக்கப்படவிருந்த சம்பூர் அனல்மின் நிலைய நிறுவுகையைப் போராடி நிறுத்தியமை, எம்மவர்கள் இயற்கையைக் காப்பதற்காகவும் தமது வாழ்வாதாரங்களைத்தக்கவைத்துக்கொள்வதற்காகவும்செய்த மிகப்பெரியபோராட்டங்களுள் ஒன்றே. அண்மையில் ஒரு பயங்கரவாத அமைப்புக்கூட 'மரங்களைநடுங்கள்'என்று இயற்கையைக்காக்கவேண்டிஅறைகூவல் விடுத்திருந்ததையும் இவ்விடத்தில் குறிப்பிடலாம். எது எவ்வாறிருப்பினும் உலகின் அனைத்து மனிதர்களும் இயற்கையைக் காப்பதற்குத் தயக்கமின்றிப் போராட வேண்டும்.

> இந்திய, இலங்கை அரசுகளின் கூட்டு முயற்சியாக முன்னெடுக்கப்பட விருந்த சம்பூர் அனல்மின் நிலைய நிறுவுகையைப் போராடி நிறுத்தியமை, எம்மவர்கள் இயற்கையைக் காப்பதற்காகவும் தமது வாழ்வாதாரங்களைத்தக்கவைத்துக் கொள்வதற்காகவும் செய்த மிகப் பெரிய போராட்டங்களுள் ஒன்றே.



**ஜோசியர்:**
உங்களுக்கு இருந்த தோசமெல்லாம் கல்யாணத்துக்கு பிறகு நீங்கிடுச்சாமே....?

**வந்தவர் :**
ஆமா கடைசியா இருந்தது சந்தோசம். அதுவும் நீங்கிடுச்சு...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீதி தேடும் சிறைச்சாலைப் படுகொலைகள்

சந்திரசேகர ஆசாத்

**2012** ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலைகள் முழுநாட்டையுமே அதிர வைத்திருந்தன. அன்று வெலிக்கடைச் சிறைச்சாலை வளாகம் பெரும் போர்க்களமாகக் காட்சியளித்தது.

சிறைக்காவலர்களுக்கும், கைதிகளுக்கும் இடையே ஆரம்பித்த கைகலப்பு பெரும் மோதலாக உருப்பெற்றதாகவும், கைதிகள் சிறைச்சாலை ஆயுதக் களஞ்சியத்தைக் கைப்பற்றித் தாக்குதல்களை நடத்துவதாகவும் சிறை அதிகாரிகளைப் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்திருப்பதாகவும் தகவல்கள் வெளிவந்தன. அதன் பின்னர் இராணுவத்தினர் அழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள்கொண்டுவரப்பட்டதாகவும்கூறப்பட்டது. அதைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்காக இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் 27கைதிகள்கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர்.

சிறைக் கைதிகள் ஆயுதக் களஞ்சியத்தை உடைத்து ஆயுதங்களைக் கைப்பற்றிய போதும் எந்த ஒரு இராணுவச் சிப்பாயோ, சிறை அதிகாரியோ கொல்லப்படவோ, காயப்படவோ இல்லை என்பது இங்கு கவனிக்கத் தக்க விடயமாகும்.

### பலமான அரசியல் பின்னணியால் படுகொலைகள்

இவ்வாறாக நிகழ்ந்தேறிய இது ஒரு திட்டமிடப்பட்ட படுகொலை நடவடிக்கையெனவும், குறிப்பிட்ட சிலகைதிகளைக்கொல்லும் நோக்குடனேயே செயற்கையாக அங்கு குழப்பநிலை ஏற்படுத்தப்பட்டதாகவும், அதன் பின்னணியில் சில சக்திவாய்ந்த அரசியல்வாதிகள் இருந்ததாகவும் - பல்வேறு தரப்பினராலும் குற்றம் சுமத்தப்பட்டது. குறிப்பாக ஜே.வி.பி இது தொடர்பாக நீதி விசாரணை நடத்தப்படவேண்டுமெனத் தொடர்ந்தும் குரல் கொடுத்து வந்தது. எனினும் அதை அன்றைய அரசு ஒருபொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை.

எனினும் சம்பவம் நடந்து மூன்று வருடங்களின் பின்பு- மேற்படி படுகொலைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள ஓய்வு பெற்ற நீதியரசரான ரம்புவந்தன என்பவரது தலைமையில் ஒரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. அந்தக்குழு ஆறு மாதங்களில் அதற்கான விசாரணைகளை முடித்து 05.08.2015 அன்று அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்தது. அது மட்டுமன்றி அந்தப் படுகொலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சருக்கும் பரிந்துரை வழங்கியிருந்தது. தான் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் அது திட்டமிட்ட படுகொலைதான் என அந்தக் குழு தெரிவித்திருந்தது.

### குற்றவாளிகள் தண்டிக்கப்படாதது ஏன்?

அதன் அடிப்படையில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்குத் தலா இருபது இலட்சம் ரூபாவும் காயமடைந்தவர்களுக்குத் தலா ஐந்து இலட்சம் ரூபாவும் நஷ்டஈடாக வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. பாதுகாப்புத் தரப்பினராலோ அல்லது பொலிஸாராலோ மேற்கொள்ளப்படும் படுகொலைகளுக்கு நஷ்டஈடு வழங்குவது என்பது ஒரு புதிய விடயம் தான். அது மட்டுமன்றி இப்படி நஷ்டஈடு வழங்கியதன் மூலம் அரசும் அந்தக் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளது என்ற உண்மையும் வெளிப்படுகின்றது. அப்படியானால் அடுத்த நகர்வு தான் என்ன? விசாரணைக்குழுவினர் இது ஒரு திட்டமிட்ட கொலையெனத் தெளிவாக முடிவு செய்தபோது அப்போதே இரண்டு வருடங்கள் கடந்து விட்ட நிலையில் அது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

இந்தப்படுகொலைகளுக்குத் திட்டமிட்டவர்கள் யார்? இவர்களுக்கு அனுசரணை வழங்கியவர் யார்? உயர் மட்ட அதிகார பீடத்தின் கட்டளையின்றி இராணுவம் சிறைச்சாலை வளாகத்துக்குள் நுழைய முடியாது ஆகையால் அந்த அதிகாரபீடம் எது? இந்தக் கொலைகள் ஏன் நடத்தப்பட்டன? இலக்குவைக்கப்பட்டவர்கள் யார்? எவரின் தேவைக்காக இவை நடத்தப்பட்டன. இது நடத்தப் பலமான பாதுகாப்புக் கொண்ட சிறைச்சாலை சம்பந்தப்பட்டவர்கள் சிறைச்சாலை அதிகாரிகள்; படைத் தரப்பினர் பயன்படுத்தப்பட்டுள்ளனர். எனவே அரச உயர்பீடத்தின் ஆதரவின்றி இது நடந்திருக்க முடியாது. எனவே இந்தப்படுகொலைகளுக்கு நீதி கிடைக்குமா? என்பது சந்தேகமே.

### கொலையாளிகளுக்காக ஒப்பாரி வைத்த அரசு

இலங்கையின் சிறைச்சாலைகள் வரலாற்றில் இடம் பெற்ற நீதிக்குப் புறம்பான கொலைகள் ஏராளம். உயர்ந்த மதிற்சுவர்களுடனும் பெரிய கதவுகளுடனும் அமைக்கப்பட்ட சிறைச்சாலைகளுக்குள் நடந்த படுகொலைகளுக்கு நீதி கிடைத்ததில்லை. அவற்றுக்குப் பொறுப்பான அதிகாரிகள் கூடச் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதில்லை. குற்றவாளிகள் அறியப்பட்டாலும் தண்டிக்கப்படுவதில்லை. 1983ஆம் ஆண்டு வெலிக்கடைச்சிறையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலை நடவடிக்கைகளில், 50 தமிழ் கைதிகள் அடித்தும் - வெட்டியும் சிறை அதிகாரிகள் முன்னிலையிலே கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். முதல் நாளில் 34பேர் கொல்லப்பட்டனர். அவர்களின் கண்கள் தோண்டப்பட்டும் பிறப்புறுப்புகள் அறுக்கப்பட்டும் பயங்கரமான முறையில் அவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன. இப்படியான ஒரு பயங்கரம் இடம்பெற்றால் குறைந்தபட்சம் பின்னராவது ஏனைய கைதிகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கவேண்டும். மாறாக மூன்றாவது நாளும் 18 தமிழ்க் கைதிகள் குறிபார்த்துக் கொல்லப்பட்டனர். இந்தக் கோரப்படுகொலைகள் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவுமில்லை, எந்தவத நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படவுமில்லை. ஆனால் இந்தக் கொலைகளில் ஈடுபட்டவர்கள் ஏற்கனவே கொலை, கொள்ளை ஆகிய பயங்கர குற்றங்கள் தொடர்பாகத் தண்டனை அனுபவித்து வந்த கைதிகளே. இதற்குப் பின்னர் குற்றவாளிகளைப் பாதுகாப்பதற்காக அவர்களுக்கு நெடுங்கேணியில் ஒரு திறந்த வெளிச்சிறை அமைத்து, அங்கு விடப்பட்டனர். அங்கு சென்ற பின்பும் அவர்களின் வெறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாமே மணமுறிவு

எஸ்.மல்லிகா

திருமணம் முடித்த ஆணுக்கும் பெண்ணுக்கும், குடும்பப் பொறுப்பும் மனப் பக்குவமும் தாமாகவே வந்துவிடும் என்று பெரியவர்கள் கூறுவார்கள். ஆனால், குடும்பத்தில் இருந்தவரை அந்த இரண்டுமே மாதவிக்கு வரவில்லை. காரணம், இளமை ஊஞ்சலில் அவள் ஆடிக்கொண்டிருந்தாள். பள்ளிக்காலக் காதலில் மிதந்துகொண்டிருந்தாள். பாடசாலைக் காதல் படலை வரைக்கும் என்று சொல்வது போன்று படிப்பு முடிந்ததும், அவளது காதலனும் வெளிநாடு சென்றுவிட்டான். மாதவியால் அவனை மறக்க முடியவில்லை.

காலங்கள் பறந்தன. பட்டப் படிப்பும் முடித்து, நல்ல வேலையிலும் சேர்ந்தாள் மாதவி. அவளுக்குத் திருமணம் செய்துவைக்க முடிவெடுத்தனர் பெற்றோர்கள். பிடிவாதமாக அவள் மறுத்தாள். புத்திமதி கூறி, அவளது மனதை மாற்ற எண்ணினாள் அன்னை. அவள் முன், குடும்ப கௌரவத்தைக் கொண்டு வந்து நிறுத்தினார் தந்தை. வேறு வழியின்றி அவர்கள் காட்டிய வரனுக்குக் கழுத்தை நீட்டினாள்.

மாதவியின் கணவன் மிகவும் நல்லவன். அவள் மீது உயிரையே வைத்திருக்கிறான். ஆனால், மாதவி அப்படியல்ல. தன் காதலன் நினைப்பைமனத்திலும்,அவனதுசிரிப்பைக்கணவன்முகத்திலும் கண்டுகொண்டிருந்தாள். அவனது நினைவிலிருந்து அவளால் மீள முடியவில்லை. தனக்குள் ஒரு வட்டம் போட்டு, அதற்குள் வாழ்ந்து கொண்டிருந்தாள். அதனையே தனது உலகம் என்று நினைத்துக்கொண்டிருந்தாள்.

அவளது நடவடிக்கை கணவனுக்கு ஆயிரம் செய்திகளைக் கூறியது. ஏன் இவள் இப்படி இருக்கிறாள் என்று பெற்றோரிடம் கேட்டான் அவன். அவனிடம் உண்மையை மறைக்க அவர்கள் விரும்பவில்லை. அனைத்தையும் கூறினர். அவளைக் கைவிட்டுவிட வேண்டாம் என்றும் கெஞ்சினர். அவர்களுடைய பரிதாப நிலையைப் புரிந்துகொண்ட அவனும், அவர்கள் சொல்லுக்குத் தலையாட்டினான். அவளது மனதை மாற்றிக் குடித்தனம் செய்வதாக வாக்குறுதியும் அளித்தான்.

மாதங்கள் உருண்டு, மூன்று ஆண்டுகளும் பிறந்துவிட்டன. மாதவி மட்டும் மாறவில்லை. அவளுக்கு எதிலும் பிடிப்பில்லை. வேலைக்குப் போவதும், தன் உலகத்தில் மிதப்பதும், கனவைச் சுமப்பதும் என்று அவள் வாழ்ந்தாள். கணவன் எவ்வளவோ எடுத்துரைத்தும் அவள் கேட்கவில்லை. அவன் மீது தீராவெறுப்பைக் காட்டினாள்.

தனக்கு விவாகரத்துத் தருமாறு தினமும் வாதாடினாள். என்ன செய்து இவளை மாற்றலாம் என்று அவன் தினமும் மனதுக்குள் போராடினான். "இதோ பார் மாது, காதல் என்பது பூமாதிரி. அது ஒரு நாள் உதிர்ந்துவிடும். ஆனால், கல்யாணம் என்பது மரம் மாதிரி. அது நெடுநாள் வாழும். தினம் பூக்களைச் சொரியும். காதலை மறந்திடு. உனக்குக் கடவுளால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட வாழக்கையில் உன்னைக் கலந்திடு என்று கெஞ்சினான். அறிவுரை வழங்கினான். அவள் பிடிவாதமாக இருந்தாள். அவனுடைய கெஞ்சல், நாளடைவில் அவளுக்குப் பெரும் தொல்லையாக மாறியது.

அன்று அவர்களுடைய திருமண ஆண்டு தினம். ஆளுக்கொரு மூலையில் இருந்தனர் இருவரும். ஏதோ திடமுடிவெடுத்தவளாய் கணவன் அருகே சென்ற மாதவி, "இதோ பாருங்க, உங்களோட சேர்ந்து வாழ என்னால் முடியவில்லை. தயவு செய்து என்னை விட்டு விடுங்கள். நான் குழம்பிப் போயிருக்கிறேன். எந்த முடிவையும் என்னால் எடுக்க இயலவில்லை. எனக்கு இப்போது அமைதி வேண்டும். என்னை நீங்கள் நேசிப்பது உண்மையாக இருந்தால், எனக்கு விவாகரத்துத் தாங்கோ ப்ளீஸ் என்று ஆற்றாமையால் அழுதாள்.



"சரி. உனக்கு என்ன பிடிக்கும், பிடிக்காது என்பதைப் பார்த்துப் பார்த்துச் செய்தவன் நான். உனக்குப் பிடித்த விவாகரத்தையா தரமாட்டேன்? உன் சந்தோசம்தான் என் சந்தோசம். உன்னைப் பிரிந்து போகிறேனே ஒழிய, மறந்து போகவில்லை. நான் உன்னைத் தொந்தரவு செய்ததாக நீதிமன்றில் வழக்குப் போடு. என்னைப் பிடிக்கவில்லை என்று அங்கு வாதாடு. விவாகரத்துக் கிடைக்கும். உன் நினைவுகள் போதும், நான் உயிர் வாழ. இப்போதல்ல, எப்போதும் நான் உன்னை நேசித்துக் கொண்டேயிருப்பேன். என் மீது உனக்குக் காதல் வந்தால், அப்போதுவா நாம் வாழலாம் என்று கூறிப் பிரிந்தான் கணவன்.

அவள் ஆசைப்பட்டபடி கிடைத்தது விவாகரத்து. பாசையற்ற ஆசை நிறைவேறிய பின்தான், அவளது காதலன் வெளிநாட்டிலிருந்து ஊருக்கு வந்தான். கூடவே தன் மனைவி பிள்ளைகளையும் அழைத்து வந்தான். எவனுக்காகத் தன் உயிரையும் கொடுக்கச் சித்தமாக இருந்தாளோ அவன் இப்போது இன்னொருத்தியின் கணவன். அவளது புத்தி தெளிந்தது. வாழ்க்கை புரிந்தது. கணவன் மீது பாசமுமம் மலர்ந்தது. அவனுடன் சேரும் நாளுக்காகக் காத்திருக்கிறாள்.

# நீதி தேடும்

(37 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடங்கவில்லை. காட்டுக்குள் வேட்டைக்கும் தேனெடுப்பதற்கும் செல்லும் தமிழ் மக்களைக் கழுத்து வெட்டிக் கொன்று அகோரத்தாண்டவம் ஆடினர். அவர்களின் கொடுமையைப் பொறுக்க முடியாத மக்களைக் காக்க, விடுதலைப்புலிகள் அந்தச்சிறைச்சாலைவளாகத்தைச்சுற்றிவளைத்துகொலையாளிகள் அனைவரையும் கொண்டுசென்று ஒருகட்டடத்துக்குள் அடைத்து வைத்து அதற்குக் குண்டுவைத்துத் தகர்த்து விட்டனர். இப்போது அரச தரப்பு ஒப்பாரி வைக்கின்றது. காரணம் மக்கள்ளைக் கழுத்து வெட்டிக் கொலை செய்பவர்கள் இல்லாமல் போய் விட்டனர்...!

**கொலை செய்யப் புதிய உத்தி - சிறை**

சிறைக்குள் நடக்கும் படுகொலைகளுக்கு வெளியார் நீதி வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கையில் மட்டும் தான் ஏற்பட்டிருந்தது.

2012 ஆம் ஆண்டு வெலிக்கடையில் கொல்லப்பட்ட 27 பேரில்16பேருக்குமட்டுமேநஷ்டஈடுவழங்கப்பட்டது. ஏனையோர் தப்பி ஓடும்போது சுடப்பட்டனர் எனக் கூறப்பட்டு அவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு மறுக்கப்பட்டது. 1983இல் கொல்லப்பட்ட தமிழ்க் கைதிகள் எவருமே தப்பியோட முயற்சிக்கவில்லை. அவர்கள் சிறைக் கதவுகள் உடைக்கப்பட்டு, அறைகளுக்குள்ளும், வெளியே இழுத்துக் கொண்டு வரப்பட்டும் கொல்லப்பட்டனர். எனினும் அவர்களில் ஒருவருக்கேனும் நஷ்ட ஈடு வழங்கப்படவுமில்லை, நீதி விசாரணை நடத்தப்படவுமில்லை.

அது மட்டுமல்ல, பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமுக்குள் புகுந்த கிராமவாசிகளும், சிறைக் காவலர்களும் இணைந்து அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்த 27 தமிழ் இளைஞர்களை வெட்டியும் சுட்டும் கொலை செய்தனர். இது தொடர்பாக இடம்பெற்ற வழக்கில் மூவர் குற்றவாளிகளாக இனம் காணப்பட்டு அவர்களுக்கு சாவுத்தண்டனை வழங்கப்பட்டது. பின்பு அவர்கள் மேன்முறையீட்டின் பேரில் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த விவகாரத்தில் கூட குற்றவாளிகளாக இனம் காணப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டது மட்டுமன்றிப் பாதிக்கப்பட்டவர்களுக்குஎவ்விதநிவாரணமும்வழங்கப்படவில்லை. குறைந்தபட்சம் அனுதாபம் கூடத் தெரிவிக்கப்படவில்லை. சம்பவம் இடம்பெற்றபோது துள்ளிக்குதித்த மனித உரிமை அமைப்புக்கள் கூடக் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டபோது மௌனமாகி விட்டன.

வவுனியாச் சிறையிலிருந்து தங்களை அனுராதபுரம் சிறைக்கு மாற்றக்கூடாதெனக் கோரிப் போராட்டம் நடத்திய தமிழ்அரசியல்கைதிகள்வெலிக்கடைச்சிறைக்குக்கொண்டு செல்லப்பட்டுஅடித்துநொருக்கப்பட்டுச்சித்திரவதைசெய்யப்பட்டனர். அதில் ஓர் இளைஞன் பல நாள்கள் ஹோமா நிலையிலிருந்து இறுதியில் இறந்து போனான். அது மட்டுமன்றி விடுதலைகோரிப்போராட்டம்நடத்தியபலஅரசியல்கைதிகள் அடித்துநொறுக்கப்பட்டுக்கொல்லப்பட்டனர்.

**தமிழர் என்றால் எதுவுமில்லை...**

இப்படியானசிறைச்சாலைப்படுகொலைகள்தொடர்பாகஎவ்வித விசாரணைகளும் நடத்தப்பட்டதுமில்லை. கொல்லப்பட்டவர்களுக்குஎவ்விதநஷ்டஈடும்வழங்கப்பட்டதுமில்லை. ஒருநீதிமன்றத்தின்தீர்ப்பின்றிஎவருக்கும்சாவுத்தண்டனை நிறைவேற்ற எந்தச் சிறைச்சாலைக்கும் அதிகாரம் இல்லை. ஆனால் இலங்கையில் மட்டும் தமிழ் கைதிகள் மீது சாவுத் தண்டனையைநீதிபதிகளின்தீர்ப்புஎதுவுமின்றி, ஜனாதிபதியின் அங்கீகாரமின்றி நிறைவேற்றும் அதிகாரம் உண்டா என்ற கேள்வி எழுகின்றது. சிங்களக் கைதிகள் சிறையில் கொல்லப்பட்டால் விசாரணை நஷ்ட ஈடு எனச் சில வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால், தமிழ் கைதிகளின் கொலைகளில் மட்டும் இவை புறமொதுக்கப்படுகின்றன.

இலங்கை ஒரே நாடு எனவும் இலங்கைக்கென ஒரே அரசியலமைப்புத்தான் உண்டெனவும், அது சிங்கள, தமிழ், முஸ்லிம் என எல்லா இனமக்களுக்கும் பொதுவான தெனவும் சிங்கள அரசியவாதிகளால் கூறப்படுகின்றது.

ஆனால் இலங்கைச் சிறைச்சாலைகளிலும், நீதி வழங்குவதிலும் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் வெவ்வேறு சட்டங்களும் நீதி நடவடிக்கைகளும் உள்ளனவா என்ற கேள்விஎழுவதில்ஆச்சரியப்படஎதுவுமில்லை. தமிழ்க்கைதிகளின்படுகொலைகள்தொடர்பானஎதிர்விளைவுகள்சிங்கள அரசியலில்பெரும்பாதிப்பைஏற்படுத்திவிடப்போவதில்லை. பன்னாட்டு மனித உரிமை அமைப்புக்கள் ஏதாவது குரல் கொடுத்தால் அந்தக் கொலைகளைப் பயங்கரவாத எதிர் நடவடிக்கை என்ற போர்வை போர்த்தி மறைக்கும் உத்தியும் அவர்களின் கைவசமுள்ளது.

எப்படியிருந்தபோதிலும் இலங்கை இராணுவத்தினர், பொலிஸார் மேற்கொள்ளும் படுகொலைகளுக்கு நீதியைத் தேட முடியாத நிலை எவ்வாறு உள்ளதோ அவ்வாறே சிறைச்சாலைப்படுகொலைகளும் புதைகுழிகளில் போட்டுமூடப்பட்டுவிடும். அவற்றின் நீதிக்கான தேடல் என்பது எந்த அரசு ஆட்சிபீடத்திலிருந்தாலும் அது கனவாகவே அமைந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> இலங்கையில் பொலிஸ் காவலுக்குள் உட்பட்டிருக்கும் கைதிகளுக்குக் காவல் காலப்பகுதியிலேயே முடிவுத்திகதி குறிக்கப்படுவது மற்றும் ஆயுள் முடிவுறுத்தப்படுவது பன்னாட்டுக்கும் தெரிந்த இரகசியம்.

# தொடரும் காவல் வதை!

ஸ்டோஸ்வாமி

கடந்த திங்கட்கிழமை களுத்துறையில் இடம்பெற்றிருந்த சிறைச்சாலை வாகனம் மீதான தாக்குதலுக்குப் பொலிஸாரே பொறுப்புக் கூற வேண்டும் எனச் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தே. ம. சுவாமிநாதன் குற்ற ஞ்சாட்டியிருக்கின்றார். குறித்த சம்பவத்தில் இரு சிறைக்காவலர்கள் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டிருந்தனர். பொலிஸார் தகுந்த பாதுகாப்பு வழங்கத் தவறியமையினாலேயே சிறைக் கைதிகளை நீதிமன்றுக்கு அழைத்துச் செல்லும் போது இந்தச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவித்திருக்கின்றார் அவர். பாதாள உலகக் குழுவொன்றின் தலைவரான சமயங் உட்பட அந்த வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருந்த ஏனைய கைதிகளையும் பொலிஸ் உடையணிந்து வந்த ஆயுதக்குழுவினர் சுட்டுக் கொலை செய்த மேற்படிச் சம்பவத்தை அடுத்து, கைதிகளை நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லும்போது பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் உதவியைப் பெற்றுக்கொள்ளவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

## உலகறிந்த இரகசியம்!

பேலியகொட பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த ஒரு உதவிப் பொலிஸ் பரிசோதகர் உட்பட ஐந்துபொலிஸார்கொழும்புகுற்றத்தடுப்புப்பிரிவின் விசேட குழுவால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் விசாரணைக் காலத்தில் உயிரிழந்ததையடுத்து குறித்த காலப்பகுதியில் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்பதாலேயே அவர்கள் கைதாகியிருக்கிறார்கள். ஸியாமன் விக்கிரமாராச்சி எனும் 42வயதுடைய நபர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அப்போது ஏற்பட்ட சுகவீனம் காரணமாகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது அங்குசாவடைந்ததாகப்பொலிஸ்தரப்பில்தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையின்படி, கைதி, வதை காரணமாக ஏற்பட்ட உட்காயக் குருதிப்போக்காலேயே சாவடைந்துள்ளார் என்று தெரியவந்திருக்கின்றது. இதனைவிட அவருடைய உடலில் கடுமையான காயங்கள் காணப்பட்டமையும் அறிக்கையிடப்பட்டிருக்கின்றது. இதனையடுத்தே சம்பந்தப்பட்ட காவல்துறையினர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இலங்கையில் பொலிஸ் காவலுக்குள் உட்பட்டிருக்கும் கைதிகளுக்குக் காவல் காலப்பகுதியிலேயே முடிவுத்திகதி குறிக்கப்படுவது மற்றும்ஆயுள்முடிவுறுத்தப்படுவது பன்னாட்டுக்கும் தெரிந்த இரகசியம். இதனால் தான் ஐக்கியநாடுகள் சபை உள்ளிட்ட மனித உரிமை ஆர்வலர் அமைப்புக்கள் மனிதாபிமானம் தொடர்பாக இலங்கைக்கு அடிக்கடி இடித்துரைப்பதுண்டு.

## சித்திரவதை தொடர்பான ஐ.நாவின் அறிக்கை

கடந்த ஆண்டு சித்திரை மற்றும் வைகாசி மாத காலப்பகுதியில் இலங்கைக்கு பயணம் செய்திருந்த ஐ.நாவின் சித்திரவதை தொடர்பான விசேட அறிக்கையாளர் ஜுவன் மென்டிஸின் அறிக்கை, இந்த ஆண்டு தை மாதத்தில் தான் வெளியாகியிருந்தது. இலங்கையில் தங்கியிருந்த காலப்பகுதியில் அவர் பாதுகாப்புத் தரப்பு உள்ளிட்ட பல்வேறுதரப்புக்களைச்சந்தித்திருந்ததுடன் சித்திரவதையுடன் சம்பந்தப்பட்ட முகாம்கள் உள்ளிட்ட பல இடங்களுக்கும் சமுகம் தந்திருந்தார். அவரது பயணத்தின்துபோது அவர் கண்டறிந்து வெளிப்படுத்திய ஆலோசனைகள் உள்ளடங்கிய அறிக்கை, தற்போது பன்னாடுகளின் கவனிப்பைப் பெற்றிருக்கின்றது. ஐரோப்பிய நாடாளுமன்றிலும் ஐ.நா.வின் மனித உரிமைகள் சபையிலும் குறித்த அறிக்கையின் உள்ளடக்கம் கருத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றது. இலங்கையின் நீதித்துறை சுயாதீனமாக இயங்க வைக்க வேண்டியிருப்பதன்கட்டாயத்தையும்அதன்பலவீனத்தையும் மென்டிஸின் அறிக்கை அங்கு வெளிப்படுத்தியிருக்கின்றது.

## வருத்திப்பெறும் வாக்குமூலங்கள்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ்தடுப்புக்காவலில்உள்ள கைதிகளைச் சித்திரவதை மூலம் வருத்தி வாக்குமூலம் பெறும் சம்பிரதாயம் ஒரு வழமையான நிகழ்வென மென்டிஸின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இலங்கை நீதிபதிகள், பொலிஸார் சமர்ப்பிக்கும் தடயங்களை மட்டுமே கருத்தில் கொண்டு, தீர்ப்புக்கள் வழங்கப்படுவதாகத் தெரிவித்திருக்கும் அறிக்கை, பலசந்தர்ப்பங்களில்வாக்குமூலமே தீர்ப்புக் கான பிரதான சான்றுப்பொருளாகக் கருதப்படுவதையும் பதிவுசெய்யத்தவறவில்லை. சட்டத்தின் காவலர்களான பொலிஸார் 'பயிர் மேய்ந்த சம்பவங்கள்' பல பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டு ஐப்பசி மாதத்தில் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர்மீது நடத்திய துப்பாக்கிச்சூடு, எம்பிலிப்பிட்டியவில் வைபவம் ஒன்றில் பங்குகொண்டிருந்த இளைஞன் பொலிஸாரின் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் சேயா சௌதெமி விவகாரம் என்று பல வில்லங்கங்களை எதிர் கொண்டிருந்தது காவல்துறை.

## சுன்னாகப் பொலிஸாரின் புதுவித வதை

கடந்த ஆண்டில் புஸல்லாவ பொலிஸ் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த கவிராஜ் ரவிச்சந்திரன் எனும் இளைஞர் பொலிஸ் காவலில் உயிரிழந்ததை அடுத்து பொலிஸ் நிலைய சிறைக்கூடங்களைக் கண்காணிப்பதற்காக ஒளிப்பதிவுக் கருவிகளைப் பொருத்துவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அதிலும் முதற்கட்டமாகநாடுமுழுவதிலுமுள்ள460பொலிஸ்நிலையங்களில் 100 பொலிஸ் நிலையங்களில் இந்தத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தத்திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் குறித்த திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான அவசியத்தை வலுவாக வலியுறுத்தியிருக்கின்றது சுன்னாகம் பொலிசார் புதுவிதமாகக் கொடூரமாகச் சித்திரைவதை செய்துகொன்றசுமணனின் கொலை வழகக்கு. பொலிஸ் காவலில் கைதிகள் சாவடைந்தாக கொல்லப்பட்டதாகப் பல சம்பவங்கள் பதிவாகியுள்ள போதும் தொடர்ந்தும் நமது நாட்டில் பொலிஸ் தடுப்பில் உள்ள கைதிகளிடம் அளவுக்கு மீறிய சித்திரவதை பிரயோகிக்கப்படுகின்றமை நீள்கின்றது. தேசிய பொலிஸ் ஆணைக்குழு இது விடயத்தில் விழித்துக்கொள்ளாதவரை காவல்துறையில் காவல் வதை தொடரும் ஒன்றாகவே நோக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா...!

எம்.ஐ.முபாறக்



## ராஜிதவிடம் சரணடைந்த மகிந்த

அமைச்சர் ராஜித சேனாரத்ன நாடாளுமன்றத்துக்குச் சென்றுகொண் டிருக்கும்போது ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க சுடப்பட்ட செய்தி அவரது கைபேசிக்கு வருகின்றது. நாடாளுமன்றம் சென்றதும் லசந்த அனுமதிக்கப்பட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் அனில் ஜயசிங் கவுக்கு அழைப்பை மேற்கொண்டதும் இன்னும் ஓரிரு நிமிடங்கள்தான் அவர் உயிருடன் இருப்பார் என்று மருத்துவரும் கூறுகின்றார். ஆத்தி ரமடைந்த ராஜித பேயாட்டம் ஆடத் தொடங்கினார்; மகிந்த அரசை தாறுமாறாகத் திட்டத் தொடங்கினார். ஊடகவியலாளர்களை இவ்வாறு அடக்கும் இந்த அரசில் இனி நான் இருக்கமாட்டேன். இப்போதே விலகப் போகின்றேன் என்றும் கூறினார். அப்போது அமைச்சர்கள் பலர் ராஜி தவைச் சூழ்ந்து கொண்டனர். அன்றைய தினம் பிற்பகல் இரண்டு மணிக்கு ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி அதில் இதுபற்றி அறிவித்துவிட்டு அரசில் இருந்து விலகப் போவதாக அவரைச் சுற்றி நின்ற அமைச்சர்களிடம் கூறி ஊடகவியலாளர்களை அழைப்பதற்கான வேலையிலும் இறங்கத் தயாரானார்.

இந்தச் செய்தி அங்கு நின்ற அமைச்சர் ஒருவரின் ஊடாக எப்படியோ மகிந்தவுக்கு எத்திவைக்கப்பட்டுவிட்டது. உடனே மகிந்தவிடமிருந்து வந்தது தொலைபேசி அழைப்பு. இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் அமைச்சர் ஒருவர் அரசை விட்டு விலகினால் அது அரசுக்கு நெருக்க டியை ஏற்படுத்திவிடும் என்பதால் ராஜிதவிடம் சரணடைந்த மகிந்த 'என்னை அறியாமலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. லசந்த உங்களுக்கும் நண்பன் எனக்கும் நண்பன். இது தொடர்பில் தேடிப் புார்த்துக் குற்றவாளிகளை நிச்சயம் தண்டிப்பேன். அரசை விட்டு விலகி என்னைச் சிக்கலுக்குள் தள்ள வேண்டாம். என்னை நம்புங்கள். இரு வரும் சேர்ந்து குற்றவாளிகளைத் தேடுவோம்' என்று உறுதியளித்தார். அதன் பின்னர் ராஜித அவரது முடிவை மாற்றிக்கொண்டார். ஆனால், இறுதிவ ரைக்கும் மகிந்த அந்த வாக்குறுதியை நிறைவேற்றவே இல்லை.



## விமலின் முடியைத் தடவிப் பார்த்தது ஏன்?

ஜே.வி.பி. மிகவும் எளிமையான கட்சியாகும். பஸ் களில் பயணிப்பது சாதாரண கடைகளில் சாப்பிடு வது என மக்களுடன் ஒன்றித்ததாகவே அந்தக் கட்சி உறுப்பினர்களின் அரசியல் அமைந்திருக்கும். ஆனால், இவ்வாறான செயற்பாடுகள் அனைத்தி லும் இருந்து மாறுபட்டவர்தான் விமல் வீரவன்ச. அவர் பாவிக்கும் ஆடைகள், தலைக்கான 'ஜெல்' வகைகள் மற்றும் கைபேசிகள் போன்றவை விலை உயர்ந்தவையாகும். முடிவெட்டுவதுகூட 'வி.ஐ.பி' களுக்கான சலூன்களில்தான். விமலின் 'ஹெயார்' ஸ்ரைலும் அதற்கு பூசும் 'ஜெல்' வகைகளும் எப் போதும் பிரபல்யமாகப் பேசப்படும். இது இவ்வா றாக இருக்க, சீனாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காக ஆளுங்கட்சி மற்றும் எதிர்க் கட்சி எம்.பிக்கள் பலர் சென்றிருந்தனர். அவர்களுள் விமலும் ஒருவர். விமலின் முடி அழ கைப்பற்றி அதிகம் கேள்விப்பட்ட ஆளுங்கட்சியைச் சேர்ந்த புதிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் விமல் என்ன வகையான ஜெல் பாவிக்கின்றார் என்று அறிவதற்கு ஆசைப்பட்டாராம். விமல் தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்த நேரம் பார்த்து அந்த எம்.பி விமலின் பின்னால் சென்று விமலுக்குத் தெரியாமல் முடியை மெதுவாகத் தடவிப் பார்த்தாராம். ஆனால், அவர் எதிர்பார்த்தது போல் ஜெல் எதுவும் பூசி இருக்கவில்லையாம். இந்த விடயத்தை அந்த எம்.பியின் ஊடாகவே பின்னர் அறிந்துகொண்ட விமல் இதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கினார். அரசியல் இலாபம் தேட முற்பட்டார். இந்தச் சம்பவத்தை ஆதா ரமாக வைத்தே தான் ஆடம்பரப் பிரியன் அல்ல என்றும் தன் மீது அரசியல் எதிரிகள் திட்ட மிட்டே சேறுபூசுகின்றனர் என்றும் கூறிவந்தார். விமலின் நல்ல நேரம் அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் ஜெல் பூசி இருக்கவில்லை என்று விவரம் அறிந்த மற்றவர்கள் கூறுகின்றனர்.



## ரூ.15 இலட்சம் வரி செலுத்தும் எம்.பி...!

ஒன்றுமில்லாமல் வந்து கோடி கோடியாகப் பணம் சம்பாதிப்பதற்கான ஒரே யொரு இலகுவான வழி அரசியல்தான். சிலர் பணக்காரர்களாக அரசியலுக்குள் நுழைந்து செல்வத்தை மேலும் பெருக்கிக்கொள்கின்றனர். சிலர் வெறுங்கையு டன் வந்து கோடீஸ்வரராகின்றனர். அவ்வாறு ஓரளவாக பணக்காரராக அரசிய லுக்குள் நுழைந்தவர்தான் முன்னாள் அமைச்சரும் தற்போதைய மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்தானந்த அளுத்கமகே. 19 வயதில் நிதி நிறுவனம் ஒன்றில் விற்பனைப் பிரதிநிதியாக வேலைக்குச் சேர்ந்த மகிந்தா னந்த இப்போது கோடீஸ்வரர்களில் ஒருவர். ஐந்து நிறுவனங்களுக்குச் சொந்தக் காரர். கொழும்பு கின்ஸி வீதியில் 2 கோடி 70 லட்சம் ரூபா பெறுமதியான ஒரு வீடும், கொஸ்வத்தையில் இன்னொரு வீடும் அவருக்கு உண்டு.

இங்கிலாந்தில் ஒரு வீடு இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. ஆனால், அதை அவர் மறுக்கின்றார். 40 வருடங்களாக ஜப்பானில் பெரும் வர்த்தகராகக் கொடி கட்டிப் பறக்கும் அவரது சகோதரர் விஜயானந்த அளுத்கமவின் வீடுதான் அது எனக் கூறுகின்றார். இவ்வாறு சாதாரண நிலையில் இருந்து செல்வந்தராக உயர்ந்த இவர் அரசுக்கு வருடாந்தம் செலுத்தும் வருமான வரி எவ்வளவு தெரி யுமா? 15 இலட்சம் ரூபா. அதாவது, எம்பிப் பதவியால் அவர் வருடாந்தம் பெறு கின்ற சம்பளத்தை விடவும் இது அதிகமாகும் என்று அவரே பெருமைப்பட்டுக் கொள்கின்றார்.



## பாராட்டுக்குரிய ரட்னசிறி

அண்மையில் காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் ரட்னசிறி விக்ரமநாயக்க ஒரு கம்பீரமான ஆளுமைமிக்க அரசியல்வாதி. அவரது பேச்சு வெட்டு ஒன்று துண்டு இரண்டாகவே இருக்கும். அவரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு ஆம், இல்லை என்ற ஒற்றைச் சொல்லில்தான் பதிலளிப்பார்.

ஏனைய அரசியல்வாதிகள் போல் சுற்றி வளைக்கும் பூசி மழுப் பும் பாணி அவரிடம் இருந்ததில்லை. விடயத்துக்குப் பொருத்த மில்லாதவற்றை அவரது பேச்சில் இணைக்கமாட்டார். இவை தவிர இன்னோர் ஆளுமையும் அவரிடம் இருந்தது. நேரத்தை முகாமைத்துவம் செய்வதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரி காவை மிஞ்ச உலகில் எவருமில்லை என்றே சொல்ல வேண் டும். காலையில் இருக்கும் நிகழ்வுக்கு மாலையில் வந்து சேரும் அளவுக்கு அவர் கெட்டிக்காரி.

ஆனால் உரிய நேரத்தில் வந்துவிடும் ரட்னசிறி சிறிது நேரம் பார்த்துவிட்டு எழுந்து சென்றுவிடுவார். அவ்வாறு செல்லும்போது, 'நான் உரிய நேரத்துக்கு வந்தேன். நீங்கள் வரவில்லை. ஆகவே நான் செல்கின்றேன்' என்று சந்திரிக்காவுக்குக் கடிதம் ஒன்றை எழுதிவைத்துவிட்டுத்தான் செல்வார்.

ஒரு நாட்டின் தலைவர் எதைச் செய்தாலும் முகஸ்துதிக்காக அவற்றைச் சரிகாணும் அரசியல்வாதிகள் மத்தியில் ரட்னசிறி யின் இந்த ஆளுமை உண்மையில் பாராட்டுக்குரியதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்களின் பாதுகாப்புக்காக வரலட்சுமியின் புதிய அமைப்பு

பெண்களின் பாதுகாப்புக்காக சேவ் சக்தி என்ற அமைப்பை ஆரம்பிக்க வுள்ளார் நடிகை வரலட்சுமி. மகளிர் தினமான மார்ச் 8- ஆம் திகதி இந்த அமைப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து வரலட்சுமி தெரிவித்ததாவது பாவனாவுக்கு நடந்த விடயத்துக்கு எல்லோராலும் கருத்துச் சொல்லமுடிகிறது. ஆனால் அண்மையில் குழந்தைகளும் பாலியல் தொல்லைக்கும் வன்முறைக்கும் ஆளாகியுள்ளார்கள். இவர்களுக்காக யார் குரல் கொடுப்பது? எனவே பெண்களின் பாதுகாப்புக்காக சேவ் சக்தி என்கிற அமைப்பை ஆரம்பிக்க வுள்ளேன். சினிமாவில் உள்ள பெண்களுக்கு மட்டுமில்லாமல் அனைத்துத் தரப்பு பெண்களுக்கும் இந்த அமைப்பு [illegible]ம்-என்றார்.

**மறுபடியுமா....?**

பார்த்தி... இது என்ன வீதியப்பா?
தார் வீதி
ம்க்க்ஹும்.. இந்த வீதி எங்க போகுதுன்னு கேட்டேன்?
எங்கேயும் போகலை.. இங்க தான் இருக்கு
ம்ம்... சரி.. நான் தெளிவா கேக்கிறேன். இந்த வீதி எந்த ஊர்களுக்கு நடுவில இருக்கு?
உள்ளூருக்கும் வெளியூருக்கும் நடுவில இருக்கு.
ப்ப்ச்ச்.. இந்த தார் வீதிக்கெண்டு ஒரு பேரு வச்சிருப்பாங்கல்ல.. அதச் சொல்லுயா..
அப்படித் தெளிவா கேளு.. அப்போதானே சரியாச் சொல்ல முடியும்...
அதத் தானே தெளிவா முதல்லருந்து கேட்டுக்கிட்டு இருக்கேன். என்ன கேட்டே?
இது என்ன வீதி?
இது தார் வீதி.
மறுபடியுமா...?

WhatsApp



2 மாசமா மணிக்கணக்குல மனுசங்கள வரிசைல நிக்க வச்சு துன்புறுத்துனதை விடவா...



மாடுகளை துன்புறுத்திட் போறாங்க? அவுத்துவிட சொல்லுங்க ஜட்ஜய்யா...!

என்னங்க மாப்பிள்ளை பொங்கலுக்கு வர்றாரா...



அவன் பழைய சோத்துக்கே வருவான், பொங்கலுக்கு வராமல் இருப்பானா...

பெரிய ஜோக்குக்கு கொஞ்சமா சிரிக்கிற பொண்ணும், சின்ன விடயத்துக்கு கூட அதிகமா கோவப்படுகிற பையனும்...



லவ் பெயிலியர் ஆனவர்கள் என்று நம் சங்கம் கண்டுபிடித்துள்ளது...!

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2 | | | | |
| | | 4 | | | | | 5 | 6 |
| 8 | 6 | | 3 | | | 4 | | |
| | 5 | | | 4 | 7 | 3 | 8 | |
| | | | | | | | | |
| | 2 | 7 | 9 | 3 | | | 6 | |
| | | 8 | | | 2 | | 4 | 3 |
| 1 | 9 | | | | | 8 | | |
| | | | | 1 | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 3 | 4 | 2 | 6 | 1 | 7 | 8 |
| 2 | 4 | 1 | 3 | 8 | 7 | 6 | 9 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 1 | 5 | 4 | 2 | 3 |
| 1 | 3 | 7 | 6 | 4 | 8 | 9 | 5 | 2 |
| 4 | 2 | 6 | 5 | 3 | 9 | 8 | 1 | 7 |
| 8 | 5 | 9 | 1 | 7 | 2 | 3 | 4 | 6 |
| 3 | 8 | 5 | 7 | 9 | 4 | 2 | 6 | 1 |
| 7 | 1 | 4 | 2 | 6 | 3 | 5 | 8 | 9 |
| 9 | 6 | 2 | 8 | 5 | 1 | 7 | 3 | 4 |

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிலும் நிதானமாக இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். இஷ்ட தெய்வ வழிபாடு நிம்மதிக்கு வழிவகுக்கும்.

**இடபம்:** மனதில் நேர்மை எண்ணம் அதிகரிக்கும். நற்செயலில் ஈடுபட்டு சமூகத்தில் [illegible] பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர் பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் ஆதரவைப் பெறுவர்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு நிறைவேற தாமதம் ஆகலாம். சிறிய பணி கூட சுமை போல தோன்றும். தொழில், வியாபாரம் சிறக்க கூடுதல் முயற்சி தேவை. உறவினரால் செலவு உண்டாகும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வேண்டாம்.

**கடகம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி வியப்பூட்டும் வகையில் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். மனைவி, பிள்ளைகள் விரும்பிக் கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள்.

**சிங்கம்:** மனதில் இருந்த கவலை தீரும். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள், உறவினர்களின் வருகையால், மகிழ்ச்சி நிலைக்கும்.

**கன்னி:** நண்பர்கள் எதிர்பார்ப்புடன் அணுகுவர். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பு தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடம்பரப் பொருள்களை வாங்குவர். மாணவர்கள் கண்ணும், கருத்துமாகப் படிப்பர்.

**துலாம்:** எண்ணத்திலும், பேச்சிலும் கட்டுப்பாடு அவசியம். தொழிலில் விற்பனையும், லாபமும் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். பிள்ளைகளின் வழியில் செலவு ஏற்படலாம்.

**விருச்சிகம்:** துவங்குகிற பணி முழுஅளவில் வெற்றி பெறும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். லாபம் பன்மடங்கு உயரும். பெண்களுக்கு குடும்பத் தேவை தாராள செலவில் நிறைவேறும்.

**தனுசு:** செயல்களில் சுறுசுறுப்பு நிறைந்திருக்கும். அரசு தொடர்பான உதவி பெற அனுகூலம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சியால் ஆதாயம் கூடும்.


**மகரம்:** பணியில் கூடுதல் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாப்பது நல்லது. மிதமான லாபம் கிடைக்கும். பெண்களுக்கு பிள்ளைகளின் வழியில் பணத்தேவை அதிகரிக்கும்.

**கும்பம்:** முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள சிரமங்களை உடனடியாக சரி செய்வது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். நண்பரால் உதவி உண்டு.

**மீனம்:** அலைச்சல் தந்த பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனம் நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# முகத்தின் பளிச்தோற்றத்திற்கு விரல் யோகா

முகத்தின்பளிச்தோற்றத்திற்குவிரல்யோகாவைஎப்படிசெய்வதுஎன்றுகீழேவிரிவாக பார்க்கலாம்.

வலது கையை நீட்டி கட்டை விரலை உயர்த்தி இரண்டு கண்களுக்கும் இடையில் பிடித்துக் கொள்ளவும். வலது பக்கமாககட்டைவிரலைமுடிந்தஅளவுக்குதிருப்பவும். தலைதிரும்பக் கூடாது.

கண்கள் மட்டுமே கட்டை விரல் செல்லும் திசை நோக்க வேண்டும். அதே மாதிரி இடது கை பெரு விரலை வைத்துக் கொண்டு இடது பக்கமாக பார்வையை முடிந்த அளவுக்கு கொண்டு செல்லவும்.

முடிந்ததும் மேலிருந்து கீழும் கீழிருந்து மேலும் பிறகு கண்களுக்கு நெருக்கமாகவும், தள்ளி வைத்துக் கொண்டும் அதோ மாதிரி பார்வையை சுழற்றவும். இது கண்களுக்கான அற்புதப் பயிற்சி. கண்களை சுற்றியுள்ள கரு வளையங்கள் சுருக்கங்கள் மறையும், கண் பார்வை தெளிவாகும்.

தைராய்டு பிரச்சினை உள்ளவர்களின் முகம் எப்போதும் சோகமாக காணப்படும் பொலிவற்ற அவர்களின் முகத்தை பள பளப்பாக மாற்ற விரல் யோகா சிகிச்சை மிகவும் பய ன்தரும்.

பெருவிரலையும்ஆட்காட்டி விரலை யும் சேர்த்த வைத்துக் கொண்டு சம்மணமிட்டபடி அமரவும்.

**(தொடரும்)**

## நாளை
**மாசி-22**
**திங்கட்கிழமை -06.03.2017**
**திதி: நவமி பி.இ. 03.55**
**நட்சத்திரம்: மிருகசீரிடம் மு.இ.09.31**
**சுபநேரம்:12.25-01.55 வரை**
**ராகுகாலம்:07.55-09.25 வரை**
**கச்சியப்பசிவாச்சாரியார் குருபூசை**



# நல்லெண்ணெயை வெறும் வயிற்றில் குடிக்கலாமா?



எள் கொண்டு தயாரிக்கப்படும் நல்லெண்ணெயில் எண்ணற்ற நன்மைகள் அடங்கியுள்ளது. இதற்கு அதில் நிறைந்துள்ள விற்றமின்களும், கனிமச்சத்துக்களும் தான்காரணம். அதிலும்நல்லெண்ணெயில்விற்றமின், ஈ, விற்றமின்பி6, மக்னீசியம், காப்பர், கல்சியம், இரும்புச்சத்து போன்றவை வளமாக நிறைந்துள்ளது.

இது உடலுக்கு ஆரோக்கியத்தை அள்ளித் தருவதால் தான்என்னவோ, எம் முன்னோர்கள் இதனை நல்லெண்ணெய் என்று அழைக்கின்றனர் போலும். இந்த நல்லெண்ணெயை சமையலிலும் சேர்க்கலாம் அல்லது காலையில் வெறும் வயிற்றில் 1 தேக்கரண்டி குடித்தும் வரலாம். இப்போது நல்லெண்ணெயை எடுத்துக் கொள்வதன் மூலம் பெறும் நன்மைகளைப் பற்றிப் பார்ப்போம்.

நல்லெண்ணெயைகாலையில்வெறும்வயிற்றில்சிறிது குடித்தால், மலச்சிக்கல் பிரச்சினை நீங்கும்.

நல்லெண்ணெயில் லெசித்தின் என்னும் பொருளும், லினோலிக் என்னும் அமிலமும் இருப்பதால், இரத்தத்தில் உள்ள அதிகப்படியான கெட்ட கொழுப்பைக் கரைத்து, நல்ல கொழுப்பின் அளவை அதிகரிக்கும்.

உடல் சூட்டினால் அவஸ்தைப்படுபவர்கள், நல்லெண்ணெயை சிறிது குடித்தால், உடல் வெப்பம் தணிந்து, உடல் குளிர்ச்சியுடன் இருக்கும்.

குறிப்பாகநல்லெண்ணெய்குடிப்பதால், குருதி அழுத்த மருந்துகளை நாளடைவில் குறைத்துவிடலாம்.

தினமும் சிறிது நல்லெண்ணெயை வெறும் வயிற்றில் குடித்தால், ஒஸ்டியோபோரோசிஸ் என்னும் எலும்புப் புரையின் தாக்கம் குறைந்து, எலும்புகளின் ஆரோக்கியம் மேம்படும்.

நல்லெண்ணெய் மன அழுத்தத்தைக் குறைத்து, மன நிலையை மேம்படுத்தும். மேலும் இது இரவில் நல்ல நிம்மதியான தூக்கத்தைப் பெற செய்து கடுமையான சோர்வில் இருந்து விடுபடச் செய்து, உடலில் குருதி ஓட்டத்தை மேம்படுத்தும்.

மூட்டு வலிகளால் கஷ்டப்படுபவர்கள், நல்லெண்ணெயை உணவில் சேர்ப்பதன் மூலமோ அல்லது குடிப்பதன் மூலமோ குணப்படுத்தலாம்.

இந்த எண்ணெயைத்தினமும்காலையில் வாயில்சிறிது ஊற்றி, 10 நிமிடம் கொப்பளித்து வர வேண்டும். இப்படி செய்து வந்தால், பல் வலி, ஈறு பிரச்சினைகள் போன்றவை நீங்கி வாய் ஆரோக்கியம் மேம்படும்.

வயிற்றுப்போக்கின் போது நல்லெண்ணெயின் உபயோகத்தைத் நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால், அது உடலில் நீர்வறட்சியை ஏற்படுத்திவிடும். முக்கியமாக குருதி அழுத்தம் மற்றும் கொழுப்பு பிரச்சினை உள்ளவர்கள், மருத்துவரின் பரிந்துரையின்றி, அதற்கான மருந்து மாத்திரைகளை நிறுத்தக்கூடாது. மேலும் நல்லெண்ணெய் உங்களுக்கு ஒவ்வாமை என்றால், அதனை பயன்படுத்த வேண்டாம்.



# முகப்பருவை கையால் கிள்ளுவதால் ஏற்படும் பாதிப்புகள்

உங்கள் முகத்தில் உள்ள அசிங்கமான பருக்களை கையால் கிள்ளும் முன் ஒருசில விடயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

முகத்தில் பருக்கள் வந்தால், பலரும் கண்ணாடி முன்பு அதைப் பார்த்தவாறு பல மணி நேரத்தை செலவழிப்போம். உங்கள் முகத்தில் உள்ள அசிங்கமான பருக்களை கையால் கிள்ளும் முன் ஒருசில விடயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். இங்கு அந்த விடயங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அதைப் படித்து தெரிந்து பின் முடிவெடுங்கள்.

பருக்கள் உள்ள சீழ் உடன் பக்றீரியாக்களும் சேர்ந்து இருப்பதால், அதை கையால் கிள்ளும் போது, இதுவரை மேற்பரப்பில் பாதிக்கப்பட்டிருந்த சருமத் துளைகள் ஆழமாக பாதிக்கப்படும். இதனால் கிள்ளிய அந்த பருக்களை மிகவும் தீவிரமாகக் கூடும்.

பருக்களைக்கிள்ளும்போது, அதிலிருந்து பக்றீரியாக்கள்கலந்தசீழ்வடிகட்டப்பட்டு வெளி வருவதால், அந்த பருக்களைச் சுற்றிய பகுதி பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது. இதன் காரணமாகவ் ஆரோக்கியமான சருமத் துளைகளும் பாதிப்புக்குள்ளாகும் வாய்ப்புள்ளது.

அசுத்தமான கையால் பருக்களைத் தொடும் போது, பருக்களில் உள்ள பக்றீரியாக்களின் அளவு அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. இதனால் முகம் முழுவதும் பருக்கள் வரும் வாய்ப்பும் அதிகரிக்கிறது.

பருக்களைக் கிள்ளும் போது, அதைச் சுற்றிய பகுதி கடுமையாக பாதிக்கப்படுவதால், அந்தப் பருக்கள் மறையும் போது நீங்கா தழும்புகளை விட்டுச் செல்லும் வாய்ப்பும் அதிகரிக்கும்.

இதுவரை பருக்களைக் கையால் கிள்ளுவதால் சந்திக்கக்கூடும் பிரச்சினைகள் குறித்து கண்டோம். இனிமேலாவது முகத்தில் பருக்கள் வந்தால், கையை வைத்துக் கொண்டு சும்மா இருக்கப் பழகுங்கள். பருக்களைத் தொடாமல் இருந்தாலே, 35 நாள்களில் அது தானாகப் போய்விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனக் கருவறை...!

திங்களின் மதிமுகம் சூடும் திங்கட்கிழமை...
எங்கும் அமைதியின் செழுமை....
மன அரங்கத்தில் குடிகொண்டு அருளும் பொன்னகையான
பொறுமை......
அலுவலக ஓய்வின் நாழிகைகள் தூக்கச் சாய்மனையுள்
வரைகலை அமுதம் ஆக்கிட சிந்தனை மொழியின்
வெளியாய் பயணப்படும் குளிர்மை......!

துள்ளிக் குதித்து சிறு பிள்ளையாய் மாறி
நல்லூரான் வீதி நடந்தேன்...
வள்ளி மணாளன் அலங்காரம் கண்டு மகிழ்ந்தேன்....
எனை அழைத்து மழலை மொழி பேசி அவல் அமுதம்
ஊட்டிட அவன் மடியமர்ந்து அயர்ந்தேன்...
இசை நாயகியை அழைத்து தாலாட்டிட
ஓர் புது உலகம் கண்டேன்...
அவள் கரம் பற்றி மெல்லச் சின்ன நடை பயின்றேன்...
வான் அலையிடை மிதந்து ஸ்வரங்களோடு
நர்த்தனம் புரிந்தேன்...
இசையின் சாகித்தியம் பயின்றேன்.....!

மீண்டும் விழித்திட தெய்வயானை அழைத்து
முகமலம்பி பாசப் பஞ்சாமிர்தம் தந்து உணவளித்தாள்...
எனக்கிசை பிடிக்குமென்று
இசையின் கலைமகளை
மீண்டும் ஸ்வரங்களை மீட்டிட அழைத்தாள்...
அந்தோ வலம் வருகிறாள்
நல் இசை மீட்டலோடு கனி மொழியாள்...
மணல் வீதியிடை...
சந்தனச் சோலையிடை நகர்ந்து
நற் கலையான இசையினை படிக்கிறேன்...
இரசித்திருக்கிறேன்....
சற்று நாழிகையில் எனக்கொரு
புது மெட்டிசை அருள்புரிய சித்தம் என்றாள்....
மனம் மகிழ்ந்தேன்......!

வள்ளிநாச்சியவள் சேலை ஓரம்
பற்றி நடை பயில்கிறேன்...
மௌனத்தின் அற்புதம் உணர்ந்திருக்கிறேன்...
தேன் மொழியாள் ஊர்வலம் போதலை மனக்
கருவறையுள் கொலுவிருத்தி ஆவலோடு
பார்த்திருக்கிறேன்.........!!



செ.தமிழ்நம்பி

## சொற்சிலம்பம் - போட்டி இல: 461

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 5 | 6 | 7 |
| 8 | | | | | ■ | 9 | |
| 10 | | ■ | | ■ | 11 | | ■ |
| | ■ | 12 | ■ | 13 | | ■ | 14 |
| 15 | | | | ■ | 16 | 17 | |
| | ■ | | ■ | 18 | ■ | 19 | |
| ■ | 20 | ■ | 21 | | 22 | | ■ |
| 23 | | | | ■ | | ■ | ■ |

அனுப்புபவர் பெயர்:.............................................
முழுமையான தபால் விலாசம்: ...................................
.............................................................
கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. நடந்து செல்பவன்
5. திருமதி
8. ஆக்க
9. சவுக்கு
10. எவர்
11. விதையைப் பரவலாக விழச் செய்தல்
13. பழுக்காதது
15. ஓர் அளவுக்கு மேல் உண்ண முடியாது வெறுப்பு ஏற்படுதல்
16. மத்தி
19. எகிப்தில் பிரமிட்களுக்குள் பதப்படுத்தி வைக்கப்பட்டுள்ள மனித உடல் (நடு எழுத்து 'ம்' நீங்கலாக)
21. முஸ்லிம்களின் வேதநூல்
23. உடன் வைத்திரு

### மேலிருந்து கீழ்

1. நடைபயணமாக திருத்தலத்துக்குச் செல்லல்
2. ஆயத்தம்
3. பெண்கள் அதிகமாக அணிவது (ஆங்கிலச் சொல்)
4. முற்காலத்தில் மனிதர்களை ஏற்றி வைத்து மனிதர்களே இழுத்துச் சென்ற வாகனம்
6. சிறு குழந்தை
7. திக்கு (பெயர்ச் சொல்)
11. சுத்தம்
12. வசைபாடு
14. பெண்கள் சுற்றி வந்து கைகொட்டி ஆடும் நடனம்
17. உயிரைக் கவர்பவன்
18. பனை மட்டை இழை
20. விரல்களை அகல விரித்த நிலையில் சுண்டு விரல் நுனியிலிருந்து கட்டை விரல் நுனி வரை உள்ள தூரம்.
21. ஆசான்
22. ஒரு தமிழ் மாதம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 459 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) தபாலதிபர் (6) காரியம் (7) பகை (8) தடம்புரள் (10) உதி (13) மாதம் (15) பற (16) மகமாயி (18) முரிவு (19) திற (21) புயல்

### மேலிருந்து கீழ்

(1) தகாத (2) பாரிடம் (3) லயம் (4) திம்பு (5) நகை (9) ரகம் (10) உபரி (11) திறவுகோல் (12) தாமதி (13) மாமா (14) தயிர் (17) கறவை (18) முன்பு

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 459 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
A.வித்யானி,
கொமர்சல் வங்கி (PLC),
திருநெல்வேலி.

**2 ஆம் பரிசு**
T.காருணியா,
3ஆம் குறுக்குத் தெரு, உதயபுரம்,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
சா.நிந்து
பரமேஸ்வரிபவம்,
கொற்றாவத்தை, வவெட்டித்துறை.

**4 ஆம் பரிசு**
வி.கே.நாதன்,
பொன்மணி வாசா,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

**5 ஆம் பரிசு**
அ.அருளரசன்,
இல 16/1 மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

வ.இரத்தினசிங்கம்,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

ஞா.இம்மனுவல்,
இல. 85/4, கார்மல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

பொன்.துரைராசா,
இல. 308, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.461 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (15.03.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.461இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 19.03.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி 459 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

05.03.2017 முதல் 11.03.2017 வரை

உங்களுக்கு எப்படி?

## மேடம்

பெரும்பான்மைக்கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளன. எதிர்கால தேவைகளுக்காக திட்டமிடுவீர்கள். பணிகளில் திறமை வெளிப்படும். உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் உதவுவர். புத்திரர்கள் படிப்பு வேலையில் முன்னேற்றம் காண்பர். மங்கல நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். இளமைக்கால இனிய நினைவுகள் மகிழ்ச்சி தரும். கணவன், மனைவி ஒற்றுமையாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணசேமிப்பு கூடும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். நிறைந்த வாழ்வு பெறுவர்.

## இடபம்

சூரியன், புதன், சுக்கிரன் அதிக நன்மை வழங்குவர். திட்டங்கள் எளிதாக நிறைவேறும். நண்பர்களின் உதவி கிடைக்கும். மனம் புத்துணர்வு பெறும். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர்கள் உங்கள் ஆலோசனையை மதித்து செயல்படுவர். நோய் தொந்தரவு விலகி உடல் ஆரோக்கியம் பெறும். மனைவி அல்லது கணவர் வழிச் சார்ந்த உறவினர்களால் உதவி உண்டு. பயணங்களால் அதிக பலன் இருக்காது. தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி உற்பத்தி, விற்பனைக் கூடும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதாக நிறைவேற்றுவர். மாணவர்கள் படிப்புடன், விளையாட்டிலும் திறமையைக் காட்டுவர்.

## மிதுனம்

குரு, சனீஸ்வரர், செவ்வாய், ராகு ராஜயோக பலன் தருவர். திட்டங்களில் திறமை பளிச்சிடும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். தம்பி, தங்கைகளின் பாசம் நெகிழ்ச்சித் தரும். புத்திரர்கள், உங்கள் செயல்திட்டங்கள் நிறைவேற ஒத்துழைப்பர். கடனில் ஒருபகுதியை அடைப்பீர்கள். வழக்கு விவகாரங்களில் சுமுகத் தீர்வு கிடைக்கும். கணவன், மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரம் செழித்து லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு உண்டு. பெண்களிடம் வீட்டுச்செலவுக்கு போதுமான பணம் இருக்கும். மாணவர்களுக்கு படிப்பில் முன்னேற்றம் ஏற்படும்.

## கடகம்

புதன், சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டு. மனதில் உற்சாகமும், செயல்களில் வசீகரமும் ஏற்படும். பொது இடங்களில் வீண்பேச்சுக்கூடாது. தாய்வழிஉறவினர்களின் உதவி கிடைக்கும். வாகன பயன்பாடு அதிகரிக்கும். புத்திரர்களின் தேவையை நிறைவேற்றுவீர்கள். சீரான ஓய்வு உடல் நலத்தைப் பாதுகாக்கும். பணியாளர்கள் கவனமாக பணிபுரிந்து அதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவர். பெண்கள் நகை, இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர். பெண்கள், பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம்.

## சிங்கம்

சுக்கிரன், சந்திரன் ஓரளவு நன்மை தருவர். மனதில் நம்பிக்கையுடன் செயல்பட வேண்டும். குறுக்கீடுகளை மாற்று உபாயத்தால் சரி செய்யலாம். வாகன பராமரிப்பு செலவுக் கூடும். புத்திரர்களின் சில செயல்கள் பிரச்னையை உருவாக்கலாம். ஆடம்பர பொருட்கள் வாங்குவீர்கள். கணவன், மனைவி உறவு அன்புடன் இருக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்களுக்கு வேலை கூடினாலும் சலுகை கிடைக்கும். பெண்கள் மங்கல நிகழ்ச்சிகளுக்கு சென்று வருவர். மாணவர்கள் படிப்பில் கவனமாக இருப்பது நல்லது.

## கன்னி

சூரியன், புதன், குரு, சனீஸ்வரரால் நன்மை கிடைக்கும். மனதில் இருந்த குழப்பம் தீரும். உடன் பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். உடல்நிலை நன்றாக இருக்கும். கணவன், மனைவி இடையே கருத்து வேறுபாடு வரலாம். தொழில், வியாபாரம் செழித்து வளரும். நவீன கருவிகள் வாங்குவீர்கள். பணியாளர்கள் திறமையை வெளிப்படுத்தி, பணபலன் பெறுவர். பெண்கள், அடுத்தவர் பிரச்னையில் கருத்து சொல்ல வேண்டாம். மாணவர்கள், பெற்றோர் வழிகாட்டுதல் ஏற்று படிப்பில் முன்னேறுவர். உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும்.

## துலாம்

சந்திரன், ராகு ஓரளவு நன்மை தருவர். இடம், சூழ்நிலை உணர்ந்து பேசுவது நல்லது. குடும்பச் செலவிற்கான பணத்தேவை அதிகரிக்கும். புத்திரர்களின் அறிவாற்றல் வளர ஆலோசனை வழங்குவீர்கள். உடல்நலத்தில் சிறு பிரச்னை வந்து நீங்கும். கடனில் ஒரு பகுதியை அடைப்பீர்கள். மனைவியின் கருத்தை ஏற்பதால், குடும்ப ஒற்றுமை பலம் பெறும். தொழில், வியாபாரத்தில் அதிக லாபம் இருக்காது. பணியாளர்கள் பணிபுரியும் இடத்தில் சில சிரமங்களைச் சந்திக்கலாம். பொறுமை தேவை. பெண்கள், தாய் வீட்டு உதவி பெறுவர். மாணவர்கள் கடும் முயற்சி எடுத்து படிப்பில் தேர்ச்சி அடைவர்.

## விருச்சிகம்

செவ்வாய், புதன், சுக்கிரன் நல்ல பலன் தருவர். இனிமையாகப் பேசி அனைவரையும் கவர்வீர்கள். சமூக நிகழ்வு புதிய அனுபவம் தரும். பயணங்கள் குறையும். புத்திரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்று, நடந்து கொள்வர். பூர்வசொத்தில் வருமானம் கூடும். பகைவரால் உருவான தொந்தரவு விலகும். மனைவியின் தியாகம் நிறைந்த பணிகளால், குடும்பம் முன்னேறும். தொழில், வியாபாரத்தில் இடையூறு இருந்தாலும் சமயோசிதமாக சமாளிப்பீர்கள். பணியாளர்கள் சிறப்பாக வேலை செய்து சலுகை பெறுவர். மாணவர்கள் நன்றாக படித்து பாராட்டுப்பெறுவர். பெண்கள், அக்கம் பக்கத்தினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர்.

## தனுசு

சூரியன், குரு, சுக்கிரன் கேது சகல வளமும் தருவர். திட்டங்கள் நல்லபடியாக நிறைவேறும். தாய்வழி உறவினர்களின் உதவி மனதிற்கு தெம்பளிக்கும். புத்திரர்களின் படிப்பு, வேலையில் மெதுவான முன்னேற்றமே இருக்கும். பகைவர்களால் கெடுசெயல் பலமிழக்கும். மனைவியின் அன்பில் நெகிழ்ந்து போவீர்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்ள வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில் ஓரளவு லாபம் இருக்கும். பணியாளர்கள் கேட்ட சலுகை தாமதமாகும். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர். மாணவர்களுக்கு ஞாபகசக்தி அதிகமாகி படிப்பில் முன்னேறுவர். மாணவர்கள், ஆசிரியர்களின் ஆலோசனைப்படி சிறப்பாகப் படிப்பர்.

## மகரம்

சுக்கிரன், சனீஸ்வரர், சந்திரன் நற்பலன் வழங்குவர். ஆடம்பரச் செலவுகளை தவிர்ப்பதால் சிரமம் விலகும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து பேதம் ஏற்படலாம். புத்திரர்களின் நற்செயல் பெருமை தேடித் தரும். அளவான உழைப்பும், சீரான ஓய்வும் உடல்நலத்தை பாதுகாக்கும். மனைவியின் அதிக பாசத்தினால் மனதில் நம்பிக்கைக் கூடும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அனுகூல சூழல் உருவாகும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்கள் புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு. மாணவர்கள் அதிக மார்க் பெறும் லட்சியத்துடன் படிப்பில் கவனம் செலுத்துவர்.

## கும்பம்

குரு, சுக்கிரன், செவ்வாய் அதிக நன்மை தருவர். உங்கள் மீதான மற்றவர்களின் பார்வை மதிப்பு மிகுந்ததாக இருக்கும். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். புத்திரர்கள் படிப்பு, வேலைத்திறனில் மேம்படுவர். பூர்வ சொத்தில் பணவரவு கூடும். நோய் தொந்தரவு குறைந்து ஆரோக்கியம் பலம்பெறும். மனைவி உங்கள் எண்ணங்களை செயல்படுத்துவார். எதிர்பார்த்த சுபசெய்தி வரும். தொழில், வியாபாரம் செழித்து சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் விரும்பிய சலுகை கிடைக்கும். பெண்கள் நகை, புத்தாடை வாங்குவர். மாணவர்கள், நண்பர்களின் உதவியுடன் படிப்பில் முன்னேறுவர்.

## மீனம்

ராகு, சந்திரன், சுக்கிரனால் நன்மை உண்டாகும். வாழ்வில் நல்ல மாற்றம் உருவாகும். அதிக பணவரவால் குடும்பத் தேவை பூர்த்தியாகும். சிலர் வீடு, இடம் மாறுவர். வாகன பராமரிப்பு செலவுக் கூடும். புத்திரர்கள் விரும்பியதை வாங்கிக் கொடுப்பீர்கள். உடல்நிலை சுமாராக இருக்கும். மனைவியின் செயல்பாடுகள் நல்ல பயன் தரும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி கூடும். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு நிர்வாகத்துடன் கருத்து மோதல் வரலாம். பொறுமை தேவை. மாணவர்கள், பெற்றோர் ஆலோசனையுடன் படிப்பில் முன்னேறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி கனகாம்பிகை தர்மலிங்கம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை தர்மலிங்கம் 22.02.2017 லண்டன் Harrow இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல கட்டட ஒப்பந்தக் காரர் தர்மலிங்கத்தின் ஆருயிர் மனைவியும், காலஞ் சென்றவர்களான மயில்வாகனம்-செல்லம்மா தம்பதி யரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான திலகேந்திரன், தர்மேந்திரன் (பாபு) மற்றும் ஸ்ரீயமுனாதேவி, விஜயேந்திரன், வசந்தி, யுவனேந்திரன், ரேணுகா, இலகேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும். கமலராணி, யோகராணி, கணேசானந்தன், பிரமிளா, கிரிதரமோகன், உஷாயினி, உருத்திரேஷ்வன், ருக்ஷா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் கதிர்காமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (ரத்தினம்), வீரசிங்கம், யோகராசா மற்றும் கமலாம்பாள் ஆகியோரின் மைத்துனியும், சுஜேந்தர்-அபிரா, குஷாந்தர், கஜராவ் (தஜி) பிரணவராவ் (யோஜி) வேலரசி-கோதண்டபாணி, கவியரசி-ஜனன், மகாலயன், பைரவி, ஆரணன், தர்சன்-சுவேதா, பரண், நதினி-பிரசாத், தவின், கோகுலன், பிரியசி, இஷானி ஆகியோரின் பிரியமிகு பேர்த்தியும், றோஹன், டிறன், விஹான் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03. 2017) ஞாயிற்றுக்கிழமை லண்டன் நேரம் மு.ப 11.00 மணிக்கு 38, Wilson; Garden Harrow HA14DZ,UK இல் உள்ள அன்னரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**11, கதிரவேலு லேன்,**
**கனகரட்ணம் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூல் அறிமுகம்




**நூல்: "கோப்பாய் சிவம்" கட்டுரைகள்**
**பலதும் பத்தும்**
**ஆசிரியர் கோப்பாய் சிவம்**
**(பி.சிவானந்தசர்மா)**
**வெளியீடு சர்வானந்தமயபீடம்**
**விலை 200 ரூபா**

**பல்சுவை நிறைந்த புத்தகம்**

பல்வேறு விடயங்களைப் பேசுகின்ற பத்துக் கட்டுரைகளின் தொகுப்புத்தான் பலதும் பத்தும் நூல். படிப்பதற்குமிகவும்சுவாரசியமாக உள்ளது. முத்திரைகள் முதல் நகைச்சுவைப் பேட்டி வரை நூலை அலங்கரிக்கும் பத்துக் கட்டுரைகளும் பல்சுவை அளிக்கும் முத்துக்கள். ஒவ்வொரு கட்டுரையிலும், நாம் மறந்து சென்ற விடயங்கள் மீட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பலதையும் சிந்திக்கச் செய்கின்றன. அதுமட்டுமன்றி, "ஒரு வானொலி அதிகாரி பேட்டி அளிக்கிறார்" என்ற நகைச்சுவைப் பேட்டியும் பல விடயங்களைச் சிந்திக்க வைக்கின்றது. நீரோட்டமான மொழிநடை, வாசிக்க இலகுவாக உள்ளது.

இலக்கியஉலகில்நன்குஅறியப்பட்டவர், கோப்பாய்சிவம். இலக்கியச்செயற்பாட்டில் அவர்ஐம்பதாவது அகவையினைநிறைவுசெய்கிறார். அவரது எழுத்துப்பயணம் தொடரவும் சிறக்கவும், வாழ்த்துக்கள்.




**நூல்: 'அக்கினியாய் வெளியே வா'**
**(கவிதைத் தொகுப்பு)**
**ஆசிரியர் இராகலை தயானி**
**வெளியீடு புரவலர்**
**புத்தகப் பூங்கா, கொழும்பு.**
**விலை 150 ரூபா**

**மானுட அவலங்களின் பதிவாக்கம்**

துயரங்களை மட்டுமே வாழ்க்கையாகக் கொண்ட மலைய்க மண்ணைப் பதிவாக்கி யுள்ளதுஅக்கினியாய்வெளியேவா(கவிதைத் தொகுப்பு) நூல்.

நினைத்தவுடன் ஒன்றைச் சொல்லிவிட, கவி தையைத் தவிர வேறு எந்தக் கருவியும் அழ கானதாகவும்எளிமையானதாகவும்வாய்ப்ப தில்லை. மலையக மண்ணின் மக்கள் படும் இன்னல்கள், காதல், பெண்ணியம்உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் கருப்பொருளாக்கி அழகிய கவிதைகளை யாத்துள்ளார் கவிஞர் தயானி. மானுட அவலங்கள் பேசும் இந்தக் கவிதைகளில், ஒரு வீரியத்தன்மை இருப்பதை வாசகர் உணர்வர். எளிமையான நடை, கவிதைக்குக் கனதி சேர்க் கின்றது.

இராகலை தயானி விஜயகுமார், நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை பிரதேச சபைக்குட்பட்ட புறூக்சைட் தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பட்டதாரி யான இவர், எழுத்துலகில் தீவிரமாகச் செயற்பட்டுவரும் பெண்களுள் ஒருவர். அக்கினியாய் வெளியே வா (கவிதைத் தொகுப்பு), இவரது கன்னி நூல். இவரது எழுத்துலகம் மலர்ந்து மணம் வீச, வாழ்த்துக்கள்.




**நூல்: 'கண்ணாடிப் பூக்கள்' (கவிதைத் தொகுப்பு)**
**ஆசிரியர் பிரபாகரன் வேதிகா**
**வெளியீடு பழைய மாணவர் சங்கம், வவு.கனகராயன் குளம் ம.வி.**
**விலை 150 ரூபா**

**உள்ளத்து உணர்வுகளின் பெட்டகம்**

உணர்ச்சிகள் உள்ளத்தை உரசிச்செல்கையில், கவிதைகள் பிறக்கும். அத்தகைய 51 கவிதைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது கண்ணாடிப் பூக்கள் (கவிதைத் தொகுப்பு) நூல். என்னூர் முதல் பாலாபிசேகம் வரை நூலை அலங்கரித்து நிற்கும் கவிதைகள், உள்ளத்துஉணர்வுகளின்பெட்டகமாகத்திகழ்கின்றன. கவித்தேடலில், எங்களையும் அவை தேட வைக்கின்றன. மீட்டித் தருகின்றன. எளிமையான மொழிநடை, அழகான அட்டைப்படம் என்பன நூலுக்குக் கனதி சேர்க்கின்றன.

கவிஞர் பிரபாகரன் வேதிகா, ஈழத்துக் கலைப்புலத்தில் தடம் பதித்து, கவிப்புலத்திலும் இடம் பிடித்துள்ளார். வாசிப்பு ஆவலும் சமூகத் தேடலும் மிகுந்த இவர், எழுத்துலகில் பிரகாசிக்க வாழ்த்துக்கள்.



தொகுப்பு: மல்லிகா



# மறுபிறப்பில் சேர்ந்திருப்போம்

நட்புக்கு உயரிய இடம் அளித்து, அதனைப் போற்றின பழந்தமிழ் இலக்கியங்கள். அவைபோற்றியஅத்தனைநட்புக்களும்இமயமெனஉயர்ந்துநிற்கின்றன. நட்புக்காக எதனையும் செய்யத் துணிந்து நிற்கின்றன. அத்தகைய ஒரு நட்புத் தான், பாரி கபிலர் நட்பு.

வள்ளல் பாரி இறந்தபோது, அவருடையது இரு மகள்களையும் பாதுகாக்கும் பொறுப்பைகபிலர்ஏற்றார். எண்ணற்றதுன்பங்களை அனுபவித்து, இறுதியில் அவர்களுக்கு மணமுடித்து விட்டுவடக்கிருந்து உயிர்துறந்தார். அவ்வாறு இறப் பதற்கு முன்னர் அவர் பாடிய பாடல் இது. புறநாநூற்றில் இந்த இலக்கியச் சித் திரம் இடம்பெற்றுள்ளது.

*கலைஉணக் கிழிந்த முழவும்மருள் பெரும்பழம்*
*சிலைகெழு குறவர்க்கு அல்குமிசை ஆகும்*
*மலைகெழு நாட! மாவண் பாரி!*
*கலந்த கேண்மைக்கு ஒவ்வாய்; நீஎற்*
*புலந்தனை யாகுவை புரந்த யாண்டே;*
*பெருந்தகு சிறப்பின் நட்பிற்கு ஒல்லாது*
*ஒருங்குவரல் விடாஅது ஒழிகெனக் கூறி*
*இனையை ஆதலின் நினக்கு மற்றுயான்*
*மேயினேன் அன்மை யானே; ஆயினும்*
*இம்மை போலக் காட்டி உம்மை*
*இடையில் காட்சி நின்னோடு*
*உடன்உறைவு ஆக்குக உயர்ந்த பாலே!*

குரங்கு கிழித்துத் தின்ற முரசு போன்ற பெரிய பலாப்பழம், வில்லை உடைய குறவர்கள்சிலநாள்கள் வைத்திருந்து உண்ணக்கூடிய உணவாகும். இத்தகை யவர் வாழும் மலைகள் பொருந்திய நாட்டையுடைய, வள்ளல் தன்மை பொருந் திய பாரியே! நீயும் நானும் கூடியிருந்த நட்புக்குப் பொருத்தமில்லாத முறையில் நீ நடந்துகொண்டு விட்டாய். பல ஆண்டுகள் நீ என்னைப் பாதுகாத்திருந்தும் இறுதியில்என்னைவெறுத்துவிட்டுச்சென்றுவிட்டாய். சிறந்தநட்புக்குப்பொருத்த மில்லாத முறையில் என்னை, "வராதே எனத் தடுத்துவிட்டுப் பிரிந்து சென்று என்னைவருத்தி, உனக்குஏற்றவனாக இல்லாமல் செய்துவிட்டாய். ஆயினும், இப்பிறவிபோல்மறுபிறவியிலும்நாம் இடைவிடாமல்சேர்ந்து இருப்பதற்குவழி செய்யுமாறு உயர்ந்த நல்வினையை வேண்டுகிறேன்.

(புறநானூறு:236)

இன்று சுயநலஉறவுகளை அதிகம்சுமந்து சுற்றுகிறது பூமி. துரோகங்களுக்குள் சிக்கிச்சின்னாபின்னமாகிறது நட்பு. இதன் மத்தியில், இப்பிறப்பில்மட்டுமன்றி மறுபிறப்பிலும் இணைந்துவாழவேண்டும்என்றுவிரும்பும்கபிலரைப்போன்ற நட்புள்ளம் யாருக்கு வாய்க்கும்?

அராலியூர் நிலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரகாஸ்

# ஒய்வுபெறும் கணம்.....

## சச்சினின் பகிர்வு

எந்த ஒரு விளையாட்டிலும் வீரர்களுக்கு பிடிக்காத ஒரு வார்த்தை உண்டென்றால் அது 'ஓய்வு' என்ற வார்த்தையாகவே இருக்க முடி யும். அந்த வகையில், சச்சின், தனக்கு ஓய்வு பெறும் எண்ணம் ஏற்பட்டது எதனால் என்பதைப் பற்றித் தெரிவித்துள்ளார். இணையத்தளம் ஒன்றுக்கு எழுதிய கட்டுரையிலேயே அவர் தனது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

ஒக்ரோபர் 2013, டெல்லியில் சம்பியன்ஸ்லீக் ஆட்டங்களில் ஒன்று. என்னுடைய பொழுதுகள் உடற் பயிற்சியுடனேயே தொடங்கும். இந்த நடைமுறையை நான் 24 ஆண்டுகளாக கடைப்பிடித்து வந் தேன். ஆனால் அந்த 2013 ஒக்டோபரின் காலை வித்தியாசமாக இருந்தது. ஏதோ மாறியது போல் தோன்றியது.

நான் வலுக்கட்டாயமாக எழுந்து உடற்பயிற்சிக் கூடத்துக்குச் செல்ல வேண்டும். ஏனெனில் என் வாழ்க்கையில் அது மிகப் பெரிய பங் காற்றியுள்ளது. 24 ஆண்டுகள் உடற்பயிற்சிக் கூடமும் நானும் இணைந்தே இருந்துள்ளோம். ஆனால் அன்று திடீரென உடற்பயிற் சிக்கூடம் போக வேண்டுமா என்று தோன்றியது. இது ஏன்? ஒரு வேளை இதுதான் அறிகுறிகளா? அதாவது நான் நிறுத்த வேண்டும் என்பதற்கான அறிகுறியா? எனக்கு மிகவும் நெருக்கமான கிரிக்கெட் டின் ஒரு பகுதியாக அமைந்து விட்ட ஒரு விடயம் திடீரென அலுப்புத் தட்ட காரணம் என்ன? சுனில் கவாஸ்கர், எனது ஹீரோக்களில் ஒருவர், முன்னாள் கிரிக்கெட் வீரர், அறிவுரையாளர். ஒருமுறை கூறும்போது அவருக்கு ஓய்வு பெறும் எண்ணம் ஏன் ஏற்பட்டது என்பதை விவரித்தார். அதாவது விளையாடிக் கொண்டிருக்கும் போதே உணவு இடைவேளைக்கு இன்னமும் எத்தனை மணித்துளிகள் உள்ளது, தேநீர் இடைவேளைக்கு இன்னும் எத்தனை மணித்துளிகள் உள்ளது என்று கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாராம். அப்போது ஓய்வு பெறுவது தான் சிறந்தது என்று முடிவெடுத்தாராம்.

அவர் சொன்னதன் அர்த்தம் என்னவென்று எனக்கு அன்று புரிந்தது. என்னுடைய மனமும் உடலும் இதைத்தான் எனக்கு அறிவுறுத்தின. அதாவது நான் ஓய்வு பெறும் நேரம் வந்துவிட்டது என்பதுதான் அது என்று சச்சின் எழுதியுள்ளார்.

தேநீர் இடைவேளைக்கு இன்னும் எத்தனை மணித்துளிகள் உள்ளது என்று கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாராம். அப்போது ஓய்வு பெறுவது தான் சிறந்தது என்று முடிவெடுத்தாராம்.

## ஆட்டோ ஓட்டினாராம் கிளார்க்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான மைக்கல் கிளார்க் தற்போது இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரில் வர்ணணையாளராக பணிபுரிந்து வருகிறார். இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் பெங்களூரில் தற்போது நடைபெற்று வருகிறது. இந்த ஆட்டத்துக்காக அங்கு சென்ற அவர் சாலையில் சென்ற ஓட்டோ ஒன்றை நிறுத்தி, ஓட்டுநரிடம் தனது விருப்பத்தைத் தெரிவித்து அந்த ஓட்டோவை வாங்கி சிறிது நேரம் செலுத்தி மகிழ்ந்தாராம். இதுதொடர்பான காணொலியையும் அவர் தனது சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளார்.



## வயதாகவில்லை ரூனிக்கு....

இங்கிலாந்து கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் தன் தலைமையிலான மன்செஸ்டர் யுனைற்ரெட் அணியை மகுடம் சூட வைத்து, தனது கால்பந்தாட்ட வாழ்க்கை இன்னும் சில காலம் எஞ்சியுள்ளது என்பதை சொல்லாமல் சொல்லியுள்ளார் ரூனி. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில், சவுத்தாம்டனை வீழ்த்தி மன்செஸ்டர் யுனைற்ரெட் சம்பியனானது. மன்செஸ்டர் அணியின் தலைவர் ரூனி கடந்த சில ஆட்டங்களில் தடுமாற்றத்தை வெளிப்படுத்தி வந்தார். இதனால் விரைவில் அவர் அணியில் இருந்து நீக்கப்படவுள்ளார், கால்பந்தாட்ட உலகில் ஒரு வீரராக ரூனியால் இனிவரும் காலங்களில் தாக்குப் பிடிக்க இயலாது என்றெல்லாம் விமர்சனங்கள் முன்வைக் கப்பட்டன. ஆனால் யுனைற்ரெட்டுக்கு கிண்ணத்தை வாங்கிக் கொடுத்ததன் மூலம் தன் மீதான விமர்சனங்களுக்கு அவர் முற்றுப்புள்ளி வைத்தார். இந்த வெற்றியின் மூலம் இன்னும் சில காலம் அணியில் தொடர்வேன் என்பதையும் அவர் சொல்லாமல் சொல்லியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சிறுவர் உலகம் அமைப் பால் பாடசாலை மாண வர்களுக்கு கற்றல் உப கரணங்களும் மாபெரும் அதிர்ஷ்ட லாபச் சீட்டு குலுக் களும் வ/பெரியகுளம் அ.த.க. பாடசாலையில் இடம்பெற்ற போது....



மானிப்பாய் Butterfly pree School பண்டத்தரிப்பு Blooming Buds Pree School ஆகிய ஆங்கிலமொழிமூல பாலர் பாடசலைகளின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மை யில் இடம்பெற்றது. இந்த விழாவுக்கு வருகை தந்த முதன்மை விருந்தினர்களையும் சிறப்பு விருந்தினர்களையும், சான்றிதழ் பெறுகின்ற மாணவர்களையும் காணலாம். (10)





கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியும் நுழைவாயில் வளைவு திரைநீக்க நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் ஆரம்ப மான நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகனும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் க. தர்மலிங்கமும், சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராஜாவும் கலந்து கொண்டனர்.

அமரர் க.நந்தகுமார் குடும்பத்தினரால் அமைக்கப்பட்ட நுழைவாயில் வளைவு, திரை நீக்கநிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்று, பரிசில்கள் வழங்கப்பட்டன. (10)



அக்கரைப்பற்று கல்வி வலயத்திலுள்ள பாலமுனை இப்னு ஸீனா கனிஷ்ட வித்தி யாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் எஸ்.எம்.சாக்கிர் ஹீஸையின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண சகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நசீர் மற்றும் அக்கரைப்பற்று வலயக் கல்விப்பணிப்பாளர் ஏ.எல்.எம்.காசிம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (10)



வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் தீவகம் தெற்கு, வேலணை பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் மண்டைதீவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடை வடிவமைத்தல், அழகுக் க்லை மனைப்பொருளியல் கண்காட்சி மண் டைதீவு மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

வேலணை பிரதேச செயலாளர் சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ் வில், முதன்மை விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் மற்றும் யாழ் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் ஆகியோர் கலந்துகொண்டனர். (10)



வட்டுக்கோட்டை மூளாய்றோட் ஐக்கிய நாணய சங்கத்தின் 84 ஆவது ஆண்டை முன்னிட்டு மூத்த அங்கத்தவர் கௌரவிப்பு இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கந்தையா தரும லிங்கத்துக்கு சங்க உறுப்பினர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஸ்ட உயர்தர வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு கல்வி வலயத்தின் திட்டமிடல் பகுதிக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி தட்சாயினி வசிகரனும், கரைதுறைப்பற்று கோட்டக் கல்விப்பணிப்பாளர் தி.சிறிபுஸ்பநாதனும், முல்லைத்தீவு கல்வி வலயத்தின் உடற்கல்விக்கான உதவிக்கல்விப்பணிப்பாளர் மைக்கேல் திலகராசாவும், முல்லைத்தீவு கல்வி வலயத்தின் ஆரம்பக்கல்விக்கான உதவிக்கல்விப்பணிப்பாளர் திருவாளர் சி.சத்தியசீலனும், முல்லைத்தீவு கல்வி வலயத்தின் முன்பள்ளிக்கான உதவிக்கல்விப்பணிப்பாளர் சிவசுப்பிரமணியமும், முல்லைத்தீவு கல்வி வலயத்தின் முறைசாரா கல்விக்கான வலயப்பிரதிநிதி சி.சுதாகரனும் கலந்து கொண்டனர். (10)





சிங்கப்பூர் விநாயகர் ஆலயத்தில் அண்மையில் பொங்கல் கொண்டாட்டம் நடைபெற்றது. (ஜ)



கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகத் தெரிவுகள் அண்மையில் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த ஆண்டுக்கான தலைவராக கி.பூபாலசிங்கம் தெரிவு செய்யப்பட்டார். அவர் தலைமையிலான நிர்வாகசபை உறுப்பினர்களை படத்தில் காணலாம். (288)

# பட்டதாரிகளுக்கு நியமனம் உடன் வழங்கப்படவேண்டும்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 5

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளுக்குப் பொய்யான வாக்குறுதிகளை வழங்குவதை விடுத்து நியமனங்களை வழங்க வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஒன்றியம் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசானது ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகங்களுக்கு அதிகளவு மாணவர்களை உள்ளீர்ப்பது வரவேற்க தக்க விடயமாகும். ஆயினும் உள்ளீர்க்கப்பட்ட மாணவர்கள் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்தவுடன், தாங்கள் சிரமப்பட்டுப் படித்த படிப்புக்குப் பொருத்தமான வேலைவாய்ப்பைப் பெற முடியாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

அரச நிறுவனங்களில் நியமனங்கள் செய்யப்படுகின்றபோது அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றமை வேதனைக்குரிய விடயம். எனவே நியமனங்களின்போது அவரவர் திறைமைக்கு ஏற்ற வகையில் பக்கச்சார்பற்ற நியமனங்கள் வழங்கப்படவேண்டியதும் அவசியமானதொன்றாகும்.

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளால் முன்னெடுக்கப்படுகின்ற தொடர்ச்சியான போராட்டம் தவிர்க்கப்பட முடியாதொன்றாகும். கடந்த காலங்களிலும் இவ்வாறான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோதிலும் அவை அப்போது வழங்ப்பட்ட பொய்யான வாக்குறுதிகளை நம்பியதன் பயனாக வெற்றியளிக்கவில்லை.

எனவே அவ்வாறான வாக்குறுதிகளை வெறுமனே வழங்குவதை விடுத்து வடக்கு மாகாண பட்டதாரிகளால் முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்குச் செவிசாய்த்து உரிய தீர்வுகளை குறுகிய காலத்திற்குள் கொடுக்கவேண்டும்-என்றுள்ளது. (த-21)

## கத்திவெட்டுக்கு இலக்காகி குடும்பத் தலைவர் படுகாயம்

சாவகச்சேரி, மார்ச் 5

பாளைக் கத்தி வெட்டுக்கு இலக்கான குடும்பத் தலைவர் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

சம்பவத்தில் காயமடைந்த மற்றொருவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி வடக்கு மண்டுவில் அம்மன் கோவிலடியில் இடம்பெற்றுள்ளது.

பாளைக் கத்தி வெட்டுக்கு இலக்கான இதே இடத்தைச் சேர்ந்த ஜெயரத்தினம் பிரசாத் (வயது31) என்பவர் மார்புப் பகுதியில் பலத்த காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

சம்பவத்தில் காயமடைந்த மற்றொரு நபரான சின்னையா ஜெயக்குமார் (வயது- 37 ) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வைத்தியசாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

நகை கொடுக்கல் வாங்கலே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் எனக் கூறப்பட்டது. (த)

# அரச தலைவருக்குத் தெரிவிக்கும் அலுவலகத்தை திறந்தார் மைத்திரி

'அரச தலைவரிடம் தெரிவிக்க' அலுவலகம் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அதனைத் திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, பலாலியில் நடைபெற்ற பாதுகாப்புத் தரப்பின் நிகழ்வில் முதலில் பங்குபற்றினார். இதன் பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு வருகை தந்தார். ஆளுநர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருந்த அரச தலைவரிடம் தெரிவிக்கும் அலுவலகத்தைத் திறந்து வைத்தார். தொடர்ந்து, அரச தலைவரிடம் தெரிவிப்பதற்கான அலைபேசிச் செயலியையும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

அரச தலைவரிடம் தெரிவிப்பதற்கான அலுவலகத்தின் தலைவர், வரவேற்புரை நிகழ்த்தினார். அதன் பின்னர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா உரையாற்றினார். வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயும், தொடர்ந்து அரச தலைவர் மைத்திரிபாலவும் உரையாற்றினார்கள். நிகழ்வில், சிவில் பாதுகாப்புப் பிரிவினரின் தமிழ் சிங்கள பாடலுக்கான நடனம் நடைபெற்றது. அதன் பின்னர், நல்லிணக்கபுரத்தில் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளுக்கான திறப்பு, நிகழ்வில் வைத்துப் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது. சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்ட பின்னர், இறுதியில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

நிகழ்வுக்கான ஒழுங்கு சீராக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கே.ரி.ராஜசிங்கம் எழுதிய நூல் வெளியீடு நடைபெறும் என்று அறிவிப்பாளர்கள் அறிவித்தனர். பின்னர் அது ஒத்திவைக்கப்பட்டு அரச தலைவரின் உரைக்கு முன்னர் நடைபெற்றது. சிவில் பாதுகாப்புப் பிரிவினரின் நடன நிகழ்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு சில நிமிட நேரங்களின் பின்னரே அவர்கள் மேடைக்கு வந்து சேர்ந்தனர். இதேபோன்று தேசிய கீதம் இசைக்கப்படும் என்று அறிவிப்பாளர்கள் அறிவித்து பல நிமிட நேரங்களின் பின்னரே நடைபெற்றது. அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் அழைத்து வரப்பட்ட அவர்களது ஆதரவாளர்களால் மண்டபம் நிரம்பியிருந்தது. பலருக்கு இருக்கைகள் கொடுக்கப்படவில்லை.

இந்த நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, எம்.ஏ . சுமந்திரன், த.சித்தார்த்தன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ஆகியோரும் வடக்கு கிழக்கு முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளும் கலந்து கொண்டிருந்தனர். காங்கேசன்துறை மாங்கொல்லையில் 238 ஏக்கர் காணி விடுவிப்பதற்கான அறிவிப்பை, அரச தலைவர் மைத்திரிபால இங்கு வைத்து வெளியிடுவார் என்று தெரிவிக்கப்பட்டபோதும், அவ்வாறான அறிவிப்பு எதனையும் அவர் வெளியிடவில்லை. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைச் சிறப்பிக்கும் நிகழ்வும், பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் கற்றல் கருவிகளை வழங்கும் நிகழ்வும் அண்மையில் சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றன. பாடசாலை அதிபர் சி.யோகேசுவரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும், விருந்தினர்களாக யோசப்பு அருள்நாதர், வை.கெங்காதரன், சமுர்த்திப் பணியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-10)



பன்முகப்படுத்தப்பட்ட மாகாணசபை நிதி ஓதுக்கீட்டின் கீழ், வடமாகாணசபை உறுப்பினர் எம்.பி. நடராஜ், பிரமனாலங்குளம் வடகாட்டு கிராம அபிவிருத்திச்சங்கத்துக்கு, ஒரு தொகுதி கதிரைகளை அண்மையில் வழங்கி வைத்தார். (ஐ-402)



எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை அதிபர் ச.கமலதீபன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினமும் சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப்பணிப்பாளர் எம். சத்தியசீலனும், தீவக வலயத்தின் உடற்கல்விப் பணிப்பாளர் எம். லோகநாதனும் கலந்து கொண்டனர். (10)



மருதமடு அன்னையின் ஆரம்ப இருப்பிடமாகிய மாந்தையில் புதிதாக அமைக்கப்பட்ட 'தூய லூர்து அன்னை ஆலயம்' அபிசேகம் செய்யப்பட்டு மக்களது வழிபாட்டுக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் அதி வணக்கத்துக்குரிய ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் ஆயர்கள் மற்றும் குருக்கள் இணைந்து அபிசேகம் செய்து, கடந்த வாரம் ஆலயத்தைத் திறந்து வைத்தனர். (ஐ-56)



வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசா தனது குறித்தொதுக்கப்பட்ட பிரமாண நிதியில் இருந்து வவுனியா வடக்கு நெடுங்கேணி ஆனந்தர் புளியங்குளம் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்திற்கு உதவிவழங்கினார். (10)



வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ. குணசீலன், மாகாண சபை குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து பல்வேறு உதவிகளை கடந்த வாரம் வழங்கினார். மன்னார் கீரி கர்த்தர் ஆலயத்தின் கட்டடப் பணிக்கான நிதியை காசோலையாக ஆலய நிர்வாக சபையிடமும், கீரி மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்துக்கு ஒரு தொகுதி கதிரைகளைச் சங்கப் பிரதிநிதிகளிடமும், எழுத்தூர் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்துக்கு ஒரு தொகுதி சமையல் பாத்திரங்களையும் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.(ஐ-56)





வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சண்முக புரம் பகுதியிலுள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன.

அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் வசதியற்ற 32 மாணவர்களுக்கு வன்னி மாவட்ட சிறிலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்க இணைப்பாளர் தனது சொந்த நிதியிலிருந்து கற்றல் உபகரணங்கள், விளையாட்டுக் கழகத்திற்கு உபகரணங்கள், அறநெறிப் பாடசாலை ஆரம்ப கட்ட நிதிக்கு ஒரு தொகைக்கான காசோலை என்பன வழங்கிவைத்தார். (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றத்துக்கே தண்டனை அனுபவித்தார் பொன்சேகா

## கூறுகிறார் மகிந்த

கொழும்பு, மார்ச் 5
செய்த குற்றத்துக்காகவே சரத் பொன்சேகா தண்டனை அனுபவித்தார் என முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
அரச சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் விமல் வீரவன்ச விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரைப் பார்வையிட்ட மகிந்த ராஜபக்சவிடம், சரத் பொன்சேகா சிறை வைக்கப்பட்டமை தொடர்பில் நாமல் ராஜபக்ச வருத்தம் தெரிவித்தமை குறித்து ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
விமல் வீரவன்ச, சசி வெல்கம ஆகியோர் இன்னும் சிறைச்சாலையில் உள்ளனர். குற்றம் செய்யாமலே இவர்கள் சிறை அனுபவிக்கின்றனர். ஆனால் சரத் பொன்சேகா செய்த குற்றத்துக்காகத் தண்டனை அனுபவித்தார். பொன்சேகா சிறையில் இருக்கும்போது அனைத்து சுக போகங்களையும் அனுபவித்தார். அதனால் அவரை நேரில் வந்து பார்க்கவேண்டிய தேவை எனக்கு இருக்கவில்லை.
தேர்தலை நடத்துவதற்கு நாங்கள் சுதந்திரக் கட்சியுடன் இணையும் வரை காத்திருக்கின்றார்கள் எனக் கூறுவது நகைச்சுவையான விடயமாகும். நாம் சுதந்திரக் கட்சியுடன் இணைவது கனவு காண்பதற்குச் சமம் என்றார். (த-10)

# சட்டமாணி தெரிவுப் பரீட்சை இன்று நடக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 5
சட்டமாணிக் கற்கைநெறியின் தெரிவுப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது என யாழ்ப்பாண பிராந்திய திறந்த பல்கலைக்கழக உதவி இயக்குநர் கெ.கந்தவேள் தெரிவித்தார்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மற்றும் யாழ். பிராந்திய திறந்த பல்கலைக் கழகம் ஆகியன பரீட்சை இடம்பெறும் மண்டபங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள், தமது அனுமதி அட்டைகளை www.ou.ac.lk எனும் இணையதளத்தில் பார்வையிட்டு உறுதிப்படுத்திக் கொள்ளலாம். (த-10)

# கருணா, பிள்ளையான் மீது நடவடிக்கை எதுவுமில்லை

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அறிக்கையில் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 5
மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்காக, கருணா மற்றும் பிள்ளையான் மீது இன்னமும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சையிட் அல் ஹூசைனின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எதிர்வரும் 22ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள இந்த அறிக்கையில், அடையாள வழக்குகள் என்ற பகுதியில் சுட்டிக்காட்டப்பட் டுள்ள விடயங்களில், கருணா குழு தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
கருணா குழு என்ற துணை ஆயுதக்குழுவின் முன்னாள் தலைவரும், முன்னைய அரசின் அமைச்சராகப் பணியாற்றியவருமான விநாயகமூர்த்தி முரளிதரன் 2016 நவம்பரில், அதிகாரபூர்வ வாகனம் ஒன்றைத் தவறாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.
எனினும், கருணா குழுவின் மீது சுமத்தப்பட்டுள்ள நீதிக்குப் புறம்பான கொலைகள், பலவந்தமாகக்காணாமலாக்குதல், சிறார்களைப் படையில்சேர்த்தமை உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அவர் இன்னமும் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ளவில்லை.
கருணா குழுவின் மற்றொரு தலைவரும், கிழக்கு மாகாண முன்னாள் முதல்வருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
எனினும், கருணா குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சிறார் படைச் சேர்ப்பு தொடர்பாக இவர் மீது இன்னமும், நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-4)

# சமூக முன்னேற்றச் சமாச எழுச்சிவிழா இன்று யாழில்

யாழ்ப்பாணம், மார்ச் 5
சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாச புனர்வாழ்வு மற்றும் கல்வி அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த எழுச்சி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 2 .30 மணி வரை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாச புனர்வாழ்வு மற்றும் கல்வி அபிவிருத்தி நிதியத்தினால் இந்த விழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
காலை நிகழ்வு சமூகஜோதி எஸ்.வி. தம்பையா அரங்கில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத் தலைவர் இ.சாந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண திட்டமிடல் பிரதிப் பிரதம செயலர் இ.உமாகாந்தன் கலந்து கொள்வார்.
மாலை நிகழ்வு சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாச கலாசாரப் பணிப்பாளர் ச.அசோகரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்வி அமைச்சின் ஓய்வுநிலை மேலதிக செயலர் தில்லை நடராஜா கலந்து கொள்ளவுள்ளார். (த-10)

## மரண அறிவித்தல்



**கந்தர் ஜெகதீஸ்வரன் (மெக்கானிக் ஈசன்)**

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தர் ஜெகதீஸ்வரன் 03.03.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாதகலைச் சேர்ந்த செல்லத்துரை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் இந்திராவின் பாசமிகு கணவரும், ஹரிகரன் , ஹரிசுதன், வரன்னியா, கிரிஷ்னி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, கண்மணி, தவமணி, யோகீஸ்வரி. கணேசலிங்கநாதன் மற்றும் செல்லக்கதிர்காமத்தையா, சிவசண்முகநாதன், லீலாவதி, சிவலோஜினி. ஞானரூபி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கைதடி தெற்கு (AJA/CS/1708)(11,17,18) குடும்பத்தினர்.

0768458121

## மரண அறிவித்தல்



**முத்துலிங்கம் ஜெயரூபன்**

வேலணையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் ஜெயரூபன் 02.03.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துலிங்கம்-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், யாழ்ப்பாணம், கந்தர்மடம் பரம்சோதி - கிருஸ்ணாம்பிகைதம்பதிகளின் அன்புமருமகனும், சோபனாவின் அன்புக் கணவரும், ரேனுஜா, கிருத்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயமலர், ஜெயகரன் (லண்டன்), ஜெயதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிரஞ்சனா, சர்மிளா, பாலச்சந்திரன், சஜித்தா (லண்டன்), சுதாஜினி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், தயாளன், முரளிதரன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.03.2017 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30,Cottes more Avenue,
Clayhall Ilford,
Essex IG 5 OTG,
London.
0044 208 550 1972

தகவல்
மாமன் - மு.பரம்சோதி
கந்தர்மடம்.
021 222 2103
(AJA/CS/1729)(11.17.18)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் சக ஆசிரியர்
திருமதி தி. இராஜசிங்கம்
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி தர்மாம்பாள் ஆறுமுகம்**
அவர்கள் 01.03.2017 புதன்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**வட்டமேசை,**
**யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.**

## கண்ணீர் அஞ்சலி



ஆதார வைத்தியசாலை
தெல்லிப்பழையில் தாதிய
உத்தியோகத்தராகக் கடமை புரியும்
**திரு. ஆதவனின்** அன்புத் தந்தை
**சின்னத்தம்பி மகாலிங்கம்**
அவர்கள் 03.03.2017 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவுத்துயர் தாங்காது தவிக்கின்ற அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**உளநலப்பிரிவு, தாதியசமூகம்**
**ஆதாரவைத்தியசாலை, தெல்லிப்பழை.**

## கண்ணீர் அஞ்சலி



கரவெட்டி பிரதேச செயலகத்தில் வாழ்வின்
எழுச்சி முகாமை யாளராக கடமை யாற்றும்
**திருமதி இ.வின்சன் ஜெறின்** அவர்களின்
பாசமிகு தந்தையார்
**அந்தோனிமுத்து அன்ரனி வின்சன்**
அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
**யாழ். மாவட்ட வாழ்வின் எழுச்சி முகாமையாளர் சங்கம்**
**யாழ்ப்பாணம்.**

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
**இராசேந்திரம் கருணாகரர்**
யாழ். இந்துக்கல்லூரி
பழைய மாணவன்,
முன்னாள் முகாமைத்துவ
உதவியாளர், மாவட்டச்
செயலகம், வவுனியா

**தோற்றம்**
**18.05.1982**
**மறைவு**
**05.03.2008**

ஆண்டுகள் பல ஓடினாலும் உங்கள் நினைவுகள்
மாறாது மகனே! இறுதிவரை துணையிருப்பாய் என்று
எண்ணி இருந்தோம். எங்களைப் பாதியில்
பரிதவிக்கவிட்டு ஓடி மறைந்ததால் வாடுகின்றோம்
அன்பான உன் வார்த்தை அயராது எங்கள்
செவியில் ஒலிக்கிறது மகனே.

**சுதுமலை தெற்கு,**
**மானிப்பாய்.**
(உ.தெ.ஏ.001733)
**உன் பிரிவால் வாடும்**
**பெற்றோர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சிகள்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## படை...

இதனையடுத்துப் பிரதேச மக்கள் ஒரு மாதமாக முன்னெடுத்திருந்த தொடர் போராட்டம் நிறைவுக்கு வந்தது.

நேற்று முற்பகல் 9 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் காணிகளுக்கான பத்திரத்தைப் பொதுமக்களிடம் கையளித்தார்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் அமைந்துள்ள 19 ஏக்கர் காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் எனக் கோரிக் கடந்த ஒரு மாத காலமாக மக்கள் தொடர் அறவழிப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்த நிலையில் 20 குடும்பங்களு க்குச் சொந்தமான 7.75 ஏக்கர் காணி நேற்று விடுவிக்கப்பட்டது.

இராணுவம் சுவீகரித்துள்ள 19 ஏக்கர் காணியில் ஒரு பகுதி நேற்று விடுவிக்கப்படும் என முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய நேற்றுக் காலை காணி உரிமையாளர்கள், பொதுமக்கள் பிரதேசசெயலகத்துக்கு முன்னால் கூடினர். முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் பிரதேச செயலகத்துக்குக் காலை 8.30 மணியளவில் வந்தார். பிரதேச செயலாளரை அழைத்துக் கொண்டு 682 ஆம் படையணியின் முகாமுக்குச் சென்று அவர், இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் காணி விடுவிக்கப்படுவதாக அறிவித்தார்.

காணி உரிமையாளர்கள் பல வருடங்களுக்குப் பிறகு சந்தோசத்துடன் காணிகளுக்குள் சென்றனர். இதனையடுத்து ஒரு மாதமாக நடந்த அறவழிப் போராட்டம் முடிவுக்கு வந்தது.

விடுவிக்கப்பட்ட 7.75 ஏக்கர் காணிகள் தவிர மீதமுள்ள காணிகளில் 10 ஏக்கரை 3 மாதத்திலும், பொன்னம்பலம் வைத்தியசாலை அமைந்த காணியை 6 மாதத்திலும் விடுவிப்பதாகப் படையினர் தெரிவித்தனர். (த-7)

## வடக்கு...

சேன தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற அரச தலைவரிடம் தெரியுங்கள் அலுவலகத் திறப்பு விழாவின் பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அலுவலகம் திறக்கப்படுவதன் ஊடாக யாழ்ப்பாண மக்களுக்கும் எனக்கும் இடையில் நெருக்கம் - இறுக்கம் ஏற்படுகின்றது. நாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் பிரிந்து போகக்கூடாது. எப்போதும் கைகோர்த்து ஒன்றாகத்தான் இருக்கவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா உரையாற்றினார். அவர் தனது உரையில் குறிப்பிட்ட விடயங்களுடன் நான் ஒத்துப் போகின்றேன். நாங்கள் இங்கே இருக்கக் கூடிய பிரச்சினைகளை எப்படித்தான் தீர்த்துக் கொள்ளப் போகின்றோம். எங்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சந்தேகத்தை ஒருபோதும் ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

### உள்ளத்தால்
### இணையவில்லை

நீண்ட காலப் போர் நிலவிய பிரதேசம் இது. போர் முடிந்து 8 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் இன்னும் பிரச்சினை தீரவில்லை. போர் முடிவடைந்து 8 ஆண்டுகள் கடந்தாலும் நாட்டில் வாழ்கின்ற மக்கள் உள்ளத்தால் ஒன்றுபடவில்லை. எங்களுக்கு ஒவ்வொரு நிறுவனங்கள் சார்பில் ஒன்றாக இருந்து பேச முடியும். ஒன்றாக விளையாட முடியும். எங்களுக்குச் சாப்பாட்டு மேசையில் ஒன்றாகச் சாப்பிட முடியும். ஒரே பஸ்ஸில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்ல முடியும். ஆனால் உள்ளத்தால் ஒன்றுபடவில்லையாயின் எது செய்தாலும் அது பலன் தரப்போவதில்லை. எனவே உள்ளத்தால் நாங்கள் எப்படி ஒன்றுபடுவது ? நாங்கள் எப்பொழுதும் மக்களின் பிரச்சினையைப்பற்றி நேர்மையாகச் சிந்திக்கவேண்டும். அதற்காக அரசியல் கட்சி, பிரதேச வாதம் எதையும் சிந்திக்கக் கூடாது. எல்லா மதத்திலும் ஒன்றுபட்டு வாழுங்கள் என்றுதான் சொல்லப்பட்டிருக்கின்றது. ஒன்றுபடுவதற்கு மதத் தத்துவம்தான் முக்கியமானது.

வடக்கில் இருக்கக் கூடிய பிரச்சினைகள் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் இருக்கத்தான் செய்கின்றன. அரச நிறுவனங்கள் ஒன்றாகச் செயற்படுவதில்லை. வடக்கு மாகாணத்துக்குக் கடந்த இரண்டு வருடத்தில் பெருமளவு பணம் வழங்கியுள்ளோம். அந்தப் பணத்தின் மூலமாக சில பிரிவுகளில் வேலை செய்திருக்கின்றார்கள். சில பிரிவுகளில் வேலை செய்யவில்லை. வேலை செய்யப்படாவிட்டால் பணம் திரும்பிக் கொழும்புக்கே வரும். இங்குள்ள பிரச்சினைகள் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இருக்கத்தான் செய்கின்றது.

### புதிய அபிவிருத்தித் திட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா கூறியதை நான் வேறு விதமாகத்தான் சிந்தித்துப் பார்த்தேன். எனக்கு அருகில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவுடன் பேசினேன். வடக்குக்கு யாழ்ப்பாணத்துக்கு புதிய அபிவிருத்தித் திட்டத்தைச் செயற்படுத்தினால்தான் நன்றாக இருக்கும். எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு ஒவ்வொரு மாதமும் நான் இங்கே வருவேன். பெரிய கூட்டம் போட வரவில்லை. இங்குள்ள மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், அரசின் அமைச்சர்கள் எல்லோரையும் அழைத்து அபிவிருத்தி தொடர்பில் இங்குள்ள பிரச்சினைகளை எப்படி விரைந்து தீர்ப்பது என்பது தொடர்பில் பேசுவதற்காகவே நான் ஒவ்வொரு மாதமும் வரவுள்ளேன். பல பிரச்சினைகளை இதனூடாகத் தீர்க்க முடியும் என்று நம்புகின்றேன்.

### கடந்த காலங்களில்
### போராட்டம் நடத்தியிருந்தால்...

போராட்டங்கள், எதிர்ப்புக்கள் எல்லாம் வடபகுதியில் மாத்திரம் நடக்கவில்லை. முழு நாட்டிலுமே நடக்கின்றன. எதற்கு எடுத்தாலும் போராட்டம்தான். முக்கியமான விடயங்களுக்கு மாத்திரம் போராடுங்கள். போராட்டத்துக்கான முக்கியத்துவமே இல்லாவிடின் அதன் மதிப்பு குறைந்துவிடும். நான் ஆட்சிக்கு வந்த இரண்டு வருட காலத்தில்தான் போராட்டம் நடக்கின்றது. இதனை முன்பு செய்திருந்தால்... ? என்ன நடக்கும் ... ? (சிரிக்கின்றார்). போராட்டம் நடத்தியவர்கள் யார் என்று அறிந்து வெள்ளைவானில் தூக்கிக் கொண்டு சென்றிருப்பார்கள். (அரங்கில் இருந்தவர்கள் கை தட்டுகின்றனர்)

எங்கே தூக்கிக் கொண்டு போனார்களோ தெரியவில்லை. நடந்ததும் தெரியவில்லை. இப்போது யாரும் பயமில்லாமல் பாதைக்கு வந்து அரசுக்கு எதிராகச் சத்தம் போடுகின்றார்கள். சத்தம் போடுகிறவர்களை பேச்சுக்கும் அழைத்திருக்கின்றேன். ஏன் இப்படிச் சத்தம் போடுகின்றீர்கள் என்றும் கேட்டிருக்கின்றேன். சத்தம் போடாமல் பேச்சு மூலமாகத் தீர்த்துக் கொள்ளலாம் என்று அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன்.

### மோத வைக்க முயற்சி

வடக்கிலும் தெற்கிலும் எங்களை மோத வைப்பதற்குப் பலர் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். எங்களை மோத வைப்பதற்கு நாட்டுக்குள் மாத்திரமல்ல நாட்டிற்கு வெளியேயும் காத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

உங்களுடைய முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்குச் சுகவீனம் என்ற காரணத்தினால் சந்திக்க முடியவில்லை. அவர் வெகுவிரைவில் சுகம் பெறப் பிரார்த்திக்கின்றேன். நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா வெகுவிரைவில் சுகமடைந்து வந்ததற்காக சந்தோசப்படுகின்றேன்.

மீண்டும் நாட்டில் போர் ஏற்படாமல் நாட்டை ஒன்றுபட்டுக் கட்டியெழுப்புவதற்கு சிந்திக்க வேண்டும். மக்களுடையேயான சந்தேகத்தைப் போக்க வேண்டும் என்றார். (த-5)

## தமிழ்...

போராடுகின்றார்கள். அவர்கள் எதிர்பார்த்த விடயங்கள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. நம்பிக்கையீனம் வளர்ந்து வருகின்றது. அரசியல் பொறுப்புள்ளவர்கள் என்ற வகையில், எங்களுடைய மக்கள் நம்பிக்கை குறைந்து வருவதை உணர்ந்து கொண்டாலும், எங்கள் மக்கள் தெரிவு செய்த அரச தலைவரை, மீண்டும் நம்பிக்கையுடன் எதிர்நோக்கி நிற்கின்றோம். இருப்பினும் கனத்த இதயத்துடன் மனத்துடனேயே வரவேற்க வேண்டியுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களுக்கு வேலை வழங்கவேண்டும். நாடு முழுவதுமான பிரச்சினைதான். ஆனாலும் வடக்குகிழக்கில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாகப் போரினால் பாதிக்கப்பட்ட அவர்களை ஏனையோருடன் ஒப்பீடு செய்யக்கூடாது. வேலையற்ற பட்டதாரிகள் அவர்களின் தாய் தந்தையரைக் கூட முகம் கொடுத்துப் பார்ப்பதற்கு வெட்கப்படுகின்ற நிலையில் இருக்கின்றனர். அவர்களுக்கு மிகக் குறுகிய கால தவணைக்குள் வேலை வழங்குவதற்கான வாக்குறுதியைக் கொடுக்க வேண்டும்.

### போராட்டங்கள்

அரச தலைவராகத் தேர்வு செய்யப்பட முன்னர், ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்படும் என்று உறுதி வழங்கியிருந்தீர்கள். அதன் பின்னர் ஆறு மாத காலத்திற்குள் விடுவிக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். இந்த வாக்குறுதிகளை மறந்திருக்கமாட்டீர்கள் என்று நம்புகின்றேன். காணிகள் விடுவிக்கக்கோரி அந்த மக்களும் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். இதுவரையில் சிறிய அளவிலான நிலமே விடுவிக்கப்பட்டிருக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகளும் போராடுகின்றனர். தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை.

### மீள்குடியேற்ற அமைச்சு
### ஒத்துழைக்கவில்லை

காணி விடுவிப்பு, மீள்குடியேற்றத்துடன் தொடர்புடைய மீள்குடியேற்ற அமைச்சு எங்களோடு ஒத்துழைக்கவில்லை. இந்த விடயத்தை உங்களிடம் முன்னரும் குறிப்பிட்டுள்ளோம். அந்த அமைச்சு மக்களின் எதிர்பார்ப்பைப் புறந்தள்ளிச் செயற்படுகின்றது.

அமைச்சர்கள் இங்கே வருகின்றார்கள். தாங்கள் நினைத்தவாறு இங்கே தமது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். எமது பிரதேசத்துக்குச் சிறந்த திட்டங்கள் தேவை. போரினால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு நிதி உதவி. நிதி உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடத்தப்படும் என்று எமக்குச் சொல்லப்பட்டிருந்தது. ஆனால் நடத்தப்படவில்லை. கடந்த 2 ஆண்டுகளில் நாங்கள் அடைந்த முன்னேற்றம் சிறிதுதான்.

### வடக்கு கிழக்கை
### தெற்குடன் ஒப்பிடாதீர்

வடக்கு கிழக்கின் நிலமை வேறு. தெற்கின் நிலைமை வேறு. வடக்கு கிழக்குப் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசம். தெற்கு அப்படியல்ல. வடக்கு கிழக்கின் பிரச்சினைகள் வேறு. தெற்கின் பிரச்சினைகள் வேறு. இரண்டையும் ஒப்பிடமாட்டீர்கள் என்று நம்புகின்றேன்.

### ஐ.நா. ஆணையாளரின்
### அறிக்கையை
### நடைமுறைப்படுத்துங்கள்

ஏமாற்றமடைந்துள்ள எமது மக்களிடத்தில் நம்பிக்கையை உருவாக்குவதற்கும், ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்பவும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் .சையிட் அல் ஹூசைனின் அறிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள். அதனை நாங்கள் இங்கே கோருகின்றோம்.

தென்னிலங்கை இனவாத சக்திகள், தீர்வுத் திட்டம் வராமல் இருக்க முயற்சிக்கின்றார்கள். அவர்களைத் தைரியத்துடன் எதிருங்கள். நாங்கள் அதற்கு ஒத்துழைக்கின்றோம். அவர்களுடைய நெருக்கடிகளுக்குப் பணிந்து உங்களை நம்பியிருக்கின்ற தமிழ் சமூகத்தை- உங்களைத் தெரிவு செய்த சமுதாயத்தை ஏமாற்றிவிடக்கூடாது. (த-5)

## 12 வயது...

வனே உயிரிழந்தான்.

கடந்த 28 ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் அவர் சிகிச்சை பெற்றார். மறுநாள் அவரது குருதி மாதிரி பரிசோதிக்கப்பட்டபோது டெங்கு அறிகுறி காணப்பட்டது. இதனால் கடந்த 2 ஆம் திகதி சிறுவன் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டான். பின்னர் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டான். எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்று அதிகாலை 12 மணியளவில் சிறுவன் உயிரிழந்தான்.

அரியாலையில் ஏற்கனவே டெங்குத் தொற்றுக் காணப்பட்டதனால் சுகாதாரப் பகுதியினர் புகை அடித்தனர். இதன்போது எமது வீட்டுக்கும் புகை அடிக்குமாறு கேட்டோம். சில காரணங்கள் கூறப்பட்டன என்று டெங்கினால் உயிரிழந்த சிறுவனின் தாயார் விசாரணையில் தெரிவித்தார்.

பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மு.உதயசிறி விசாரணை மேற்கொண்டனர். பின்னர் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினமும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாய் டெங்குக் காய்ச்சலால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## முப்படையினரை...

யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பன்னாட்டு நீதிபதிகளை அழைத்து எமது இராணுவத்தினருக்கு எதிராக விசாரணை மேற்கொள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைத்துள்ள யோசனையை நிராகரித்து விட்டேன். நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த இராணுவத்தினரின் பாதுகாப்புத் தொடர்பில் பொறுப்புடன் செயற்படுவேன்.

பன்னாட்டுத் தொடர்புகளின் அடிப்படையில் செயற்படும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் கூறுவது போல அரசை நடத்துவதற்கோ அல்லது முப்படையினர் மீது குற்றப் பத்திரிகைகளைக் கொண்டு வந்து விசாரணை செய்வதற்கோ நான் தயாராக இல்லை.

நிதி நோக்கோடு செயற்படும் சில அரச சார்பற்ற நிறுவனங்களும், தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு முற்படும் எதிர்தரப்பு அரசியல் சக்திகளும் எவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தபோதும் நாட்டின் படையினரின் முதன்மைப் பாதுகாவலன் நான்தான். படையினரின் கௌரவத்துக்குப் பாதிப்பு ஏற்படும் வகையிலான எந்தவொரு செயற்பாட்டுக்கும் எனது பதவிக் காலத்தில் இடமளிக்கப்படமாட்டாது என்றார்.

யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைத் தலைமையகத்திற்குச் சென்ற அரச தலைவர் மைத்திரி, இராணுவத்தினரின் சுகதுக்கங்களை விசாரித்து அவர்களுடன் சுமுகமாகக் கலந்துரையாடியதுடன், யாழ்ப்பாணத்தில் சேவை புரிந்து ஓய்வுபெற்ற இராணுவத்தினருக்குப் பரிசில்களையும் வழங்கினார். அரச தலைவரின் வருகையைக் குறிக்கும் முகமாக பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் நாக மரக்கன்று நாட்டி வைக்கப்பட்டது.

அதன் பின்னர் பலாலி வான்படை முகாமுக்கு வருகை தந்த அரச தலைவர் மைத்திரி, அங்கும் இராணுவத்தினருடன் சுமுக கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், அவர்களது பிரச்சினைகள் குறித்து விசாரித்தார். (த-5)

## மிக...

மைகள் கண்காணிப்பகம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம், நீதி, மறுசீரமைப்பு வாக்குறுதிகள் உண்மையாவதற்கு இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டியுள்ளது என்பதை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஜெனிவா பணிப்பாளர் ஜோன் பிஸர், அரசு அதன் வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றும் வரையில் பன்னாட்டுக் கண்காணிப்பு தொடருவதை உறுதிப்படுத்தும் வகையில், ஐ.நா மனித உரிமைகள் சபையின் இந்த அமர்வில், உறுதியான காத்திரமான தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (த-5)

## கணவன்...

மீள்குடியேற்றப்பட்டபோதும் சொந்த வீட்டில் வாழ முடியாமல் வாடகை வீட்டில் வாழ்ந்த நிலையில் தந்தையும், மகளும் கடந்த 2015ஆம் ஆண்டு உயிரிழந்துவிட்டனர். அவர்கள் தாம் இறப்பதற்கு முன்னர் சொந்த வீட்டுக்குச் செல்லவேண்டும் என்பதையே இறுதி ஆசையாகக் கொண்டிருந்தனர். எனது கணவர் உயிரிழந்தபோது அவரது உடலை சொந்த வீட்டில் வைப்பதற்கு அனுமதி கேட்டபோதும் இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை. அதேபோல் மகள் இறந்தபோதும் அனுமதி தரவில்லை. இன்று அவர்களின் படங்களைச் சுவாமி அறையில் வைத்த பின்னரே எனக்கு நிம்மதியாக உள்ளதுஎன்றார். (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுநீரகம் தேவை

48 வயதுடைய சிறுநீரக நோயாளிக்கு O or A குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவைப்படுகின்றது. உதவ விரும்புபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**077 516 8146, 076 382 3365**

---



உ
சிவமயம்

## காரைநகர் சிவன் கோயில் (ஈழத்துச் சிதம்பரம்)

**அடியார்கள் சபை லிமிடட் வரைவுள்ளது.**

**பொதுக்கூட்டம்**

- காலம் : 26.03.2017 ஞாயிற்றுக்கிழமை
- நேரம் : காலை 10.00 மணி
- இடம் : காரைநகர் சிவன்கோயில் முன்மண்டபம்

அனைத்து அடியார்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆ. அம்பலவிமுருகன்
மு. சுந்தரலிங்கம்
ஆதீனகர்த்தாக்கள் செயலாளர்.

---

## நாகபூஷணி திருமணசேவை

மகளிர் தினத்தை முன்னிட்டு.
மணமகள்மாருக்கு பதிவுக்கட்டணங்கள் இலவசம். (05.03.2017 தொடக்கம் 15.03.2017 வரை) நீங்கள் விரும்பும் மணமக்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்படும். ஏராளமான மணமக்கள் எம்மிடம் உள்ளனர். ஏழு நாள்களும் திறந்திருக்கும்.

383/14 B கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596

---

## உடல் எடை குறைய வேண்டுமா?

- ★ உடல் எடை குறைக்க வேண்டுமா?
- ★ ஊளைச்சதையா?
- ★ வயிறு மார்பு குறைக்க வேண்டுமா?
- ★ எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா?
- ★ 100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (டொனிக் குளிசை, கிறீம்)

ஆச்சரியம் 10 நாள்களில் வயிறு மார்பு குறைக்கும் கிறீம் எம்மிடம் உண்டு
விலை 3500/= 5500/= 9000/=
இதனைப் பாவித்து 10 நாள்களில் அபரீதமான மாற்றத்தை உணர்வீர்கள்

பதிவு இல: 16168
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
077 210 6155

---

# நன்றி நவிலல்



அமரர்
**நாகேஸ்வரி வரதலிங்கம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

கடந்த 30.01.2017 சிவபதமடைந்த எனது தாயாரின் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையங்கள் செலுத்தியவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் (01.03.2017) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெற்ற ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"நாகேஸ்தான்"
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

கயல்விழி ராஜாராம் (மகள்)
077 4809 821

---

# IPS

## இலவச கணினிவகுப்புக்கள் - பிரிவு V

பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், கணினி (ICT) பரீட்சைகளிற்கு தோற்றுபவர்களுக்கானது

- *ICT அறிமுகம்
- *Diploma in Msoffice
- *Diploma in Internet Technology

ஆரம்பம் - 11, 12. 03.2017 சனி, ஞாயிறு

குறிப்பு - சனி, ஞாயிறு 3PM - 4PM, 4PM - 5PM பிரிவுகளுக்கான அனுமதி வழங்கப்படுகின்றது.

IPS Estd : 2012 Thirunelvely (சாயி சமித்திக்கு அருகில்).
Hot line - 076 685 2529

---

## ஆசிரியர் தேவை

பிரபல தனியார் பாலர் பாடசாலைக்கு கோப்பாய், புத்தூர், சுன்னாகம் ஆகிய இடங்களில் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை.

தொடர்புகளுக்கு. 077 3627 055
077 4682 951

---

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.பிரதானவீதி(Main Street) இலும், கோப்பாய், இருபாலை, சிறுப்பிட்டி, அச்சுவேலி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு. 077 3627 055
077 4682 951

---

## பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
தொடர்பு - 077 262 6944

---

## கோழிகள் விற்பனைக்கு

ஒரு மாதம் நிரம்பிய சேவல் கோழிக்குஞ்சுகள், வெள்ளடியன் இன சேவல்கள் விற்பனைக்கு உண்டு.

077 245 3673

---

## பணிப்பெண், காவலாளி தேவை

K.K.S. Road, கோண்டாவில் மேற்கு, ஜெயசோதி Rest house இற்கு.
தொடர்புகளுக்கு - 077 634 1314
(தென்மராட்சியை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது)

---

## வீடு வாடகைக்கு

K.K.S றோட், கோண்டாவில், உப்புமடம் சந்திக்கு அருகில் மேல் மாடி வீடு சகல வசதிகளுடனும் உண்டு.

தொடர்புகளுக்கு. 077 1328 557
077 5987 500

---

## வீடு வாடகைக்குண்டு

சண்டிலிப்பாயில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு. 077 3013 060

---

## வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கும் தையலகம் ஒன்றிற்கு தையல்வேலை தெரிந்த ஆண் பெண் தேவை.

தொடர்பு :- 077 729 7526

---

## ASIAN GLASS அலுமினியம் பிற்றிங்

சகல விதமான அலுமினிய பிற்றிங் வேலைகள் சிறந்த முறையிலும், சலுகை விலையிலும் செய்து தரப்படும்.

தொடர்பு. 077 6194 994

---

## வாடகைக்கு

யாழ். மத்தியில் கடைகள் வாடகைக்கு உண்டு. நிறுவனத்திற்கும் ஏற்றது.

தொடர்பு. 0771620 626

---

## அறைகள் வாடகைக்கு உண்டு

கச்சேரி பஸ் தரிப்பிடத்தின் பின்புறமாக மிகவும் அமைதியான சூழலில் தனித்தனி நுழைவாயிலுடன் இணைந்த குளியலறை களுடன் மேல் மாடியில் இரண்டு அறைகளும் கீழ் தளத்தில் இரண்டு அறைகளும் வாடகைக்கு.

தொடர்பு. 077 7034 225
(பெண்கள் மட்டும்.)

---

## வீடு வாடகைக்கு தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீடு வாடகைக்கு தேவை. நல்லூர், கந்தர்மடம், திருநெல்வேலி, கொக்குவில் விரும்பத்தக்கது.

தொடர்பு. 075 5215 478

---

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 இல் பிறந்த புனர்பூசம் நட்சத்திரம், மிதுனராசி, கம்பியூட்டர் கிராபிக்ஸ் (மீடியா) சொந்தமாக பணிசெய்யும் மணமகனுக்கு தகுந்த பெண் தேவை.

தொடர்பு - 077 905 8615
077 648 7131

---

## இலங்கையில் முதல்தடவையாக

பெண்களுக்கு பொருத்தமான பாடநெறிகளைக் கொண்ட அழகுக்கலை கல்லூரி

**ஒளிஅழகன் ஸ்ருடியோ**
**British College Of Beauty Studies**
இணைந்து நடத்தும் பயிற்சி வகுப்புக்கள்



திருநெல்வேலி கிளைக்கான அழகுக்கலை, தையல்கலை பயிற்சிவகுப்புக்கள் எதிர்வரும் 13.03.2017 ஆரம்பமாகவுள்ளது.
பதிவுகளை மேற்கொள்ளுங்கள் (11 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு Discount வழங்கப்படும்)
எதிர்வரும் 12 ஆம் திகதி மகளிர் தினத்தை முன்னிட்டு இலவசமாக மகளிருக்கான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இடம் - வீரசிங்கம் மண்டபம்
நேரம் - 09.00 am - 3.00 pm

---

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2849 திகதி 04.03.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 11 16 36 61 C
போனஸ் இல. திங்கட்கிழமை ஜக்பொட்: 31 ரூ. 49,753,500/-
நீல நிற டிக்கட்டுக்கள் 06 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
Web: www.dlb.lk

SUPER BALL சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 623
சீட்டிழுப்பு திகதி 04.03.2017 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 03 16 38 64 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52, 617, 375/=
Web: www.dlb.lk

Development Fortune
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 22
சீட்டிழுப்பு திகதி 04.03.2017 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 20 49 56 58
சுப்பர் இலக்கம்: 05
அதிர்ஷ்ட மாதம்: ஏப்ரல்
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் 8, 314, 194/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் 3, 759, 856/=
அடுத்த ஜக்பொட் 1, 333, 606/=
2017.03.09 திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

---

## Dubai Job 2017 வேலை வாய்ப்பு

- Hotel Works
- Car Company
- Flower Shop
- Driver (Sirlanka license)
- Cook and Helper

மற்றும் கல்வி தகைமைகளுக்கு ஏற்ப ஆண், பெண் இருபாலாருக்கும் வேலைவாய்ப்பு உண்டு.
சம்பளம் (48000/- தொடக்கம் 120,000/- வரை)
உணவு/தங்குமிடம்/போக்குவரத்து இலவசம்.

தொடர்புகளுக்கு - இலங்கை, 075 4699 004, 072 425 2240
டுபாய் - 009 7150 80 96517
Whatapp/imo/Viber, 009 715 525 48955
WWW.dubai job.lk(Web Said)

---

## யா/கொக்குவில் இந்துக்கல்லூரி கல்லூரிச்சமூகம்

கொக்குவில் இந்துக்கல்லூரி
அதிபர் நியமனம் தொடர்பான கலந்துரையாடல்

இடம் - பஞ்சலிங்கம் கேட்போர்கூடம் - கொக்குவில் இந்துக்கல்லூரி
காலம் - 05.03.2017
நேரம் - காலை 10.00 மணி

**நிகழ்ச்சி நிரல்**

- *மௌன வணக்கம்
- *தலைமையுரை - திரு. அ. பஞ்சலிங்கம் (ஓய்வு நிலை அதிபர், தலைவர் பழைய மாணவர் சங்கம்)
- *விளக்கவுரைகள்
  - *திரு. பி. கமலநாதன் (ஓய்வு நிலை அதிபர்)
  - *திரு. ஆ. சத்தியமூர்த்தி (பெற்றோர் சார்பாக)
  - *திரு. கண்ணதாசன் (செயலாளர் - பாடசாலை அபிவிருத்தி குழு)
  - *திரு. மு. வேலாயுதபிள்ளை (ஓய்வு நிலை பிரதி அதிபர்)
  - *திரு. ஆ. ஞானகாந்தன் (ஓய்வு நிலை அதிபர்)
- *கருத்துபரிமாற்றம்
- *நன்றியுரை - திரு. மு. அசோக்குமார் (பழைய மாணவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லையனிடம் சுருண்டது இந்தியா

லையனின் சுழல்பந்து வீச்சில் தனது முதல் இன்னிங்ஸிற்காக வெறும் 189 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இந்திய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது இந்திய அணி. முரளி விஜய் நீக்கப்பட்டு ஆரம்ப வீரராக தமிழ் பேசும் வீரர் அபினவ் முகுந்த் களமிறக்கப்பட்டார். ஆனால் அவரை ஓட்டமெதனையும் பெறவிடாமல் வெளியேற்றினார் ஸ்ராக். இலக்குக்கு வந்த பந்தை எதிர்த்தாடாமல் ஆட்டமிழந்தார் கோக்லி. ஒரு மறுபரிசீலனை வாய்ப்பையும் அவர் வீணடித்தார். ரகானே 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆனால் மறுமுனையில் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைச்சதம் கடந்தார் லோகேஸ் ராகுல். நாயர் பெற்ற 26 ஓட்டங்களே இரண்டாவது அதிகபட்சம். அஸ்வின், ஜடேயா, சகா ஆகிய வீரர்கள் ஒற்றை இலக்கத்திலேயே முடங்கினர். 90 ஓட்டங்களுடன் ராகுலும் ஆட்டமிழக்க 189 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இந்திய அணி.



பந்துவீச்சில் லையன் 8 இலக்குகளைக் கைப்பற்றி அசத்தினார். கெபி, ஸ்ராக் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி இலக்குச் சரிவில்லாமல் 40 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது நாள் முடிவு கண்டது. வோர்ணர் 23 ஓட்டங்களுடனும் ரென்சொவ் 15 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)




# மாகாண வேகநடை வவுனியா சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 5

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய மாவட்ட ரீதியிலான வேகநடையில் ஆண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட அணி சம்பியனானது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்பாக நேற்று இந்தப் போட்டி நடைபெற்றது. இருபால் பிரிவு போட்டிகளும் 20 கிலோ மீற்றர் தூரம் உடையதாக அமைந்தன. வவுனியா மாவட்ட அணி முதலாம் இடத்தை கைப்பற்றியது.

தனிநபர் பெறுபேறுகளின் அடிப்படையில், வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த கே.ரசிகரன் 2 மணி 2 நிமிடங்கள் 5 செக்கன்களில் இலக்கை அடைந்து முதலாமிடத்தையும், ஆர்.சந்திரவேந்தன் 2 மணி 5 நிமிடங்கள் 6 செக்கன்களில் இலக்கை அடைந்து இரண்டாமிடத்தையும், கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.வகிதரன் 2 மணி 8 நிமிடங்கள் 5 செக்கன்களில் இலக்கை அடைந்து மூன்றாமிடத்தையும் தமதாக்கினர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சுகிர்தன் நான்காமிடத்தையும் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த டி.தர்சன் ஐந்தாமிடத்தையும் வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பி.டினுசன் ஆறாமிடத்தையும் ரி.அனுஜன் ஏழாமிடத்தையும் எஸ்.தமிழ்ச்செல்வன் எட்டாமிடத்தையும் எம்.கௌரிநாதன் ஒன்பதாமிடத்தையும் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எம்.சங்கர் பத்தாமிடத்தையும் பெற்றனர்.

(ம-108-422)

# நெல்லியடி மத்தி. மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், மார்ச் 5

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கபடியில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி சம்பியனானது.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 45:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது. மூன்றாமிடத்தை தொண்டமானாறு வீரகத்தி மகா வித்தியாலய அணி பெற்றது. (ம-422-108)

# வவுனியா சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 5

வடமாகாண விளையாட்டுத்திணைக்களம் நடத்திய மாவட்ட ரீதியிலான வேகநடையில் பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட அணி சம்பியனானது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்பாக இந்தப் போட்டி நடைபெற்றது. இருபால் பிரிவு போட்டிகளும் 20 கிலோ மீற்றர் தூரம் உடையதாக அமைந்தன. வவுனியா மாவட்ட அணி முதலாமிடத்தையும் முல்லைத்தீவு மாவட்ட அணி இரண்டாமிடத்தையும் மன்னார் மாவட்ட அணி மூன்றாமிடத்தையும் பெற்றன.

தனிநபர் பெறுபேறுகளின் அடிப்படையில், இதில் வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.கோகிலவாணி 2 மணி 9 நிமிடங்கள் ஒரு செக்கன்களில் இலக்கை அடைந்து முதலாமிடத்தையும், கே.கனகேஸ்வரி 2 மணி 14 நிமிடங்கள் 2 செக்கன்களில் இலக்கை அடைந்து இரண்டாமிடத்தையும், பி.தர்சிகா 2 மணி 20 நிமிடங்கள் 4 செக்கன்களில் இலக்கை அடைந்து மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பி.கேமா நான்காமிடத்தையும் வை.குகேந்தினி ஐந்தாமிடத்தையும், எஸ்.டிலக்சனா ஆறாமிடத்தையும் பெற்றனர். (ம-108-422)




# கோகிலவாணி புதிய சாதனை

யாழ்ப்பாணம், மார்ச் 5

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய மாவட்ட ரீதியிலான வேகநடையில் பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கோகிலவாணி புதிய சாதனையைப் படைத்தார்.




தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்பாக நேற்று இந்தப் போட்டி நடைபெற்றது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கை 2 மணி 9 நிமிடங்கள் ஒரு செக்கன்களில் அடைந்து முதலாமிடத்தைப் பெற்றார் கோகிலவாணி. கடந்த ஆண்டு நடைபெற்ற போட்டியில் வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.கனகேஸ்வரி 2 மணி 10 நிமிடங்களில் நடந்து முடித்ததே இதுவரை சாதனையாக இருந்தது. இந்தச் சாதனையையே கோகிலவாணி முறியடித்தார். (ம-422)



# சாவகச்சேரி இந்து கிண்ணம் வென்றது

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து நாவற்குழி மகா வித்தியாலய அணி மோதியது. இதில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி 25:18, 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாமிடத்தை சாவகச்சேரி றிபேக் கல்லூரி அணி பெற்றது. (ம-422)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மோர்கனால் வென்றது இங்கி.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டத்தில் வெற்றிபெற்று தொடரில் முன்னிலை வகிக்கிறது இங்கிலாந்து.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இங்கிலாந்தின் ஆரம்ப வீரர்களாக றோய் மற்றும் பில்லிங்ஸ். 13 ஓட்டங்களுடன் றோயை வீழ்த்தினார் கபிரியேல். அவர் ரூட்டையும் போல்ட் செய்தார். 29 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்து தவித்த இங்கிலாந்து அணியை, மோர்கன், பில்லிங்ஸ் இணை தூக்கி நிறுத்தியது. இருவரும் அரைச்சதம் கடந்தனர். 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பில்லிங்ஸ். படலரால் முடிந்தது 14 ஓட்டங்கள். மோர்கனுடன் இணைந்து சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார் ஸ்ரோக்ஸ். 112 பந்துகளில் மோர்கனின் சதம் பதிவானது. ஸ்ரோக்ஸ் அரைச்சதம் கடந்தார். முடிவில் இங்கிலாந்து 296-6. பந்துவீச்சில் கபிரியேல், நேர்ஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும், பிஸ்கூ ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய தீவுகளுக்கு முன்வரிசை வீரர்களான பிரீத்வைட், லூயிஸ், பவல் முறையே 14, 21, 1 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். ஹோப் 31 ஓட்டங்களையும், மொகமட் 72 ஓட்டங்களையும், கார்ட்டெர் 52 ஓட்டங்களையும் குவித்து மத்திய வரிசையைப் பலப்படுத்திய போதிலும் பின்வரிசை வீரர்கள் தொடர் தடுமாற்றத்தை வெளிப்படுத்த 251 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது தீவுகள். (ம)





# கிண்ணத்தை கைப்பற்றியது தெ.ஆபிரிக்கா

நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை 3:2 என்ற அடிப்படையில் கைப்பற்றியது தென்னாபிரிக்க அணி.
முன்னதாக முடிவடைந்த முதல் 4 ஆட்டங்களில் இரு அணிகளும் தலா இரு வெற்றிகளுடன் இருந்தன. இதனால் நேற்று நடைபெற்ற ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே கிண்ணம் வெல்லும் என்ற நிலை இருந்தது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்துக்கு ஆரம்ப வீரரான குப்தில் நான்கே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். பவிலியனுக்கு அனுப்பியவர் ரபாடா. பிரவுன்நீல் 24 ஓட்டங்களுடனும், ரெய்லர் 8 ஓட்டங்களுடனும் பிளுக்வையோவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். 9 ஓட்டங்களுடன் ரண்அவுட் ஆனார் வில்லியம்சன். 8 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் ரோஞ்சி. 72 ஓட்டங்களில் முதல் 5 இலக்குகளையும் இழந்தது நியூசிலாந்து. நீஸ்ஹம், சான்நெர், கிராண்ட்ஹோம் மூவரும் முறையே 24, 24, 32 ஓட்டங்களைப் பெற்றனர். முடிவில் 149 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது நியூசிலாந்து. பந்துவீச்சில் ரபாடா 3 இலக்குகளையும், தாகிர், பிளுக்வையோ இருவரும் தலா 2 இலக்குகளையும், மொறிஸ் ஓர் இலக்கையும் இழந்தனர்.
பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்துக்கு குயின்டன் டி ஹொக் 6 ஓட்டங்களுடனும், அம்லா 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினர். எனினும் பிளாசிஸ், மில்லரின் சிறப்பான ஆட்டத்தால் 106 பந்துகள் மீதமிருக்க 4 இலக்குகளை இழந்து வென்றது தென்னாபிரிக்கா. ரபாடா ஆட்டநாயகனானார். (ம)



# பூப்பந்தாட்டத்திடல் திறந்து வைப்பு

வவுனியா, மார்ச் 5
வடக்கு மாகாணத்தில் முதல்தடவையாக வவுனியா பொது வைத்தியசாலையில் பூப்பந்து விளையாட்டுத் திடல் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.
வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் கு.அகிலேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சட்டத்தரணி எஸ்.சி.சந்திரகாசன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு திடலைத் திறந்து வைத்தார். இந்தத் திடலினூடாக மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், வைத்தியசாலைப் பணியாளர்கள், நோயாளர்கள் விளையாட்டு செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன் உடற்பயிற்சிகளிலும் ஈடுபடக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.
வவுனியா மேலதிக மாவட்டச் செயலர் த.திரேஸ்குமார், இலங்கைக்கான ஒபர் நிறுவனத்தின் பணிப்பாளர் செல்வி சூரியகுமாரி, வவுனியா சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் திருமதி பவானி பசுபதிராஜா, வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, வெளிநோயாளர் பிரிவு மருத்துவர் சுரேந்திரன், மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள். ஊழியர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-4)

# தடையை நீக்கக்கோரி வழக்குத் தொடர்ந்தார் இந்திய வீரர் சிறிசாந்

தன் மீதான தடையை நீக்கக்கோரி கேரள உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார் இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சிறிசாந்.
2013 ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடரில் ஆட்ட நிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்று சிறிசாந் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு அந்தக் குற்றச்சாட்டில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார். எனினும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அவருக்குத் தொடர்ந்தும் தடை விதித்துள்ளது. இதை அடுத்தே அவர் வழக்குத் தொடர்ந்தார். (ம)



# விதியை மீறினாரா ரொனால்டோ

காற்பந்து ஜாம்பவான் ரொனால்டோ, போக்குவரத்து விதிகளை மீறி தனது காரை செலுத்திச் சென்ற சம்பவம் காணொலியாக வெளியாகி யுள்ளது.
ஸ்பெயினில் அண்மையில் நடைபெற்ற ஆட்டமொன்றில் ரொனால்டோ விளையாடிவரும் ரியல் மட்ரிட் அணியும் லொஸ் பல்மாஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின. 3:3 என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.
ரொனால்டோ 2 கோல்களைப் பதிவுசெய்தார். ஆட்டம் முடிந்த பின்னர் அவர் தனது ஆடம்பர சொகுசுக் காரில் தனது காதலி ஜோர்ஜினியாவுடன் புறப்பட்டார். அவர், வீதியில் சிவப்பு விளக்கு எரிந்த போதும் காரை நிறுத்தாமல் தொடர்ந்து செலுத்திச் செல்வது போன்ற காணொலி சமூக வலைத் தளங்களில் பரவி வருகிறது. சம்பவ இடத்தில் பல பொலிஸ் வாகனங்கள் இருந்தும் எவரும் ரொனால்டோவின் காரை தடுத்து நிறுத்தவில்லை. (ம)

# ரகானேயுடன் போட்டிகள் ஏதுமில்லை என்றார் ரோகித்

இந்திய டெஸ்ட் அணியில் இடம் பிடிக்க ரகானே மற்றும் கருண் நாயருடன் போட்டியில்லை என்று தெரிவித்தார் ரோகித் சர்மா.
தொடையில் ஏற்பட்ட காயம் காரணமாக 4 மாதங்கள் ஓய்வில் இருந்தார் ரோகித். தற்போது அவர் மீண்டும் அணியில் இடம்பிடிக்க முடியாமல் தவிக்கிறார். ரோகித்தின் இடத்தை ரகானே பிடித்துள்ளார். ரகானேயை அணியில் இருந்து நீக்கும் எண்ணம் இல்லை என்று தலைவர் கோக்லி, பயிற்சியாளர் கும்ளே இருவரும் தெரிவித்து விட்டனர். இதனால் ரோகித், ரகானே இடையே போட்டி நிலவுகிறது என்று கருதப்பட்டுவரும் நிலையில் அதை மறுத்தார் ரோகித்.
எனது கிரிக்கெட் வாழ்க்கையில் எவரையும் நான் போட்டியாகக் கருதவில்லை. எனக்கு நானே போட்டி. போட்டியாளர் என்ற விடயத்தில் கவனம் செலுத்தி எனது நேரத்தை வீணாக்கமாட்டேன் என ரோகித் மேலும் தெரிவித்தார். (ம)



# தீவுகளுக்கு நெருக்கடி

மேற்கிந்தியத் தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது. இன்றைய ஆட்டத்திலும் அந்த அணி வெற்றிபெற்றால் கிண்ணம் இங்கிலாந்திடமே செல்லும். எனவே சொந்த மண்ணில் தொடரை இழக்காமல், அடுத்த ஆட்டம் வரை தனது இருப்பைத் தக்கவைக்க இன்றைய ஆட்டத்தில் வெல்ல வேண்டும் என்ற நெருக்கடி மேற்கிந்தியத் தீவுகளுக்கு உள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுபரிசீலனையைப் பயன்படுத்த இந்தியாவுக்கு அனுபவமில்லை

## கங்குலி வெளிப்படை

நடுவரின் முடிவை மீண்டும் பரிசீலித்துப் பார்க்கும் மறு பரிசீலனை முறையைப் பயன்படுத்துவதில் இந்தியாவுக்கு அனுபவமில்லை. ஆனால் அந்த விடயத்தில் இந்திய அணித் தலைவர் கோக்லியும் ஏனைய வீரர்களும் அதிக கவனம் செலுத்த வேண்டும் இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் 333 ஓட்டங்களால் தோல்வியடைந்தது இந்திய அணி. அந்த ஆட்டத்தில் நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் வாய்ப்புக்களையும் இந்திய அணி எக்கச்சக்கமாக கோட்டை விட்டது. குறிப்பாக இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப் பெடுத்தாடிய போது ஆரம்ப வீரர்களான முரளி விஜய், லோகேஸ்



ராகுல் இரு வரும் மறுபரிசீலனை செய்யும் வாய்ப்பை வீணடித்து பெரும் பின்னடைவை ஏற்படுத்தினர். இந்த நிலையில் கங்குலியின் குறித்த கருத்து மிகவும் முக்கியமான ஒன்றாக அமைந்துள்ளது.

இந்திய அணிக்கு நடுவர் முடிவை மீண்டும் பரிசீலனை செய்யும் முறையில் இன்னும் அனுபவம் தேவை. அந்த முறையை சில வாரங்களுக்கு முன்னரேயே நாம் செயற்படுத்தத் தொடங்கினோம். எனவே இந்த விடயத்தில் எமக்கு இன்னும் பயிற்சி தேவை. வீரர்கள் ஒவ்வொரு பந்துவீச்சையும் நுணுக்கமாக கவனிக்க வேண்டும். கோக்லி மீண்டு வருவார். அஸ்வின், ஜடேயாவில் நம்பிக்கை உண்டு என கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)


### புதிய சேவை அறிமுகம்

பொதிகள் சேவை
வீட்டிலிருந்து வீட்டுக்கு
11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்



UK
லண்டன்
550/-

ParcelLk
இல. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 2224338 / 021 4925024
இல. 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 024 4930200


### மரண அறிவித்தல்

## இளையதம்பி சிவலிங்கம்

கட்டுவனைப் பிறப்பிடமாகவும், வேலணை வடக்கு, மணியகாரர் வீட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சிவலிங்கம் நேற்று (04.03.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இளையதம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் ஐங்கரன், சுதாகரன், சுதர்சினி ஆகியோரின் அன்புத்தந்தையும் தவராசா மணி, சிவமணி, அற்புதம், சிவராசா ஆகியோரின் சகோதரனும் யோகம்மா (இளைப்பாறிய ஆசிரியை) காலஞ்சென்ற செல்லம்மா, மனோன்மணி, அருமை நாயகம் (ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரி), புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் கிருபானந்தியின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வேலணை வடக்கு,**
**வேலணை 5 ஆம் வட்டாரம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


**அறை வாடகைக்கு**

பல்கலைக்கழக மாணவர்களுக்கு திருநெல்வேலியில் அறை வாடகைக்கு உண்டு.
077 751 3016

**கார் விற்பனைக்கு**

யப்பான் சுசுகி அல்றோ, Automatic Gear KC -xxxx , பெற்றோல் சிக்கனம், 100% பராமரிப்பில் உள்ளது.
077 630 6733, 076 703 0343

**கடை வாடகைக்கு**

மருதனார் மடம் சந்தியில் ஆஞ்சநேயர் கோயிலுக்கு முன்பாக RDB வங்கிக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு.
077 718 7108

**பணிநிலை வேண்டுகை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு,
1. Computer Designer (Corel Draw, Photoshop) தேவை.
KINGS ELECTRONICS (PVT) LTD
NO 12, POINTPETRO ROAD, JAFFNA.
021 454 6699

**பிரபல கண்டி ஆசிரியர்**
**A.C. Faizal Mohamed அவர்களின்**
**ஜேர்மன் மொழி ( DEUTSCH )**
**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**
மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்
BRITISH COLLEGE
23, Kachchari nallur Rd, Jaffna.
0777-596148

**கடை & Rooms வாடகைக்கு**

தனி வழி, கார் பாக்கிங், பல்கணி முதலான சகல வசதிகளுடன் கடை மற்றும் இரண்டு பெரிய அறைகள் நல்லூர் வடக்கில் (கல்வியங்காடு) வாடகைக்கு உண்டு.
மதி - 077 329 6035/ 021 223 0310

**நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு**

60 நாட்கள் நிரம்பிய தடுப்பூசிகள் போடப்பட்ட டோமன், டல்மேசியன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. Tim Black colours, White Beauty marks.
தொடர்புக்கு - 075 065 6527

**அதிக வருமானம் பெற வேண்டுமா ?**
**ஜூஸ் பக்கெட் தயாரிக்கும் மெசின்**




தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18, Ground Floor, Lucky Plaza, St.Anthony's Mawatha, Kollupitya, Colombo - 03

**வேலை வாய்ப்பு கொழும்பு அண்மித்த பிரதேசங்களில்**

ஜேம், பிஸ்கட், டொபி, சொக்லட், கையுறை போன்ற நிறுவனங்களுக்கு விமான நிலையம், துறைமுகம் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான.
18-45 ஆண்-பெண்
சம்பளம் 18000/= 25000/= 45000/= வரை
077 556 1880
077 843 0179 Sakya 157, Thekka Waththa, Vavuniya.

# AUTO CAD

Civil / MEP / HVAC / Plumbing 2D & 3D
Full time : 2 Weeks Part time : 2 Months
BRITISH COLLEGE 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna.
103, Mannar Rd, Vavuniya.
Pettah Rd, Mannar. Main Street, Mullaithivu.

**A/L CHEMISTRY**

* 2017 Batch - Exam with Revision (ஆரம்பம் 16.03.2017)
• 7 நாள்களும் 40min Exam (10 M.C.Q + 1 Essay)
• விடைத்தாள் மாணவர்களிடமே வழங்கித்திருத்தப்படும்.
• ஆசிரியர் பின்னூட்டல்
* 2018 - ORGANIC CHEMISTRY - (ஆரம்பம் 09.03.2017)
* 2019 - Chemical Calculation (ஆரம்பம் 10.03.2017)

ஆசிரியர்:-
Mr.S.SURESHKUMAR - BSc (Hons) PGDE
BECON. Clock Tower Rd, Jaffna. | Chemistry Hall G.P.S.Rd, Kalviyankadu
077 555 9028

## யாழ்ப்பாணத்தில்......
## திறமையின் தேடல்

ஊடகத்துறையில் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழை பெற்றுக் கொடுக்கும்.

# Dip.in Mass Media

தயாராகுங்கள்...

இலங்கையிலும், சர்வதேசத்திலும் துடிப்பு மிக்க ஓர் அறிவிப்பாளராக வெற்றியடையுங்கள்.



3 - Months
வயதெல்லை கிடையாது.

- வானொலித்துறை
- செய்தித்துறை
- பத்திரிகைத்துறை
- ஒலிப்பதிவுத்துறை
- விளம்பரத்துறை

**ஊடகத்துறையில் ஒரு புதிய பரிணாமம்.**

பதிவுகளுக்கு முந்துங்கள்.
BRC BRITISH ROYAL COLLEGE
20, Kannathitty Lane, Jaffna.
(New Science Hall அருகில்)
T: 021 492 7456 M: 071 432 5002


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.